

உரிமை உரை

இந்திய நந்நாட்டுக்

கைத்தொழிலை விர்த்தி செய்து,

வியாபாரத்தைப் பெருக்க முயன்று வரும்

இந்திய மக்களுக்கு இந்நூல்

உரிமை செய்யப்படுகிறது.

சுதந்தர வழி காட்டுவது

வர்த்தக யுக்தியே

(இந்நூலாசிரியர் எழுதியது.)

1. இரண்டு தடவைகளில் பரீக்ஷைக்குச் சென்று தவறிப் போன ஒருவரைக் கைதூக்கிவிட்டது எது? அவர் கையில் "வர்த்தக யுக்தி" கிடைக்கவே, அதன்படி நடந்து இப்பொழுது பம்பாயில் பிரபல வியாபாரியாய் விளங்குகிறார்.

2. திரண்ட சொத்துள்ள இரு சகோதரர்கள் தங்கள் பணத்தைக் கொண்டு என்ன செய்யலாமென்று யோசித்துக் கொண்டிருக்கையில் அவர்களுக்கு "வர்த்தக யுக்தி" என்ற அரியநூல் கிடைக்கவே, இப்போது அவர்கள் இரண்டு பெரிய கம்பெனிகளுக்கு முதலாளிகளாய் விட்டார்கள்.

3. எவ்வளவோ மனுக்கள் போட்டும் உத்தியோகம் கிடைக்காமற் போன ஒருவர் கடைசியில் மனம் சலித்து, "வர்த்தக யுக்தி" என்ற நூலை வாசித்தார். உடனே அவருக்குப் புதிய வெளிச்சம் உண்டாயிற்று. ஒரு மெழுகு வர்த்திசாலை இப்போது அவர் தலைமையில் நடந்து வருகிறது.

4. வெகு காலம் எஜமானின் கீழ் குமாஸ்தாவாய்க் கிடந்த ஒருவர் "வர்த்தக யுக்தி"யைப் படித்ததனால், குமாஸ்தாவும் ஒரு காலம் எஜமானனாகலாமென்ற தெளிவு வரப்பெற்றவராய், அந்த நிமிஷமுதல் புதிய மனிதரானார். புதுப்புது லாபத்தில் புதிய சொந்த வியாபாரமும் இப்பொழுது தொடங்கி விட்டார்.

5. சிறந்த வைத்தியர் நிபுணத்துவம் இருந்தும், செய்தொழில் விவரம் தெரியாமல் தவித்த ஒரு வைத்திய பண்டிதர், "வர்த்தக யுக்தி"யைப் படித்ததனால், இப்போது மாதம் ஒன்றுக்கு ரூபாய் 500-க்குக் குறைவின்றி சம்பாதித்து வருகிறார்.

6. சாதுர்யமாய் விளம்பரம் செய்து ஏராளமான பொருள் குவிக்கக்கூடிய வழியையும், வியாபார சூக்ஷமங்களையும் முதன் முதல் தமிழ் நாட்டில் தெரிவித்த நூல் எது? "வர்த்தக யுக்தி"யே.

விலை அணா 12.

வணிகர் சிறப்பு

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந்தமபோற் செயின்.
முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்திவிடும்.

—திருவள்ளுவர்

பொற்போர் புரிவர்பிற பொருளும் தம
போற் பேணி புரிவணிகர்

—சிவப்பிரகாச சுவாமிகள்

பிறவுந்தம் பொருளே போலப் பேணி
வாணிகஞ் செய் நாய்கர்

—கருணை விளக்கம்

தம்பா லில்ல தில்லெனி னின்றுய
உள்ளது கூறி மாற்றியுமுள்ளது
சுட்டியு முரைப்பர் சொற்சுருங்குதற்கே.

—பவணந்தி முனிவர்

புல்லியோர் பண்டங்கொள்வார் வினவினப்
பொருள்தம் பக்கம்
இல்லெனினனை மாயுள்ள பொருளுரைத்
தெதிர் மறுத்தும்
அல்லதப் பொருளுண்டென்னின் விலை சுட்டி
யறுத்து நேர்ந்துஞ்
சொல்லினு பிலாபங் கொள்வார்

—பரஞ்சோதி முனிவர்

மேத்கு விரிஞ்சனரும் பெறற்குறங்கை விழைதகைபா
யெனப்படைத்தோ
ரேதிலர் பொருளுந் தம்மபோற் பேணிவாணிப மீட்டு
நர்வடாது
மாதிரத் தலைவன் புறங்கொடுத்திரியும் வளத்தினர்
மறை நெறி யொழுக்க
மாதரித் துயர்ந்த விழுக்குடி வணிகர்
செய்வினை யனைத்துந்தன்பாற் சேர்த்துவைத்
துயிர்க்குப் பின்னர்
அவ்விறை யாணையாயிற்று லளித்திடுமாயையே போற்
கொய்வளம் வருவழூற்றுக் கொண்டு பின்னுப்கர் மாறப்
பெளவநீ ருலகுக்கெல்லாம் உதவு வபையம் பொன்மாடம்

—சிவஞான முனிவர்

முதலுள பண்டம் கொண்டு வாணிபஞ்செய்து அதன்பயன்
உண்ணு வணிகருப்பதரே,

—அதிவீரராமபாண்டியன்.

முதலிலார்க்கூதியமில்லை மதலையாஞ்
சார் பிலார்க் கில்லை நிலை.

—திருக்குறள்.

"புருடராய்ச் சனனமெடுத்த பேர் மெஞ்ஞான
போதத்தை யறிவதொன்று
பூமியொடு மிக்க தனவானுவதொன்று
பூவலஞ் செய்வ தொன்று"

—மணவாள நாராயண சதகம்.

திரைகடலோடியுந் திரவியந்தேடு.

அட்டவணை

அவசியம்
படிக்கவேண்டியது.

இரண்டாம் பதிப்பின் முகவுரை

முதற்பதிப்பு வெளியான சில நாட்களுக்குள் ‘தந்திரம்’ என்னும் பதத்துக்கு அநேகர் தத்தம் இஷ்டம்போல் அர்த்தம் செய்து, மோசமான வழிகளையே பெரிதும் விளக்கியிருப்பதாய் எண்ணி யிருந்தனர். சிலர் நேரிலும் தர்க்கம் செய்தனர். இன்னும் சிலரோ சடிதமெழுதி வாது செய்தனர். தக்கவாறு பதிலளித்த பின் அநேகர் வாங்கிப் படித்தனர். ‘ஏதோ தந்திரம் செய்தான்’ என்ற வழக்கச் சொல்லின் தாத்பரியத்தை இந்நூலுக்கும் பிரயோகிக்க நேர்ந்தது. வாங்கிப் படித்தவர்கள் உண்மையை யறிந்து தங்கள் சிநேகிதர்களுக்கும் சிபார்சு செய்து வந்ததால் புத்தகங்கள் விரைவினில் செலவாகி இப்பொழுது இரண்டாம் பதிப்பு வெளி

யாகி யிருக்கின்றது.

'வியாபார தந்திரம்' என்று தமிழ் உலகில் நூல் யாதும் வராதிருந்தாலும், பஞ்ச தந்திரம் என்ற நீதிநூல் நெடுநாட்களுக்கு முன் வெளியாகி தற்காலம் கலாசாலைகளில் மாணவர்களுக்கு பாடமாகவும் இருந்துவருகிறது. லாயிட் ஜ்யார்ஜ் இங்கிலாந்தில் பிரதம மந்திரியாயிருக்கும்போது நடந்த மகா யுத்தத்தில், அவருடை திறமையை 'இராஜ தந்திரம்' என்று புகழப்பட்டது. மேலும் சூதான வழியை எடுத்துக் காட்டவில்லை. இந்தியாவின் வியாபார நிலைமையையும், அபி விர்த்திக்கான மார்க்கத்தையுமே நாம் எடுத்து விளக்கிய தாகும்.

முதற் பதிப்பு வெளியான சொற்ப காலத்துக்கெல்லாம் வெவ்வேறு பெரிய தொழில்களில் நிர்வாக பதவிகளையேற்று, புத்தியை நடுவு நிலைமையில் வைத்து தொழில் நிலைமையின் தாரதம்மியத்தை அறியலானேன். அதனை விரித்து இந்நூலில் சேர்த்துவிடில் புத்தகம் பெரியதாவதோடு விலையும் அதிகரித்து விடுமென்று, தனி நூலாக வெளியிட ஏற்பாடாகி யிருக்கிறது. இதில் மூன்று பாகங்கள் ஒருங்கே அமைந்திருக்கின்றன.

இந்தியாவின் வியாபாரம் பொருள் ஆதாரம் இவ்விரண்டும் அடிக்கடி மாறிக்கொண்டே வருகிறது. அனாவசியமான அயல் நாட்டுச் சரக்கின் இறக்குமதிக்கு ஏற்றவாறு, அவசியமான உள் நாட்டுச் சரக்கின் ஏற்றுமதி மிகுதியாய்ப் போய்விடுவதால் நேரிடும் மிடுக்கை அறிந்தும் ஆதரவற்ற வியாபார பயிர்த் தொழில்கள் (Trade and Agriculture) சீர் குலைந்திருக்கின்றன. இதற்குரிய காரணங்களையும் திருத்தங்களையும் இந்நூலில் விரிவாகக் காணலாம். அயல் தேசத்து மேதாவிகள் தொழில்களின் அபிவிர்த்தியைப்

பெரு நோக்காய் ஆராய்ந்து சீர்படுத்துகிறார்கள். நம் நாட்டின் வளப்பங்களை அயல் நாட்டினரின் சௌகரியப்பட திருத்தி அமைக்க மேல் நாட்டாரின் பார்வைக்குள்ளிருந்து வருகிறதென்று சொல்லாமலே விளங்கும்.

ஒரு வர்த்தகன் தன் வியாபாரத்தின் லாபத்தை மாத்திரம் கவனிப்பதும், தலைவன் தன் குடும்ப சௌகரியத்தை மாத்திரம் கருதுவதும், ஒரு அரசன் தன் தேச வளப்பத்தை மாத்திரம் நோக்கியிருப்பதும் நாளடைவில் திகைக்கக்கூடிய—திகைப்பான—நிலைமைக்குக் கொண்டுவந்து விடுமென்பதை அனுபவத்தில் காணலாம். மேற்கொண்ட கருத்தைக் கொண்டே இந்தியாவின் நிலைமை யிருந்து வருகிறது. வியாபாரம் பயிர்த் தொழில்களின் நிலைமை சீர்திருந்தினலன்றி ஸ்வாராஜ்யம் வெறும் சொல்லேயாகும். இந்தியாவின் கரையோரமாய் கப்பல் வியாபாரம் செய்வதைப் பற்றிய மசோதா; இந்திய சட்ட சபையில் எவ்வாறிருந்து வருகிறதென்பதை பத்திரிகைகளை வாசிப்போர் நன்கு அறிந்திருக்கலாம்.

இந்தியா தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானல் வியாபாரம் சீர்திருந்த வேண்டும், வியாபார மகத்துவமே இராஜ்ய முன்னேற்றம்.

எந்த வகையிலும் தமிழ் மக்கள் முன்னோர் செபலறிந்து முன்னேற்ற மடைவார்கள் என்பது திண்ணம். இந்தியாவின் வட திசையிலுள்ள கூர்ஜரம் வங்க நாடுகளை விட வணிகம், பயிர்த்தொழில், கைத் தொழில், கல்வி அறிவு, வல்லமை சிறப்பு முதலியவைகளில் தமிழ் நாடு முதன்மை பெற்றிருக்கிறதென்பதை நாம் அனுபவத்தில்

இந்திய விவசாயம்!

"எனது முப்பதுவருஷத்து விவசாய அனுபவத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மேல் நாடுகளுக்கு நமது விளை பொருள்களை அனுப்பிவிடுவதால் பூசாரம் குறைந்துகொண்டு வருகிறது. நமது நாட்டுஜனங்களுக்கெல்லாம் பூசாரந்தான் தொழிலுக்கு முதல். பூசாரந்தான் ஆஸ்தி, பூசாரந்தான் ஜீவாதாரம். இப்படிப்பட்ட பூசாரத்தை மேல் நாட்டார் கப்பல் கப்பல்களாக வாரிக்கொண்டு போவதைக் கவர்ன்மெண்டார் தடுக்காமல் அவர்களே மேல்நாட்டு பூமிகளுக்கு எருவிட்டுக்கொள்வதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தால், இன்னும் 100-வருஷத்திற்குள் நமது நாடு பாலைவனமாகிவிடும். சிம்மமானது ஆட்டைக் கடித்து உறிஞ்சி, தனது தேகத்தைப் புஷ்டி செய்துகொள்வதுபோல் மேல் நாட்டார் நமது ஜீவாதாரமாகிய பூசார ரத்தமாகிய பிண்ணாக்குகளையும் மாட்டு எலும்பு, தோல், கொம்பு, குளம்பு முதலியவைகளையும் வாரிக்கொண்டுபோய் உறிஞ்சிக் கொண்டிருக்கிறார்களே. என்னாலாவது பிண்ணாக்குகளையும், மாட்டு எலும்புகளையும் நீங்களே உபயோகித்துக் கொண்டு மேல் நாட்டுக்கு அனுப்பாதேயுங்கள்! என்று கேட்டுக் கொள்ளத்தான் முடியும். ஆடுமாடுகள் இறந்து போனால் அவைகளை அவரவர் நிலங்களிலேயே அடக்கம்செய்து பிறகு அந்த எலும்புகளைக் கொல்லன் பட்டறையிலிட்டு செம்மட்டியால் தூளாக்கியேனும் எருவோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம்பொன், என்பதுபோல் ஆடுமாடுகளும் அப்படியேயென்று மனதில் தீர்மானம் செய்து கொள்ளுங்கள். பிண்ணாக்குகளையும், எலும்புகளையும் பரதேசம் அனுப்பக்கூடாத ஏற்றுமதி வரி போடும்படிக் கிளர்ச்சி செய்யவேண்டும். சுலபமாக [illegible] வும், எலும்புகளை உடைக்கத்தக்க இயந்திரங்களும் தயாராகவேண்டிய ஏற்பாடுகளும் சீக்கிரத்தில் நடத்த வழிதேடவேண்டும்" க. ப.

இராமச்சந்திர ஏற்றம் கண்டு பிடித்திருக்கும்

ஸ்ரீமான் எஸ். இராமச்சந்திர அய்யர்.

முதற் பதிப்பின் முகவுரை.

அவ்வக்காலங்களின் தகுதிக் கேற்பத்தோன்றும் நூல்களுள் இப்பொழுது நாம் வெளியிடுகின்ற வியாபாரதந்திரமும் ஒன்றாகும். எமது முன்னைய நூலான "வர்த்தக யுக்தி"யை *நான்காம் பதிப்புக்கும் எட்டுமாறு அத்துணை ஆவலுடனும் நம் தமிழகத்தார் விரும்பிப் போற்றினமையின், அந்த ஊக்க மிகுதியினால் இந்நூலையும் இரண்டாவதாகக் கொடுக்க முன்வந்தனம்.

சுமார் 25-வருடகாலமாக வியாபாரத்தைப்பற்றிய நூல்களை ஆராய்ச்சி செய்து வந்ததைக் கொண்டும், படிப்படியான உத்தியோகத்தில் அமர்ந்து அவற்றாலடைந்த

---

* இப்பொழுது ஆறாம் பதிப்பு வெளியாயிருக்கிறது.

அநுபவத்தைக் கொண்டுமே இந்த நூல் எழுதப்படுகிறது. வியாபாரத்தைப் பற்றி இதில் மூன்று பாகங்கள் மட்டுமே அடங்கி யுள்ளன. இதில் எந்த வியாபாரமும் குறிப்பிட்டு எழுதப் பெறாமல் பொதுவில் மூலாதாரமான விஷயங்களைப் பற்றி மட்டுமே பேசப்பட்டிருக்கின்றன.

இலங்கையில் இரண்டு வருஷகால மிருந்து அவ்விடத்திய வியாபாரத்தையும், பம்பாய் கல்கத்தா முதலான விடங்களுக்குச் சென்று ஆங்கு நிகழும் தொழில் முறைகளையும் கவனித்து வந்தோம். அதில் நமக்கு உண்டாகிய உற்சாகமும் இந்நூல் எழுதப் பெறுதற்கு ஒரு காரணமாகும். இந்நூலை யடுத்துத் தொழில் முறையில் ஒரு நூல் சீக்கிரத்தில் வெளியிடப்படும். அதன் சார்பான விவரங்களை மற்றோரிடத்திற் காணலாம்.

இன்னும் அயல் தேசங்களுக்குச் சென்று அவ்விடத்திய வியாபார முறைகளையும், கைத்தொழில் வளப்பங்களையும் ஆராய்ந்துணர்ந்து அப்போதைக்கப்போது நூல் வாயிலாய் வெளியிடவும் எண்ணங்கொண்டுளோம்.

வெளிதேசங்களில் வியாபார சம்பந்தமாய்ப் பிரசுரமாயிருக்கிற நூல்கள் பல உள. அவற்றை நம் நாட்டிற்கேற்றவாறு அமைத்துத் தாய் பாஷையில் வெளியிடில் யாவருக்கும் அது பேருதவியாகும்.

வியாபாரம் என்றால் சமீப காலம் வரையில் படித்த வகுப்பினர் அதனைப் பெரும்பாலும் கௌரவக்குறைவாகவே கருதி வந்தார்கள். நம் நாட்டில் சுதந்தரத்தாசம் உண்டாகத் தொடங்கிய நாள் முதல் அவ்வெண்ணமும் மாறுத

லடைந்து கொண்டு வருகின்றது. சுதேச வஸ்திரங்களையும், நமக்குத் தேவையான வஸ்துக்களையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து அவைகளையே உபயோகித்துவர வேண்டுமென்ற சிந்தனைகளும் உதயமாயுள்ளன.

தற்போதைய தேச வியாப்தமான பிரஸ்தாபனைகளுள் நம் இந்திய நாடு வர்த்தகம் சுருங்கி, பூர்வ வாணிப உன்னதமும், அந்த ஞானமும் ஒரு பழங்கதையாய்க் கனவாகி யொழிந்த வீழ்ச்சியே இக்காலம் எங்கெங்கும் யாவர் வாக்கிலும் முழங்குகின்றன. பெருங்கிளர்ச்சியினூடே தொனிப்பதும் அம்மொழிதான். நூல் நாட்டினங்கள் கொண்டு தேக ஆடைகள் அமைத்திடுமாறு நம் தலைவர்கள் வற்புறுத்துவதும் வர்த்தக சூழ்ச்சியின் ஒரு அங்கமேயாகும்.

வியாபாரம் என்பது ஒருமனிதனுக்கு சர்வசுதந்தரத்வமும் கொடுக்கின்றது. சுவாதீன புருஷனாய்ச் சுவாசிக்க வைக்கின்றது. அடிமைப் புத்தியை அகற்றுகின்றது. ஆண்மைத் தனத்தை அதிகப்படுத்துகின்றது. தலையை நிமிர்ந்து நிற்க வைக்கிறது. தானே தலைவனாய், தன்னுள் அனைவருமாய், தன் சொல் பொன் சொல்லாய் அது ஒரு ராஜாதிகாரக் கட்டளைபோன்றதாய், சரணென்று அடைந்தவர் தமக்கு வரும் வினையெல்லாம் போக்கு மொரு புருஷமேருவாய்த் தன்னைப் புகழுடம்பு தாங்கிட வாழ்த்துகின்றது.

வியாபாரத்தால் ஆங்கிலர்க்கு ஒரு இந்தியப் புனித நாடு எவ்வித இரத்தச் சிந்துதலுமின்றி பெரும் பரிசாய்க் கிடைத்த சரித்திரவிலாசம் கண் காணிப்பின் வர்த்தகசிந்

தனைக்கும் வியாபார தந்திரத்துக்கும் அஃதோர் நல்விருந்தும் நாயகமுமாகும்.

செந்தேனும் பாலும் தெவிட்டி நின்ற நாட்டினிலே தீப்பஞ்சமது தோன்றி அது நித்யானுபவமாய் விட்டது. எதனால்? பொன்னும் மணியும் மிகப் பொங்குகின்ற இந்நாட்டில் அன்ன மின்றி நாளும் அழிவோர்கள் எத்தனை பேர்? ஏன் இவ்விதமோ? இந்தப் பிழைப்பு தான் ஏற்றதுவோ? எதைக்கொண்டு தான் ஈடேறுவதோ? என நம் இளைஞர்கள் தவிக்கும் தவிப்பு யாரே யறியாதார்? ஏனோ இவ்வித இழிநிலை? இவ்வாறாய தாழ்மைக் கெல்லாம் காரணம் யாது? நம் நாட்டு வியாபாரம் நம்மை விட்டுப் புறம் போயினதேயாம். நம் தாய் திரு நாட்டில் எந்த வஸ்துவுக்குக் குறைவு? எது தான் இல்லை. இன்னரும் பொழில்களும், இணையிலா வனங்களும், உன்னத மலைகளும் ஒளிர் தரு நாடு இது? இங்கு அகப்படாதது ஒன்றுமில்லை. கேட்டதெல்லாம் தரும் ஆநந்த கல்பகம் காமதேனு? இந் நாட்டிற்கு வந்தே எத்தனையோ ஏழைக் குடும்பங்கள் இங்கிலாந்தில் குபேர சம்பத்துள்ளன வாயின. இங்கு மற்றவர் பொருளீட்டி நாடொறும் மேலோங்க, நாமே இன்னும் புன்கதிக்கே புகுகின்றோம். வறியோர்க் கழகு தாம் வாழ்ந்த பெருமை சொல்லல்—என்றவாறு நம் பண்டைய வளப்பம் பேசி பேசிச் சாய்ந்துகொண்டு சம்பாஷித்துத் தலைமை கொள்வதில் ஆம் பயன் என்ன? இப்புலமை எற்றிற்கு? வீண் புலமைப்பூண் புகழாற் காண் புதுமை என்னோ? காரியத்திற் காட்டிக் கனமோங்கி வாழ்தலன்றோ கண்யந் தரும்—கண் கவர் வனப்பினதான காட்சியுமாகும்.

அமெரிக்கர்கள் எதனால் உயர்ந்தனர். ஜப்பானியர்கள் சீர் உற்றதற்கெல்லாம் எது காரணம்? பிரான்சு, ஜெர்மனி, ருஷியா, பெல்ஜியம், முதலிய நாடுகளின் பெரும் கீர்த்தியும் எங்கெங்கும் வழங்குவது எது கொண்டு? யாவுமே வியாபாரப் பிரபாவத்தினால் தான். அதற்கிசைந்த அந்தந்த நாட்டிலும் வியாபார ஞானத்திற்கான அரும் பெருங் கிரந்தங்கள் ஆயிரக் கணக்காய் அடுக்கடுக்காய் நாடோறும் வெளிவந்துலாவுகின்றன. அதற்காய வித்தியா கூடங்களும் பயிற்சி ஸ்தலங்களும் எண்ணற்றனவாய்த் தோன்றி எங்கும் அறிவை வளர்த்து "முதலுள பண்டங்களைக் கொண்டு வாணிபஞ் செய்து அதன் பயன் உண்"ணும்வாறு போதித்துப் பக்குவப் படுத்துகின்றன.

அயல் தேசங்களில் ஜனத்தொகை மிகக் குறைவாயிருந்தாலும் கைத் தொழிலிலும், வியாபாரத்திலும் மேன்மை படைந்துகொண் டிருக்கிறார்கள். நம் தேசம் பின்னடைவதற்குக் காரணங்கள் இந்நூலில் சொல்லப்பட் டிருக்கின்றன.

நம் இந்து தேசம் இப் பிரபஞ்சத்திலுள்ள எந்த தேசத்துக்கும் பின் னடைந்ததல்ல. இந்தியாவிலுள்ள விளைபொருள்க ளெல்லாவற்றையும் இதர தேசத்தார் பெற்றுக் கொண்டுபோய், அவைகளை நாகரீகமாய்—மனோகரமாய்—செய்து திரும்பவும் நமது தேசத்திற்கே அனுப்பி ஒன்றுக்கு பத்து, நூறாக லாபத்தை படைந்து வருகிறார்கள். இதனை நிவர்த்திப்பதற்கு ஒரே மார்க்கம்தான் உண்டு. ஒவ்வொரு நகரின் வர்த்தகர்களும் ஒற்றுமைப்பட்டுப் பொது நலங் கவனித்துத் தொழில் நடத்துவ தொன்றேதான்.

நம் தேச வியாபாரிகள் கப்பலின் அடித் தட்டி லிருப்ப வர்போல் இருக்கிறார்கள். மேல் தட்டில் நடைபெறும் விஷ யம் விளங்காத நிலையில் தொழில் செய்கிறார்கள். தற்காலம் ஆங்காங்கு தொழில் எத்துணை விதமாக நாகரீகமாய் விர்த்தி யாய்க் கொண்டிருக்கிற தென்பது தெரியவில்லை. அயல் தேசங்களில் வியாபாரத்துக்காகப் பள்ளிக்கூடங்களையும் பல பத்திரிகைகளையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். நம் தேசத்து இஞ்சினீரிங் கலாசாலையைப் போல் நடைபெறுகிறது.

ஆயிரம், பதினாயிரம் தொகை யுள்ளவர்கள் தங்களைப் பெரிய செல்வவான்களென மதித்துப் பொறாமை கொள் வோர் அதனை விடுத்து, விர்த்திக்கான பெரிய தொழில் முறை யில், பலர் ஒன்றாய்க்கூடித் தேச நன்மைக்கான வேலையைச் செய்யவேண்டும்.

பம்பாய், கல்கத்தாவிலுள்ள கோடீஸ்வரர்கள் தங்களைப் பணக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ள வெட்கப் படுகிறார் கள். மேலும் அவர்கள் செய்கிற தான தர்மங்களுக் கீடாய்த் தமிழ் நாட்டில் எவரும் தற்காலம் செய்வதாய்க் காணவில்லை.

இந்தியா பலவகையிலும் படிப்படியாய் மேன்மை யடை யப் போகிறது. இந்துக்கள் நெடுங்காலம் உறங்கிய நிலையில் இருந்தார்கள். இரவு மூன்று மணி போன்ற காலத்தில் ஸ்வாமி இராமகிருஷ்ண பரம ஹம்ஸர் எல்லோரும் விழிக்கும்படி சொன்னார். 4-மணிக்கு ஸ்வாமி விவேகானந்தர் இந்து மதத் தின் மகத்வத்தைச் சொல்லிக் கதிரவன் வெளிவரப் போகி றான் ஜாக்ரதை யென்று சொல்லிச் சென்றார். 5-மணிக்கு கோகலே 'கட்டாயக் கல்வி' யால்தான் இந்தியா உன்னத

நிலைமையை யடையும் என்று உபதேசித்தார். அதன் பின்னர் அநேகர் வந்து உபதேசிக்கலானார்.

ஜப்பான் எவ்வளவோ மிகச் சிறிய தேசமாயிருந்தும், தற்காலம் அதின் அபிவிர்த்தி கண்கொள்ளாக் காட்சியாயிருக்கிறது.

வியாபாரம் தொழில் அபிவிர்த்திக்கான லக்ஷ்மார்க்கம், சீர் திருத்தம் முதலியவைகளைப்பற்றி அனுபவமுள்ளோர் எழுதி யனுப்பினாலும் அவை இனிவரும் நூல்களில் நன்றியறிதலுடன் வெளியிடப்படும்.

எல்லாவற்றிலும் தமிழகத்தின் ஆதரணையை விரும்புகின்றோம்.

இந்நூலுக்கு அன்புடன் சிறப்புரை எழுதி உதவிய ஸ்ரீமான் இராமாநுஜலு நாயுடுகாருக்கும், திருவாளர் பு. சிதம்பரபுன்னைவனநாத முதலியார் அவர்களுக்கும் எமது மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்துகின்றோம்.

இந்நூலை அச்சிடுதற்கு பல வகையிலும் ஆதரவளித்த சுதேசமித்திரன் மானேஜர் (இப்பொழுது ஆசிரியர்) ஸ்ரீமத் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அவர்களுக்கு மிக்க நன்றியறிதலான வந்தனத்தை அன்புடன் செலுத்துகின்றோம்.

M. A. நேல்லையப்பர்.

இந்தியாவும் தொழிலும்.

"வளம்பழுத்த விளைநிலமே விழிதிருப்பும் வழியெல்லாம்
குளம்பெருக்கும் அருவிவருங் குன்றுகளை குலவுவன
இளம்பருவச் சோலைகளை கருங்காடே எங்குமாய்
உளம்பழுத்த மூதறிஞர் உயிராகும் உனக்கு அன்னாய்! 1.

விரிந்தபெரு ஞாலத்தில் வேறுபலதேயத்தில்
பிரிந்திருந்த மக்களெல்லாம் பேதையராய் இருந்த அந்நாள்
தெரிந்து பல கலைகளெல்லாம் தெளிவாக மிக விளக்கி
வந்தனர் நின்மகார் எனில் உன் வளர்பெருமை
சொலல் அரிதே 2.

அலையுலவும் வங்களாக் குடாக்கடலின் அடிகிடக்கும்
விலை வரம்பு காணாத முழுமுத்தும் மேலுயர்ந்த
தலையருவி கொழித்துவரும் மணிகளோடு பசும் பொன்னும்
மலையணியப் பிறநாட்டார் தந்தனை இந்தியமாதே 3.

முன்னாளில் வாணிகத்தில் முதன்மைபெறு யவனர்களும்
தென்னாட்டில் † உயரியெனும் துறைமுகத்தில் திரண்டுவந்து
வன்னமயில் நறுஞ் சாந்தும் மணிபரனை அணிகருப்பும்
இன்னபல அருஞ்சரக்கும் எந்துக என்று ஈந்தனையே. 4.

---

* Arts and Sciences. † Ophir, a thriving Sea-port in the Eastern Coast of South India in the time of Kin Solomon.

தொழில் நுட்பம் மிகச்சிறந்த துகளறுபட்டு ஆடைகளும்
கொழும்பருத்தி இலவம்பஞ்சு ‡ எலிமயிரில் கோவைசெய்து
செழும்பாலின் நுரையெனவும் இகழ்பாம்பின் உரியெனவும்
ஒழுங்காகச் சமைத்தஉடை உலகமெலாம் நிலவியதே. 5.

உலகிற்கோர் விளக்கனையாய் எம்முயிர்க்கோர் உயிரனையாய்
பலவாறு நின்புகழ்மை பாரித்து என் சிற்றறிவார்
சொலவருமோ தொலையாத வளமுடையாய் தொன்றுதொட்ட
நலமெலாம் பிறர்கவர இந்நாளில் நாணினையே. 6,

அந்நாணம் இனியொழிய நின்மகார் அறிந்து எழுந்து
முன்னாளில் விரிந்த பல கைத்தொழிலும் முதிர்ச்சியுற
மன்னிமிக முயல்கின்றார் மனக்கவலை நீங்குற்றோம்
இன்னும் இவர் சிறக்கவென ஏத்திமிக வாழ்த்துதுமே.” 7.

---

‡ ஒருவகையான வெள்ளெலி மயிரால் மிக நுண்மையான உயர்ந்த ஆடை முற்காலத்தில் நம்தேயத்தில் செய்யப்பட்டமை “சிலப்பதிகாரத்தினால்” விளங்குகின்றது.

ஸ்ரீரங்கம் 'பிரஜாநுகூலன்' பத்திராதிபர்
ஸ்ரீமான் எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு எழுதிய

சிறப்புரை.

குறித்த ஒரு நூலின் குறைநுணங்களையும் அந்நூலாசிரியரைப் பற்றித் தம் மனத்துள் எழுந்த சிறிய எண்ணங்களையும், அவ்வாக்கியோனை நன்கறிந்த ஒருவர் தெரிவிக்கும் வாசகங்கட்கே சிறப்புரையென்பதாம். அங்ஙனமாக "வியாபாரதந்திரம்" என்ற இந்நூலின் கர்த்தாவையாம் அறிந்து வைத்ததும், அவரோடு பழகியதும் இன்று நேற்றில்லை. பல்லாண்டுகளாயதோடு அதற்கு "ஆயிரம் பல்லாண்டு" வாழ்த்துதலையும் எல்லாம் வல்ல இறைவனார் அருளியுள்ளார். எமது நெடுநாளைய அநுபவத்தைக் கொண்டு சொல்லப் புகின் இந்த வியாபார தந்திர நூலினை இயற்றுதற்கு இதன் கர்த்தாவே பலவிதத்திலும் தகுதி சான்றவரென்பது எமது மனப்பூர்வமான உரை. எப்போதும் எக்காலத்தும் நவநவமான வர்த்தக தந்திரங்களும் வியாபார நுட்பங்களுமே அவரது வாய்மொழியினிடத்துத் தோன்றிக் கொண்டிருக்கும். ஏனைய நாடுகளின் வியாபார சம்பிரதாயத்திற்கும் நம் நாட்டின் வர்த்தக நிலைக்குமுள்ள பேதத்தினை ஆராய்ந்து உள்ளம் நைந்தே இக்கிரந்த கர்த்தாவின் நித்யப்பிரவர்த்தி. அமெரிக்கரைப் போலவும், ஜப்பானியரைப் போலவும் வியாபாரத்தை ஆரம்பித்து நடத்தி நாடு நன்னலம் பெறவேண்டுமென்பது இந்நூலாசிரியரின் பேரவா. சதாகாலமும் இந்தப்பிரஸ்தாபனையே அவரிடம் தொனிக்

கும்—ததும்பிநிற்கும். தம்மையடுத்தார்க்கு வேண்டிய "வர்த்தக யுக்தி"கள் போதித்துப் புது முறையான வழியில் வியாபார ஊக்கம் கொள்ளுமாறு இயன்ற உதவிகளை யெல்லாம் செய்வார். பிறர்க்கு எவ்விதத்தும் தம்மால் தமது யோசனைகளால்—ஒரு சிறிதேனும் பயன் ஏற்பட வேண்டுமென்பது இவரது நித்ய சிந்தனை விருப்பம். எப்பொழுதும் வியாபார விருத்தி நன்னயங்களையே விரித்து உணரச் செய்வதாயிருப்பார். அதற்கேற்பத் தமது ஊக்கமிகுதியினாலே உத்தியோகம் முதலிய சேவகாபிவிர்த்தியை நாடாது வர்த்தக சிந்தனையிலேயே ஈடுபட்டு அதிலேயே பல வருடகாலமும் உழைப்பதானார். ஸிலோன், பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களுக்கும் சென்று ஆங்காங்கு நிகழும் வியாபார விஸ்தாரங்களையும் புது வழிகளையும் ஊக்கமாய்க் கவனித்திருக்கிறார். தொழில் முறையிலும், நிர்வாகத்திறமையிலும் மிக்க நிபுணத்வம் இயற்கையிலேயே அமையப்பெற்றவர். தம்முயற்சியினாலேயே தற்போதைய கௌரவார்ஹமான பெரும்பதவிக்கும் நாயகமானார். இவர் நம்நாட்டில் பிறவாமல் ஆங்கில நாடொன்றில் அமெரிக்கா போன்ற வியாபாரச் செழிப்பு மிகுந்த தேச மொன்றில் பிறந்திருப்பாராகில், அவரது வர்த்தகாநுசாரமான அபாரஞானத்திற்கு அவர் ஒரு கோடீஸ்வரராக இருந்திருப்பார்.

இக்கிரந்த கர்த்தாவால் முன்னர் வெளியான வர்த்தக யுக்தி என்ற நூல் தமிழ் நாட்டுக்கு நவீனச் சார்பான வியாபார முறையில் நல்ல நல்ல புதுக் கொள்கைகளையும் புது வழிகளையும் போதித்து மிக்க உபகாரம் செய்துளது. அதனாற் பயனடைந்தோரும் எண்ணிலராவர். அதனைத் தமிழகத்தார் ஏற்றுக் கொண்ட ஆவலின் நுட்பம் நோக்கி, இன்

னும் விசாலமும் தெளிவுமான விவரங்களோடு வியாபா ரார்த்தகமாகத் தனிப்பட ஒரு நூலை இயற்ற வேண்டு மென்ற சிந்தனையை மேற்கொண்டார். அவ்விதமே இப் பொழுது இந்த வியாபார தந்திர நூலினைத் தம் நாட்டினர் க்கு உபகரித்து உள்ளார். இது முற்றுப்பெற்ற நூலில்லை. வியாபாரத்திற்கு ஒரு முடிவுகூற இயலாது. ஒரு நூலை எழு தப்புகுங்கால் பற்பல சிந்தனைகள் பெருகியோட, அவற்றைப் பாகுபடுத்தி ஒழுங்கு செய்கையில், ஒன்றிலிருந்து மற்றொன் றுக்குத் தான் சேர்ந்து, இங்ஙனம் பல நூல்கள் இயற்றுதற் கான அமைப்புக்கு சித்தத்தினை இழுத்துச் செல்ல, அவற் றினைத் தனித்தனி நூலாக்கி ஒழுங்குபடுத்த வேண்டியதாய் முடிந்து விடுகிறது. இந்த வியாபார தந்திரமும் அவ் வாறுயவற்றுள் ஒன்றும். எனவே இதனைத் தொடர்ந்து வேறு கிளை நூல்களும் வெளிவருமாதலின் அவையனைத் தையும் தமிழ் மக்கள் பெற்று இனிதுணர்ந்து அநுபவத்திற் கொணர்வார்களாக.

உலகத்தில் சுயேச்சை, சுவாதீனம் என்ற பொருளுக்கே அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். ஒருவனுக்குப் பூரண சுதந்தரத்தையும் சுவாதீனப் பிரியத்தையும் தரவல் லது வியாபாரம் தான். கோடிக் கணக்கான முதல்களை வைத்துத் தொழில்கள் நடத்தும் ஞானம் சாமான்யமான தல்ல. ‘சிறுகக் கட்டிப் பெருக வாழ்’ என்றபடி ஆரம்பத் தில் தொடங்கும் சிறு வியாபாரம்தான் இறுதியில் பல கிளை ஸ்தாபனங்களாய் நாடெங்கணும் வேரோடியுள்ள பெரும் வியாபாரமாக முடிகின்றது. இதற்குரிய அறிவு விளக்க மும் ஞானமும் நம் நாட்டில் — அதுவும் தமிழகத்தில் போதிய அளவில்லை. அதற்கு இன்றியமையாத நூல்களும்

முயற்கொம்பாக, இவ்வாறான நிலையில் இந்த வியாபார தந்திர நூல் தக்க தருணத்தில் வெளிவந்திருக்கிற தெனலாம். அடிமைத் தனத்தை வேரறுத்து சுதந்தர ஜீவியத்தைப் புகட்டுவிக்கின்ற வர்த்தக மார்க்கத்தில் நம்மவர் பிரவர்த்திப்பதற்கு இந்நூல் தக்கவழி காட்டியாகும்—ஒரு * நல்ல கோலம்பஸு மாகும். இந்த அரிய நூலினை நம்மவர் அனைவரும் பொன் போல் போற்றி சுதேசத் தொழில்களை விர்த்தி செய்து நம் நாட்டு வர்த்தகத்தை நவீன முறையில் நன்கு பேணி வளர்த்துத் தமிழகத்தை வாழ்விக்கு மாறு கோருகிறோம். இக் கிரந்த கர்த்தா இன்னுமிது போன்ற நூற்கள் பலவற்றாலும் தமிழ்மக்களின் சிந்தனையை வியாபார மார்க்கத்தில் திருப்பி தேசோத்தாரண புருஷர்களுள் தாமும் ஒருவராக விளங்குமாறு பரம் பொருளைச் சிந்திக்கின்றோம். திருவருள்முன்னிற்க.

ஸ்ரீ ரங்க நிலையம்
ஸ்ரீரங்கம்
22—6—1921.

எஸ். ஜி. இராமானுஜலு நாயுடு.

The love you liberate in your work is the only love you keep.

—*FRA Elbertus*

---

* கோலம்பஸ்—அமெரிக்கா கண்டத்திற்கு ஆதியில் மேல் நாட்டாருக்கு வழி காட்டியவர்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தங்கத்தினரும், ஸௌராஷ்டிர
ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியரும், 'பாண்டியநேசன்'
'வித்யாபோதினி' பத்திராசிரியரும், 'இலக்குமிராம் கோவை'
ஆசிரியருமான, திருவாளர். பு. சிதம்பரபுன்னை
வனநாத முதலியார் எழுதிய

நூன்முகம்

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"

—திருவள்ளுவர்

உலகில் தோன்றிய மக்கள் அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு பொருளையும் அடைய முயலுதல் இன்றியமையாதது. இந்நான்கினுள்பொருளாகிய ஒன்றிருந்தால் அறம் இன்பம் முதலிய நிலைமைகள் எளிதில் எய்தப்பெறலாம். இவ்வுண்மை யுணர்ந்தே மக்கள் யாவரும் பொருளீட்டப் பல்வகை முயற்சியும் செய்து வருகின்றனர். இம்முயற்சிகளில் (தொழில்களில்) தலை சிறந்தன உழவு கைத்தொழில் (நெசவு) வாணிபம் ஆகிய மூன்றுமே. இம்மூன்றில் 'ஊன்காக்கும் ஆவிக்குறுதியாவதும், உலகத்தார்க் காணியாவதுமான உழவுத்தொழிலாலும், கைத்தொழிலாலும் பெறப்படும் பொருள்களைக் கொள்ளல் விற்றல் ஆகிய பண்ட மாற்றுதலைத் தொழிலாகக் கொண்டிருப்பவரே வணிகர், நாயகர், வர்த்தகர் என்னும் சிறப்புப் பெயர்க்குரியவர். நம் தாய் நாடு கிறிஸ்து பிறப்புக்குச் சில

நூற்றாண்டுகளுக்கு முற்பட்டே கிரீஸ், ரோம் முதலிய மேனாடுகளுடன் மரக்கலங்கள் மூலமாக நாட்டு விளைபொருள் களையும் அரவுரியன்ன அம்பூந்துகில்களையும் கொண்டு விற் றும், அவ்விடங்களிலுள்ள அரும்பொருள்களை ஈண்டு விலைக் குக் கொண்டு தந்தும் பெரும் பொருளீட்டுவோரை யுடையதா யிருந்ததென்றும், இவ்வகைத் தொழிலாளர்,

"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்"

என்ற பொய்யாமொழிக்கு இலக்காய் விலைமொழி பொய் யாது விற்றும் விற்பனவல்லாத விற்று மெய்வளராதும் வந்த வேளாளர் (உபகாரி) ஆவர். உழவு, கைத்தொழில் வாணி பம் ஆகிய மூன்றும் எத்தகைய சிறப்புற்று அவற்றைக் கைக் கொண் டொழுகும் மக்களை உலகத்துப் பிறமக்களுக்குப் பேருதவி யாளராக நிற்கச்செய்தன வென்பது சிலப்பதிகா ரம் முதலிய தமிழ்ப் பெருநூல்களால் இனிது விளங்கும். இம் முப்பெருந்தொழிலும் நமது நாட்டின் நாகரீகத்தையும் செல்வச் சிறப்பையும் மக்கள் மேம்பாட்டையும் குறிப்பன வாக விருந்தமைப் பற்றியே பிறநாட்டார் பலர் நந்நாட்டில் வாணிகம் புரியவந்து நிலைத்து இன்பம் அடைவாராயினர்.

முற்காலத்தில், மக்கள் தத்தம் முயற்சியாலேயே தற் பெருமை உரிமை முதலியவற்றைப் பேணிச் சிறந்தனர். இக்காலத்தோ, அவர்களிற் பலர் தந்தொழிலைக் கடைப் பிடித்து மேன்மையடையாது, சேவித்தும் சென்றிரந்தும், பாட்டிசைத்தும் காலத்தைப் போக்குவிப்பவராகின்றனர். இது தங்களை முற்றிலும் அடிமையாக்கிவிடும் என்றுணர்ந்த சிலர் தம்முடைய பழந் தொழில்களாகிய உழவு வாணியம்

கைத்தொழில் முதலியவற்றை ஒழித்துவிடாது விழித்துப் போற்றிப் பிறர்க்கும் வேளாண்மை புரிந்து வருகின்றார்கள். இவர்களாலன்றோ, சமீபத்தில் நடந்தோய்ந்த ஐரோப்பியப் பெரும்போரால் உணவுடைப் பொருள் அளவு குறைந்தமையால் பெருந்துன்பம் அடைய நேர்ந்த நாடுகள் காக்கப்பட்டன; நம்நாடும் தனக்கு வேண்டிய உணவுடைப் பொருள்களை யடைந்திருக்கக் கூடியதாயிற்று. இதுபற்றியே பெருநாவலரும்

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும்சேர்வதுநாடு"

என்று வரையறுப்பாராயினர்.

இவ்வகையிப் பெருமைபோடு விளங்கிய நமது தாய் நாடு கால அறிவு வளர்ச்சி முறைக்கியைந்த வழிகளைக் கைக்கொண்டு வியவசாயம் கைத்தொழில் வியாபாரம் முதலியவற்றால் பெரும் பொருள் அடைந்து, நாட்டின் பரிபாலனத்தையும் மக்கள் உரிமை முறைமைக் கேற்ப மாற்றியமைத்து வரும் ஜப்பான் சீனம் முதலிய நாடுகளைப்போல மேம்படவேண்டுமானால், தற்காலம் எவ்வெவ்நாட்டார் எவ்வெம் முறையில் வியாபாரத்தால் பொருளீட்டிச் சிறந்து வருகிறார்களென்பதை அடிமையாகாமல் முதலாளிகளாகவே யிருந்து வரும் வியாபாரிகள் யாவரும் அறிந்து கைக்கொண்டு வர்த்தகம் செய்துவர முயற்சிக்க வேண்டும்.

நந்நாடு நலமடைய வேண்டுமென்ற நாட்டத்துடன் எமது மாபினரும், இன்னிசைக் கதைகள் சம்பாஷணைகள் மூலமாக நாட்டின் மக்களை நல்வழிப்படுத்தும் கதாரத்னாகரம்

என்னும் பத்திரிகைக் காசிரியரும், வைத்தியம் வைதீகம் முதலிய துறைகளில் தேர்ச்சியுற்று அம்முறையில் தமக்குள்ள அநுபவ மருந்துகளை நோயினர்க்கு அமிர்தமென அளித்து வருபவரும், வியாபாரத் துறைகளில் கை தேர்ந்தவருப், சுதேசமித்திரன் பிராஞ்சு மானேஜரா யிருப்பவருமான திருமான் M. A. நெல்லையப்ப முதலியாரவர்கள் "வியாபார தந்திரம்" என்னும் பெயருடன் இந்நாலை இயற்றி வெளியிட்டுள்ளார்கள்.

வணிகர்க்குப் பெரிதும் பயன் படுவதான இந் நூலில் புதிய ஊக்கம், பிரபஞ்சப் போக்கு, பூர்விக இந்தியா, கூட்டுறவு வியாபாரம் முதலிய வியாபாரத் துறை விஷயங்கள் விரிவாக எழுதப்பட் டிருப்பதுடன், வியாபாரத்தைக் குறித்து நந் நாட்டுத் தலைவர்களும் மகான்களும் தெரிவித் திருக்கும் கருத்துகளும் அவரவர்களின் உருவப் படங்களுடன் அழகாக எடுத்துக் காட்டப்பட் டிருக்கின்றன. நவீன முறையில் வியாபார தந்திரம் என்ற புத்தகத்தை வெளியிட் டிருக்கும் நமது சகோதரர் இதற்கு முன் வெளியிட் டிருக்கும் வர்த்தக் யுக்தி'யை வாசித்திருக்கும் ஆயிரக் கணக்கான நேயர்களும் இந் நூலையும் வாங்கி வாசித்துப் பெரிதும் பயனடைக் தின்புறுவார்க ளென்றெண்ணுகின்றோம்.

தமிழ் நாட்டில், முதலுள்ள பண்டங்கொண்டு வாணிபஞ் செய்து அதன் பயனுண்ணும் வணிகமணிகளும், நாட்டின்

முன்னேற்றத்துக்கான முறைகளைக் கைக்கொள்ள முயற்சிக்கும் அன்பர்களும் இவ் வியாபார தந்திரத்தைக் கைக்கொண்டு ஆசிரியர்க்கு நன்றியறிதலைச் செலுத்தும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

நாத விலாசம்
24—5—21

பு. சிதம்பரபுன்னைவனநாதன்.

உ

கடவுள் துணை.

வியாபார தந்திரம்

VYAPARA TANTRAM

முதற்பாகம்

"அகரமுதலவெழுத் தெல்லாமதி
பகவன் முதற்றே யுலகு"—குறள்

இப்பிரபஞ்சத்தை பிரத்யேகமாகவும், பார்ப்போர் தாம் வேறாகவும் நினைத்து, சற்றே சிந்தித்துப் பார்ப்பாராகில் இவ்வுலகத்தையும் அதனுட் பொருள்களையு முண்டுபண்ணியவர் ஒருவர் உளர் என்பதே மனத்தில் உதயமாகும். கடவுள், எள்ளில் எண்ணெய் போல் எங்கும் பராபரவஸ்துவாய் எல்லோருள்ளிலும் நடனமிடுவதாய்ப் பெரியோர் சொல்வார். இந்நூல் இடையூறின்றி இனிது முடியும்

பொருட்டு கருணைவள்ளலாகிய அக்கடவுளின் திருவடியைப் போற்றுகின்றனம்.

1. மனித சக்தியின் எல்லை.

இந்த உலகுக்குக் காரண கர்த்தாவாய் ஒரு முதல்வன் இருக்கவேண்டுமென்று அனுமானிப்பது போலவும் அண்டத்திலுள்ளபடி பிண்டத்திலும் என்பது போன்றும் ஒவ்வொருவர் சரீரத்திலும் கடவுள் சக்திவடிவமாய் நிறைந்திருக்கிறார். எண் சாண் உடம்புக்கும் சிரசே பிரதானமாயிருப்பதால், அச்சிரசினிடத்தேதான் இந்த சக்தியின் எல்லையாகும். பகற் பொழுதில் விழித்திருக்கும்போது—புருவத்தினிடமாகவும், சொப்பன காலத்தில் கண்டத்திலும், ஒன்றுந் தெரியாமல் நன்றாய்த் தூங்கும்போது இருதயத்திலுமாயிருக்கிறது. இந்த சக்தி அறியுந் தன்மையாய், சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தத்தை முறையே தெரிந்துகொள்ள இந்திரியங்களுக்குட்பட்டிருந்தாலும், சரீரத்திரயம் அத்தனைக்கும் உணர்ச்சி—தெரிவு—வடிவாய் நிறம்பி யிருக்கிறது. இதனை ஆன்ம சக்தி, மனோசக்தி. சரீரசக்தி, ஜீவசக்தி யென்று கல்வி யறிவுக்குத் தக்கவாறு சொல்வார்கள்.

2. ஜீவசக்தி தந்திரம்.

உலக வியாபாரம் எதற்குமே தந்திரம் அவசியம். தந்திரம் என்பது இரு சொற்களால் அமையப் பெற்றது. தான் என்பது திரத்தோடு சேரும்போது தந்திரம் என்றாயிற்று. தான் என்றால் ஜீவன் எனப் பொருள் தரும். திரம் என்றால் சக்தி யென்பதாகும். தந்திரம் என்பதற்கு ஜீவ சக்தி

வென்றறிந்தோம். இந்த ஜீவசக்தியைக் கண்ணால் காணக் கூடாததாயினும் தொழிலால் அறியலாம். அஃது எப்படிப் போலென்றால் காற்று என்பது எல்லோருக்கும் தெரியும். உடம்பில் படுவதால் காற்று அடிக்கிறது என்று உணருகிறோம். மரத்தின் இலைகள் ஆடினாலும் காற்று அடிக்கிறது என்று சொல்லுகிறோம். சில சமயங்களில் இந்தக் காற்று மரத்தை வேரோடு பிடுங்கித் தள்ளிவிடுகிறது. இன்னும் பூமியில் ஒரு பக்கமுள்ள வஸ்துக்களை மற்றோர் பக்கத்தில் சேர்த்து விடுகிறது. இதனால் நாம் என்ன தெரிந்துகொள்ளுகிறோம்? காற்றினது உருவம் இன்னதெனக் காண முடியாததாயினும் வேலை மாத்திரம் அபாரமாய் நடக்கிறது. இதைப்போலவே ஜீவசக்தியால் எத்தனைபேர் மேலாம் பதவியைப்பெற்று வாழ்கின்றனர். இவை யெல்லாம் சிந்தனைக் கெட்டியதேயன்றி மனதிற்கெட்டியதன்று. மனம் கண்ணாடியைப் போலுள்ளது. எதிர்ப்பட்ட பொருளை தன்னுள் பதிந்திடச் செய்து பிறிதோர் காலத்து பயாஸ்கோப் (Bioscope) சித்திரங்களைப் போல் கனவிலும் நனவிலும் காட்டிக் கொண்டிருக்கும். கண்ணாடியில் எதிர்ப்பட்ட பொருள் பதியாது—தங்காது. மனமானது இருகண்ணின் வழியாய்ப் பார்த்து புகைப்படம் போல் பதித்துக் கொள்ளும். புத்தியால் நிதானித்து சிந்தனை செய்து ஆலோசித்தால் கலை பெருகும். இப்படி சிந்தனை என்னும் யந்திரத்தி லிட்டு, பகுத்தறிந்து செய்ய முயல்வதே தந்திரம்.

"—சிந்தை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே"

—தாயுமான ஸ்வாமிகள்.

எனவே சிந்திக்கும்—ஆழ்ந்து ஆலோசிக்கும்—சித்த முடை யோருக்கு எல்லாம் சித்தியாகும்.

சிந்தனை—ஆலோசனை—தொழிலாளர்க்கு மிக்க அவசிய மென்றாயிற்று. இந்த ஆலோசனையில் உதிப்பதைத்தான் தந்திரம், யுக்தி சக்தி யென்று சொல்வது வழக்கம். இந்த சக்திதான் பிழைப்புக்கு ஏதுவானது. இப்பொழுது இதை வியாபாரத்துக்கு உபயோகிக்க வேண்டும். தொழிலுக்குத் தக்கவாறு உபயோகிக்கும்போது தந்திரமாய்ச் செய்தான்.—நல்ல தந்திரம், இப்படி நம்மவர்கள் சொல்லி வந்ததை விளம்பரம் (Advertisement) என்று இப்பொழுது நவீனமாகச் சொல்லப்படுகிறது. மின்சார சக்தியை எத்தனை விதமாய் உபயோகிக்கிறார்களோ அவ்விதமே தந்திரத்தால் அளவற்ற வேலைகளைச் செய்யலாம்.

மோக்ஷ சாதனத்துக்கும், சிந்தனையே அத்யாவசியமாகும். சிந்தித்தவர்க்கு அருள் சுரக்கும் என்பது முதியோர் மொழியாகும். சிந்தனை வழிப்பட்டு ஆழ்ந்தோருக்கு, புறக் கண் திறந்திருந்தும் அகக் கண்ணுக்கே பிரகாசம் அதிகமாகும். தொழிலாளனும் தனித்திருந்தே சிந்தனை செய்ய வேண்டும்.

"சிந்தித்தவர்க்கருள் கணபதி ஜெய ஜெய"

"Business despatched is business well done; but business hurried is business illdone—"Bulwer.

3. கடவுளும் அவர் தந்திரமும்.

எங்கும் நிறைந்த கடவுளுக்கு தங்குமிடமில்லையோ? அவர் எப்பேர்ப்பட்டவர்? எவ்வருணத்தர்? எவருக்குச் சொந்தமானவர்? எவருக்குத் தோற்றக் கூடியவர்? இவ்வித சங்கைகள் சிற்றறிவுடையோருக்குத் தோற்றுவதியற்கையே.

கடவுள் ஆகாயம் போல் எங்கும் நிறைந்தவர். யாவருக்கும் பொதுவானவர். எல்லோருள்ளிலும் இருக்கிறவர்.

கடவுள் கருணைப் பிரவாகமாய் தயாவடிவாய்—அன்பாயிருக்கிறார். கரை புரண்டோடும் ஒரு பெரிய நதியினிடத்து எந்த மனிதனும் துணிந்திறங்குதல் கூடாது. கரையோரங்களில், மடுவு, பள்ளத்தாக்கு, சரிவு, சுழல், அலை முதலியன விருப்பது இயல்பு. நதியின் நீரை வேண்டுவோர் உபயோகிக்கும் பொருட்டு நம்முன்னோர்கள் நாம் நல்வழியைக் கண்டு இறங்கவேண்டு மென்ற எண்ணங்கொண்டவர்களாய் படித்துறை கட்டி வைத்துள்ளார்கள். ஒரு படித்துறை எல்லோர்க்கும் போதாதென்று இடத்துக்குத் தக்கவாறு கட்டியுள்ளார். ஒருவர் வழிகாட்ட அத்துறையிறங்குதல், எவ்வளவு நன்மை பயக்கும்? அஃதே போல் பெரியோர் எங்குமுள்ள கடவுளைக் கண்டறிய கோவிலென்றும் பள்ளிவாசலென்றும் மாதாகோவிலென்றும் துறைகளைக் கட்டியுள்ளார். அங்கே போய் அவரவர் மதாசாரப்படி ஒருமைப்பட்ட மனதுடையவராய்க் கடவுளைத் துதிக்கவேண்டும். அவரைக் காண்பது எளிதாகமாட்டாது. இன்னொருவர் காட்டிக் கொடுக்கவுமுடியாது.

மைப்படிந்த கண்ணாளுந் தானுங்கச்சிமயான
த்தான் வார்சடையா னென்னினல்லா.
னொப்புடைய னல்ல னொருவனல்ல னோரூரனல்
லனோருவமனில்லி,
யப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே
கண்ணா கக்காணினல்லா,
லிப்படியனிந் நிறத்தனிவ்வண்ணத் தனிவனி
றைவனென் றெழுதிக்காட்டொணாதே.

—திருநாவுக்கரசு சுவாமிகள்

எனவே கடவுளை வரை யறுத்தும் பார்க்கொணாது.
பின் யார் கண்டறியக்கூடு மெனின்

“உடல்குழைய வென்பலா நெக்
குருக விழி நீர்களூற்றென வெதும்பி யூற்ற
லூசி காந் தத்தினைக் கண்ட ணுகல்
போலவே யோருறவு முன்னி யுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துண்
ணடுக்குறப் பாடியாடிக் குதித்துப்
பனி மதி முகத்திலே நிலவனைய
புன்னகை பயப்பியார்த்தார்த் தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித்
துக் கூப்பிவானேய வாணி லின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே
நீடூழி வாழியென வாழ்த்தி யேத்தும்
கடன் மடை திறந்தனைய வன்பான்
புக்கெளியைகண் ணெஞ்சனுக் கெளியையோ

கருதரியசிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.''

—தாயுமான ஸ்வாமிகள்.

காரிய அளவாகவே கருத்தைச் செலுத்தி கருமத்தைச் செய்வோர், உலகியல்பான சுகதுக்கத்துக்கும், லாப நஷ்டத்துக்கும் தம்மைப்பறிகொடுத்து, கலங்கி நிற்காமல், ஒரு எஜமானனிட்ட வேலையைச் செய்வதுபோல் செய்து அவனு(எஜமானனு)க்கு வரும் லாப நஷ்டத்துக்கு தான் சம்பந்தப் படாதிருப்பதுபோல், தன் சொந்த வேலையிலும், பெரியோர் பற்றற்றிருப்பார். இத்தகையோரே கடவுளைக்காண அருகராவர்.

மெய்மறந்து, கடவுளே கதியென்றிருக்கும் பக்தர்களுக்கு ஒரு சிறிதே கட்டுப்பட்டுத் தோன்றுகிறார். எனினும், எங்கும் நிறைந்த பராபர வஸ்துவுக்குக் குறைவில்லை. எப்படி யெனின் நறுமணங் கமழும் சந்தனத்தில் சொற்பமெடுத்து சிலர் பூசிக்கொண்டால், சந்தனத்தி லிருக்கின்ற மணம் நீங்கி அற்பமணமாகாதது போலாம்.

" சலங்காத நெஞ்சுடைய ஞானதீரர்
கடவுளேக் காணவே காயமாதி புலன் காணார்
சுரமொருவன் ஞானம் பேசிப் பொய்க்கூடு
சாத்தமெதென்ன புலமை கண்டாய்


—தாயுமான ஸ்வாமிகள்.

அப்பேர்பட்ட கடவுள், ஒவ்வொரு ஜீவனிடத்திலும் அன்பாகவும், அறிவாகவும் தந்திரத்தை (தனது திரத்தை)

கொடுத்துலவுகின்றனர். சரீரமுழுதும் சக்தி ரூபமாய் வியாபித் திருக்கின்றனர்.

---

4. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.



ஒவ்வொருவனும் தன்தன் மதத்தையே—மதாச்சாரியர் வகுத்தபடியே—அனுசரிக்க வேண்டும். மதங்களெல்லாம் ஒரு தாய் வயிற்றில் பிறந்த குழந்தைகளைப் போலவேயாகும். கிரிஸ்தவன் கிரிஸ்தவ மதத்தையும், முகமதியன் இஸ்லாமார்க்கத்தையும், அப்படியே இந்துக்களும் முன்னே

ரமைத்த தர்ம மார்க்கத்தையும், மதாசாரங்களையும் கைப் பற்றி யொழுக வேண்டும்.

(இதர தேசத்தார் நம்மில் மதச்சார்பான சண்டைகளை இழுத்து, பிரித்து விடுவதற்கு ஒருக்கால், இதனை ஒரு தந் திரமாய்க் கைப்பற்றுவர். ஆகையால் தேசாபிமானத்தால் கட்டுப்பட்டிருக்கவேண்டும்.)

ஜனங்கள் தங்கள் நிலங்களை எல்லைப்படுத்தி பிரித்துக் கொள்கின்றனரேயன்றி, ஒரே மயமான வியாபகமான ஆகா சத்தை பிரிவினை செய்ய ஒருவராலுமாகாது. பிரிக்கக்கூடாத ஆகாசமானது எல்லாவற்றையும் சூழ்ந்து எங்கனும் வியா பித்திருக்கின்றது. அதைப் போல சாதாரண மனிதன் அக்ஞானத்தால் "என் மதம் பெரிது—உண்மையானது, என் மதந்தான் சிறந்தது" என்கிறான். அவன் மனத்தில் மெய் யறிவு உதயமாகிப் பிரகாசிக்கும் காலையில், சமயவாதிகளின் பேரை—கணக்கு வழக்கு கடந்த சமயாதீதப்பழம் பொரு ளாய் விளங்குவது அகண்ட சச்சிதானந்த ஸ்வரூபமேயென்று அறிந்து கொள்வான்.

பிணியால் வருந்தும் குழந்தைகளுக்குப் பத்தியம் கொடுக்கும் தாயானவள் ஒரு குழந்தைக்கு அன்னமும் காய் கனி பதார்த்தமும், மற்றொன்றுக்கு சவ்வாசி, அரோருட் கஞ்சியும், மூன்றாவது குழந்தைக்கு ரொட்டியும் வெண் ணெய்யும் கொடுப்பதுபோல், கடவுளும் பலவகை மனிதர்க ளின் இயல்புகளுக் கேற்றவாறு பல்வேறு சமயங்களை யேற் படுத்தி யிருக்கிறார்.

(ஆகையால் அவரவர் தம்தம் மதத்தின் உட்பொருளையும் நியாயங்களையும் தெரிந்துகொண்டு நடக்கவேண்டும். மூடமதப் பிடிவாதத்தையும், பிறமதங்களைக் கண்டு சகியாமையையும் விட்டுவிட வேண்டும். தன்மதக் கோட்பாடுகளை அறியாமல் பிறமதங்களை விசாரிக்கலாகாது.)

இவ்விதம் சமரசத்தை எடுத்துக் கூறுகின்றார். சமயங்கள் தோறும் கடவுள் வெவ்வேறு போல் தோன்றினாலும் அவர் சக்தியே—தந்திரமே—எங்குமுள்ளது.

> The documents of the quiet past are inadequate to the stormy present. The occasion is piled high with difficulty and we must rise to the occasion. As our case is now so we must think anew and act anew.
>
> —Abraham Lincoln.

MY COUNTRY

YOUR COUNTRY IS ALL THAT Surrounds you, all that has reared nourished you, every thing that you have loved. That land you see, those houses, those trees, those smiling girls that pass, that is your country. The laws that protect you, the bread which rewards your toil the words you exchange, the joy and the sadness which come to you from men and the things amid which you live, that is your country! The little chamber where you once saw your mother, the recollections she has left you, the earth where she reposes that is your country. You see it and you breath it everywhere! I imagine, my son, your rights and your duties, your affections and your needs, your recollections and your gratitude, all united under one name and that name will be

"MY COUNTRY"

—EMIL SOUVESTRE

French Author,

Soldie and Patriot.



சுவாமி விவேகாநந்தர்

"Thou Hero, take Courage, be proud that you are an Indian; Say in pride."

—*Swami Vivekananda,*

5. இந்து தேச மகத்துவம்

நமது பூமியே புண்ய பூமி.

விவேகானந்த ஸ்வாமிகளின் அறிவிப்பு

இப்பூமண்டலத்தில் நம் இந்துதேசத்தை முதன்மையாகக் கொண்டாடுகிறார்கள். பாரததேவியை அனைவரும் போற்றுகின்றனர். நம்புண்ணிய பூமிதேவியைப் புகழ்கின்றனர். வளமிகுந்ததென வாழ்த்துகின்றனர். எத்தகையோரையும் தெய்வத் தன்மையராய் மாற்றக் கூடியதும் மெய்யறிவைக் கொடுக்கக்கூடிய தத்துவ சாஸ்திரத்திற்கும் சன்மார்க்க கொள்கைகளுக்கும் ஆத்ம ஞானத்திற்கும் இருப்பிடம் இவ்விந்துதேசம். வாழ்வில் வரும் சுகதுக்கத்தையும் லாப நஷ்டத்தையும் ஆராய்ந்து, தத்துவ விசாரணை செய்து, எல்லாம் வெளிமயக் கென சித்தம் தெளிந்து ஞானியாவதும் இந்தப் பூமியில்தான்.

"தர்மம் நசித்து அதர்மம் மேலிடும் போதெல்லாம், மனித வர்க்கத்தைக் காப்பாற்றுவதற்காக நான் அவதரிக்கிறேன்" என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் கூறியுள்ளார். சாமானிய மனிதனைப்போல், அப்போதைக் கப்போது மனித வடிவெடுத்து கடவுள் லோகோபகாரமான வேலைகளைச் செய்கிறார். ஸ்வாமி விவேகானந்தரையும், தெய்வ அம்சம் பொருந்தியவ ரென்றும், அவதார புருஷ ரென்றும் இன்றும் சொல்லுகின்றனர்.

அம்மகான், ஜோஸியம் போல் ஞானதிருஷ்டியால் தெரிவித்த அளவற்ற விஷயங்களில்—எச்சரிக்கைகளில்—சிறிது ஒரு தந்திரமாக தெரிவிக்கப்படுகிறது.—1893.

"நான் விரும்புவதெல்லாம், நமது வாலிபர்களில் அநேகர் வருஷந்தோறும் ஜப்பானுக்குப் போய்ப் பார்க்க வேண்டு மென்பதே. ஜப்பானியர்களுக்கு இந்தியா இன்னும் உயர்ந்ததும் நன்மையுமாயுமுள்ள ஒவ்வொன்றையுமுள்ள சொப்பன பூமியாகவே இருக்கிறது! நீங்களோ! உங்களுடைய ஸ்திதியென்ன? உங்களுடைய ஜீவிதகால மெல்லாம் அற்ப விஷயங்களைப் பேசிக் கொண்டிருக்கிற வீண் பேச்சு மாத்திரமாயுள்ளவர்களே! நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? வாருங்கள், வந்து இந்த ஜனங்களைப் பாருங்கள்! பார்த்து விட்டுப்போய் அவமானத்திற்குப் பயந்து உங்கள் முகங்களை ஒளித்துக் கொள்ளுங்கள். முழு மூடச் சாதியா நீங்கள்? அயல்நாடு வந்தால் ஜாதியை யிழந்துவிடுவீர்களா! இந்த நூற்றுக் கணக்கான வருஷங்களாகத் தடிப்பேறிய மூடக் கொள்கைகளால் மேன்மேலும் அதிகரித்து வருகிற சுமையைத் தலையில் தாங்கி உட்கார்ந்துகொண்டிருக்கிற நீங்கள் நெடுங்காலமாய், இந்த ஆகாரத்தை அல்லது அந்த ஆகாரத்தைத் தொடலாம், அல்லது தொடக்கூடாது என்றும் வாதஞ்செய்து உங்களுடைய சக்தியை யெல்லாம் செலவழிக்கின்ற வருஷக் கணக்காய் ஜனசமுகத்தின் இடைவிடாத கொடூரத்தினால் ஜீவகாருண்யம் சிறிது மில்லாத—நீங்கள் எப்படி யிருக்கிறீர்கள்? கைகளில் புத்தகங்களுடன் கடற்கரையில் சுற்றிக்கொண்டும், ஐரோப்பியரைப் பின்பற்றி அவர்களுடைய புத்தியினின்றும் சிதறுகின்ற அற்ப அறிவைக்கொண்டும் ஜீவிதம் முழுதும் ஒரு முப்பது ரூபா குமாஸ்தா வேலையை யடைய தன்னை ஒப்புக் கொடுக்கிறான். அல்லது ஒரு வக்கீலாக வேண்டி படிக்கின்றனர். (இதுவே இந்துதேச மாணவர்களின் உத்தம ஆசை.) உங்களுடைய புஸ்தகங்களையும் ஆடைகளையும், சர்வகலாசாலை நற்சாட்சிப்

பத்திரங்களையும் — விழுங்கி விடுவதற்குக் கடலில் போது மான ஜலமில்லையா ?

வாருங்கள், மனிதர்களாயிருங்கள். அபிவிருத்திக்கு எப்பொழுதும் எதிரிடையாயிருக்கின்ற புரோகிதர்களை வெறுத்துத் தள்ளுங்கள் ; ஏனென்றால் அவர்கள் ஒரு பொழுதும் சீர்ப்பட மாட்டார்கள்; ஏனென்றால் அவர் களுடைய சித்தம் ஒருபோதும் விசாலமாகாது. அவர் கள் நூற்றுக்கணக்கான வருஷங்களாயுள்ள மூடக்கொள்கை, கொடுமை இவற்றினின்றும் முளைத் தெழுந்தவர்கள். வைதீகக் கொடுங் கோன்மையைக் களைந் தெரியுங்கள், குறுகிய விடங்களிலிருந்தும் வெளிப்படுங்கள். பரந்த பூமண்டலத்தைப் பாருங்கள். ஜன சமூகங்கள் எங்ஙு னம் முன்னேறிச் சென்றுகொண் டிருக்கின்றன வென் பதைப் பாருங்கள். மனிதனை நீங்கள் நேசிக்கிறீர்களா ? உங்கள் தேசத்தைப்பற்றிய தேசாபிமானமுண்டா ? அப் படியானால் வாருங்கள். நாம் இன்னும் உன்னதமானதும், நலம் தரத்தக்கதுமான விஷயங்களில் முயற்சி செய்வோம். பின்னேறாதீர்கள். சந்தேகத்துக் கிடமான குறுகிய நோக் கங்களை விட்டொழியுங்கள். முன்னேறிச் செல்லுங்கள். ஒருகாலத்தில் இந்தியாவில் குழந்தைகளுக்கு வயதாகவாக பெரிய மனிதர்கள் (வளர்ந்த குழந்தைகள்) என்று சொல் லப் படுகிறார்கள். இந்தியாவானது அதனுடைய வாலிபர் களை பிற்காலத்தில் பெரிய மனிதர்கள், ஆங்கில நாகரீகத் தனத்தாரால் உங்களிடத்தில் அநியாயமாய் வளர்ந்து வரும் அநாகரிகத்தைத்தொலைப்பதற்கு ஒரு வஜ்ராயுதத்தை, அனு ப்புவார், சென்னை நகர்தான் ஆங்கிலேயர்களுக்கு முதல் முதல் இடங்கொடுத்தது. அந்த சென்னை நகர்தான் ஒரு

முதல் மனிதனை அனுப்பியிருக்கிறது. இப்பொழுது யாது வரினும் பின்வாங்காமல் இக்காலத்தில் எளியோர்க்கும் பசித்தவர்களுக்கும் ஆகாரமும் பொது ஜனங்களுக்கு நல்லறிவு முதலியவைகளைக் கொடுப்பதற்கு யோக்யதையான எத்தனை மனிதர்களைக் கொடுப்பதற்கு சென்னை தயாராக விருக்கிறது.

அமைதியாயும் மௌனமாயும் உறுதியாயும் உள்ள வேலைகளைச் செய்ய கௌரவத்திற்கும்கண்யத்திற்கும் செய்ய வேண்டும். இவை ஞாபகத்தில் எப்பொழுதும் இருக்கட்டும்!

நமது ஆலோசனையை ஒழுங்கு படுத்தி விருத்தி செய்யுங்கள். நீங்கள் எல்லாம் செய்ய வல்லவர்கள் என்று நம்புங்கள். கடவுள் நம்முடன்கூடவே இருக்கிறார் என்று அறிந்து கொள்ளுங்கள். ஆகையால் தீரர்களே! முன் செல்லுங்கள். கல்வியில் தேர்ந்த வாலிபர்களிடத்தில் வேலை செய்யுங்கள். அவர்களை ஒன்று சேர்த்து ஒற்றுமைப் படுத்துங்கள். சீர் திருத்துங்கள். பெரிய கஷ்டங்களைச் சகித்தே நல்ல காரியங்கள் கைகூட வேண்டும். பேரும் வீண் பெருமையும் உதவா. கீர்த்தியை விரும்பாதே, எதற்கும் ஆசைப்படலாகாது' நல்லெண்ணத்தைப் பரவச் செய்யுங்கள். முன் எச்சரிக்கையுடன் வேலை செய்யுங்கள். நான் என்ற அகங்காரத்தை அடக்குங்கள். புற்கள் ஒன்று சேர்க்கப்பட்டு கயிறான பிறகு மதயானையையும் கட்டுப்படுத்தும். உங்கள்பால் கடவுளின் அனுக்கிரகம் பெருகட்டும். அவருடைய சக்தி உங்களிடத்தில இருக்கிறதாக நம்புங்கள். "நன்றாய் விழித்துக்கொள்ளுங்கள் லட்சியத்தைப் பெறும்வரை விடாமுயற்சி செய்யுங்கள்" என்று வேதங்கள் கோஷிக்கின்றன. எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்!! நீண்ட இரவுகழிந்து போகின்றன; அருக்கனுதயகாலம் நெருங்குகிறது. இந்தியாவின் ஓர் பகுதி?

யில் அலை கிளம்பிவிட்டது. அதை அலையின் பராக்ரமத்தை எதிர்க்கும் சாமர்த்தியம் எதற்குமில்லை; அதுதான் உங்களுக்குக் கடவுள் தந்த சக்தி. சக்தியான குழந்தைகளே, அதற்குள்ளது அன்பு. அன்பே விஸ்வாசம், அதுவே நம்பிக்கை. பயப்படாதீர்கள்! பாவங்களிற் பெரிய பாவம் பயமேயாகும்.

கர்வ மடையாதீர்கள், பிடிவாதமாக எந்தக்கொள்கைகளையும் அனுசரிக்காதீர்கள். அற்புதமான காரியங்கள் நடைபெறவேண்டும். இனிமேல் அடையப்போகிற ஜெயத்திற்கு இப்பொழுது கிடைத்திருக்கிற இந்த ஜெயம் எம்மட்டு? நம்புங்கள்! நம்புங்கள்!!

—பூகோளப் படங்கள், தேச சரித்திர நூல்கள், ரசாயனங்கள் முதலியவற்றை விலைக்கு வாங்குங்கள். உங்களால் முடிந்த நன்மையை யெல்லாம் செய்யுங்கள். பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் பெருகட்டும்: அவை ஒரு தேசத்துக்கு மிகுந்த நன்மை தரும்.

—தலைமை ஸ்தானத்தை வகிக்க ஆசைப்படாதீர்கள். கர்வம் கவர்ந்து கொள்ளும். சுறு சுறுப்பாய் வேலை செய்யுங்கள்.

—வாலிபர்களுக்கு ஊக்கத்தை ஊட்டுங்கள். உற்சாகப்படுத்துங்கள்.

—அடிமைப் பட்டிருக்கும் ஒவ்வொரு ஜாதியாருள்ளும் முக்கிய பாவமாயிருப்பது பொறாமையாகும்.

—"வேலை செய்வதற்கே உனக்குப் பாத்தியதை யுண்டு, ஆனால் வேலையின் பயன் உனக்கில்லை" என்பதை மறுபடியும் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

—எனது இருதயம் இரக்க உணர்ச்சியால் நிறைந்துளது, நீங்கள் அதை யூகித்துக் கொள்ளக்கூடும். லட்சக்கணக்கான ஜனங்கள் பசிப்பிணியாலும், அறிவின்மையாலும் பீடிக்கப்பட்டிருக்கிற வரையில், அவர்களுடைய செலவில் வித்தை பயின்று அவர்களைக் கொஞ்சமேனும் கவனியாமலிருக்கிற ஒவ்வொருவனையும் துரோகியென்று சொல்ல வேண்டும்.

—"ஏழைகளை இம்சித்து நிரம்பப்பணம் சம்பாதித்துக் கொண்டு நேர்த்தியான உடையுடுத்தித் திரிபவர்களை இழிந்தவர்கள் (சண்டாளர்கள்) என்றே கூறுகின்றேன்.

—"நாம் என் அடிமைத் தனமுள்ளவர்களாயும், கஷ்டம் நிறைந்தவர்களாயும், நடைப் பிணம்போலிருக்கிறோம், நம்மெல்லோருக்கும் கடவுள் கிருபையுண்டாகட்டும்.

—" அன்பே நமக்குள் வரவேண்டும். ஒருவருக்கொருவர் அன்பாயிருங்கள்.

—" சர்வேஸ்வரனுடைய சாரவிந்தங்களில் ஆத்மாவை ஐக்யப்படுத்துங்கள். அப்பொழுது வல்லமை, உதவி அளவற்ற சக்தி இவையெல்லாம் உண்டாகும்.

—"நல்ல முயற்சியில் "யாதுநேரிடினும் பின்வாங்காதே" என்று நான் இன்னும் சொல்லுகிறேன். அன்பர்களே பயப்படாதீர்கள் !

—"பொறுங்கள்—பணம் பெரிதல்ல, கீர்த்தி பெரிதல்ல, அன்பே பெரிது. கஷ்ட நிஷ்டூரங்களினிடையே பின் வாங்காது பகிரத முயற்சி செய்து நிற்கின்ற நற்குணமே சிலாக்கியமானது.

—"இப்பொழுது நம்முன் இருக்கிற கேள்வி சுதந்தரம் இது வளர்ச்சியேயில்லை. நமது முன்னோர்கள் மதக் கொள்கைகளை சுதந்திரப் படுத்தினார்கள்; இப்பொழுது ஒரு சுற்புதமான மதத்தை யுடையவர்களாயிருக்கிறோம். ஆனால் சிலர் ஜனசமூகத்தின் கால்களில் கடுமையான விலங்கைப் பூட்டினார்கள். நமது ஜன சமூகம் கட்டுமேல் கட்டுப்பட்டு கலங்கி நிற்கிறார்கள். கட்டை அறுத்து விடுங்கள்.

"மேல்நாடுகளில் ஜனசமூகத்திற்கு சுதந்திரமிருக்கிறது.

—"நமது வளர்ச்சிக்கு முதலாவதாக வேண்டியது சுதந்திரம் மனிதனுக்கு—நினைக்க—சிந்திக்க, கேட்க, பார்க்க கடவுள் சுதந்திரத்தைக் கொடுத்திருக்கிறார்.

—"மனிதன் பிறரை இம்சிக்காதவரையில் அவனுக்கு ஆகாரம், உடை, விவாகம் முதலிய எல்லா விஷயங்களிலும் சுதந்திரம் வேண்டும்.

"வேலை செய்யுங்கள், தலைமை ஸ்தானத்தைப் பெற்றாலும் வேலைபாளனாயிரு. தந்நலங்கருதாதிரு. தனிமையாய் ஒரு சிநேகிதன், இன்னொரு சிநேகிதன் மீது குற்றங்கூற, ஒருபொழுதும் கேட்காதே.

—"உங்களிடத்தில் அன்பு இருக்கிறதா? இருந்தால் கடவுள் உன்னிடத்திலிருக்கிறார்,

—"இந்தியாவில் எல்லாத் தீங்குகட்கும் அடிவேரா யிருக்கும் விஷயம் ஏழைகளின் ஸ்திதியே; மேல் நாடுகளி லுள்ள ஏழைகள் பிசாசங்களே; அவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நம்மவர்கள் தேவதைகளே. ஆகையால் தான் நமது ஏழைகளை நல்ல ஸ்திதியில் கொண்டு வரலாம். நமது தாழ்ந்த வகுப்பினருக்கு செய்யத்தக்க ஒரே ஊழியம் யாதெ னில் அவர்களுக்குக் கல்வியை யளிப்பதே. அவர்கள் இழந்துபோன தற்பெருமையை விர்த்திபண்ணுவதே.

—"வைதிக அதிகாரமும் அந்நிய ஜெயமும் அவர்களை — ஏழைகளை — நூற்றுக்கணக்கான வருஷங்களாகக் கீழே போட்டு மிதித்துவிட்டன.

—"இந்தியாவின் ஏழைகள் தாங்களும் மானிடராசிகள் என்பதை மறந்து விட்டனர். அவர்களுக்கு நல்ல எண்ண முண்டாகச் செய்யவேண்டும். அவர்களைச் சுற்றி உலகில் என்ன நடந்து கொண்டிருக்கின்றன வென்பதைப் பார்ப்ப தற்கு, அவர்களுடைய கண்கள் திறக்கப்படவேண்டும்.

—"எளியவர்களுக்கு கல்வி கற்பிப்பது கஷ்டம். ஒவ் வொரு கிராமத்திலும் தர்மப் பள்ளிக்கூடம் வைப்பதா யிருந் தாலும் அதனால் யாதொரு பிரயோசனமு முண்டாகாது; பள்ளிக்கூடத்திற்குப் போவதைப்பார்க்கிலும், எளிய பையன் கள் வயல்களில் தங்களுடைய பெற்றோருக்கு உதவி செய்யச் சொல்லவோ, அல்லது வேறுவிதத்தில் ஜீவனோபாயத்திற்கு முயற்சிக்கவோ செய்ய வேண்டியபடி இந்தியாவில் வறுமை அவ்வளவு கடூரமாயிருக்கிறது.

—"இதர தேசத்தார்கள் நம்மவர்கள் மரிக்கினும் ஜீவிக் கினும் கவனிப்பதில்லை. நம்முடைய ஜனங்களே தங்கள்

சொந்த பிரவிர்த்தியைத் தவிர வேறொன்றையும் நினைக்காம லிருக்கும்போது அவர்கள் (அமெரிக்கர்கள்) ஏன் நம்மைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்.

—"ஒரு ஜனசமுகத்துக்கு கல்வியே உயிர். எந்த ஜன சமுகத்தில் கல்வி பரவவில்லையோ எந்த ஜன சமுகத்தில் அறிவு பிரகாசிக்க வில்லையோ அந்த ஜனசமுகம் நாசமடை வதற்கு வழி தேடிக்கொண்டிருக்கின்றது என்பது நிச்சயம்.

—"கல்வி யென்பது சில எழுத்துக்களைக் கூட்டிப்படித் தலன்று; அறிவின் விளக்கமே கல்வி யெனப்படும்.

—"பிறரை அடக்கியாளவேண்டும்" என்று முயற்சி செய்யாதே."

—"இந்தியா மூடமென்னும் மூடுபனியால் கவரப்பட் டிருக்கிறது.

—"நாம் இந்தியாவையும்—உலக முழுவதையுமே எழு ப்பி விடவேண்டும். பயங்காளித்தனம் வேண்டாம்.

—"மரணம் வரினும் உண்மையாயிருங்கள். இதன் ரகஸ்யம் குரு பக்திதான். குருவினிடத்தில் விஸ்வாச மிருக்க வேண்டும்.

—"வேலை செய்யுங்கள். உங்களுக்குத் தெரியும். ஒற் றுமையாய் வேலை செய்யுங்கள். நீங்கள் ஜெயிப்பீர்கள் நிச் சயம்.

"உலகம் விசாலமாயிருப்பதுபோல உங்களுடைய மன தையும் நம்பிக்கையையும் விசாலப்படுத்துங்கள்.

"எவனொருவன் என்னைத்தவிர வேறொன்றையும் நம்பாதவனும், என்னிடம் பாரத்தைப் போட்டுவிட்டு இருக்கிறானோ, அவனுக்கு வேண்டியவற்றையெல்லாம் நான் அளிக்கிறேன்."

—பகவத்கீதை.

"நீ வீரன். தைரியமாயிரு.
இந்தியன் என்று கௌர
வங்கொண்டு கண்ணிய
மாய்ச் சொல்லு"—விவேகானந்தர்.

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு"—குறள்.

ஸ்ரீமான் கோபாலகிருஷ்ண கோகலே

கட்டாயக் கல்வி.

கல்வி பாரத மக்களுக்கு இன்றியமையாதது என்று அதற்காகப் பாடுபட்டவர் கோபாலகிருஷ்ண கோகலே. ஏழ்மை நிலை படைத்த இந்தியாவில் சம்பளமில்லா கட்டாயப் படிப்பு வேண்டும் என்றும் நல்ல நிலை உண்டாவதற்கு இது ரக்ஷா பந்தனம் என்றும் கருதி, சமயம் வாய்த்தபோதெல்லாம் அதன் அவசியத்தைப்பற்றி அடிக்கடி பேசி பரவச்செய்தார்

அவர் இங்கிலாந்தில் செய்த பொதுப் பிரசங்கங்களில் 100-க்கு 25-பேர்தான் பள்ளிக்கூடம் போகிறவர்களென்றும் ஐந்து கிராமங்களில் ஒரு கிராமத்தில் மாத்திரம் பள்ளிக்கூடம் இருப்பதாகவும் சொல்ல அதைக்கேட்டவர்கள் கட்டாயப் படிப்பு இந்தியாவுக்கு வேண்டியதென்று ஒப்புக்கொண்டார்கள். இராஜப் பிரதிநிதியின் சபையில், எந்த முனிசிபாலிடியும் அதன் எல்லைக்குள் இரைத்தனத்தாருடைய அனுமதியின்பேரில் ஆண்பிள்ளைகளுக்குக் கட்டாயப் படிப்பு ஏற்படுத்தி நடத்த சாத்தியப்படும்படி ஒரு (மசோதா) தீர்மானம் கொண்டு வந்தார். அது அநேக பாதுகாப்புகளாலே எல்லைகொண்டமையால், பயமாய்—மனச்சாட்சிக்கு விரோதமின்றி—சொல்லுமிடத்து முற்றிலும் நிர்த்தோஷமான தென்பது தெற்றென விளங்கும். அந்த தீர்மானத்தை

சென்னை அதிகார வர்க்கத்தார் சிலர் ஆமோதித்தனர். ஆனால் இதர பாக அதிகார வர்க்கத்தினர்கள் அதற்கு விரோதமாய் அபிப்பிராயங் கொடுத்ததினால் அது சட்டமாவதற்கு அனுகூலமில்லாமற் போய்விட்டது. எப்படி அனுகூலப் படும்; பொது ஜன ஒற்றுமைக் குறைவால் அவ்விதம் அரசாங்கத்தாரை எதிர்பார்க்க வேண்டியதாயிற்று.

கோகலே அபாரபுத்தி நுட்பமுள்ளவர் என்பது நன்றாய் விளங்குகின்றது. கல்வியெனும் கருந்தனம் நமது முன்னேற்றத்துக்கு மூலாதாரம் என்று கண்டு கொண்டார். அதனால்தான் மேற்கண்ட தீர்மானங் கொண்டுவர நேர்ந்தது. அது தவறிப் போனதைப் பற்றி எவருமே வருந்தமாட்டார். அத்தீர்மானம் தவறித்தான் போகும். உதய காலத்துக்கு அறிகுறியாக சுக்கிரன் (விடிவெள்ளி) புறப்பட்டது போல், பொது ஜனங்களின் மனதில் பதிந்திருக்கிறது. இந்தியாவில் சம்பளமில்லாத கட்டாயப் படிப்பு ஏற்படுத்துவது காலக்கிரமத்தில் கட்டாயமாகவே நடக்கப் போகிற ஒருகாரியமாகும்.

"Count that day lost whose low descending sun —views from thy hand no worthy action done."
Unknown.

THE DIGNITY OF BUSINESS

தொழிலின் மேன்மை

"At the time of the restoration the industry and Commerce of Japan was very low in public opinion and in the social scale, the military and political classes only being considered honourable. I began the new era with the same idea, and for five or six years pursued a political career, rising to the position of Vice Minister of Finance. Then I realised that the real force of progress lay in actual business, not in politics, and that the business elements were really most influential for the advancements of the Country. So I gave up my political position and devoted my life to business."

—*Baron Shibusawa.*

௭. உத்தியோகமும் உலக வாழ்க்கையும்.

ஒரு தேசத்தில் பொருள் சம்பாதித்தோரும் புகழ் பெற்றோரும் க்ஷேமாபிவிர்த்தியான அந்நாட்டினரும் மிகுந்த செல்வாக்கோடிருப்பதற்குக் காரணமென்னவெனில் தொழிலே முதன்மையா யிருக்கிறது. நம் இந்திய தேசம் பிரபலத்தையும் மேன்மையையும் பெறுவதற்கு முற்றி

னும் தொழிலேயே பொருந்திருக்கிறது. ஒரு தொழிலை பிரேரேபிப்பதும் ஆரம்பிப்பதும் நடத்துவதும் எல்லாம் அனுபவத்தையே ஆதாரமாய்க் கொண்டுள்ளது. நம் நாட்டுச் சிறுவர்களுக்கு இளம்பிராயத்திலேயே தொழிலில் ஊக்கம் உண்டாகும் வண்ணம் கலாசாலையில் தக்க ஏற்பாடு செய்வார்களாயின் விசேஷ நன்மையுண்டாகும்.

தற்கால கலாசாலையில் வருஷந்தோறும் தேறிவரும் மாணவர்கள் பெரிதும் உத்தியோகத்தை நாடக்கூடியவர்களாயிருந்து வருவது கண்கண்ட காக்ஷியாகும். உத்தியோகம் பற்றுள்ளது. விரிவற்றது. சுதந்தரமற்றது. சகாயமில்லாதது. இடையூறுள்ளது. தொல்லையை வளர்ப்பது. பணமின்றித் தவிப்பது. கடனைப் பெருக்குவது. கௌரவத்தை இழப்பது. புத்திக் கூர்மையை மழுங்கச் செய்வது. மதியை அடக்குவது. துயருள்ளது. சுகமில்லாதது. கவலையுள்ளது. கஷ்டந்தருவது. கைட்டி, வாய்பொத்தி, அங்கவஸ்திரத்தை தளர்த்தி, சொன்னபடியெல்லாம் செய்யவேண்டுவது. சம்சாரமென்னும் கடலை கப்பலேறி அக்கரை சேராதது. ஒரு சிறு தோணி (படகு) பற்றி அலையாலும், திவலையாலும், மச்ச மகரத்தாலும், மொத்துண்டு இக்கரையும் அக்கரையும் தெரியாமல் தவிக்கச் செய்வதே உத்தியோகம்.

“அப்பா! குழந்தாய் நீ படிக்கிறாயே, என்ன உத்தியோகம் பார்க்கப் போகிறாய்? என்று கேட்பதும், அப்பொழுதே அச்சிறுவர்கள் என்ன உத்தியோகத்துக்குப் போகலாமெனச் சீர்தூக்கிப் பார்ப்பதும், பெரியப்பா டிப்டி கலெக்டர், சித்தப்பா தாசில்தார், அண்ணாவுக்கு ரெயில்வே ஆபீசில் பெரிய உத்தியோகம். ஏதாவது சட்ட பரீக்ஷையில் தேறி

விட்டால் எனக்கு ஒரு உத்தியோகம் கிடையாமலா போகும் என்ற சேவகத் தொழிலிலேயே இழுக்கிறது. கலாசாலையில் படிக்கின்ற பாடத்தில் ஒரு பகுதியேனும் உத்தியோகத் துறையில் உதவியாவதில்லை. இது ஒரு பெருங்கூற்று ஜாடிக்குத் தகுந்த மூடியாய் புதிய முறையில் கற்பித்து தொழிலுக்குத் தக்கபடி சீர்படுத்த வேண்டியதாகிறது ஒரு தேசம் முன்னேற்ற மடைவதற்கு ஏற்றவாறு கலாசாலை அமைக்கப்படுமாயின் நம் இந்து தேசம் அதிசீக்கிரம் மேன்மைபெறும். படிப்புக்கே—பட்டப் படிப்புக்கே—இராஜ பாஷைக்கே— இருந்த சொத்தை யெல்லாம் விற்று கொட்டிக் கொடுத்து சோற்றுக்கு மின்றி திண்டாடுவாருமுண்டு. தொழில் முறையை அனுபவரீதியாய் கற்பித்துவரின் படித்தவரை புத்திக் கெட்டியவரை நலம் பெறுவது திண்ணம் இதுவே அமெரிக்கா கண்டத்தார் அனுசரிக்கும் மார்க்கம்.

இதுவரை பி. ஏ. பட்டதாரிகளாய் கல்லூரியிலிருந்து வெளிவந்த இளஞ்சிங்கங்களில் ஒருவரேனும் தொழில் துறையில் இறங்கிப் பிரபஞ்சப் போக்கை அனுஸரித்து இந்திய வியாபாரிகளுக்கு நலந்தரும் வழியைக் காட்டினார்களா? அபூர்வமேயாயினும் சாஸ்திர விற்பன்னர்களும் கவிவாணர்களும் வெளிவரக்காண்கிறோம். தேசீய விஷயங்களுக்கு பலர் எழுந்ததுபோல் தொழில் அபிவிர்த்திக்கும் பொது ஜனங்களுக்குக் காலத்துக்குத் தக்க சீர் திருத்தங்களையும் நல்ல வழிகளையும் எடுத்துரைக்க வேண்டும்.

ஒருவன் அதிர்ஷ்டவசமாய் நூதனவழியில் புதுவானாயின் அநேகர் அவனையே பின்பற்றி அவனையும் கெடுத்து தாமுங் கெடுகிறார்கள், உத்தியோகசாலையும் கௌரவமின்றி

அளவுக்குமிஞ்சிய கூட்டமாகி ஒரு குமாஸ்தா வேலை காலியாயிருந்து அது பகிரங்கப் படுமாயின் மனு அப்ளிகேஷன்—ஆயிரக்கணக்கில் குவிந்து விடுகின்றன. மேலும் அனுபவமாய்க் கண்ட விஷயமாகும். சேவகத்தொழிலைச் சற்றும் விரும்பாது, கால்வயிற்றுக்கஞ்சியானாலும் கௌரவமாய் சுதந்தரமாக—ஸ்வேச்சையான வாழ்விலிருக்க முற்படவேண்டும்.

இன்னும் லஞ்சம் கொடுத்து உத்தியோகம் பெறுவோர் எண்ணிக்கைக்கு அடங்காது. அப்படி உத்தியோகத்தைப் பெற்றாலும் அநேகருக்கு அடங்கி, அத்தனை பேருக்கும் நல்லவனாய் நடக்கவேண்டும். இதைவிட ஒரு மனிதனுக்கு வேறு சங்கடம் வேண்டுவதில்லை. இடியும், உதையும் பெற்றாலும் மழுங்கலாய்—அதில் தேர்ந்ததாய்—அதுவே கதியாய், வேறு கதியற்றவராய்—அடிமைப்பட்டது போல் சிலர் சேவகத் தொழில் செய்கிறார்கள். கல்வியில்லாக்குறைவு ஞான சூனியராகச் செய்து விடுகிறது. அந்தோ பாபம்!

கல்வியும் தொழிற் கல்வியாலன்றி ஒரு தேசம் க்ஷேமப்படுவது கடினம்.

தொழிலென்றாலென்ன? வியாபார மென்றாலென்ன? இதை எப்பொழுது விசாரிப்பது? எவ்வண்ணம் கற்பது? எல்லாம் ரகஸ்யமாகவே நடந்துகொண்டிருக்கிறது.

ஜப்பான் தேசத்தில் ராஜிய விஷயங்களில் கலந்து அபாரமான வேலைகளைச் செய்து, அதன் பலிதமாய் உன்னதமான அமைச்சருத்தியோகம் பெற்றதும், புத்திக்கூர்மை உள்ளவராதலால், தேச முன்னேற்றத்துக்கு தொழிலே—வியாபாரமே—தக்க ஆதாரமானதென்று, தீரயோசித்து தமது

பற்றுள்ள பதவிகளை யெல்லாம் இராஜிநாமா செய்து, வியாபாரத் துறையிலிறங்கினர்.

செல்வத்தைச் சேர்க்கும் தேசமெல்லாம் தொழிலாலன்றி மற்றெவ்வழி யாலுமன்று என்பது நன்கு விளங்குகிறது.

வியாபாரத் துறைக்கு அபார புத்தியுள்ளவர்கள்—நிபுணர்கள்—ஆராய்ச்சிக்காரர்கள், கல்விமான்கள், இவர்களை தக்கவர்களாகும்.

வியாபாரத் துறை யொன்றே புத்தியை விசாலப்படுத்தும். மேலும் பி. ஏ. எம். ஏ. பட்டதாரிகள் தொழில் நடத்துவார்களாயின் புத்திக்கும், யுக்திக்கும் சிந்தனைக்கும் தக்கவாறு வியாபாரம் விர்த்தியாகும். அவர்கள் தக்கபுத்திசாலிகளான வேலைக்காரர்களைத் தேடுவார்கள். தொழிலபிவிர்த்தி ஒரு தேசத்துக்கு எவ்வளவு அத்தியாவசியமென்பது நன்கு புலப்படும். சின்னஞ் சிறு தொழிலை செவ்வனே நடத்தவும் தக்க லாபமும் கிடைக்குமாயின், பெரிய தொழில் செய்வதற்கு உற்சாகமுண்டாகும். உதாரணமாக ஜெர்மனி தேசத்தில் கல்வியில் தேர்ந்த விவேக புருஷர்கள்தான் வியாபாரத் துறையில் பயின்று, அனுபவம் பெற்று நடத்துகிறார்கள். தொழில் முறையில் விசேஷமாய்ப் பாடுபடுகிறார்கள். இவ்விதமே அமெரிக்காவிலுள்ள தேசத்தார்களும் சின்னஞ் சிறு வயதிலிருந்தே கைத்தொழிலைக் கற்பிக்கிறார்கள். விளையாடினாலும், அதனால் புதுமைகளை உண்டாக்குவார்கள். குழந்தைகள் விளையாடினது போலும் ஆயிற்று. ஒரு கைத்தொழிலைக் கற்பித்தது போலுமாயிற்று.

வித்வத்வமுள்ளவர்கள் தொழில் செய்வார்களாயின் பிரபஞ்சப் போக்கை அப்போதைக்கப்போது தெரிந்து கொள்ளலாம். ஒருவர் தொழில் நடத்த ஆரம்பஞ் செய்வதால் அநேக ஏழைகள் பிழைக்க வழி உண்டாகும். கஷ்டப் படுவோர்கள் எண்ணம் குறையும். வியாபாரத்தால் மேன்மை யடைந்தவர்கள் நம்மையாளும் ஆங்கிலேயராவர். விடாமுயற்சி ஒற்றுமை ஒற்றுமைப்பு அவர்களிடத்தில் அதிகம். ஜாதி அபிமானம், தேசாபிமானம் விசேஷமாயிருக்கிறது. நமக்கு அவைதான் அதிகமாய் வேண்டியதாயிருக்கிறது.

இந்தியாவில், படித்தவர்களும் பொது நலத்தைக் கருது கிறவர்களும் தேசாபிமானியாய் விளங்குகிறார்கள். ஒருவர் இருவர் தோன்றினால் போதாது; ஒவ்வொரு புருஷனுக்கும் குலாபிமானம், ஜாதி அபிமானம், மதாபிமானம், தேசாபிமானம் இவைகளிருக்க வேண்டும். ஒவ்வொருவர் மனத்திலும் இவை உதயமாவதற்கான நல்ல வழிகளைக் கண்டு பிடிக்க வேண்டும். ஒரு தேச நன்மையின் பொருட்டு ஒருவர் ஜாதி குல அபிமானத்தை தவிர்த்திருக்கலாம். தேசாபிமானியாய் விளங்குவோர் உத்தம புருஷராய், இரக்கங் கொண்டவராய், எல்லோரிடத்திலும் சமமான அன்புடையவராய் சுய நலங் கருதாது பொது நலத்திற்கே பாடுபடுபவராய் இருக்கவேண்டும். இத்தியாதி குணங்கள் மகான்களுக்குத்தான் உண்டாகும் எனவே அவர்களை தெய்வமாகவே பாவிக்கவேண்டும். தற்காலம் இந்தியாவில் மகாத்மா காந்தி ஒருவரே தக்கோராவர்.

பயிர்த் தொழிலானாலும் அல்லது வேறு எத்தகைய தொழிலானாலும் நன்றாய் சுமார் இருபது வயதுவரை படித்த வகுப்பினராயிருத்தல் சாலச் சிறப்புடைத்தாகும்.

அபிவிர்த்திக்கான வியாபாரத்துக் கெல்லாம் தக்க மனிதர் கிடைப்பது கடினம். ஏனென்றால், தற்காலம் வர்த்தகர்களாய் விளங்குவோர் போதுமான கல்வியற்றவர். காலத்துக் கேற்க மார்க்கத்தைக் காட்டினாலும், பழங்கதை பேசி, எங்கப்பா பாட்டன் நாளில் இப்படித்தான் செய்தார்களோவென்று பழங்கதையைப் பேசி வாயை அடக்கி விடுவார்கள். அந்தப் பண்டைய காலத்தில் ரயில்வண்டி ஓடிற்றோ; அப்பொழுது திருநெல்வேலியிலிருந்து சென்னைக்கு வர ஆறுமாதமாகும்.

அவர்களுக்குப் போதுமான கல்வியில்லை. மேலும் அவர்களுடைய புத்திரர்களையும் அதிகம் படிக்க இடங்கொடாமல், தான் போன வழியிலேயே நடத்துகிறது. தண்டவாளத்தின் மேல் ஓடுகிற வண்டிகளுக்கு சமமாய், எவராவது ஒரு தொழிலை ஆரம்பம் செய்தால், அதனைப் பின்பற்றி—ஒரே மாதிரியாக நடத்துகிறார்கள். சம்பாதித்தது போதும் எதற்காகப் படிப்பு—என்ன உத்தியோகம் செய்யப் போகிறான். இருக்கிற பணத்தை எங்கேயாவது சொற்ப வட்டிக்குப் போட்டு றாய் என்றிரு என்று சோம்பற் சொல்லைப் புகட்டுகிறார்கள்.

வித்தையில்லாதாவின் வேலைகளெல்லாம் விநோத அமைப்பாகவேயிருக்கிறது. சுமார் இருநூறு வருஷங்களாக ஒரு முறையாய் நடைபெறும் இந்திய கலாசாலையில் இதுவரை ஒருவராவது, வணிகத் துறையில் இறங்கினார்களா? கலாசாலைப் படிப்பெல்லாம், (அடிமைப்பட்ட) உத்தியோகத்துக் கென்றே முத்திரை யிடப்பட்டதுபோலு முளது. தொழில் முறையில் கல்வி கற்பிக்கப்பட்டு வந்திருந்தால், நம் தாய் நாடு இவ்வளவு—பரிதாபமான ஸ்திதிசையை அடைந்திராது.

வணிகமுறை கலந்த கல்வியா யிருக்க வேண்டியதென்ற கொள்கை அமெரிக்காவிலும், ஜெர்மனியிலும் அனுசரிக்கப் படுகிறது.

வர்த்தகத் தொழிலும் கைத்தொழிலும் விர்த்தி யாவதற்கு விசேஷ கற்பனாசக்தி (Men of Ideas) யுள்ளவர்களைக் கொண்டு நடத்த வேண்டும்.

ஒவ்வொருவனுடைய மூளையின் சக்தி, அச்சக்தியி லிருந்து அடிக்கடிக்காய் குவியும் யுக்தி,—தந்திரம்—ஒவ்வோர் தொழிலுக்கான வழியிலிருக்கும். உதாரணமாக—சாஸ்திர ஆராய்ச்சி, 1, சஸ்திரம் 2. சரித்திரம் 3. ரசாயனம் 4. வைத்தியம், 5. வணிகம் 6. பயிர்த்தொழில் 7. கட்டடவேலை (Engineering) 8. ராஜீயம் 9. வேதாந்தம் 10. சித்தாந்தம் 11. கைத்தொழில், இப்படிப் பலவித மிருக்கின்றன. ஒவ்வொருவரின் அபாரபுத்தி ஒரு பகுதியில்தான் நன்றாய் உழைக்கும். எனவே மனிதர்களுக்கு இஷ்டமான துறைகளில் விட்டுவிட்டால்; அத்தொழிலில் அனுபவ ரீதியான தேர்ச்சி பெறுவதோடு, பொதுவில் தேச நன்மைக்கான தொழிலும் விர்த்தி யாகும். விர்த்தியாகின்ற தொழிலில் அநேகர் பயிற்சி பெறுதற்கும் சௌகர்யமாயிருக்கும். ஒரு தொழிலை நடத்தும்போது பின் பற்றி வருவோர்களுக்கு நூதன சக்தியும் யுக்தியும் உண்டாகும். இத்தகைய அபிப்பிராயம் தொழிற் சாலையிலுள்ள எல்லாரிடமுமிருக்கக் காணலாம். எப்படியென்றால், எவ்வளவு தான் தேர்ச்சி பெற்றாலும் தன் குற்றம் தனக்கு அதி சீக்கிரம் தோன்றாது குற்றம் எவரொருவருக்குப் புலப்படுகிறதோ, அவருக்கே திருத்தமும் விளங்கும்.

ஒரு தொழிலை விர்த்தி செய்வதற்கான மார்க்கம் ஒரு எல்லைக்குட்பட்டதன்று. விர்த்தியாக ஆக, தொழிலின் மேன்மை தோன்றும் அபிவிர்த்திக்கு இடம் கொடுத்துக் கொண்டிருக்கும், ஒரு தொழில் நல்வழியில் விர்த்தியானால் தேச நன்மைக்கே ஆதாரமாகும்.

பரீக்ஷார்த்தமாகச் செய்து பார்ப்போமென்று ஆரம்பம் செய்யக்கூடாது. ஏனெனில், சந்தேகம் விபரீதம் முதலிய குணக்கேடின்றி மேல் நேர்வழிக்கே அதற்கென்றே சிலர் பிறந்திருக்கிறார்கள். அவர்களின் ஆலோசனையின்மேல், ஒரு தீர்மானத்துடன் செய்யவேண்டும். தொழில் முறையி லிருப்போரின் புத்தி வெகு தீக்ஷண்யமாயிருக்கும்.

பள்ளிக்கூடத்தில் மாணவர்களா யிருப்போரெல்லாம் பள்ளிக்கூடத்தில் பி. ஏ. எம். ஏ என்று தேறுவதை விட்டு விட்டு, வியாபாரம் செய்யும்படி சொல்வதாக நினைக்க வேண்டாம். படிப்பவர்களில் சிலர், ஞானியாகவும், தத்துவ விசாரணைக்காரராகவும், சிலர் லாயராகவும்!பாரிஸ்டராகவும், சிலர் வணிகராகவும், சிலாவணிக்காரராகவும், உயர்தர உத்தியோகஸ்தராகவும் ராணுவக் காரராகவுமா யிருக்கவேண்டும்.

கல்வியால் ஒரு தேசத்தார் எவ்வளவோ நன்மையடைகிறார்கள். அந்த விசேஷம் நம் பாரததேவிக்கு இல்லாம லிருப்பது விசனிக்கத்தக்கது. கல்வியறிவு எத்தனை விதமாகவோ உபயோகிக்கப்படுகிறது. வியாபாரம் இது விஷயத்தில் அபார நன்மையைத் தருவது. இதனுண்மையை அயல் நாட்டில் அறியத் தக்கதாயிருக்கிறது. தந்நலங் கருதுவோர் உத்தியோகஸ்தர் பொது நலங் கருதுவோர் உழவர்கள்

பொது நலம் நாடுவோர். அங்ஙனமே வியாபாரமும் பெரிதும் நன்மை பயக்கக்கூடியது.

கல்வி அபிவிர்த்திக்கான கல்லூரியிலுள்ள பிரமுகர்களும், பிரபல வர்த்தகர்களும் ஒன்று சேர்ந்த கமிட்டியால் நன்மையுண்டாகலாம். வியாபாரிகள் ஒரு தேசத்துக்கு பெரு நன்மை செய்யக்கூடும். இந்தியாவிலுள்ள பிரபல வணிகர்களெல்லாம் ஒற்றுமையால் ஒரு தேச மகாசபை கூட்டி—ராஜ சபையாக்கி—கட்டாயக் கல்வி, தொழிற் கல்வி, இன்னும் அபிவிர்த்திக்கான வழிகளில் வேலை செய்யலாம்.

நம் இந்தியர்களில் அநேகர் உத்தியோகத்தையே தேடுவதொழிந்து தொழில் செய்வதற்கே உற்சாகத்தைக் கொடுக்கும். அப்பொழுது பள்ளிக்கூட—நாகரீக—இராஜாங்கப் படிப்புக்கு விசேஷமாய்ப் பணத்தைச் செலவிட வேண்டிய அவசியமிராது. நாளாவண்ணம் நம் நாடு பூர்வீக சீரும் சிறப்பும் பெற்று நன்னிலையிலிருந்து வரும்.

பாரத மக்களுக்கு புதிய ரத்தமும், ரோஷமும் உண்டாக வேண்டும். அப்பொழுது நூதன சக்தி யுண்டாய் விடும். யார் வீட்டுக்கு வந்த விருந்தோ என்று இருந்துவிடாமல், பல துளி பெருவெள்ள மென்பதை நினைந்து இயன்றவரை தேச நன்மைக்காக உழைக்கவேண்டும். இதற்கு உபாயம்—தந்திரம்—முதலாவது குறிப்பிட்டதே தகுதியுடைத்தாகும். அதாவது கலாசாலை கல்வியோடு தொழிற் கல்வி வணிகத்தையும் கலந்து விடவேண்டும். மேலும் இனிவரும் நமது சந்ததிச் சிறியவர்களுக்கு அம்பி அறிவாள் என்ற மூலாதாரத்தை நீக்கி நமது முன்னோர்கள்


ஆறுமுக நாவலர் முதலானவர்கள் எழுதிய சின்னஞ்சிறு நூல்களையே அமைக்கவேண்டும்.

தொழிலுக்கும் வணிகத்திற்கும் நல்ல புத்தி நுட்பமும், ஆழ்ந்த அறிவும், அவசியமானபடியால் அதற்குத் தகுந்த வழியிலேயே அன்னோர்களைப் பழக்குதல் சாலச் சிறப்புடைத்தாகும். தற்காலம் வியாபாரத் துறையிலிருப்பவர்களுக்கே விசாலமான புத்தியும் சிறந்த யுக்திகளும், நல்ல நல்ல தந்திரங்களும், சொற்சாதுரியங்களும், அமைந்திருக்கின்றன. இவையனைத்தும் நினைத்தவுடன் பெறக்கூடியதன்று; படிப்படியாயுண்டாகும். அநுபவத்தினால் வரக்கூடியது. அநுபவத்தில் கண்டறியக்கூடிய விசேஷங்களை கலாசாலையில் படிப்பதனால் கற்றுக்கொள்ள முடியாது. படித்ததையும், கேட்டதையும், தன்னிலேயே சிந்தித்து, தனது யுக்திக்குப் பொருத்தமாயிருக்கிறதா வென்பதை தன் அநுபவத்தில் கண்டுகொள்ளக் கூடியது. ஆகையால் கல்வி சொற்பமாயினும் அநுபவமே மிகுதியாக வேண்டும். Experience makes perfect "பண்பட்டவனே சிறப்புடையன்"

"If you look straight you'll discover more truth in men's eyes than their mouths ever reveal."—**Glen Buck**.

௮. மகா கவி

ரவீந்திரநாத தாகூர்.



இப்பிரபஞ்சத்தில் இந்தியரை நீக்கி தேசங்கள் தோறும் உள்ள மதங்களையும் ஜாதிகளையும் இன்னும் எத்துணை விதமான விகல்பங்களுண்டோ வித்யாசங்களுண்டோ அவ்வளவையும் ஒரு தராசிலுள்ள தட்டிலிட்டு இந்தியாவிலுள்ள மேற்கண்ட பற்பல ஜாதி மத வித்யாசங்களையும் மற்றொரு தட்டிலிட்டு சீர்தூக்கிப் பார்க்கின் இரண்டும் சமமாகவே

தோன்றும். ஆனால் இந்தியாவைத் தவிர இதர தேசங்களெல்லாம் தேசாபிமானத்தால் கட்டுண்டிருக்கின்றன. அது வொன்றே நம் தேசத்துக்குள்ள குறை. நம்முடைய வீட்டுக்கு யார் வந்தாலென்ன, யார் போனாலென்ன, என்ற அந்தகமான அபிப்பிராயம் அடியோடு நீங்கி சகோதர வாஞ்சை செழித்தோங்கவேண்டும். நம் தேசத்தில் தோன்றும் ஒவ்வொரு மகான்களும், மேதாவிகளும், நம் தேசத்துக்கு ஏற்பட்டிருக்கிற அநியாய பந்தங்களையெல்லாம் நீக்க முடியாமல் சுயராஜ்ய மென்னும் கட்டிடத்துக்கு அஸ்திவாரம் போல் சிறிது சிறிதான காரியங்களைக்கற்பித்து, பின்னொரு காலத்திலாவது சுகமாயிருக்கட்டும், என்று ஒவ்வொரு வேலைகளைச் செய்திருக்கிறார்கள்—செய்கிறார்கள். பாரதமக்கள் கண்விழிப்பதற்கு முன்னமே சுவாமி இராமகிருஷ்ணர் தோன்றினார். இம்மகான் தோன்றியகாலத்தில் இந்தியர்களெல்லாம் அயர்ந்த நித்திரையிலிருந்தார்கள். அப்பொழுது காங்கிரஸ் (பாரத ஜன சபை) என்னும் வித்தை விதைத்தனர். ஜெகத்மாதாவுக்கு சற்புத்திரனைப் விவேகானந்தர் உற்பவித்தார். இவர் தோன்றிய காலத்தில் அநேகர் நித்திரையின் கலக்கத்தால் மயங்கியிருந்தனர். இந்தியர் ஒவ்வொருவரையும் விழித்திருக்கும்படி விவேகத்தையூட்டினார். பாந்தவெளியில் ஒளி வீசியது போல் குருவின் அநுக்ரகத்தையே புஜபலமாகக்கொண்டு ஆன்மசக்தியையே ஒரு ஆயுதமாகவைத்து தேசங்கள் தோறும் சென்று இந்தியாவின் மகத்தான பெருமையை யெடுத்துச் சொல்லி புகழ் மிகப்பெற்று பின் இந்தியாவிற்கு வந்ததும் நம் நாட்டினர்க்கு படித்தவகுப்பினர்க்கு நற்கதி வேண்டுவோர்க்கு தேச நன்மையை நாடுவோர்க்கு நல்வாழ்வைப் பெறுதற்கு யுக்தியா

லும் தந்திரத்தாலும் முற்போக்கான அநேகவிஷயங்களை குன்றின் மேலிட்ட விளக்கைப்போல் விளக்கினர்.

மகா கவி ரவீந்திரநாத் தாகூர் மகா மேதாவி. ஸர் என்ற பட்டத்தைத் துறந்தவர். வங்காளத்திலும் இங்கிலிஷிலும் பாண்டித்திய முள்ளவர். இவர் உலகெல்லாம் சஞ்சாரம் செய்திருக்கிறார். இந்தியாவுக்கும் இதரதேசங்களுக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்தவர். பாரதமக்களின் முன்னேற்றத்துக்குத் தடை யென்னென்ன உண்டோ அத்தனையும் அறிந்தவர். அவர் வியாசங்களாய் எழுதியவைகளில் சிலவற்றை இங்கு குறிப்பிடுவோம்.

“கல்வியினால் பயனுண்டா இல்லையா வென்பதைக் குறித்துப் பேசுவதே மிகை. எனினும் அதைக்குறித்து விவாதங்கள் சில சமயங்களில் ஏற்படுதல் காண்கிறோம். உழவோனுக்குப் படிப்புவந்தால் உழவுத்தொழில் நின்று போமென்றும், பெண்ணுக்குக் கல்விகற்பித்தால் அவளுடைய பதியும் ஈசனுமாகிய கணவனுக்கு நேரே ஆராதனை நடத்த மாட்டாளென்றும் பலர் ஐயப்படுகிறார்கள்.

கண்ணிலே துணியைக் கட்டி ஓட்டிவிடுவதே செக்குச் சுற்றுகிற மாட்டுக்கு நல்லது. அதற்கு வெயிலொளி எதற்கு? மாமூலாகிய செக்கைச் சுற்றிக்கொண்டிருப்பதே மனிதனுக்குப் பரம தர்மமென்று கருதப்படும். இந்த நாட்டில் மேதாவிகள் எல்லா விதமான ஒளியுமே மனிதனுக்குப்பகையென்று கருத வெறுத்தல் சகஜந்தானே.

எனினும் பகலொளி நமக்குக் காரியத்துணை மாத்திர மன்று, கண் விழிக்கச் செய்வது மதுவே. இதனினும் முக்கியமான விஷயம் யாதெனில் ஒளியில் ஜனங்கள் கூடுகிறார்கள்.

இருளிலே பிரிந்து செல்லுகிறார்கள். மனிதனிடம் அறிவு தான் ஒற்றுமைக்கு மிகப் பெரிய சாதனம். அறிவினால் உலகமுழுவதும் ஒன்று பட்டுக் காலதேசங்களால் நேரிடும் பேதங்களெல்லாம் நீங்கிவிடு மென்ற பெரும்பயன் ஒரு புறமிருக்க, எந்த மனிதஜெந்துவும் கல்வியாலுண்டாகும், பெருமகிழ்ச்சி பெறுதவண்ணம் எந்தக் காரணம் பற்றியும் தடுத்தல் எவ்வளவு அசம்பாவித மென்பதை இங்கு கருதுவோம். நமது இந்தியாவில் இந்த அறிவின் தீபங்கள் எத்தனை மங்கலாகவும், இடைவிட்டும் எரிகின்றனவென்பதை யோசிக்கும்போது உலகத்தாரனைவரும் இக்காலத்தில் நாடிச் செல்லும் அறிவினால் ஒற்றுமைப்படுதல் என்ற பாதை நமக்கு எவ்வளவு கஷ்டமென்பது தெளிவாகும். கல்வி முறையை சீர்திருத்தும் பொருட்டு இடையிடையே இந்நாட்டில் சில காரியங்கள் செய்யப்படுகின்றன. எனினும் அதன் பரவுதலுக்குள்ள தடைகள் எப்போதும் போல் மகத்தாகவே யிருக்கின்றன. நாடோரத்தில் நதி பாய்ந்து செல்லுகிறது; மழையோ வான்முழுது மிருந்து பெய்கிறது. ஆதலால் பயிர்க்குத் தொழுமை செய்வதில் வானத்தைக் காட்டிலும் நதிக்குத் தாழ்ந்த ஸ்தானம். மேலும் நதியின் ஆழமும், திரமையும் மழையைப் பொருத்து நிற்பன. இடியாயுதங்கொண்ட இந்திரனுடைய பதவியிலிருந்து நமது நாட்டை அதிகாரிகள் ஏராளமாக இடி இடிக்கிறார்கள். மழை கொஞ்சந்தான பெய்கிறார்கள். வங்காளிகளின் கல்வி முயற்சி எவ்வளவு குறைந்த பலன் தருகிறது என்று நகைக்கும் அவர்களுடைய பரிகாசமின்னலும் மேற்படி இடிகளுடன் கலந்து வெட்டுகிறது. அறிவு மனிதருக்கெல்லாம் பொது வென்பதை

உலகமுழுவதும் ஒப்புக் கொள்ளுகிறது. எக்காரணத்தாலோ இந்த மாகாணத்தில் மாத்திரம் அக்கொள்கை அங்கீகாரம் பெறவில்லை. மகான் கோகலே இந்த விஷயத்தில் பாடுபட்டார். பொது ஜனக் கல்வியே உயர்தரக் கல்வியின் வேர்களுக்கு ஜீவரசம் ஏற்றுகின்றது. அந்தப் பொதுக் கல்வி இந்த நாட்டிலில்லை. மேற்குத் திசையில் ஸ்வீகார புத்திரர் தமது ஸ்வீகாரத் தந்தையை விட ஜாடி அதிகமாகவே பாய்கிறார்கள். அமெரிக்காவில் ராஜாங்கத்தார் பல பெரிய பாடசாலைகளை நடத்துகிறார்கள். அங்கு பிள்ளைகள் கொடுக்கவேண்டிய சம்பளம் சொற்பத்திலும் சொற்பம். ஐரோப்பாவிலும் ஏழைப் பிள்ளைகளுக்காக மிகவும் குறைந்த சம்பளத்தில் பல பாடசாலைகள் நடக்கின்றன. நமது நாட்டில் வறுமை அதிகமென்பதைக் கருதி இங்கு படிப்பின் செலவைப் பிள்ளைகளுக்கு மிருதுவாக்குகிறார்களா? கல்வியை விற்பதும் விலைகொள்வதும் வழக்கமில்லாத காலமும் நமது நாட்டில் இருந்ததன்றோ!

பிற நாடுகளில் ஜனங்களுக்குக் கல்வி தருதல் ராஜாங்கத்தார் மிகவும் அக்கறையுடன் செய்யவேண்டிய கடமைகளில் ஒன்றாகப் பாவிக்கப்படுகிறது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஜப்பானிலும் படிப்பு விஷயத்தில் பொதுப் பணம் செலவிடக் கூசுவதே கிடையாது. ஆதலால் கல்வி அதிக ஜனங்களுக்குக் கிடைக்கிறது. எனவே படிப்பை எத்தனைக் கெத்தனை பிள்ளைகளுக்கு சிரமமாகவும் செலவாகவும் செய்கிறோமோ, அத்தனைக் கத்தனை தேசத்துக்கு நன்மை யென்ற வார்த்தை எத்தனைக் கெத்தனை உயர்ந்த ஆசனத்திலிருந்து எத்தனைக் கெத்தனை சத்தம் போட்டுச்

சொல்லப்படுகிறதோ அத்தனைக் கத்தனை அதிகப் பொய்யாக நமது காதில்படும்.

நமக்குள் சுதேசிய, மத, ஞான அபிமானம் தகுந்தபடி ஏற்படாத காரணத்தாலேதான், பிறர் நமது லௌகிக அவசரங்களையும், கல்வி அவசரங்களையும் இத்தனை இகழ்ச்சியாகக் கருத நேரிடுகிறது."

ρ. வியாபாரத்துக்கு கல்வி அவசியமா?

"கண்ணுடைய ரென்பவர்கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" திருக்குறள்.

இகபர சாதனங்களுக்கு மாத்திரம் கல்வி பயன் தருதவன்று. தொழிலைச் செய்தாலும், தவத்தைச் செய்தாலும் கல்வி பொதுவில் எல்லோர்க்கும் அவசியமென்றதும். கல்வியைக் கற்கும்போதே இன்னதை யுத்தேசித்தே என்ற எண்ணம் வேண்டுவதில்லை. கல்வி பல துறைகளிலும் பெருந்துணையா யிருந்து மிக்க நலத்தை அளிக்கும். இந்தியாவிலுள்ள ஆழ்ந்த அறிவுடையோர்கள் நம் தேச நிலைமையைச் சீர்தூக்கி, கல்வியே முதன்மையான சாதனம் என்றும், அந்தக் கல்வியும் தாய் பாஷையாகவும், தேசத்தின் நன்னிலைக்கான தொழிற்கல்வி முதலியன வேண்டுமென மிகவும பாடுபட்டிருக்கின்றனர். ஆனல் பாரத மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற

பற்பல இடுக்கண்களும் வறுமையும் நாளேறநாளேற அவர்களை நலிந்து போகும்படி செய்கிறது. எத்துணை தான் தரித்திரங்கொண்ட ஏழைக் குடும்பமாயிருந்தாலும் தங்கள் புத்திரர்களைக் கண்திறந்து வைக்கவேண்டு மென்று—அதாவது படித்து மேன்மை யடையவேண்டுமென்ற எண்ணம் இல்லாதிருக்காது.

கலாஞானம் என்னும் பெருங் கோட்டையின் வாயிலில் ஒருவனைச் சேர்த்து விட்டால் அவனுக்குக் கல்வியில் ஆவல் அதிகரிக்கும்.

" எம்மையுலகத்தும் யாங்காணேங் கல்விபோல்
மம்மரறுக்கு மருந்து "

கல்வியைப்போல அஞ்ஞான மென்னும் மயக்கத்தை அறுக்கவல்ல மருந்தை எவ்வுலகத்தும் யாம் கண்டதில்லை என்றும்,

" விலங்கொடு மக்களனையரிலங்கு நூல்
கற்றாரோ டேனையவர் "

கல்வி கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்கும் உள்ள பேதம் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் உள்ள வித்தியாசத்தை ஒத்திருக்கிற தென்றும் மேலோர் கல்வியைப்பற்றி மிகவும் வியந்துரைத் திருக்கின்றனரன்றோ?

" தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறு மறிவு "

மணலினிடத்தே கேணியானது தோண்டிய அளவாகச் சுரப்பதுபோல மனிதர்க்குக் கல்விகற்ற அளவாக அறிவு உண்டாகுமென்னும் மேலோருடைய பிரமாண மிருக்கிறதல்லவா ?

கல்வி அதிகமாகவே அறிவும் விவேகவிளக்கமும் பூரணமாகும்.

" அறிவுடையாரெல்லா முடையாரறிவிலா
ரென்னுடையரேனுமிலர் "

அறிவுடையவர் ஒன்றையுமில்லாதவராயினும் எல்லாமுடையவராவர். அறிவிலாதவர்எல்லா முடையவராயினும் ஒன்றும் இல்லாதவராவார் என்று தெய்வப்புலவர் கட்டளையிட்டிருக்கின்றனர்.

விவேகம் முதிர முதிர தெய்வபக்தி முதலிய சற்குணங்களும் நிலைபெறுவதற்கு இடமிருக்கிறதென்பது கொள்கை.

" அறம் பொருளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறுங்கவலொன்
றுற்றுழியுங் கல்வியினூஉங் கில்லை
சிற்றுயிர்க்குற்ற துணை."

புருஷார்த்தங்களாகிய தர்மார்த்த காம மோக்ஷமென்னும் அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றைக் கல்வி தரத்தக்கதென்று மேலோர் கூறிய அமுதவசனம் எவ்விதத்திலேனும் பொய்க்குமா ? அந்தமிலின்பத் தழிவிலா வீட்டையு கல்வி தரத்தக்கதென்று சொல்லுமேயாயின் அதற்குச்சாதகமாயுள்ள சற்குணங்களையும் எத்தொழிலையும் சீர்திருத்தி

நடத்தப் போதிய நல்ல தந்திரங்களையும் அது தரத்தக்கதென்பதும் ஒரு வியப்பாமோ?

கல்விக் கடலின் கரை கண்டார் யாருமில்லை.
"கற்கக் கசடறக்கற்பவை கற்ற பினிற்கவதற் குத்தக"

கற்கத்தனவற்றை ஐயந்திரிபு முதலிய இல்லாமல் ஒருவன் கற்கக்கடவன். அங்ஙனம் கற்றபின் தான் கற்ற விஷயத்திற்கேற்றபடி நிற்கக் கடவன்.

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ
னற்றாடொழா அரெனின்"

கடவுளின் திருவடியைத் தொழா விட்டால் ஒருவன் கல்வி கற்றதனாலாய பயன் யாது என்று என் கூறவேண்டும்? கல்வி கற்பதாகிய ஒன்றே தெய்வ பக்தியை விளக்காது, கல்வியும் ஞானக் கல்வியாக வேண்டும். அதற்கான ஞான நூல்களின் ஆராய்ச்சி வேண்டும். அதுபற்றியே,

"கல்வியென்னும் பல்கடல் பிழைத்தும்
தெய்வ மென்பதோர் சித்தமுண்டாக"
என்று ஞானிகள் கூறி யிருக்கின்றனர்.

இத்தகைய பெருமைவாய்ந்த கல்வி தொழிலுழைப்புக்கு பெரிய சாதன மென்று சொல்லாமலே விளங்கும். ஒருவன் தான் கற்ற கல்வியின் திறத்தை தொழில்—வியாபாரத்தில் செலுத்துவானாயின் படிப்பில்லாதவர்களுக்கும் கல்வி அவசியமென்ற வித்து முளைக்கும்.

விவேக விளக்கமில்லாத சாதாரண ஜனங்கள் மெய் வருந்தி வேலை செய்வதைக் காட்டிலும் கல்வி தேர்ச்சியினால்

அறிவு விளக்கம் பெற்றவர்கள் அந்தப்படி வேலை செய்யத் தலைப்படுவார்களாகில் அவர்களுக்கும் அவர்கள் தேசத்தாருக்கும் பெருத்த நன்மை விளையுமென்பதற்கு ஐயமில்லை. கல்விபயின்ற ஒவ்வொருவரும் நியாயவாதி (வக்கீல்) நியாயாதிபதி (ஜட்ஜி) முதலிய உத்தியோகங்களையே நாடித் திரிவாராகில் பிராணநாசத்துக்கும் தேகாரோக்யத்துக்கும் இன்றியமையாதனவாகிய கைத்தொழில்—வியாபாரம் முதலியவை போம்வழியாது? அந்தப்படி கல்விமான்கள் கைத்தொழில் முதலிய வேலைகளில் பயின்றுவராததற்குக் காரணம் அவர்கள் அவற்றின் அருமைப் பாட்டை உணராது அலக்ஷியம் பண்ணுவதேயாம். உலகத்திலுள்ள பற்பல தேச சரித்திரங்களையும் நாம் வாசித்துப் பார்க்கையில்எந்தத் தேசத்தவர்கள் கைத்தொழில் வேலைகளில் அளவிலா ஊக்கத்துடன் பாடுபட்டு வருகின்றார்களோ அவர்கள் அவ்வப்பியாசம் அமையப் பெறாத தேசத்தவர்களைத் தமக்கு நாளாவர்த்தியில் ஆளாக்கி அரசாண்டு வருகிறார்களென்று பிரத்தியக்ஷமாகத் தெரிய வருகிறது. நமது இந்து தேசத்தையும் இங்கிலாந்து தேசத்தையும் பிரஸ்தாப விஷயத்துக்காக உதாரணங்களாய் எடுத்துக்கொண்டு அவ்விரண்டு தேசங்களையும் ஒத்திட்டுப் பார்ப்போமாக.

10. இந்தியாவும் இங்கிலாந்தும்

அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னர் உலகத்திலுள்ள ஏனைய எல்லாத் தேசங்களும் ஒளி மழுங்கி அங்குள்ள ஜனங்கள் நாகரிகம் அற்றவர்களாயிருந்தபோது இந்துக்கள் நெய்

தச்சுத்தொழில், நெசவுவேலை, விவசாயம் முதலியவற்றில் சிறந்திருந்ததாகவும், அதனால் நமது தேசம் குன்றிலிட்ட சுடர் விளக்கைப்போல் நாற்புறமும் ஒளி வீசியதென்றும் அது காரணமாகப் புறதேசத்தவர்கள் இத் தேசத்திலுள்ள அளவிறந்த செல்வத்தைக் கவரும் நிமித்தம் அடிக்கடி படையெடுத்து வந்தனரென்றும் சரித்திர பூர்வமாய் நாம் அறிகிறோம். ஒரு காலத்தில் உலக முழுவதும் தனியரசு புரிந்து வந்தவர்கள் ரோமர்களென்றும், அவர்களுடைய ராஜதானிப் பட்டணம் ரோமாபுரி யென்றும், அவர்களுக்குச் சக்ரவர்த்தியாயிருந்தவர் ஜூலியஸ் ஸீஸர் என்றும் அவர் கொலுவீற்றிருக்கையில் தம்முடைய தேகம் அணிபெறத் தரித்துக்கொண்ட அங்கிக்கு அழகு தந்தது நமது இந்த தேசத்துச் சரிகையே என்றும் புராதன ரோமசரித்திர கிரந்தகர்த்தர் ஒருவர் எடுத்துக் கூறுகின்றார். இவ்வளவு பெருமையுடன் விளங்கிய இந்த தேசம் இப்பொழுது ஒளி மழுங்கி வேற்றரசருடைய கைப்புக்கு இலக்காய் நிற்பது யாது காரணத்தினால்? கல்வி கற்கப் புகுந்தவர்கள் மெய்வருந்தி வேலை செய்யவேண்டிய உழவு முதலிய தொழில்களை அவமான மானவைகளென்று திரஸ்காரம் பண்ணி உத்தியோக மென்னும் சேவகத்தையே பெரும் பொருளாக மதித்து வருவதே அதற்குக் காரணம்.

பன்னிரண்டாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் ஒன்றுக்கும் உதவாததாய்க் கேவலம் ஏழையான ஸ்திதியிலிருந்த இங்கிலாந்து தேசம் இளம்பிறைபோல் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்து சோடசகலைகளுடன் இப்போது எங்கும் ஒளி வீசி நிற்கின்றதல்லவா? நாமும் நமது தேசம் அபிவிருத்திக்காக அத்தேசத்தின் தன்மையையன்றோ எதிர்பார்க்கின்றோம்? இந்த நிலைமைக்கு அந்தத்

தேசம் வந்தது வர்த்தகம், கைத்தொழில் முதலியவற்றில் சிறந்ததினா லல்லவா? அறுநூறு வருஷத்திற் குள்ளாக அந்தத் தேசம் அடைந்த அபிவிருத்தி ஒன்றே கைத்தொழிலினால் ஒரு தேசத்துக்கு விளையும் நன்மையின் பெருக்கத்துக்கு சாட்சி பகரத்தக்கதாயிருக்கின்றது. இந்து தேச வாசிகளாகிய நாம் உடுக்கும் ஆடைகளுக்காகவும், எழுதும் காகிதங்களுக்காகவும், உபயோகிக்கும் மற்றும் பற்பல பொருள்களுக்காகவும் வேண்டிய சகல மூல வஸ்துக்களும் நமது தேசத்தில் நாற்புறமும் விழுந்து கிடக்க, அவற்றைப்பிடித்து உபயோகிக்கத் தெரியாமையினாலும், உபயோகிப்பது அகௌரவமென்று நம்முள் சிலர் நினைக்கின்ற படியினாலும் அவற்றிற்கெல்லாம், புயலென்னும் வாரி வளத்தை ஏக்கத்தோடு பார்த்திருக்கும் பைங்கூழ்போல் நமது தேசம் இங்கிலாந்தின் வள்ளற்றன்மையை எதிர்பார்த்து வாடி நிற்கின்றது. இவ்வுண்மையையறிந்து பரிதாபப்படாத விவேகியும் உண்டோ?

இந்தியாவில் இப்போது சர்வகலா சாலைகளிலும் ஏனைய வித்தியாசாலைகளிலும் கல்வி பயின்றுவரும் சிறுவர்கள் ஆகாயத்தில் மனக்கண்ணுக்குப் புலப்படாத நட்சத்திரங்களின் இயக்கத்தைப் பற்றிக் கணக்கிடவும், மாயபதார்த்த சொரூபலட்சண சாஸ்திரங்களின் உண்மைகளை எளிதில் அறியவும் வல்ல மகா பண்டிதோத்தமர்களாயிருக்கும் ஒருவனிடத்தில் சேவகம் செய்தல் என்னும் உத்தியோகம் ஒன்றைப் பெறுதற்கரிய பேறென்று நினைந்து மதிமயங்கித் தங்களுடைய சுயேச்சைக்கும் தேசத்தின் க்ஷேமத்துக்கும் ஏற்றதான விவசாயம் கைத்தொழில் வர்த்தகம் முதலிய வேலைகளை அலட்சியஞ்செய்து வருகின்றார்கள். புருஷலட்சணத்

துக்குரிய வேறே எந்த வேலைக்கும் உதவாதவன் தான் சேகவமென்னும் உத்தியோகத்தை நாடுகிறவனென்றும், ஏனைய வர்த்தகம், விவசாயம் கைத்தொழில் முதலியவற்றைக் கையாண்டு வருபவனே புருஷலட்சண முடையவனென்றும் ஆங்கிலேயர்கள் அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். நம்மவர்களோ அதற்கு நேர்மாறான அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். இதுதான் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமுள்ள பெருத்த வித்தியாசம். கூடியவரையில் வங்காளத்தவர்கள் சுயேச்சையான வாழ்க்கையையே விரும்புகிறார்கள். இங்கிலாந்தின் பெருமையையும் இந்தியாவின் சிறுமையையும் தற்காலத்தில் பிரத்தியட்சமாய்க் காண்பவர்களுக்கு மேலைய இரண்டு அபிப்பிராயங்களுக்குள் சரியானது இன்னதென்பது தானே தெளிவாய் விளங்கும். இந்தியாவுக்குத் தேவையானவை என்னும் தலைப்பெயர் சூட்டிய தமது புத்தகத்தில், டாக்டர் மர்க்டாக் என்ற துரை எழுதியதாவது:—

"இந்தியாவில் கைத்தொழில் வேலை திரஸ்காரம் செய்யப்பட்டு வருகிறது. இறகையும் மையையுங் கொண்டு எழுதிச் சேவிப்பதென்னும் உல்லாசமான உத்தியோகத்திலமர்ந்திருப்பதே புருஷ லட்சணத்துக்குரித்தானதும் மனிதன் ஆவரவருக்கேற்றதுமான தொழிலென்று சிறுவர்கள் நினைக்கிறார்கள். கிளாட்சன் என்ற சீமானும் இந்தப்படியே அபிப்பிராயங் கொண்டார். போஜனத்துக்கு வேண்டிய பண்டங்கள், உடுப்பதற்கு வேண்டிய ஆடை முதலியவைகள், வெய்யில்—மழை முதலியவற்றால் தேகத்துக்கு உபாதை உண்டாகாதபடி பாதுகாப்பாயிருப்பதற்குத் தக்க வீடு முதலியவைகள் ஆகிய இவற்றின் விஷயமாய் இந்து தேசத்தில் பெரும்

பாலும் கல்விமான்களுடைய நிலைமை எப்படி யிருக்கிறதென்றால், அவற்றை வேறே எவராவது சேகரித்துக் கொடுத்தால் தாங்கள் நோவாமல் அனுபவிக்கத் தக்கவர்களாக மாத்திரம் இருக்கிறார்களே யொழியத் தாங்களே மெய்வருந்தி அவற்றை உற்பத்தி செய்யத் தக்கவர்களாயில்லை. ஆங்கிலேய பாஷையில் நன்றாய்க் கல்வி பயின்றும் அநேகர் சோம்பேறிகளாய் நமக்குப் பிழைப்பெப்படி என்று ஏக்கங் கொண்டிருப்பதைக் காண அதிக விசனமாயிருக்கிறது. கைத்தொழில், விவசாயம், வர்த்தகம் முதலியவற்றில் ஆங்கிலேயர்கள் பெரும்பாலும் பழகிவருகிறபடியினாலே தான் இங்கிலாந்து தேசம் அபிவிர்த்தியடைந்து சீர்மை என்னும் பெயர் பெற்றது. இந்துக்கள் அவற்றை அறவே கைவிட்டதே அவர்களுடைய க்ஷீணத்துக்கு முக்கிய காரணம்".

ஆகையால் நம் இந்து தேசத்தில் கல்விமான்களாயிருக்கும் கனவான்களும் ஏனையோரும் தேசாபிமானம் பெற்றிருப்பது வாஸ்தவமா யிருந்தாலும், தங்கள் தேசம் எவ்விதத்திலும் முன்னிருந்த நிலைமைக்கு வரவேண்டு மென்னும் எண்ணங் கொண்டிருந்தாலும், பிறருடைய தயவை எதிர்பாராமல் தாமே தமக்கு வேண்டிய சாதனங்களைச் சேகரித்துக் கொண்டு சுயேச்சையாய் உயிர் வாழ்வதே புருஷலட்சணமும் மானிட தர்மமும் என்பதை உண்மையிலுணர்ந்தவர்களாயிருந்தாலும் கைத்தொழில் முதலியவற்றையும் கிருஷிகர், சிற்பி, தச்சன் கம்மாளன், தட்டான் முதலிய தொழிலாளிகளையும் இழிவு படுத்தாமல் இருப்பாராக.



சுதேசமித்திரன் ஸ்தாபகர்

ஜி. சுப்பிரமணிய அய்யர்

11. துணிவு

இந்துதேச நன்மைக்காக மிக்க பாடு பட்டவர்களில் அய்யரவர்களும் ஒன்று. பொது நலத்துக்காக வேண்டுவன செய்து காங்கிரஸ் மகாசபையை நிலை நிறுத்தி, தேச நலத்துக்கு பத்திரிகையே போதிய நன்மை யளிக்குமென்று கைப்பொருள் ஆதியில் இல்லாதிருந்தும் தீவிர எண்ணத்தால் முதலாவது இங்கிலீஷில் இந்துப் பத்திரிகையை ஸ்தாபித்து அதன் பிறகு, தாய்மொழியாம் இனிய தமிழ் பாஷையில் ஒரு பத்திரிகையை நிலைநாட்ட வேண்டுமென்று "சுதேச மித்திரன்" என்பதாக ஆரம்பம் செய்தனர். இப்பொழுது அப்பத்திரிகை செய்துவரும் தேசஊழியமும், ராஜீயத் துறையில் பயிற்சி செய்வது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கற்பாலது.

தென்தேச விஸ்தாரணத்துக்குத் தக்கபடி போதுமான படி, படிப்படியாய் வளர்ந்து வருகிறது. தன் மனச்சாட்சிக்கு விரோதமின்றி, எத்தகைய திமைநேரிடினும் பொருட்படுத்தாது; கலங்காத நெஞ்சுடைய ஞானதீரரைப் போல் நடந்து கொண்டதை யாவரும் தெரிந்து கொள்ளவேண்டியதாகும்.

தூங்குகிறவர்களை உற்சாகப் படுத்தி விழித்திருக்கச் செய்வதென்றால் வெகு பிரயாசையான காரியம், சர்வ சாதாரணமாய் யாருக்கும் தெரிந்த விஷயம். எத்தனையோ பத்திரிகைகள் தோன்றித் தோன்றி மறைந்தன. துணிவு, தைர்யம், விடாமுயர்ச்சி இவையின்றிச் செய்யப்படும் கார்யம் விபத்தமே.

நமது அய்யர் பரந்த உலகத்தையும், அதிசீக்கிரம் முன்னேற்ற மடைந்திருக்கிற ஜப்பான் தேசத்தையும், நம் இந்தியாவை ஆதாரமாய்க் கொண்டு அபிவிருத்தியாகி வரும் ஆங்கில ராஜ்யத்தையும்—கண்டு தன் தேச நன்மைக்கான பெருந் துறையில் வேலைசெய்த சீமானாகும். இக்காலத்தில் இக்கனவானைப் பின்பற்றி நடப்போர் அநேகர். காலத்தை அனுசரித்து நடக்கவேண்டு மென்ற அபிப்பிராயம் கொண்டவர். அதற்கானவைகளை உண்டுபண்ணி எல்லோரையும் ஜாக்கிரதையா யிருக்கும்படி தூண்டிவிட்டார்; தூங்கினவர்களை விழிக்கச் செய்தார். அதற்கென்றே எல்லோருக்கும்—சர்வ மதஸ்தர்களுக்கும்—மித்திரனும்—சுதேச மித்திரனை நடத்தினார். பொது நலம் செய்ய விரும்புவோருக்கு எப்பொழுதும் தீங்கு நேர்வது இயல்பாகவே இருக்கிறது. அத்தகைய ஆபத்துக்களை நீந்திப் போவோர்க்கு அனுபவமும் தந்திரமும் உண்டாகிறது. இப்பிரபுவும் தம் வாழ்நாட்களில் பட்ட துன்பம் பல உள; எனினும் அவருக்கு தொழிலுள்ள துணிவையும் விடா முயற்சியையும் நாம் பின்பற்ற வேண்டும்.

12. தற்காலமும் வியாபார நிலைமையும்

நம் தேசத்தில் வியாபாரம், விவசாயம், தொழில் முதலியவைகளைப் பற்றி யோசிக்கும்போது எத்தொழிலும் ஒரு சிறிது நடைபெறினும் அதனால் கிடைக்கும் ஆதாயத்தை,

எதிர் பார்த்ததுக்கு மேல் கிடைத்து விட்டதாயெண்ணி வியாபாரத்தை ஒடுக்கியோ நீக்கியோ விட்டுவிடுகிறார்கள். இதற்குப் பலகாரணங்க ளிருக்கின்றன. குறுகிய நோக்கம், பிறர்நலம் கவனியாதிருத்தல், பொறாமை, அவநம்பிக்கை இன்னும் பல உள. வியாபாரத்தை நீடித்து நடத்துவதற்குப் போதுமான சக்தியின்றி, இடையிலே நிறுத்தி விடுவதும், விசாலமான புத்தி யின்மையால் வியாபாரத்தை நடத்த வகை தெரியாமலும், காலத்துக்கேற்றவாறு நடந்து கொள்ளத் தெரியாமலும் வியாபார ரகஸ்யங்களை தன்னுள் அடக்கி சமயோசிதமாய் நடந்து கொள்ளாமலும், தன்மதிப்பை யிழந்தும், போதுமான திரவிய சகாய மின்றியும் இன்னும் இவை போன்றன. கையில் பணமின்றி வாக்கு சாதுர்யத்தாலும் தன் மதிப்பாலும் தொழில் நடத்துவோர் எண்ணுக் கடங்கார். ஆயிரம் ரூபாய் சொந்தப்பணம் வைத்து பதினாயிரத்துக்குக் கொடுக்கல் வாங்கல் செய்கிறவர்களுமிருக்கிறார்கள். நமது தேசத்தில் இன்னும் காலவர்த்த மானத்துக்குத் தக்கபடி நடந்து கொள்ளாத வியாபாரிகளு மிருக்கின்றனர். ஒருவன் இவ்வளவு காலம் தான் தொழில் செய்கிற தென்ற நியமமில்லை. பகுத்தறிவு வந்தது முதல் சரீரத்தில் சக்தியுள்ளவரை உழைக்கிறதென்று பாடுபடுகிறார்கள். இவ்வுலகில் ஒருவன் ஏன் பிறந்தான். எதற்காகப் பிறந்தான், என்ற கேள்விகள் உண்டாகுமாயின் அதற்குறிய விடைக்கு அவரவர்களை சிந்தித்துப் பார்க்கட்டும். அநேகர் மிருகங்களை விருத்த தசையிலும், எமன் சித்திரவதை செய்வதுபோல் தங்களையே கவலையால் வதைத்துக்கொள்கிறார்கள். அந்திய காலத்தில்—சக்தி குன்றிய போதாவது கடவுளை

அனுதினமும் வழிபட்டு, உலகப்பற்றை படிப்படியாய் மண வழியில்விட்டு சாந்த மூர்த்தியாய் விளங்க வேண்டும்.

மானிடர் எவருக்குமே—பணம் சம்பாதிப்ப தென்றால் வெகு ஆசை. ஆனால் அதற்கு எல்லை தானில்லை. நாகரீக முதிர்ந்த இதர தேசங்களில் சம்பாதிப்பதிலும் ஒரு திட்டம் வைத்து காலத்தை அனுசரித்து நடந்து கொள்கிறார்கள்.

எனக்கு எனக்கு என்று பேராவல்கொண்டு, தன் காரியக் குட்டியாய், வேலைக்காரர்கள் நன்மையையாவது, இதர வியாபாரிகளின் நலத்தையாவது கவனிப்பதேயில்லை. பிறர் நன்றாய் சம்பாதிக்க—வாழ மனம் சகியாதவர்களாய் அநேகர் வன்கண் படைத்தவர்களாக விருக்கிறார்கள். இந்த அகண்ட உலகம் யாருக்குச் சொந்தம். மலையில் உற்பத்தியாகி வரும் நதியைப்போல், செல்வம் முயற்சியுள்ள விடத்தில் உற்பத்தியாகி பெருகிச் செல்கிறது. ஒரு மனிதன் நதியின் பாலத்தைப்போல் செல்வன செல்லப்பார்த்துக் கொண்டிருக்கிறான்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல்
பலகற்றும் கல்லார் அறிவிலாதார்"

பிரபஞ்ச வர்த்தமானங்களை அறிந்து, சீர்தூக்கி அதற்குத் தக்க நடத்தலே சாலச் சிறப்புடையதாகும். வியாபாரத் தொழிலிலேனும், ஒற்றுமையற்றிருப்பது மிக்க விசனிக்கத் தக்கது. இந்து தேசத்தில் மழையில்லாத பஞ்சகாலத்தில் ஒரு ரூபாய்க்கு 6 முதல் 8 படி வரை அரிசி விற்கப்பட்டதாம். இந்தியாவுக்கு, பொன் விளையும் பூமி என்ற பெரும் புகழும் இருந்து வந்தது. பூவுலகுக்கே இந்தியா ஒரு கண் போலிருந்து இப்பொழுது புண்போல் தவிக்கும் காலமாய் விட்டது.

இந்துதேச வியாபாரிகளுக்குள் ஒற்றுமையும் அபிமானமும் மிக்க அவசியமானவை; அதனால் உண்டாகக்கூடிய நன்மைஅளவிடப் படாதது. மிக்க ஆபத்தைத் தரக்கூடிய சட்ட திட்டங்கள் ஏற்பட்டாலும் ஒருநொடிப் பொழுதில் நீக்கிப்போம்.

தொழில் செய்வதில் சிறிது பெரிது என்ற வித்தியாசத்தால், நூதன விவேகிகள் புறக்கணிக்கிறார்கள். செல்வத்துக்குத் தகுந்த செழிப்பும் செல்வாக்கும் உண்டாகிறது. மேலும் தொழில் படிப்படியாய் விர்த்தியாகுந் தன்மையுடையது.

உழுதுண்டு வாழ்வோருக்கும் தொழில் செய்து வாழ்வோருக்கும் விசேஷமான வித்தியாசமுண்டு. நிலத்தை வைத்துப் பயிர் செய்வோர் பிரதி வருடமும் சற்றேறக் குறைச்சலான பலனையே எதிர்பார்க்கின்றனர். செட்டான வாழ்க்கையில் விர்த்தியாக வேண்டிய பாகம். ஆனால் வியாபாரம் அப்படி யன்று; பயிர் செய்தொழில், வியாபாரத்துக்கு அடிப்படையான மூலாதாரமா யிருந்தாலும், வியாபார விர்த்தி புத்தி விசாலத்தைப் பொருத்ததாகும்.

"It is a just and noble idea that nations as well as individuals are parts of one wondrous whole, and prosperity and happiness comes of this ideal in extending commerce and in harmonizing the inter-relations of all men and all peoples."

A. H. Mc QUILKIN.

---

13. பூர்வீக இந்தியா

இந்தியாவின் தொழிலைப்பற்றி

கனம் மாளவியாவின் சிறப்புரை

* மிஸ்டர் வி. ஜே. ஹாமில்டன் என்ற ஆசிரியரை கவர்ன்மெண்டார் ஜப்பானுக்கு அனுப்பியிருந்தார்கள். ஜெப்பான் ஜனங்கள் ஏற்கனவே விவசாய மொன்றிலேயே தங்களுடைய பிரயாசைகளை யெல்லாம் செலுத்தினவர்கள்; ஆயினும் அத்தேசமானது பெரும் போக்கான கைத்தொழில் செய்யும் தேசங்களில் ஒன்றாய் விட்டது. இந்த மாறுதல் வெகு விரைவாக அத்தேசத்தில் ஏற்பட்டதை ஆசிரியர் ஹாமில்டன் வர்ணிக்கும் பொழுது பின் வருமாறு சொல்லியிருக்கிறார்:—

இந்தியர் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் இன்னொன்றுண்டு; அதாவது இந்தப் பெரிய மாறுதலைச் செய்து சாதித்த ஜனங்கள் ஆசியா கண்டத்தவர்களே. இருந்த விடத்தை விட்டு அசையமாட்டார்களென்றும் முன்னுக்குப்போக ஆசைப்படாதவர்கள் என்றும், சட்டப்படி அமல் நடத்தவும் தேசத்தில் அமரிக்கையைக் காக்கவும் மேல் நாட்டார் உதவி செய்து வழிகாட்டினால் தான் அவர்களால் முடியுமென்றும், ஐரோப்பியருடைய உதவி கிடைத்த போதிலும் தொழில் அபிவிருத்திக் கேற்ற தற்கால முறைகளை அனுஷ்டிக்க இலகுவில் சம்மதப்பட மாட்டார்களென்றும் வெகு காலமாக ஆசியாக்காரர்களைப் பற்றிச் சொல்வது வழக்கம்.

* கல்கத்தா யூனிவர்ஸிட்டியைச் சேர்ந்தவர்.

இவர் மாத்திரம் அன்று; இன்னும் அநேகர் இம்மாதிரியான தப்பான அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கின்றனர். இந்தியா எப்பொழுதும் விவசாய தேசமாகவே யிருக்கு மென்றும் தொழில் செய்யும் திறமை நம்மவர்களுக்கு சுபாவமாகவே இல்லை யென்றும், இந்த வியாபார விர்த்திக்கான தன்மையும், தொழில் முறையும் மேனாட்டாரிடத்தில் சுபாவமாய் அமைந்திருக்கிறதென்று தொழில் கமிஷன் முன்பாக இவர் தப்பெண்ணங்களை வெளியிட்டனர்.

தொழில் முறை, வியாபார தந்திரம் இவை பிறந்த விடம் ஐரோப்பா கண்டத்தின் மேற்குப் பாகமாம். இந்தியர் படிப்படியாய், நாகரீகத்தைப் பின் பற்றினார்களாம்.

சனம் மாளவியா தொழில் விஷயமாய்ச் சொல்லுகிறார்:-

கைத்தொழில், விவசாயம், வியாபாரம் இவைகளில் இந்தியா வலுத்திருந்த தேசம்.

"நாசுக்கான சல்லாக்களை நெய்வதிலும் வர்ணங்களை வெவ்வேறு மாதிரி கலந்து பலபல வர்ணங்களை உண்டு பண்ணுவதிலும் (செம்பு, பித்தளை முதலிய) உலோகங்களில் வேலை செய்வதிலும் நவரத்தினங்களைச் செதுக்குவதிலும் அத்தர்களை இறக்குவதிலும் இவை போன்ற எல்லா வேலைகளிலும் ஆதிகாலம் தொட்டு உலக மெங்கும் இந்தியாவின் புகழ் பரவியிருந்தது" என்று வீபர் ஆசிரியர் சொல்லி யிருக்கிறார். கிறிஸ்து பிறப்பதற்கு 3000 வருஷங்களுக்கு முன்னமேயே பாபிலோன் என்ற நாட்டுக்கும் இந்தியாவுக்கும் வியாபாரம் நடந்ததாக ருஜூவிருக்கிறது. கிறிஸ்து பிறக்க

2000 வருடங்களுக்கு முன் ஈஜிப்டு தேசத்தின் கோரிகளில் அடக்கம் செய்யப்பட்ட சவங்களின் மேல் இந்தியாவில் நெய்யப்பட்ட அதி நேர்த்தியான ரவை சல்லாக்கள் போர்த் திருந்ததை இக்காலத்தில் கண்டெடுத்திருக்கிறார்கள். இந்தியாவில் செய்யப்பட்ட சாமான்கள் ரோம் (உரோமாபுரி) நகரில் ஏராளமாகச் செலவாயின. இந்தியாவின் வியாபாரம் ரோம் ராஜ்யத்தின் பணத்தை வருஷா வருஷம் ஏராளமாக வடிகட்டி விட்டதென்று பெரி ப் ளி னி என்பவர் புகார் செய்திருக்கிறார். டாக்கா நகரில் நெய்யப்பட்ட சல்லாக்களை (மஸ்லின்) கங்கை நாட்டுத் துணிகள் என்று கிரேக்கர்கள் வழங்கி வந்தனர். ஆகையினாலே இரண்டாயிர வருடங்களுக்கு முன்னர் பருத்தியை நூலாக நூற்று அந்த நூலை ஆடையாக நெய்யுந் தொழில் இந்தியாவில் வெகு சிறப்பை அடைந் திருந்த தென்று சந்தேக மன்னியில் கொள்ளலாம். இங்கிலாந்திலோ 17-வது நூற்றாண்டில் தான் பருத்தி நூல் நெசவு புதிதாக ஏற்பட்டது '' என்று இம்பீரியல் கெஸட்டர் ஆப் இந்தியா என்ற கிரந்தத்தில் மூன்றாவது புத்தகத்தில் 195-வது பக்கத்தில் சொல்லப்பட் டிருக்கிறது. இது கவர்ன்மெண்டாரால் பிரசுரம் செய்யப்பட்ட நூல், இந்தியாவைப் பற்றிய விஷயக் களஞ்சியம்.

சுமார் 2200 வருடங்களுக்கு முன் க்ரீஸ் தேசத்தையாண்ட அலெக்ஸாண்டர் இந்தியாவின் மேல் படையெடுத்த காலத்திலும் அதற்குப் பல நூற்றாண்டுகள் முன்னரும் இந்தியாவானது வெகு க்ஷேமமான ஸ்திதியி லிருந்த தென்பதற்கும், 18-வது நூற்றாண்டில் முகலாய ராஜ்யம் சிதறுண்ட வரையில் பழைய காலத்திற்போல் க்ஷேமமாயிருந்த தென்பதற்கும் ஏராளமான ருஜு இருக்கிறது.''

கனம் மாளவியா, தொழில் அபிவிர்த்திக் கமிஷனுடைய மெம்பர்களின் ரிப்போர்ட்டின் மேல் எழுதிய சிறப்புரையில் இந்தியாவின் பூர்வீகச்சிறப்பையும், நம் இந்து தேசமே இதர தேசங்களின் நாகரீகத்துக்குக் காரணமாயுள்ள தென்று நிரூபித்து விட்டார்.

இந்தியாவின் தொழில் முதலிய வியாபார விர்த்திக்கு இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் சற்றும் ஆதரவு காட்டாமல் ஒரு சார்பான சுய தேசாபிமானத்தால் இருந்து விட்டதால் எத்தனைய பெருந் தொழிலுக்கும் நமது தனிகரம் வற்றிப் போய்விட்டது.

வாழ்வில் தாழ்வு ஏற்பட்ட காலத்தில் தன் பூர்வீகச் சீரும் சிறப்பும் வெளிப்படுவது கால இயல்பு. இந்த உலகம் சுற்றிக்கொண்டே யிருக்கிறபடியால் அடிக்கடி ஏற்றத்தாழ்வான மாறுதலை அடைந்துகொண் டிருக்கிறது. இப்பொழுது நெடுந்தூரம் சென்ற ஒற்றுமை வந்துவிட்டது. இவ்வுலகில் உன்னத நிலையுள்ளது இந்தியா.

இந்தியா இங்லீஷ்காரர்களின் ஆளுகைக் குட்பட்டதால் மேன்மையும் செல்வாக்கும் இங்கிலீஷ் காரர்களுக்கு அதிகரித்திருக்கிறது.

இந்தியாவின் பூர்விகச் சிறப்பையும் செழிப்பையுங் கண்டே 1600-ம் வருஷம் ஆங்கில வியாபாரிகள் கம்பெனி ஏற்படுத்திக் கொண்டு வந்தார்கள்.

இதர பாகங்களை விட்டு இந்தியாவுக்கு மாத்திரம் ஏன் வரவேண்டுமென்றால் இவ்விடமுள்ள விசேஷமான விளை

பொருள்களை வாங்கிக்கொண்டு இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட பொருள்களைக் கொடுக்கவுமென்றே சொல்லப்படுகிறது. இங்லீஷ்காரர்கள் ஆதியில் வரும்போது வெளிதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய ஸ்திதியில் இல்லை என்று கனம் மாளவியாவால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

"17-வது நூற்றாண்டின் கடைசிபாகத்தில் இந்தியாவில் செய்யப்பட்ட தோப்புகளும் மஸ்லின்களும் ஏராளமாக இங்கிலாந்தில் இறக்குமதி செய்யப்பட்டன. அவை வெகு அழகாயும் மலிவாகவும் இருந்ததால் ஜனங்கள் பிரியப்பட்டு அவைகளை வாங்கினர். ஆதலால் இங்கிலாந்தி லிருந்த பட்டு நெசவுக் காரர்களும் கம்பளி நெசவுக் காரர்களும் பெரிய பயமடைந்தனர். அதன்மேல் 1700-ம் வருஷத்திலும் 1721-ம் வருஷத்திலும் பார்லிமெண்டு இயற்றிய சட்டங்களினால் பருத்தி சம்பந்தப்பட்ட எந்தத் துணியையும் ஆடையாகவோ வேறு எவ்விதமாவோ இங்கிலாத்தில் உபயோகப்படுத்தக் கூடாதென்று தடுக்கப்பட்டது என்பதாக லெக்கி என்பவர் எழுதிய இங்கிலாந்தின் சரித்திரத்தில் சொல்லி யிருக்கிறார்.

வங்காளத்தின் தலை நகராயிருந்த மூர்ஷிடாபாத் என்னும் நகரில் 1757-ம் வருஷம் கிளைவ் பிரவேசித்ததும் லண்டன் நகரைப்போல அது விசாலமாயும் ஜன நெருக்கமாயும் இருந்ததாகவும் ஆனால் லண்டனைவிட பெரிய பணக்காரர்கள் மூர்ஷிடாபாத்தில் இருந்ததாகவும் எழுதியிருக்கிறார்.

100-வருஷங்களுக்கு முன் டாக்கா நகரின் வியாபாரம் ஒரு கோடி ரூபாய் பெறுமான முள்ளதாக இருந்தது. அதில் இரண்டு லக்ஷம் ஜனங்கள் வசித்தனர். 1787-ம் வருஷத்

தில் 30-லட்ச ரூபாய் பெறுமானமுள்ள மஸ்லின் டாக்காவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. 1817-ம் வருஷத்தில் அந்த வியாபாரம் முற்றிலும் நின்று விட்டது. வெகுகாலமாக ஏராளமான ஜனங்களுக்குப் பிழைப்புக்கு இடமாயிருந்த நெசவுத் தொழிலும் நூல் நூற்கும் தொழிலும் இருந்தவிடம் தெரியவில்லை. ஏற்கெனவே செழிப்பாயிருந்த குடும்பங்கள் அப்பட்டணத்தை விட்டு வயிற்றுப் பிழைப்புக்காக கிராமங்களுக்குள் போகும்படியாயிற்று. இப்பொழுது டாக்காவில் 79000 ஜனங்கள் தான் இருக்கிறார்கள். டாக்கா மாத்திரம் க்ஷீணதசை அடையவில்லை. எல்லா ஜில்லாக்களிலும் இப்படியே நடந்திருக்கிறது. கைத்தொழில் செய்யும் ஜனங்கள் க்ஷீணதசை அடைவதாக வருஷா வருஷம் ஜில்லா அதிகாரிகள் கவர்ன்மெண்டுக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று 1890-ம் வருஷத்தில் பிரசுரிக்கப்பட்ட நியூ இந்தியா என்ற புத்தகத்தில் மிஸ்டர் காட்டன் சொல்லியிருக்கிறார்.

இங்கிலாந்தில் பருத்தி நூல் துணிகள் இறக்குமதியாவதைத் தடுப்பதற்காக பல தீர்வைகள் விதிக்கப்பட்டிருந்தும் 19-வது நூற்றாண்டின் முதல் நான்கு வருஷங்களில் ஆறாயிரம் மூட்டைகளுக்குக் குறையாமல் பதினைந்தாயிரம் மூட்டைகள் வரையில் வருஷந்தோறும் கல்கத்தாவிலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. 1813-ம் வருஷத்தில் திடீரென்று ஏற்றுமதி குறைந்து போய்விட்டது. ஈஸ்டு இந்தியா கம்பெனி ஏகபோக வியாபாரம் செய்து கொண்டிருந்ததை மாற்றி மற்றவர்களும் இந்தியாவில் வியாபாரம் செய்யலாமென்று 1815-ம் வருஷத்தில் அனுமதி கொடுக்கப்

பட்டதன் பலனாக இந்தியாவின் துணி ஏற்றுமதி அந்த வருஷத்தில் அதிகமாயிற்று. ஆனால் 1820-ம் வருஷத்திலிருந்து பருத்தி நூல் துணியின் நெசவும் ஏற்றுமதியும் குறைய ஆரம்பித்தன. அப்புறம் உயரவே யில்லை என்று பிரிட்டிஷ் இந்தியாவின் பொருளாதார சரித்திரம் என்ற நூலில் ராமச்சந்திர தத்தர் எழுதியிருக்கிறார்.

கம்பெனியாரின் நிர்வாகம் ஆரம்பமான காலத்தில் வங்காளத்தில் நெய்யப்பட்ட பட்டாடைகள் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்ததால் பிரிட்டிஷ் நெசவுக்காரர்கள் வங்காள நெசவுக்காரர்களிடத்தில் பொறாமைப் பட்டனர். அதன் பலனாக இந்தியாவில் நெய்யப்பட்ட ஆடைகள் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்படாமல் தடையேற்பட்டது. இன்னும் கம்பெனிக்கு ஏற்பட்ட அதிகாரத்தை உபயோகப்படுத்தி இந்தியாவின் தொழில்கள் அற்றுப் போகும்படி செய்யவேண்டுமென்று பிரயத்தனம் செய்யப்பட்டது. வங்காளத்தில் பட்டை உற்பத்தி செய்ய ஆதரவு செய்யவேண்டுமென்றும், ஆனால் பட்டாடை நெய்வதைத் தடுக்கப் பார்க்கவேண்டுமென்றும் 1769-ம் வருஷம் மார்ச்சு மாதம் 17-ந் தேதியில் ஈஸ்டு இந்தியா கம்பெனியார் வங்காளத்திலிருந்த தங்களுடைய அதிகாரிகளுக்கு ஒரு கடிதமெழுதி யனுப்பினர். பட்டைச் சுற்றுகிறவர்கள் கம்பெனியின் தொழிற்சாலைகளில் வேலை செய்யும்படி கட்டாயப்படுத்த வேண்டுமென்றும் அவர்களுடைய வீடுகளில் வேலை செய்யாமல் தடுக்கவேண்டுமென்றும் அக்கடிதத்தில் சொல்லியிருந்தார்கள் என்றும் ராமச்சந்திர தத்தர் சொல்லியிருக்கிறார்.

ஈஸ்டு இந்தியா கம்பெனி இந்தியாவில் நடத்திவந்த நிர்வாகத்தைப் பரிசீலனைசெய்து அறிவிக்கும்படி பார்லிமெண்டு

மெம்பர்கள் சிலரை ஒரு கமிட்டியாக நியமிப்பது அக்காலத்தில் வழக்கம். 1783-ம் வருஷத்தில் இப்பரிசீலனையைச் செய்த கமிட்டியின் ரிபோர்ட்டுடன் ஒரு கடிதம் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் மேலதிகார சபையில் அக்கடிதம் எழுதப்பட்டது. அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்ததைக் கவனிக்கவேண்டும்.—"இந்த முறையினால் நல்ல பிரயோசனம் உண்டாகியிருப்பதாகத் தெரிகிறது; பட்டைச் சுற்றுகிறவர்கள் கம்பெனியின் தொழிற்சாலைகளில் வேலை செய்யும்படி இந்த உத்தரவு செய்து விட்டது முக்கியமான விஷயம். அவர்கள் தங்களுடைய வீடுகளிலேயே வேலை செய்யும்படி கவனக் குறைவால் விட்டிருப்பார்களாயின், அதைத் தடுத்து விடுவது நல்லது. வீட்டில் வேலை செய்தால் கடுமையான தண்டனை விதிக்கப்படுமென்று உத்தரவு செய்து அடியோடு அந்த வழக்கத்தை இனி நிறுத்திவிட முடியும்;—"வங்காளத்தின் தொழில்கள் நசித்துப் போய் விடும்படி செய்யக் கூடிய முறை இந்தக் கடிதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் பிரயோஜனமாக வங்காளத்தில் தொழில்கள் நசித்துப் போய், இங்கிலாந்தில தொழில்களுக்கு உபகரணமான மூலப்பொருள்களை விளைவிப்பதே அத்தேசத்தின் வேலையாகிவிடும்—என்று பார்லிமெண்டு கமிட்டி சொல்லியிருக்கிறது.

—இந்தியாவில் நெய்யப்படும் பட்டாடைகளும், பட்டும் நூலும் கலந்த ஆடைகளும் இங்கிலாந்தில் விற்பனைக்கு வராமல் வெகு காலத்திற்கு முன்னமேயே செய்து விட்டோம். இந்தியாவுக்குத் தாய்ச்சரக்காயிருந்த பருத்தித் துணிகளும் இத்தேசத்தில் சில வருஷங்களாகத் தலை காட்டு

கிறதில்லை, இதற்கு முக்கியமான காரணம் உயர்ந்த யந்திரங்களின் உபயோகமும், 100-க்கு 67 வீதம் நாம் விதிக்கும் இறக்குமதித் தீர்வையுமே. இந்தியாவின் துணிகள் இங்கிலாந்துக்கு வரமுடியாமல் நாம் செய்து விட்டதுமல்லாமல், ஆசியாகண்டத்தில் நமக்குச் சொந்தமாயுள்ள நாடுகளின் தேவைக்காக இங்கிலாந்திலிருந்து துணிகளை ஏற்றுமதிசெய்கிறோம். தொழில் செய்து கொண்டிருந்த இந்தியாவானது இவ்வாறு விவசாய தேசமாக க்ஷீணிக்கும்படி செய்தாய் விட்டது என்று ஹென்றி காட்டன் ஸெயிண்டு ஜார்ஜ்டக்கர் எழுதியிருப்பதாக ராமச்சந்தரதத்தர் தம் நூலில் சொல்லியிருக்கிறார்.

"இந்தியாவின் அரசியலைப்பற்றி 1813-ம் வருஷத்தில் ஒரு கமிட்டி விசாரணை செய்தது. இங்கிலாந்தில் நெய்யப்பட்ட ஆடைகளின் விலையைக்காட்டிலும் 100-க்கு 50 அல்லது 60 குறைவாக இந்தியாவில் நெய்யப்பட்ட ஆடைகளை இங்கிலாந்தில் விற்பனை செய்து லாபமும் கிடைத்து வந்ததாக அக்கமிட்டி முன் சாட்சியம் சொல்லப்பட்டது. ஆகையால் இந்திய ஆடைகளின் கொள் முதலின் மேல் 100-க்கு 70 அல்லது 80 வீதம் தீர்வை விதித்தோ அல்லது அவை இங்கிலாந்துக்கு வரவே கூடாதென்று தடுத்தோ இங்கிலாந்தின் நெசவைக் காப்பாற்ற வேண்டியதாயிருந்தது. இப்படிச் செய்யாமலிருந்தால் அதாவது தீர்வைகளை விதித்தும் தடை உத்தரவுகளைப் பிறப்பித்தும் இந்தியாவின் ஆடைகளைத் தடுத்திராவிடின் மாஞ்செஸ்டர், பெய்ஸ்லி முதலிய பட்டணங்களின் தறிகள் நெசவு வேலையை நிறுத்தி விடும்படி நேர்ந்திருக்கும். பிறகு நீராவியந்திரங்களின் உதவியாலும் வேலைவை ஆரம்பம் செய்திருக்க முடியாது. இந்தியா

ஸ்வாதீன முடையதாயிருந்திருக்குமாயின், பதில் காரியம் செய்திருக்கும். பிரிட்டிஷ் சாமான்கள் இந்தியாவில் இறங்கினால், அவைகளின் மேல் தீர்வைகளை விதித்து தன்னுடைய தொழில்கள் நசித்துப் போகாமல் செய்திருக்கும். ஆனால் இம்மாதிரி செய்து தன்னைக் காத்துக்கொள்ள அதை நாம் விடவில்லை. அன்னியர் தயவை எதிர்பார்த்து நிற்க வேண்டிய நிலைமையில் இந்தியா இருந்தது. ஒரு தீர்வையுமன்னியில் ப்ரிட்டிஷ் சாமான்கள் அத்தேசத்தில் இறக்குமதி செய்யப்பட்டன. ராஜீய வழியில் இவ்வாறு அனியாயம் செய்து அன்னிய தேசத்து தொழிற்காரர்கள் இந்தியாவின் தொழிலை அடக்கி முடிவாக ஒழித்து விட்டனர். சரிசமமாகப் போட்டி போட்டு அவர்கள் அப்படிச் செய்திருக்க முடியாது என்று மிஸ்டர் வில்ஸன் எழுதிய சரித்திரத்தில் சொல்லி யிருக்கிறதாக ராமச்சந்திர தத்தர் எடுத்துக் கூறியிருக்கிறார்.

ஆங்கிலேயத் தொழிற்காரரின் பொறாமையினால் இந்தியாவில் நசித்துப்போன தொழில்களில் கப்பல் கட்டும் தொழிலும் ஒன்று.

“700 வருஷங்களுக்கு முன் கப்பல்கட்டும் தொழில் இந்தியாவில் மிகவும் நல்ல ஸ்திதியில் இருந்தது. ஆகையால் இந்தியாவில் கட்டப்பட்ட கப்பல்கள் இங்கிலாந்தில் கட்டப்பட்ட கப்பல்களுடன் லண்டன் பட்டணத்திற்குப் பிரயாணம் செய்தன” என்று மிஸ்டர் டிக்பி எழுதியிருக்கிறார்.

தொழில் க்ஷீணிக்க பஞ்சம் வலுத்தது.

இன்னும் கனம் மாளவியா சொல்லுகிறார். இந்தியா வின் தொழில்கள் நசித்துப் போனதும், பிரிட்டிஷ் சாமான் களின் இறக்குமதியும் மூலப்பொருள்களின் ஏற்றுமதியும் வர வர அதிகமானதும் தொழில் செய்யும் ஜனங்களுக்கு தரித்திரத்தை உண்டு பண்ணிவிட்டன. அவர்களும் விவ சாயமே கதி யென்று அதில் இறங்க யிறங்க, விவசாயத்தை நம்பின ஜனங்களின் தொகை வருஷா வருஷம் அதிகரித் துக் கொண்டே வந்திருக்கிறது.

1878-1879-ம் வருஷத்திய 587½ லட்சம் பவுன் பெறு மான முள்ள சாமான்கள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய் யப்பட்டன. ஆனால் அதில் 100-க்கு 6½ பங்கே தொழில் முறையில் முடிந்த சாமான்கள். பாக்கி 93½ பாகம் மூலப் பொருள்கள். 1880-ம் வருஷத்தில் 51, 597, 561 பவுன் பெருமானமுள்ள சாமான்கள் இந்தியாவில் இறக்குமதி செய் யப்பட்டன. இவ்விரண்டு காரியங்களின் பலனாக அடிக்கடி பஞ்சங்கள் உண்டாவது சகஜமாயிற்று. இந்தக் கமிஷன் மெம்பராக நியமிக்கப்பட்ட ஸர் ஹோரஸ் ப்ளஸ்கெட் இந்த வேலையை ஏற்றுக்கொள்ள முடியாமல் போனதற்கு நானும் விசனப்படுகிறேன்.

1896-ம் வருஷத்தில் அவர் ஒரு கமிட்டியின் தலைமை யை வகித்தார். அக்கமிட்டியின் ரிபோர்ட்டில் மேற் சொன் னவை போன்ற காரணங்களால் அயர்லாந்திலும் பஞ்சங்கள் அடிக்கடி ஏற்பட்டன வென்று அவர் சொல்லி யிருக்கிறார். அயர்லாந்தில் தொழில் நடக்கமுடியாமல் தடுத்த சட்டமா

னது ஜனங்கள் விவசாயம் ஒன்றையே நம்பும்படி செய்த தென்றும், அதனால் பஞ்சங்கள் அடிக்கடி நேர்ந்தன வென்றும் அவர் சொல்லி யிருக்கிறார். இந்தியாவில் 1800-ம் வருஷம் முதல் 1825-ம் வருஷத்திற்குள் ஐந்து பஞ்சங்கள் உண்டாயின. 1825-ம் வருஷம் முதல் 1850-ம் வருஷம் வரையில் இரண்டு பஞ்சங்கள் உண்டாயின. 1850-ம் வருஷம் முதல் 1875-ம் வருஷம் வரையில் ஆறு பஞ்சங்கள் உண்டாயின. 1876-ம் வருஷம் முதல் 1901-ம் வருஷத்திற்குள் பதினெட்டு பஞ்சங்கள் உண்டாயின. 1854-ம் வருஷம் முதல் 1901-ம் வருஷத்திற்குள் 2 கோடியே 88 லட்சம் ஜனங்கள் மொத்தமாக இறந்துபோயின வென்று சர்க்கார் கணக்குகளைக் கொண்டு மிஸ்டர் டிக்பி சொல்லியிருக்கிறார். நூறு வருஷங்களுக்கு முன் இருந்ததைவிட 19-வது நூற்றாண்டின் கடைசி 30 வருஷங்களில் பஞ்சம் நான்கு மடங்கு கொடுமையில் அதிகமாக இருந்திருப்பதுடன் நான்கு மடங்கு விஸ்தீரணமுள்ள பிரதேசத்திலும் வியாபித்திருந்திருக்கிறது என்று 1901-ம் வருஷத்தில் மிஸ்டர் டிக்பி சொன்னார்.

1877–78-ம் வருஷத்திய பஞ்சத்திற்குப் பிறகு பஞ்சத்தைப்பற்றி விசாரித்து அறிவிக்க ஒரு கமிஷனை கவர்ன்மெண்டார் நியமித்தார்கள். பஞ்சத்தின் கொடுமையைக் குறைக்க கவர்ன்மெண்டார் என்ன செய்யலா மென்றும் பஞ்சம் வந்தால் அதை சகித்துக்கொள்ள ஜனங்களுடைய நிலைமையை எப்படி விருத்தி செய்யலா மென்றும் தெரிவிக்கும்படி அந்தக் கமிஷனை கவர்ன்மெண்டார் கேட்டார்கள். அந்தக் கமிஷன் சொல்லி யிருப்பதைக் கவனிப்போம்.

" ஜனங்கள் அநேகமாக விவசாயத்தையே நம்பி யிருப்பதாலும் வேறு தொழில் எதுவும் இல்லையாகையாலும் பஞ்சம் உண்டானால் ஜனங்களுடைய கஷ்டத்தை நிவர்த்தி செய்வது வெகு சிரமமாக இருக்கிறது. வழக்கப்படி மழை பெய்யாவிட்டால் ஜனங்கள் கொடுக்கக்கூடிய விலைக்கு அவர்களுக்கு வேண்டிய சாமான்கள் அகப்படாமல் போவதுடன் அவர்களுக்கு வேலையும் கிடைக்காமல் போய்விடுகிறது.

ஆகையால் விவசாயம் தவிர வேறு தொழில்களை விருத்தி செய்வது தான் இந்த நிலைமைக்குப் பரிகாரமாகும்."

பல வேறு தொழில்களை விருத்தி செய்ய அந்தக் கமிஷன் செய்த சிபார்சுகள் மிகவும் சிலாக்கியமானவை. இப்பொழுது நாங்கள் செய்யும் சிபார்சுகளைப் போன்றவை. ஆகையால் அவற்றை இங்கே எடுத்துக் கூறுகிறேன் என்று கனம் மாளவியா கீழ்க்கண்டவாறு சொல்லுகிறார். முற்றிலும் வெளியிட வேண்டில் பக்கம் பெருகும் ஆகையால், முக்கியமான அம்சங்கள் குறிப்பிடப்படுகின்றன.

" இந்தியாவிலுள்ள ஜனங்களின் தரித்திரத்திற்கும் பருவ மழை தவறிப்போய்விட்டால் அவர்களுக்கேற்படும் கஷ்டங்களுக்கும் மூலகாரணம் என்னவென்பதை ஏற்கெனவே, சொல்லி யிருக்கிறோம். அதாவது விவசாயம் ஒன்றே ஜனங்களின் தொழிலாக இருப்பதுதான். பல தொழில்களை உண்டுபண்ணினாலொழிய இந்நிலைமைக்கு பரிகாரம் ஏற்படமாட்டாது. அப்படி உண்டுபண்ணினால் விவசாயம் செய்வதற்கு அவசியமான ஜனங்கள் போக பாக்கி ஜனங்கள் கைத்தொழில்களில் அமர்ந்து ஜீவனம் சம்பாதிக்கும்படி செய்யலாம் "

இங்கிலாந்திலிருந்து முதல் கொண்டு வந்து இந்தியாவில் போடுவதற்குள்ள இடையூறுகளையும் தொழில்களுக்கு சர்க்காரே நேராக ஏன் உதவிசெய்யக்கூடாது என்பதையும் அவர்கள் குறிப்பிட்டுவிட்டு பின் வருமாறு சிபார்சு செய்தார்கள்.

6. ஆனால் புதுத் தொழில்களை ஆரம்பம் செய்கிறதற்கு கவர்ன்மெண்டார் உதவி செய்ய வேறு வழிகளிருக்கின்றன. தேயிலைச் செடியை சாகுபடி செய்வதையும் தேயிலையைப் பக்குவம் செய்வதையும் இத்தேசத்தில் புதிதாக ஏற்படுத்தினதிலிருந்து அதுபோன்ற வேறு காரியங்களையும் கவர்ன்மெண்டு செய்யலாமென்று தெரிகிறது.

7. "————விவசாயத்துடன் நிறுத்திவிடாமல் இப்பொழுது இந்தியாவில் உபாயமாக நடக்கும் கைத் தொழில்களின் பொருட்டும் விர்த்திக்கான மார்க்கத்தை அனுசரிக்க வேண்டும்.

8. சர்க்கரை செய்வதிலும் அதைச் சுத்தி செய்வதிலும் மேற்சொன்ன முறையை அநுஷ்டிக்கலாம். தோல்களைப் பதனிடுவதிலும் நூலாடை, பட்டாடை கம்பளியாடைகளை நெய்வதிலும் ஆடை நெய்வதற்கும் நார்களைத் தயார் செய்வதிலும், புகையிலையை வேலை செய்வதிலும், காகிதம், மண் ஜாடி முதலியவை கண்ணாடி, சவர்க்காரம் [சோப்], எண்ணெய்கள், மெழுகு வர்த்தி முதலிய சாமான்களைச் செய்வதிலும் மேற்சொன்ன முறையை அநுஷ்டிக்கலாம்.

9. மேற்சொன்ன தொழில்களில் சில கவர்ன்மெண்டினால் நடத்தப்படும் தொழிற்சாலைகளில் இப்பொழுதே செய்யப்படுகின்றன————.

10. புதிதாக ஒரு தொழிலை ஒரு இடத்தில் செய்யப் படவோ அல்லது இருக்கிற தொழிலை விருத்தி செய்யவோ விரும்புகிறவர்களுக்குத் தேவையான சமாச்சாரங்களை வேறு தேசங்களிலிருந்து தெரிந்து அறிவித்தும், அல்லது தேர்ச்சி யடைந்த தொழிலாளிகளை வரவழைத்துக் கொடுத்தும், அல்லது தாங்கள் மேற்பார்வை செய்தும் கவர்ன்மெண்டார் உதவி செய்யக்கூடும்.

11. தொழிற் படிப்பையும் சாஸ்திரப் படிப்பையும் அபிவிருத்தி செய்யவும் இக்காரியங்களைச் செய்வதற்கு வெகுமதி கொடுக்கவும், பொருட் காட்சிச் சாலைகளை சௌகரியமான இடங்களில் ஏற்படுத்தவும், கவர்ன்மெண்டார் செய்யக் கூடிய கார்யங்களினால் பெரிய பிரயோசனம் உண்டாகும். ஐரோப்பாவில் சமீபத்தில் தொழிலபிவிருத்தி ஏற்பட்டதற்கு இக்காரியங்களும் காரணமாகும்.

மேலே சொன்ன பஞ்சக் கமிஷனின் ரிப்போர்ட்டு 1880-ம் வருஷத்தில் வெளியிடப்பட்டது. ஆனால் அதில் சொல்லப்பட்டுள்ள முக்கியமான சிபார்சுகள் அதிகமாகக் கவனம் பெறவில்லை. தேச ஜனங்களைக்கொண்டு தொழிற் சாலைகளை ஏற்படுத்த அதிக ஆதரவு அளிக்கப்படவில்லை. தொழிற் படிப்பை பரவச் செய்யவும் ஒன்றும் செய்யப்படவில்லை அதற்குப் பிறகு 1885-ம் வருஷத்தில் காங்கிரஸ் (பாரதஜன) மகாசபை ஆரம்பமாயிற்று. இந்தியப் பொது ஜனங்களின் அபிப்பிராயத்தையும் தேவைகளையும் வெளியிடுவதற்காக அச்சபை ஏற்படுத்தப்பட்டது. 1887-ம் வருஷத்தில் கூடிய அதனுடைய மூன்றாவது கூட்டத்தில் அடியில்கண்ட தீர்மானம் செய்யப்பட்டது.

"தேச ஜனங்களின் தரித்திரத் தன்மையை உத்தேசிக்கையில், தொழில் படிப்பைப் பரவச் செய்ய ஏதேனும் ஏற்பாட்டை கவர்ன்மெண்டார் யோசனை செய்துமுடிக்க வேண்டும். அந்த ஏற்பாடானது இத்தேச ஜனங்களின் நிலைமைக்குப் பொருத்த முள்ளதாக இருக்க வேண்டும். கவர்ன்மெண்டினுடைய தேவைகளுக்கு இத்தேசத் தொழில்களையே உபயோகப் படுத்திக் கொள்ள வேண்டும் என்று இப்பொழு திருக்கிற உத்திரவுகளை அவர்கள் இப்பொழுது அனுசரிப்பதை விட அதிகமாக அனுஷ்டிக்க வேண்டுமென்றும், இத்தேச ஜனங்களின் சாமர்த்தியத்தை அதிகமாக உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ள வேண்டும்"

அடுத்த தடவை 1888-ம் வருஷத்தில் தேசத் தொழில்களின் நிலைமையைப்பற்றி விசாரிக்க உத்தியோகஸ்தர்களும் அல்லாதவர்களும் சேர்ந்த கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்திற்று. அடுத்தடுத்து 1891 முதல் 1893 வரை ஆகிய மூன்று வருஷங்களிலும் இந்த தீர்மானத்தைச் செய்யப்பட்டது.

அடுத்த 1896-ம் வருஷத்தில் பஞ்சம் தோன்ற, தேசமெங்கும் ஜனங்கள் கஷ்டப்பட்டனர்.

"பஞ்சம் அடிக்கடி வராமல் செய்வதற்கு சர்க்கார் செட்டாக இருந்து தேசத்தின் பொருளாதார மூலங்களை உபயோகப் படுத்திக் கொள்ள வேண்டு மென்றும் தேசத் தொழில்களை விருத்திசெய்ய வேண்டுமென்றும்,

தற்கால பேஞட்டு முறைகளின்படி தொழில்கள் நடை பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்றும்" அந்த வருஷத்தில் காங்கிரஸ் தீர்மானம் செய்தது.

"அடுத்த வருஷத்திலும் ஜனங்களின் தரித்திர நிலைமையை உத்தேசித்தும் தேசத் தொழில்கள் க்ஷீணித்துப் போனதை உத்தேசித்தும் தொழிற்படிப்பை விஸ்தாரமாகப் போதிக்க ஏற்பாடு செய்யும்படியும், அதற்காக அதிகப் பணத்தை திட்டத்தில் ஏற்படுத்தும் படியும், காங்கிரஸ் கேட்டுக் கொள்ள வேண்டும். தேசத்தில் ஒரு மத்திய ஸ்தலத்தில் பல தொழில்களையும் போதிக்கக்கூடிய ஒரு கலாசாலையையாவது ஏற்படுத்தி அந்தந்த மாகாணங்களில் தொழிற் பள்ளிக்கூடங்களையும் கலாசாலைகளையும் ஏற்படுத்த வேண்டு" மென்று 1904-ம் வருஷத்திலும் 1905-ம் வருஷத்திலும் காங்கிரஸ் வற்புறுத்திற்று.

1905-ம் வருஷம் முதல் காங்கிரசை அடுத்த தொழிலபிவிருத்திக் கூட்டம் ஒன்று நடைபெற்று வருகின்றது. தொழிற் படிப்பையும், இயந்திரப் படிப்பையும் வியாபாரப் படிப்பையும் ஏற்பாடு செய்ய வேண்டு மென்று அந்தக் கூட்டம் கவர்ன்மெண்டைக் கேட்டு வந்திருக்கிறது.

இந்தியா தனக்கு அன்றாடம் வேண்டிய மூலப் பொருள்களுக்கும் மற்ற சாமான்களுக்கும் இந்தியா மற்ற தேசங்களை வெகுவாக நம்பி யிருக்கும்படி ஆய்விட்டதானது பரம துக்கத்திற்கு ஹேதுவாக இருக்கிறது. எவ்வளவு தூரம் இந்தியா பிரதேசங்களை நம்பியிருக்கிறதென்பது அடியிற்காணும் ஜாப்தாவிலிருந்து தெரியவரும். 1914-ம் வருஷம் மார்ச்சு-

மாதத்துடன் முடிவான ஒரு வருஷ காலத்தில் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட சாமான்களை இந்த ஜாப்தா காட்டுகிறது.

	பவுன்.
1. ஆகாரம், பானம், புகையிலை.	16,441,330

அதற்கு விவரம்.

மீன் (தகர டப்பிகளில் வந்தது தவிர)	208,330
பழங்களும் காய் கறிகளும்	753,583
தானியமும் மாவும்	185,560
சாராயங்கள்	1,251,642
பிஸ்கோத்து முதலியன	1,649,087
சம்பைச் சரக்குகள்	1,154,875
சர்க்கரை	9,971,251
தேயிலை	152,409
மற்ற ஆகாரங்களும் பானங்களும் அதாவது வறுத்ததும் பொடி செய்தது மல்லாத காப்பிக் கொட்டை முதலியன	511,623
புகையிலை	501,923
ii. மூலப் பொருள்கள்	7,038,380

விவரம்.

நிலக்கரியும் இதர விறகும்	710,920
பிசின்கள், பனிக்கட்டி	175,764
பதனிடாத தோல்கள்	101,066
வேலை செய்வதற்காக இரும்புத் துண்டுகள்	11,977

எண்ணெய்கள்	2,934,611
விதைகள் (எண்ணெய் விதைகள் உள்பட)	51,431
கொழுப்பு, மெழுகு,	150,638
நெசவுக்கான சாமான்கள் (பருத்தி, நார் முதலியவை)	1,204,510
மரம்	515,590
சில்லறை (சங்கு சோழி, மீன், எரு, காகிதஞ் செய்ய மரக்கூழ் கந்தைத் துணி முதலியவை உள்பட)	1,149,873
iii. முற்றிலும் அல்லது அநேகமாக கைத்தொழிலால் செய்யப்பட்ட சாமான்கள்	96,769,443

விவரம்.

ஆடை	1,669,389
ஆயுதங்கள் குண்டு ரவைகள் ராணுவ சாமான்கள்	236,713
வண்டிகள் (சைகில்கள் மோட்டார் வண்டிகள் உள்பட),	1,422,667
ரஸாயன சரக்குகள், மருந்துகள்	1,605,659
கத்தி வகையரா இரும்பு சாமான்கள். கருவிகள் (இயந்திரக் கருவிகள் தவிர)	4,291,140
சாயங்கள்	1,510,933
மேஜை, நாற்காலி முதலிய மரச் சாமான்கள்	224,323
கண்ணாடி சாமான்கள், மண் சாமான்கள்	1,728,667
தோல்கள் (பதனிட்டது)	266,683
எல்லாவிதமான இயந்தரங்கள் (இயந்தரங்களின் வார்கள் உள்பட)	5,508,397

உலோகங்கள் இரும்பு எஃகும் அவற்றால் செய்யப்பட்ட சாமான்களும்	10,633,249
இரும்பும் எஃகும் அவற்றால் செய்யப்பட்ட சாமான்களும் தவிர இதர உலோகங்கள்	41,010,801
காகிதம் காகித அட்டை முதலியன	1,524,982
ரெயில்வே சாமான்களும் வண்டிகளும்	6,689,794
நூலும், ஆடைகளும்	50,360,013
சில்லரை (அச்சுக்கள், படங்கள், ரப்பர்சாமான்கள், சுருட்டுக் குடிப்போருக்கு வேண்டியவை, வாசனைத் தைலங்கள், ஊன்றுகோல், சவுக்கு, சலவைக்கல், ஸோப்பு வகையரா, விளையாட்டு சாமான்கள், பந்தடித்தல் முதலிய விளையாட்டுகளுக்கு வேண்டிய கருவிகள், குடைகள், குடைகளின் உருப்புகள் உள்பட)	5,055,963
IV. சில்லரை வகுக்கப்படாதவை, உயிருடனுள்ள பிராணிகள், மிருகங்களின் தீனி, தபால் வழியாக வந்த சாமான்கள் உள்பட	1,916,135
V. கவர்ன்மெண்டு வாங்கின சாமான்கள்	5,373,450
வெள்ளி, தங்கம் முதலிய பொக்கிஷமல்லாது, இறக்குமதி செய்யப்பட்ட வஸ்துக்களின் மொத்த மதிப்பு	127,538,638


முதற்பாகம் முற்றிற்று.



பண்டித மதன் மோஹன மாளவியா.

வியாபார தந்திரம்

இரண்டாம் பாகம்.



லோகமான்ய பால கங்காதர திலகர்.

லோகமான்ய பால கங்காதர திலகர்

(சென்னையில் மகாத்மாவின் உபதேசம் ஓர் பகுதி)

மகா முக்கியமான ஒரு பிரச்னையைக் குறித்து இன்றையதினம் நான் பேச உத்தேசிக்கிறேன். அது எவ்வளவு முக்கியமான விஷயம் என்பதை இதுவரையில் பலர் உணராமலே யிருந்திருக்கிறார்கள்; ஆனால் அதைப்பற்றி நான் இன்று பேசப்புகுமுன், காலஞ்சென்ற லோகமான்ய திலக மகாராஜருக்கு எனது மனமார்ந்த மரியாதையை வணக்கமாய்த் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் சொல்லப்போகும் விஷயத்தின் நியாயத்தை யுணர்ந்து, அபிமானத்துடன் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். சத்தம் போடாமல் கவனமாய் நான் சொல்லுவதைக்கேட்டாலொழிய நான் பேசுவதில் பிரயோஜனமில்லை. காலஞ்சென்ற அவ்வுத்தம தேசாபிமானி உயிரோடிருந்த காலத்திலும் சரி, அவர் இறந்த பின்பும் சரி, தேசிய வாழ்வில் ஒரு புதிய உணர்ச்சியைத் திறமையாய் உண்டுபண்ணி விட்டார். பம்பாயில் அவருக்கு நடந்த தகனக்கிரியைகளின் போது நீங்கள் யாராவது பார்த்திருந்தால், ஜனங்களின் ப்ரீதியை அவர் எவ்வளவு தூரம் பெற்றிருந்தார் என்பது நன்கு விளங்கியிருக்கும். வாழ்நாள் பூராவையும் அவர் தேசசேவையிலேயே கழித்தவர். நமது நாட்டுக்கு சுயேச்சை கிடைக்க வேண்டுமென்றே அவர் அவ்வாறு உழைத்தார். ஸ்வராஜ்யமே அவரது பிரதான லட்சியம். அவருடைய பெயரை உச்சரித்த மாத்திரத்தில் சுதந்தரதாகம் உண்டாகமலிராது. இத்தேசத்தார் அவரைப் பின்பற்றி

விசேஷமாய் மதித்து வந்ததற்கு, இதுவே உண்மையான காரணமாகும். படித்தவர்கள் மாத்திர மல்ல. கோடிக் கணக்கான ஜனத்திரள்களுக்கும் அவரிடத்தில ஒரு மதிப்பும் விசுவாஸமும் இருந்து வந்தன. அவர் சுய நலத்தை அறவே ஒழித்து, எண்ணிறந்த தியாகங்க ளைத் தமது ஆயுள் காலம் பூராவும் செய்து கொண்டே வந் தார். 1879-ம் வருஷத்தில் அவருக்குக் கஷ்டகாலம் ஆரம் பித்தது. அவர் சாகும் வரையில் கஷ்டப்பட்டுக் கொண்டே யிருந்தார். தேசத்துக்காகவே அவ்வளவு தூரம் பாடுபட் டார். இதுபற்றியே, தேசத்தாருக்கு அவரிடத்தில் அவ் வளவு தூரம் ப்ரீதி ஏற்பட்டிருந்தது. தேசத்துக்காக உயிரை விடவும் உயிருடன் வாழவும் அவர் வழியை அறிந் தவர். தன்னை வெறுப்புக் காட்டி, எவ்விதத் தியாகத் தையும் செய்ய திலகர் எப்படித் தயாரா யிருந்தாரோ அது போலவே உங்களுக்கும் ஒருவிதமான தியாகபுத்தி உண் டாக வேண்டுமென்று தான் இன்று நான் பிரசங்கம் செய்யப் போகிறேன். வாக்கு வன்மையோடு அழகாய்ப் பேசிவிட் டால் மட்டும் போதாது. வெறும் பேச்சு தியாகமாய் விடாது. நமது வார்த்தையைப் போல் காரியத்திலும் தியாக புத்தியை தைரியமாய்க் காட்டினாலன்றி பிரயோஜன மில்லை.

உங்களுடைய கௌரவத்தையும் உங்களுடைய மதத்தை யும் காப்பாற்றிக் கொள்ளும் விஷயத்தில் வேண்டியதைச் செய்ய நீங்கள் தயாராயிருக்கிறீர்களா வென்றும், உங்களுக் கிஷ்ட முண்டாவென்றும், கேட்கவே நான் இங்கு வந்தேன். பரம்பரையான கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதில்

சென்னைவாசிகளுக்கு விசேஷ சிரத்தை யுண்டென்பது எனக்கு வெகு நன்றாய் ஏற்கனவே தெரியும். தென்னாப்பிரிக்காவில் தமிழர்கள் செய்த போராட்டத்தை 1893-ம் வருஷத்திலேயே நான் அறிவேன். சென்னை வாசிகளிடத்தில் எப்போதுமே எனக்கு எல்லையில்லாத நம்பிக்கையுண்டு. எந்த காரணத்துக்கும் சென்னை பிற்பட்டதல்ல; பிற்பட்டிராதென்றே நம்புகிறேன். தியாகம் செய்யும் வகையில் மற்றவர்களுக்கு வழிகாட்டியா யிருந்து, வார்த்தையின்படி காரியத்திலும் சென்னை வாசிகள் நிச்சயம் நடந்து கொள்வார்களென்று நம்புகிறேன்.



மகாத்மா மோகனதாஸ் கரம்சண்டு காந்தி.

மகாத்மா காந்தியின் ஆழ்ந்த கொள்கைகள்.

ஒற்றுமையாமை என்றால் என்ன? நாம் ஏன் அந்த தர்மத்தை கைக்கொள்ள வேண்டும்? கவர்ன்மெண்டாருடன் ஒற்றுமைக்கக் கூடாதென்பதற்கு முதல் முதலாக காரணத்தைச் சொல்லுகிறேன். இரண்டு முக்கியமான காரணங்களை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன். கிலாபத்து விஷயத்தில் இந்திய முஸ்லீம்களின் ஹிருதயம் மிகுதியும் புண்பட்டுத் துடித்துக்கொண்டிருக்கிறது. விசேஷ தீர்க்காலோசனை செய்தபின் பிரிட்டிஷ் முதன் மந்திரி நமக்களித்த உறுதிமொழிகள் முடிவில் என்ன கதி யடைந்தனவென்பதை நாம் பிரத்தியட்சத்தில் அறிவோம். முஸல்மான்களின் கூட்டுறவை எதிர்பார்த்து அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளைப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் மீறி நடந்து விட்டார்கள். இஸ்லாம் மதத்துக்கே பேராபத்து வந்துவிட்டது. பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் கேவலம் தமதிஷ்டப்படி இஸ்லாத்துக்கு ஆபத்து விளைத்துவிடுவதென்றால், அப்படிப்பட்ட பிரிட்டிஷ் சம்பந்தத்தை விசுவாஸமாய் வைத்துக் கொண்டிருக்க முஸல்மான்களால் முடியாது. உறுதி மொழிகள் நிறை வேறும் வரையில் பிரிட்டிஷ் சம்பந்தத்தை விரும்புவது கஷ்டமான காரியமாகவே யிருக்கும். முஸ்லீம் பக்தகோடிகளுக்கு மதமே பெரிது. ஆண்டவனுக்கு விசுவாசங் காட்டுவதையே அவர்கள் முக்கியமாகக் கருதுகிறார்கள். யாருக்கு விசுவாசங் காட்டுவதென்று அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றாய்த்

தெரியும். முஸ்லீம்கள் ஒருவிதமாய் தங்கள் மனதைத் திடப்படுத்திக் கொண்டு இன்னது தான் செய்வதென்று தீர்மானித்து விட்டார்கள். பிரிட்டிஷ் மந்திரிகளும் பிரிட்டிஷ் ஜாதியாரும் உறுதிமொழிகளைக் காப்பாற்றுவதில்லையென்று முகம்மதியர்கள் பகிரங்கமாய்ச் சொல்லுகிறார்கள்.

அவர்களுடைய மனதில் படுவது அதுதான். 7 கோடி முஸ்லிம்களின் விருப்பத்தைக் கவர்ன்மெண்டார் கொஞ்சமும் மதிப்பதில்லையென்றால் அவர்கள் தான் என்ன செய்வார்கள்? இனி ராஜவிசுவாசம் எப்படிக் காட்டமுடியும்? இந்த சந்தர்ப்பத்தில் நமது முஸல்மான் சகோதரர்களுக்கு மற்ற இந்தியர்கள் செய்யவேண்டிய கடமை யொன்றுண்டு. முஸ்லீம் ஒற்றுமையைப் பற்றி நாம் வெகு காலமாய்ப் பேசிக்கொண்டு வந்திருக்கிறோம். அவர்களோடு ஒத்துழைத்து நமது நட்பைப் பிரத்தியட்சத்தில் காட்ட இப்போது சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. முஸ்லீம்களோடு ஒத்துழைத்து அவர்களுடைய சிநேகத்தையும் ப்ரீதியையும் அடைவது உத்தமமா அல்லது பிரிட்டிஷ் சம்பந்தத்தை வைத்துக்கொள்ள முயலுவதுதான் பெரிதாவென்று கேட்டால், முஸ்லீம்களின் நட்புத்தான் பெரிதென்று நான் சொல்லுவேன். ஒரு நியாயமான காரியத்தில், அது நியாயமாய் நடக்கும் வரையில், பூராவும் முஸ்லீம்களோடு ஒத்துழைத்தே ஆகவேண்டும். அப்படிச் செய்வதினால் இந்தியாவுக்குத் தீமை விளையாதென்பதும் நமக்குத் தெரியும். முகம்மதியர்கள் ஒருவிதமாய் முடிவு செய்துவிட்டார்கள். ஹிந்துக்களின் உதவியையும் அவர்கள் ஒற்றுக்கொள்ளத் தயாரா யிருக்கிறார்கள். ஒரு மனதாயும் ஒற்றுமையாயும்

ஹித்து முஸ்லிம்கள் அரண் கட்டிக்கொண்டு நின்று, ஐரோப்பாவிலுள்ள கிறிஸ்தவ ராஜ்யங்களோடு எதிர்த்துப் போராட வேண்டியதைத் தவிர வேறுவழியில்லை. இந்தியா ஆண்மைத்தன மற்றுக் கிடக்கிறதாயினும், தன் மதிப்பை இந்தியர் இழந்துவிட வில்லையென்பதை நாம் பிரத்தியட்சத்தில் காண்பித்துவிட வேண்டும். மதத்துக்காக உயிரை யிழக்க நாம் தயாராயிருக்கிறோம், மதத்தைக் காப்பாற்றுவதே நமது முக்கியமான லட்சியம்.

பஞ்சாப் சம்பவங்கள்.

1857-ம் வருஷத்தில் நடந்த சிப்பாய்க் கலகத்தின் போது இந்தியர் பட்ட துன்பத்தைக் காட்டிலும் அதிகமாய் பஞ்சாப் பெருவதையின் மூலமாகத் துன்பப்படுகிறார்கள். நம் மனம் இவ்வளவு தூரம் என்றைக்கும் புண்பட்டதில்லை. ரௌலட் சட்டம்செய்யப்பட்ட காலத்தில் நம்மனம் தவித்தது போல் வேறு எக்காலத்திலும் தவித்ததில்லை. இந்து தேச சரித்திரத்தில் இந்த ரௌலட் சட்டத்தைப் போன்ற கொடிய சட்டம் என்றைக்கும் செய்யப்பட்டதில்லை. பிரிட்டிஷ் ஜாதியார் நமக்குக் கடைசியாய் நியாயஞ் செய்யத் தவறிவிட்டார்கள். அவர்களிட மிருந்து நியாயம் பெறுவது சாத்தியமாகும்படி நாம் அனுஷ்டானத்தில் நடந்தே ஆக வேண்டும். பார்லிமெண்டும் சரி, ராஜப்பிரதிநிதியும் சரி, நமது உணர்ச்சியைக் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. பார்லிமெண்டில் நடந்த விவாதத்தின் தோரணையையும் இந்தியா மந்திரியின் காரியத்தையும் ராஜப்பிரதிநிதியின் செயல்களையும் கவனிக்கும்போது, நமக்கு நியாயம் வழங்க அவர்களுக் கிஷ்டமே கிடையாதென்று செம்மை

யாய் விளங்குகின்றது. ஆகையால் சென்னை மாகாணத் தலைவர்களுக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இக்கஷ்டத்திலிருந்து எப்படியாவது நாம் சமாளித்துக் கொள்ள வழி தேடவேண்டும். நமது மதிப்பையும் கௌரவத்தையும் நாம் காப்பாற்றிக்கொள்ள விரும்பினால் கவர்ன்மெண்டாருடன் நேசபாவமாய்ப் பழகுவதென்பது இனி முடியாத காரியம். ஒற்றுமையாமையைப் போன்ற அழகானதும் சிலாக்கியமானதும் பலனுண்டாகக் கூடியதுமான ஒரு தர்மத்தை நீங்கள் மேற்கொண்டு நடக்கும்படி நான் தைரியமாய் உங்களுக்கு யோசனை சொல்வேன்.

ஒழுங்கான முறைதான்.

ஒற்றுழையாமை ராஜாங்க ஒழுங்குக்கு விரோதமானதென்று சிலர் கருதுவதாகத் தெரிகிறது. இது ஒழுங்குத் தவறான தல்லவென்று (அன்கான்ஸ்டிட்யூஷனல் அல்லவென்று) நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன். ஒற்றுழையாமை கேவலம் ஒரு மதக்கொள்கையே யாகும். அது நியாயமான கொள்கை யென்பதையும் மறுக்க முடியாது. ஒவ்வொரு மனிதனுக்கும் அதைக் கையாள உரிமையுண்டு. பிரிட்டிஷ் ராஜாங்கத்தின் அமைப்பைப் பற்றிய ஒழுங்கைப் பரிசீலனை செய்தவர்கள் ஒரு கலகத்தைக்கூட ஒழுங்கென்றே (கான்ஸ்டிட்யூஷனல் என்றே) சொல்லுவார்கள். ஒரு பெரிய பிரிட்டிஷ் ராஜீய நிபுணர் அவ்வாறே சொல்லியுமிருக்கிறார். ஆனால் பலாத்காரமான முறைகளில் பிரவேசித்து அதன் மூலமாய் நியாயம் பெறுவதானால் அதில் எனக்கு இஷ்டமில்லை. அத்தகைய கலகம் ஒழுங்காயுமிராது;

பலாத்காரமாயும் முரட்டுத் தனமாயும் நடந்து கொள்வது ஐரோப்பிய தேசங்களுக்கே ஸகஜம். இந்தியாவில் அம்முறை கூடவே கூடாது. அது பயனுந் தராது. எனது சகோதரர் ஷவுகத் அலிக்கு பலாத்காரத்தில் நம்பிக்கையுண்டு. பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தோடு தைரியமாய்ச் சண்டையிட அவரிடத்தில் போதியவளவு வீரியமும் ஞானமும் இல்லாமல் போகவில்லை. உண்மையான யுத்தவீரரென்று அவரையே சொல்லலாம். ஆனால் என்னுடைய யோஜனையைக் கேட்டு அவரும் பலாத்காரமான முறைகளில் பிரவேசிப்பதில்லை யென்று எனக்கு ஸத்தியஞ் செய்து கொடுத்திருக்கிறார். ஒற்றுமையாமை தர்மத்தில் அவருக்கு நம்பிக்கை யுள்ளளவும் பலாத்காரத்தில் அவர் இறங்கவே மாட்டார். அதைக் கனவிலும் நினையார். இந்த நிமிஷம் வரையில் தமது வார்த்தையைக் காப்பாற்றியு மிருக்கிறார். பலாத்காரமான முறைகளில் அவர் இதுவரை பிரவேசித்ததே யில்லையென்று நான் சத்தியமாய்ச் சொல்லுவேன். அதே மாதிரி மற்ற இந்தியரும் ஏன் நடக்கக் கூடாது? ஷவுகத் அலியைவிட ஒரு சிறந்த ஸோல்ஜர் பிரிட்டிஷ் இந்தியாவிலு முண்டா? கத்தியை உருவக் காலம் வருமாகில் அவர் அதற்கு அஞ்சார். ஆனால் காட்டுக்கு ஓடுவதைத் தவிர எனக்கு வேறு வழி இராது. இந்தியர் என்றைக்குவாளை யுருவிப் போர்செய்யத் தொடங்குகிறார்களோ அன்றே எனது இந்திய வாழ்வு நிச்சயம் நசித்துப் போய்விடும். பலாத்காரமான முறைகளால் நியாயம் கிடைக்கும் வழியை இந்தியர் ஒருக்காலும் நாடமாட்டார்கள். இது இந்துதேச தர்மம். சுய நலத்தை வெறு

த்து, மிகுந்த தியாகம் செய்து அதன் பலனாக நியாயம் பெறுவதே இந்தியரின் பரம்பரையான தர்மம். அதையே யக்ஞம் என்றும் குர்பானியென்றும் நாம் அழைத்து வருகிறோம். அந்தக் கொள்கையைத் தான் நான் ஆதரிப்பேன். பலாத்காரத்தில் இறங்காமல் சாத்விகமாய் எதிர்த்து நிற்பதைப் போன்ற ஆயுதம் வேறெதுவும் கிடையாது. மகா பலசாலிகளின் ஆயுதம் அதுவே யாகும். அதுவே தைரியசாலிகளுக்கு ஒழுங்கான அடையாளம். பலாத்காரத்தை விட்டொழித்து எவன் போராடுகிறானோ அவனே பலவான். உயிரைத் திரணமாக நினைப்போரே பலசாலிகளாவர். இதுவே நான் உபதேசிக்கும் "பலாத்காரமற்ற ஒற்றுழையாமை" யாகும். பலாத்காரத்தில் நாம் பிரவேசிக்காமலிருக்கும் வரையில் ஒற்றுழையாமை தர்மம் ராஜாங்க ஒழுங்கை அனுசரித்ததாகவே யிருக்கும். அது ஒழுங்கு மீறியதாகாது. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் கீழ் எனக்கு வேலை பார்க்க இஷ்டமில்லை யென்று சொல்வது ஒழுங்கற்றதாகுமா? நமது அக்கிராசனாதிபதி தமக்குப் பட்டங்கள் வேண்டாமென்று சொல்லி அவற்றைத் திருப்பியனுப்பி விடுவதுதான் ஒழுங்கற்றதாகுமா? அல்லது வக்கீல்கள் தம் வேலையை விட்டு விட்டு கவர்ன்மெண்டாருடன் ஒற்றுழைக்க மறுப்பது ஒழுங்குத் தவறாகுமா? சர்க்கார் பள்ளிக்கூடங்களிலிருந்து தம்பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வந்து விடுவதை ஒழுங்குத் தவறென்று சொல்லிவிட முடியுமா! ஜட்ஜிகளும் பெரிய உத்தியோகஸ்தர்களும் ராஜிநாமாக் கொடுத்துவிடுவது ஒழுங்கான காரியமல்லவா? நமது விருப்பத்தையும் உணர்ச்சியையும் மதிக்காத ஒரு கவர்ன்மெண்டாருடன்

ஒற்றுழையாமலிருப்பது எப்படி ஒழுங்குத் தவறாகும்? இந்திய ஜாதியாரை அவமானப்படுத்தும் ஓர் கவர்ன்மெண்டின் கீழ்வேலை பார்க்க வேண்டி யிருக்கிறதே யென்று சொல்லி ஒரு போலீஸ்காரன் அவ்வேலையை விட்டுவிடுவது எவ்வாறு ஒழுங்குத் தவறாகும்? விவசாயிகள் வரி செலுத்த மறுத்து விடுவதும் ஒழுங்குத் தவறாகாது. இத்தனை காரியங்களையும் நான் அநுபோகத்தில் செய்து காட்டியிருக்கிறேன். யாரும் இதுவரையில் அதை ஒழுங்குத் தவறான தென்று சொன்னது கிடையாது. கெயிரா ஜில்லா விவசாயிகள், சென்ற வருஷத்தில் வரி செலுத்த மறுத்தபோது அவர்களோடு நான் ஒத்துழைத்து கடைசியாய் வெற்றி கிடைக்கச் செய்தது உங்களனைவருக்கும் ஞாபகமிருக்கும். இந்தியா பூராவும் அச்சமயம் என் காரியத்தை ஆதரித்தே நின்றது. ஆகையால் அத்தகைய காரியங்கள் முற்றிலும் ஒழுங்கானவையே யாகும். பயங் கொள்ளித்தனமாய் ஒரு தெரு வழியே வயிற்றால் ஊர்ந்து செல்வதுதான் உண்மையில் ஒழுங்குத் தவறாகும்; எத்தகைய அவமானத்தையும் சகித்துக் கொண்டு நமக்கொன்றுமே நோவில்லை போல் சும்மா யிருப்பதுதான் ஒழுங்குத்தவறாகும்; மத விஷயத்தில் செய்யப்பட்ட அநீதங்களைப் பொறுமையுடன் சகித்திருப்பது தான் ஒழுங்குத் தவறானதாகும். நமது உணர்ச்சியையும் லட்சியங்களையும் இஷ்டம் போல் மிதித்துத்தள்ளும் ஓர் அநீதமான கவர்ன்மெண்டுடன் ஒற்றுழைத்துக் கொண்டு சும்மாயிருப்பது தான் ஒழுங்குத் தவறாகும். கௌரவம் என்பது உங்களுக்குக் கொஞ்சமாவது இருக்கிற பக்ஷத்தில் உங்களுடைய உத்தமமான பரம்பரை தர்மத்தைப் பாது

காக்க வேண்டுமென்ற விருப்பம் உங்களுக்கிருக்கும் வரையில் ஒற்றுமையாமையை அனுஷ்டிக்காமலிருப்பது தான் ஒழுங்குத் தவறானதாகும். அநீதமானதும் கொடியதுமான ஒரு கவர்ன்மெண்டோடு ஒத்துழைப்பது ஒழுங்குத் தவறேயாகும். நான் கவர்ன்மெண்டுக்கு விரோதமானவனென்று என்னை யாரும் நினைத்து விடக்கூடாது. பிரிட்டிஷாரை நான் சத்துருக்களாக பாவிக்கவில்லை. அநீதத்துக்கே நான் சத்துரு. ஹம்பக்காய்ப் பேசுவோருக்கே நான் சத்துரு. நமது கவர்ன்மெண்டின் காரியங்களெல்லாம் ஹம்பக்கென்றே நான் சொல்லுவேன். கவர்ன்மெண்டின் காரியங்களெல்லாம் அநீதமானவை யென்றே நான் சொல்லுவேன். அத்தகைய நிலைமை தேசத்தில் இருந்துவரும் வரையில் என்னை ஒரு வண்ணமாகச் சத்துருவாகவே பாவிக்கவேண்டும். இதை நான் ஸத்தியமாகச் சொல்லுவேன். அம்ருதசரஸ் காங்கிரஸில் உங்களுடைய ஒற்றுமைப்பு கவர்ன்மெண்டுக்கின்றியமையாததென்று நான் சொன்னது வாஸ்தவந்தான்; ஆனால் பஞ்சாப் விஷயத்திலும் கிலாபத் பிரச்னையிலும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நியாயம் செய்வார்களென்று நான் அச்சமயம் நம்பியிருந்தேன். ஆனால் இப்பொழுது நிலைமை என்ன? அது முற்றிலும் மாறி விட்டது. பயனற்ற எதிர்ப்பினால் இனி நன்மையடைய முடியாது. சட்ட சபையில் புகுந்து எதிர்த்துப் பேசிக் கொண்டிருப்பதனால் பயனுண்டாய் விடாது. ஒற்றுமையாமையே இச்சந்தர்ப்பத்தில் உத்தமம். எப்படிப்பட்ட கவர்ன்மெண்டும் அதற்குப் பணிந்தே ஆகவேண்டும். இந்த கவர்ன்மெண்டுடன் இனி நாம் ஒற்றுமைப்பதென்பது முடியாத காரியம். ஒற்றுமைக்கவே

கூடாது. நமது சாஸ்திரங்கள் என்ன சொல்லுகின்றன? அபிப்பிராயக்காரர்களோடும் அசத்திய வாதிகளோடும் ஒற்றுமைக்க வேண்டாமென்று அவை ஆணையிடுகின்றன. ஒற்றுமையாமை தான் நாம் இப்போது செய்யவேண்டிய கடமை. நமது கௌரவத்தைக் கவர்ன்மெண்டார் கொள்ளை யிட்டுச் செல்லுகிறார்கள்.

விசேஷ காங்கிரஸ்.

விசேஷ காங்கிரஸின் முடிவை எதிர் பார்த்து நிற்கும்படி சிலர் யோசனை சொல்லுகிறார்கள். காங்கிரஸே தேச மகா சபையென்பதில் அபிப்பிராய பேதமிராது. ஜனங்களின் வாக்குறுதி தான் அச்சபையில் பிரதி பலிக்கின்றது. சொந்தத்தில் நான் மட்டும் காங்கிரஸின் உத்தரவை எதிர் பார்த்து நிற்பதில் எனக்கு ஆட்சேபமேயில்லை. ஆனால் முஸ்லீம்களின் கௌரவத்தை நாம் காப்பாற்றியே ஆக வேண்டும்; காத்துக் கொண்டிருக்க இது சமயமல்ல. மனச்சாட்சியை மதித்து நடக்க வேண்டிய காலம் இது. முஸ்லீம்கள் தங்கள் வார்த்தைப்படி நடந்தே ஆகவேண்டும். மனச்சாட்சிக்கு விரோதமாய் அவர்கள் நடக்கமுடியாது. விசேஷ காங்கிரஸில் முஸ்லீம்களுக்கு விரோதமாய் முடிவு செய்யப்பட்டால் கூட தன்னந்தனியே நின்று எனது முஸல்மான் சகோதரர்களைச் சண்டையிடும்படியே நான் சொல்வேன். எனது முகம்மதிய சகோதரர்கள் காங்கிரஸுக்குக் கூட்டமாகச்சென்று இஷ்டமானால் முழுந்தாளிட்டு ஒற்றுமையாமைத் தீர்மானத்தை ஒப்புக் கொள்ளும்படிச் செய்யட்டும். ஆனால் விசேஷ காங்கிரஸின் தீர்மானத்தை எதிர்

பார்த்துக் கொண்டு சும்மாயிருப்பதென்பது முடியாதகாரியம். பலாத்காரமற்ற ஒற்றுழையாமையை எனது மூஸல்மான் சகோதரர்கள் ஏற்கெனவே ஒப்புக் கொண்டு விட்டார்கள். ஒற்றுழையாமை தர்மம் மகா பரிசுத்தமானது. ஆகையால் நான் காத்திருக்க முடியாது. காரியத்திலேயே செய்து காட்டவேண்டும். காங்கிரஸூம் வேறு விதமான முடிவுக்கு வரமுடியாது. ஒரு திடமான அபிப்பிராயத்துடன் ஒவ்வொருவரும் காங்கிரஸூக்குப் போய் விடுவாரானல், அதுவே காங்கிரஸின் முடிவான தீர்மானமென்று நான் தைரியமாய் முற்கூட்டிச் சொல்லிவிடலாம். திடமான அபிப்பிராயமுள்ளவர்கள் அனுவசியமாய்க் காத்திருக்கத் தேவையில்லை. காத்திருக்கக்கூடாது. இல்லாவிடில் அது பாவமாகும். உங்களைச் சும்மா காத்திருக்கும்படி காங்கிரஸ் கேட்கவில்லை. காரியத்தில் வேலையை ஆரம்பிக்கும்படியே காங்கிரஸ் கட்டளையிடுகின்றது.

பெற்றோர்களுக்கு புத்திமதி.

சர்க்கார் பள்ளிக்கூடங்களிலும் சர்க்கார் காலேஜ்களிலும் வாசித்துவருகிற மாணவர்களை வீட்டுக் கழைத்துவிடவேண்டுமென்றும் நான் சொல்வேன். முகம்மதியர்களுக்கு வாஸ்தவமாய் இது விஷயத்தில் ஒரு பலமான உணர்ச்சி எற்பட்டிருக்கிறது. பெற்றோர்கள் தம் பிள்ளைகளை சர்க்கார் பள்ளிகளில் இனி வாசிக்கவிடக்கூடாது. கவர்ன்மெண்டினிடத்தில், நமக்கு நம்பிக்கை யில்லாதபோது, கவர்ன்மெண்டால் நடத்தப்படும், பள்ளிக்கூடங்களுக்கு நமது பிள்ளைகளை அனுப்புவதில் அர்த்தமே யிராது. வேண்டிய

வளவு குமாஸ்தாக்களும் சர்க்காருக்கு வேண்டிய சேவகர்களும் தயாரிப்பதற்காகவே சர்க்கார் பல பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்திருக்கிறார்களென்று நினைக்கிறேன். ஆகையால் அப்பள்ளிகள் யாவும் குமாஸ்தாக்கள் தயார் பண்ணும் தொழிற் சாலைகளே யாகும். அத்தகைய தொழிற்சாலை எனக்கு வேண்டாம். ஒற்றுமையாமையில் நம்பிக்கையிருந்தால் சர்க்கார் பள்ளிக்கூடங்களுக்கு யாரும் தம் பிள்ளைகளை அனுப்ப மாட்டார்கள்.

பட்டதாரிகள்.

கௌரவப் பட்டதாரிகள் தம் பட்டங்களைத் திருப்பி யனுப்பி விடவேண்டும். கவர்ன்மெண்டுக்கு அவர்கள் ஆதரவாயிருக்கக்கூடாது. கவர்ன்மெண்டார் எப்பொழுது இத்தேசத்தின் கௌரவத்தைக் காப்பாற்றத் தவறி விட்டார்களோ, பட்டதாரிகள் தம் கௌரவத்தைப் பெயருக்கு வைத்துக் கொண்டிருப்பதில் அர்த்தமேயிராது. இந்தக் கவர்ன்மெண்டாரிடமிருந்து நமக்கு நியாயம் கிடைக்காது. பட்டதாரிகள் தான் தேசத்தின் கௌரவத்துக்கு டிரஸ்டிகளாவார்கள். தேசத்தின் கௌரவத்தைக் காப்பாற்றாத ஒரு கவர்ன்மெண்டால் அளிக்கப்பட்ட பட்டங்களைத் திருப்பியனுப்பி விடுவதே சிலாக்கியமாயிருக்கும். இந்த அற்பக்கடமையை அவர்கள் செய்யத் தவறி விட்டால் ஒற்றுமையாமை நிகழ்ச்சியில் அவர்கள் ஒருக்காலும் வெற்றிபெற முடியாது. பிரெஞ்சுக்காரர்கள் ராஜியப் புரட்சியுண்டு பண்ணிக் கடைசியாய் எப்படி வெற்றி யடைந்தார்களோ அதுபோல் ஒற்றுமையாமை நிகழ்ச்சியால் நமக்கும் வெற்றி

கிடைக்கும்படி நாம் வேலை செய்ய வேண்டும். நிதானமாயும் அமைதியாயும் முற்போக்கு ஏற்படவேண்டு மென்பது தான் எனது கொள்கையாகும். குழப்பமான நிலைமைதான் தற்சமயம் தேசத்தில் ஏற்பட்டிருக்கிறது. அதையே கவர்ன்மெண்டார் சமாதானம் என்கிறார்கள். ஒழுங்கு மீறிய காரியங்களைக் கவர்ன்மெண்டார் செய்து வரும்போது குழப்பம் ஏற்படாமல் எப்படியிருக்க முடியும்? தற்போதுள்ள நிலைமையைக் குழப்ப மென்றே நான் சொல்லுவேன். நிதானமாய் அதர்மம் நடந்து வருகிறது. நியாயம் வேண்டுமென்றே நாம் கேட்கிறோம். அதர்மம் தொலைய வேண்டுமென்பது தான் நமது விருப்பம். சமாதான முற்போக்கையேநாம்நாடிநிற்கின்றோம். ஒற்றுழையாமை தர்மத்தைப்போல் அழகானதும் பயன் தரத்தக்கதுமான தர்மம் வேறு கிடையாது. கவர்ன்மெண்டார் நெறிதவறி, அநீதமாயும் அஸத்தியமாயும் காரியங்கள் செய்துவருகிறார்களென்பதை நீங்கள் உணராமலிருக்கலாம்; ஒவ்வொரு வார்த்தையும் அளந்தே தான் பேசுகிறேன். சென்ற 13-வருஷங்களாய் நான் ஒற்றுழையாமை தர்மத்தை அனுஷ்டித்து வந்திருக்கிறேன். எனக்கு யாரிடத்திலும் கோபம் கிடையாது. பிரிட்டிஷாரிடத்தில் எனக்கு நேசமுண்டு. அவர்களுடைய சிநேகம் எனக்குக் கண்டிப்பாய் வேண்டும். ஆனால் சிற்சில நிபந்தனைகளுக்குட்பட்டே அந்த நட்பை நான் நாடுகிறேன்; சம அந்தஸ்து நமக்குக் கொடுக்கப்பட்டாலன்றி அந்த சிநேகம் நமக்குப் பயன் தராது. சம அந்தஸ்து நமக்குப் பூராவும் கிடைத்தாலன்றி அவர்களுடைய சிநேகம் எனக்கு வேண்டியதில்லை. நமது காரியங்களின் பலனாக ஓரளவு அமைதிக்குறைவு

ஏற்பட்டு குழப்பம் உண்டானாலுங்கூட அதனால் பாதக மில்லை. அதர்மத்தையும் அநீதத்தையும்விட அமைதிக் குறைவு உத்தமமென்றே சொல்லுவேன். என்னுடைய காரியங்களால் தேசத்துக்கு நன்மையே யொழியத் தீமை ஏற்படாது. மிஸ்டர் மான்டேகு அதை உணரா விட்டாலும் அவருக்குப்பின் வருவோராவது எனக்கு நன்றி பாராட்டுவார்களென்று நான் உறுதியாய் நம்புகிறேன்

முடிவுரை.

இம்மதப் போரை நடத்தும்படி நான் உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். வீண் சொப்பனக்காரனென்று என்னை நினைக்கக்கூடாது நான் சொப்பனங் காணவில்லை. நான் மகாத்மாவுமல்ல, யோகீஸ்வரருமல்ல. சாதாரண ஜனங்களைப்போல் நானும் ஒருவன். மண்ணுக்கு மண்ணுப் நசிக்கக்கூடிய ஓர் சாமான்ய மனிதனாகவே என்னைக் கருதவேண்டும். ஒரு குடியானவனைவிட நான் எவ்விதத்திலும் மேற்பட்டவனல்ல. சாதாரண மனிதர்களைப் போல் என்னிடத்திலும் சில குறைகள் இருக்கலாம். ஆனால் உலகானுபவம் எனக்கு வேண்டியவளவு இருக்கிறது. உலகத்தின் போக்கை நான் நன்றாய் அறிந்துவிட்டேன். மஹத்தான கஷ்டங்களுக்கு நான் உள்ளாயிருக்கிறேன். ஹிந்து தர்மத்தின் மர்மங்களை நான் செம்மையாய் அறிந்திருக்கிறேன். எனது அநுபோகத்தைக் கொண்டே நான் இவ்வளவு தூரம் பேசுகிறேன். ஒற்றுழையாமையை நாம் ஒவ்வொருவரும் அனுஷ்டிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். முரட்டு பலத்திலும் துப்பாக்கிப் பிரயோகத்திலுந்தான்

ஐரோப்பியருக்கு நம்பிக்கை. ஆனால் இந்தியராகிய நாம் கத்தியைத் தொடக்கூடாது. தியாகத்தின் மூலமாகவே நாம் வெற்றியடைய வேண்டும். கஷ்டப்பட நாம் தயாராயிருக்க வேண்டும். கஷ்டப்படவே நாம் தயாராயில்லாத போது கத்தியைத் தாங்கி எங்ஙனம் போர் செய்ய முடியும்? இதை நன்கு உணர்ந்துதான் இந்த எனது யோசனையை மிஸ்டர் ஷவுகத் அலி ஏற்றுக்கொண்டிருக்கிறார். மகாயுத்தத்தின்போது இங்கிலாந்திலுள்ளவர்கள் எவ்வளவு தூரம் தியாகம் செய்தார்களென்பதை நாம் ஒவ்வொருவரும் அறிவோம். அவர்களைப்போல் நாமும் நமது தேசத்துக்காகத் தியாகம் செய்யாமல் முடியாது. எவ்விதமான தியாகத்தையும் செய்யத் தயாராயுள்ள ஒரு தேசத்தாரோடு நாம் போராட வேண்டியிருக்கிறது. ஆகையால் தியாகம் செய்யாமல் நாம் காரியத்தைச் சாதித்துக் கொள்ளமுடியாது. தென்னாப்பிரிக்கா போயர்கள் ஒற்றுமையாமல் நின்று, விசேஷ தியாகம் செய்து, கடைசியாய்த் தங்கள் கட்சியை நிறைவேற்றிக்கொண்டார்கள். அதையெல்லாம் நான் நேரில் பார்த்துக் கொண்டுதானிருந்தேன். பரித்தியாகத்துக்கு நாம் தயாராயிருக்க வேண்டும். எவ்வித கஷ்டத்தையும் எனது தேசத்தார் சகித்துக் கொள்ளவேண்டும். பரித்தியாகம் செய்யாமல் நாம் எச்சண்டையும் போட முடியாது. ஆனால் பலாத்காரத்தில் மட்டும் இறங்கி விடக்கூடாது. உங்களுக்கும் உங்கள் தலைவர்களுக்கும் கடவுள் நல்லபுத்தி கொடுத்து தைரியத்துடனும் விவேகமாயும் ஒற்றுமையாயும் ஜனங்களுக்கு அவர்கள் வழிகாட்டியிருக்கும்படி அனுக்கிரகிப்பாராக. நேரான வழியை நான் உங்களுக்குச் சொல்லி

விட்டேன். அதைக் கையாள உங்களுக்கு பாத்திய முண்டென்ற எண்ணத்தை ஈஸ்வரன் உண்டு பண்ணுவாராக. நான் சொல்லும் வழி கஷ்டமாகத்தானிருக்கும். ஆனால் தியாகபுத்தி இருந்தால் அது சுலபமாகவே யிருக்கும்.

"The ideal, after all, is truer than the real; for the ideal is the eternal element in perishable things."

Amieal

இனிச் செய்ய வேண்டியது.

கனம் மாளவியா இந்தியாவின் தொழில் விஷயமாக, பூர்வம் முதற்கொண்டு பிரத்தியேகமாகக் கவர்ன்மெண்டாருக்கு எடுத்துத் தெரிவித்தார். யாது பயன் விளைந்ததோ, நம் பாரதபூமி எவ்வளவு செழிப்புற்றிருக்கிறதோ, எல்லாம் அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சமாயிருக்கிறது.

தற்காலம் இந்தியத்தொழில் — வியாபாரம் — எப்படியிருக்கிற தென்றால் அடிமரத்தை விட்டு நுனி மரத்தைப் பிடித்துத் தப்பிக்க வழி பார்ப்பது போலிருக்கிறது. மகாத்மா காந்தி சொல்வதுபோல சர்வசக்தியும், நம்மிடம் தான் இருக்கிறது. நாம் அதனை நினைப்பதுமில்லை. சிந்திப்பதுமில்லை. ஒற்றுமைப்படுவது மில்லை. "மாணவன் தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி யென் செய்வர்" என்ற ஒரு பழமொழியுண்டு. சாருண்ய கவர்ன்மெண்டார் ஒரு தீமையும் செய்யவில்லை. நாம் நடந்து கொள்ள வேண்டிய விதமாய் நடந்துகொண்டால் அவர்கள் என் நமக்கேற்ற வாறு செய்யமாட்டார்கள். அந்த வல்லமை பொது ஜன ஐக்கியத்தாலன்றி வேறில்லை. நன்மையானாலும் தீமையானாலும் ஒற்றுமையாயிருக்க வேண்டியது எத்தனை நலத்தை யளிக்குமெனச் சொல்லவும் வேண்டுமா?

இதற்காக நாம் செய்யவேண்டியது யாது எனச் சிந்திக்க வேண்டும். தற்காலத்தில் சிலர் தோன்றி, பொது நலத்துக்குப் பாடுபடுவதாகச் சொல்லிக்கொண்டு, தங்கள்

பெயர் தொனிக்க, கௌரவத்தைத் தேடியவண்ண மிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தங்களையே நம்ப வேண்டும். ஒவ்வொரு மனிதரிடமும் அபூர்வ சக்தி இருக்கிறது. இருக்கிறதென்பதை பகவத்பக்தி பூர்வமாக நம்ப வேண்டும்.

காட்டில் மரை என்ற ஒரு ஜாதிமான் வாசஞ்செய்கிறது. அதன் வாலின் பக்கமிருந்து பரிமளமுள்ள வாசனையுண்டாகிறது. தென்றல் காற்று வீசும்போது ஒருநாள் வடதிசை நோக்கி நின்றுகொண்டிருந்தது. அப்பொழுது அந்த வாசனையானது தென்றலோடு கலந்துவர அதனைக் கிரகித்த அந்த மரைமான் இந்த சுகந்த நறுமணம் தெற்கே இருந்து வருகிறதென்று நினைத்து, தெற்கே ஓடிற்று. மான் வேகத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா! வெகு வேகமாய் ஓடி ஒரு பக்கத்தில் நின்றது. அப்பொழுதும் மற்றோர் பக்கமிருந்து அந்த வாசனை வருகிறதா யெண்ணிப் பின்னும் ஒரு பக்கமாக ஓடிற்று. இவ்விதம் இக்குமக்கும் ஓடி அலைந்து கஷ்டப்பட்டு கால்கள் ஓய்ந்து களைப்புற்று ஒரு பக்கத்தில் உடலை வளைத்துக் கொண்டு படுத்தது. ஆயாசந் தீர்ந்ததும் அந்த சுகந்தம் தன்னிடத்திலிருந்து தான் உண்டாகிறதாயறிந்து, சுகித்திருந்ததாக ஒரு கதை சொல்லுவதுண்டு. அது போல நம்முடைய பலத்தை—கடவுள் அபூர்வமாய்க் கொடுத்திருக்கிற சக்தியை நம்பாத வரை மேற்கண்ட கதையில் சொல்லுவதுபோல, இன்னும் எவ்வளவு காலம் கஷ்டப்படும்படி வருமோ. இப்பொழுதுதான் பொது ஜனங்கள் சிந்திக்க ஆரம்பித்தார்கள். ஆயினும் என்ன; ஒரு பெரிய கட்டடத்தைக் கட்டுமுன் ஒரு இஞ்சினீர் வேலை செய்ய வேண்டியதாயிருக்கிறது.

அதாவது முதலில் பொது நன்மைக்கான வழியில் நன்ருய்ச் சிந்திக்க வேண்டுவதே. நமது முன்னேற்றத் துக்கு பாதகமா யிருப்பதென்ன வென்பதை ஆராயவேண் டும். வழியில் அநேக பாம்புகளும் பேய்களும் படுத்திருக் கின்றன. அவை யாதென்ருலோ, ஜாதிக்கட்டு, பொருமை இவ்விரண்டுமே. ஒரு வகுப்பில் குலாபிமான மதிகம். இன் ெனாருவரிடம் ஜாதி அபிமான மதிகம். மற்று மொருவர் தன் ஜாதிகுலத்தை வெறுத்து மற்ெருன்றை விரும்புகிருர். இப்படிக் கிளைகளாய் எண்ணுக் கடங்காத இடைஞ்சல்க ளிருக்கின்றன இவைகளை அகற்றும் விதம் சுலபமே. ஆனல் ஜாதிகுலத்தைத் தவிர்த்திருக்க வேண்டு மென்பதல்ல. கட்டுகள் அளவுக்கு மிஞ்சி நெருங்கியிருந்தால் அவைகளைத் தளர்த்தி சீர்திருத்திவிட வேண்டும்.

பொது ஜனங்களுக்கு நன்மை யெல்லாம் வியாபாரி களால்தான் நடக்க வேண்டுமென்றி, கவர்ன்மெண்டாரை யெதிர்பார்ப்பதில் பயனிராது. ஏனென்ருல் கவர்ன்மெண் டாரும் ஜனங்களை—பெரிய வர்த்தகர்களை ஆதரித்து தான் ராஜரீகம் நடத்த வேண்டும்.

பிள்ளைக்குத் தக்க வயது வந்து விட்டால், நடையுடை யால் பிதா தெரிந்து கொண்டு அதற்கேற்றவாறு நடந்து கொள்வார். பிள்ளை தன் பிதாவை யெதிர்க்க வேண்டிய அவசிய மில்லை. ஒரு குடும்ப நிர்வாகமும் ஒன்று. ஒரு ராஜரீகமும் ஒன்று. ஒரு பெரிய குடும்பத் தலைவனுக் குள்ள கவலையும், ஒரு அரசனுக்குள்ள கவலையுமொன்று.

வியாபாரம் செய்வதிலும், தொழில் நடத்துவதிலும் ஜாதிவித்தியாசம் பாராட்டுவதில்லை. இது உலகமறிந்த ரகஸ்யம். இந்த வியாபாரிகள் ஒற்றுமைப்பட்டு பொது நலத்துக்காகப் பாடுபட்டால் என் ஒரு தேசம் செழிக்காது.

எப்பொழுதும் தன்னை சந்தேகத்திலேயே வைத்துக் கொள்ளக்கூடாது. மெத்தைக்குச் செல்லுகிறவன் ஒவ்வொரு படியாய் மேல் நோக்கிச் செல்லுகிறான். அவன் திரும்பிப் பார்த்துக் கொண்டு போக வேண்டுமென்ற அவசியமில்லை. திரும்பி ஒருக்கால் பார்த்தால் திகிலுண்டாகும். பயம் தோன்றும்; தானே தருவித்துக் கொள்ளும் துன்பம்; தன் மனச்சாட்சிக்கு சரியாய் நடந்து கொள்ளவேண்டும்.

இந்தியாவின் விடுதலைக்கு வியாபாரிகளின் ஆதரவு மிகுதியும் வேண்டும். வியாபாரத்தில் ஒழுங்கில்லாமல் சீரழிந்திருக்கிறது.

நமது தேசத்தில் இன்னதைச் செய்யக்கூடாதென்று மற்றொரு தேசத்தில் சட்டம் செய்துக் கொள்ளுகிறார்கள். இது எப்படியிருக்கிற தென்றால் நமது வீட்டில் கத்திரிக்காய் சமையல் செய்யக் கூடாதென்று அடுத்த வீட்டில் சட்டம் செய்தது போலிருக்கிறது. இப்படி யெல்லாம் நாம் ஏமாந்து பரிதாப நிலையில் நிற்கவேண்டிய தாயிருக்கிறது.

நமக்குள் ஒற்றுமை யில்லாததால் தான் அன்னிய நாட்டாரும், பலதேசப் பொருள்களும் வர நேர்ந்தது. இந்தியா தேசத்தில் சகலதேசப் பொருள்களும் வந்து குவிந்து அதற்கு நமது செல்வமெல்லாம் பரிபோய்க் கொண்டிருக்கின்றன. இந்தியா மாத்திரம் இங்கிலீஷ்காரர்களுக்குத்

தாய் நாடாயிருக்குமானால் இந்த பரிதாப நிலையில் இருக்குமா? எவ்வளவோ உன்னத நிலையில் ஓங்கி சிறப்புடையதாய் இதர தேசங்களை இந்தியாவுக்குட்படுத்திபிருக்கும்.

வியாபாரிகள் ஒன்றுகூடி சங்கம் சங்கமாயிருந்து அந்த ஊரின் க்ஷேமலாபத்தை நாடி. கவர்ன்மெண்டாரின் ஆதரவுக்குட் பட்டு விர்த்தி செய்து வந்தால் அதனால் ஏற்படும் நன்மையை ஒரளவிட்டுச் சொல்லமுடியாது.

இம்மாதிரியே ஒவ்வொரு தேசமும் நல்ல நிலைமைக்கு வந்திருக்கிறது. வியாபாரத்துறை யொன்றில் தான் ஜாதி, குலம், ஆசாரம் முதலியன நீங்கி ஒற்றுமைப் படுகிறது. சாதாரணமாய் ஒரு சந்தையில்கூட ஒருங்கே பல ஜாதியார் கூடி வியாபாரம் செய்தாலும் வித்தியாசம் நினைப்பதே கிடையாது.

வியாபாரிகளுக்கு விடாமுயற்சி யுண்டு. செல்வத்தை விர்த்தி செய்வதில் ஊக்கமதிகம். பொது ஜனங்களுக்குப் பாடுபடுவது, பெரிய தர்மமாகும். அவர்கள் பலவிதமாக உதவி செய்யலாம்.

மிராசுதார்களெல்லாம் ஒவ்வொரு தாலுக்காவிலும் சங்கமாயச் சேரவேண்டும், தம் தம் குறைகளை அவர்களே நிவர்த்தி செய்து கொள்ளவேண்டும். தன் கையே தனக்கு உதவியன்றி அயலார் கை சமயத்துக்கு உதவாது. பாடுபட்டால் பலன் நிச்சயம். வேலை—தொழில்—செய்யும் போது பலனை—லாபத்தை—எதிர்பார்த்திருக்க வேண்டிய அவசியமே யில்லை. பாடுபடுவது நிச்சயமாயின் பலன் கிடைப்பதும் நிச்சயம். பொறுமையைக் கொலை செய்து விடுங்கள். கௌரவத்தைச் சுட்டு விடுங்கள். இவையிரண்டும் நம்மனதைச் சுற்றியிருக்கும் கொடிகள்.

இவ்வுலகம் யாருக்கும் சொந்தமில்லாது போனாலும் நாம் நடந்து கொள்ள வேண்டியதற்குக் கடவுள் நல்லறிவைக் கொடுத்திருக்கிறார்.

மனதை நல்லவழியில் உற்சாகமாயும் சந்தோஷமாயும் வைத்துக் கொள்ளுங்கள். துன்பத்தையும் கஷ்டத்தையும் ஒரு பொருட்டாய் நினைத்து சட்டை செய்யாதீர்கள். கடவுள் எங்கும் நிறைந்தவர் என்பது சர்வமத சம்மதமானது. இதை ஒவ்வொருவரும் மனப்பூர்வமாய் ஆதரிப்பதாயின் வியாபகமாய் விளங்கும் கடவுளின் சக்தி ஒருபாகம் ஒரு அணுவளவேனும் ஒவ்வொரு மனிதரிடத்திலும் இல்லையென்று சொல்ல முடியுமா? முடியவே முடியாது. நல்லவனாவதும் கெட்டவனாவதும் அவனவன் தன் குணத்தாலேயன்றி வேறல்ல. தன்னையும் தனக்குள்ள அபார சக்தியையும் மறந்ததால் தான் பிறர் புத்திக்கும் யோசனைக்கும் எதிர்பார்த்தவர்களா யிருக்கிறோம்.

ஒரு தேசத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டுவரக் கூடியது, கைத்தொழிலும் வியாபாரமும்.

இந்தக் கைத்தொழிலையும் வியாபாரத்தையும் ஒழுங்காய்—லிபமபாய்—ஒரு நல்வழியைப் பின்பற்றிச் செய்ய வேண்டும். புதுவழியைக் கண்டுபிடிக்க வேண்டும்.

அந்தப் புதுவழி எல்லோருக்கும் பேருபகாரமாயிருக்க வேண்டும்.

The store is the raw material of which service is the product—sales the by-product—energy and initiative the process.

ப ழ ய வ ழி.

பாட்டன் முப்பாட்டன் அல்லது பிதா செய்தமாதிரியே வியாபாரத்தை நடத்த வேண்டுமென்ற தலைவிதியென நினைத்து *ஆடுகளைப் போல் முன்னேறினதைப் பின்பற்றிச் செல்கிறது சிலருடைய வழக்கமாயிருக்கிறது. இந்தப் பண்டைய வழக்கத்தை இனியாவது மாற்றமாட்டார்களா. காலதேச வர்த்தமானத்தைச் சீர்தூக்கி உலக நிலையறிந்து நடக்கமாட்டார்களா? மூடத்தனமான கஞ்சத்தனத்தை ஒழிக்க மாட்டார்களா? ஈதலுடைமை நாகரிகமாக—தேக சுகத்தின் பொருட்டாவது—அறியமாட்டார்களா? ஐயோ! இன்னும் சிலர் லட்சக்கணக்காய் பணத்தைச் சேர்த்து பார்ப்போர் கேட்போர் மனம் சலிக்க, தானும் உபயோகிக்காமல், தர்மமும் செய்யாமல் பூதம்போல் காப்பதில் என்ன சுகிர்தமோ தெரியவில்லை. பரந்த இந்த உலகத்தை விழித்துப் பாருங்கள். ஒவ்வொரு நாளும் மேலான பதவியை நாடுதற்கு வழி தேட வேண்டாமா? நமது இனிவரும் சந்ததியார் நம்மைப் போல் சுதந்தரமற்றுப் பல வழிகளிலும் துன்பப்படாமல் நல்ல வழியைத் தேட வேண்டாமா?

தன் மட்டில் திருப்தி யடைதல் என்பதை இனியாவது நீக்கவேண்டும். பரோபகாரத் தன்மை ஒவ்வொரு மோன் மனதிலும் உதிக்கட்டும்.

---

*ஒரு கூட்டமான ஆடுகளில் முதலில் போவதைப் பின்பற்றியே மற்றவை செல்லும்.

புதியவழி

வியாபாரத்தை நடத்துவதற்குப் புதுவழியாயும்எல்லோ ரும் ஏற்கத் தக்கதாயும் கண்டு கொள்ள வேண்டும். பெரிய வியாபார ஸ்தலங்களைச் சுற்றிப் பார்க்க வேண்டும். அப்பொழுது மனோவிலாசம் உண்டாகும். இக்காரணத் தைக் கண்டு தான் முன்னோர்கள் தீர்த்த யாத்திரை, க்ஷேத் திரயாத்திரை செய்ய வேண்டுமென்று ஏற்படுத்தினார்கள் போலும். கிணற்றுத் தவளை, கிணற்றைவிட மேலான இடம் கிடையாதென்று நினைத்துக் கொள்ளுவது போல சில வியா பாரிகளும் தாம் செய்யும் தொழில்தான் மிகப் பெரிதென நினைந்து அகமகிழ்ந்து கொள்ளுகிறார்கள்.

சில வியாபாரிகளை தேச யாத்திரை செய்யும்படி சொன்னால் 'வீண் செலவு, நமக்கெதற்கு, எந்தா கடவுள் அறைவயிற்றுக் கஞ்சி கொடுத்திருக்கிறார்; அதில் திருப்தி யாயிருக்கிறோம்' என்று சொல்லுகிறார்கள். இதற்குக் காரணம் படிப்பின் குறைவைக் காட்டுகின்றது. போது மான கல்வி அவசிய மென்பதொன்று. ஆழ்ந்த அறிவும் உதாரகுணமும் வேண்டும்.

மேலும் வியாபாரிகள் தம்புதல்வர்களுக்குத் தக்க கல்வி அறிவைபூட்டி இஷ்டமான வியாபார ஸ்தலங்களைச் சுற்றிப் பார்க்க சுதந்தரங் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு வியா பாரத் துறையில் அனுபவம் உண்டாகும்படி ஆங்காங்கு சிலகாலம் தங்கியிருக்கும்படிச்செய்யவேண்டும். ஊக்கத்தைக்

கொடுக்கத்தக்க — தொழி லபிவிர்த்திக்கான — நூல்களைப் படிக்கச் செய்து அவர்கள் அபிப்பிராயத்தை யறிய வேண்டும். அவர்கள் படிப்பு தங்நலத்துக்கான தாயிருக்கக் கூடாது. பெரிதும் பொது நன்மைக்கான வழியிலிருக்க வேண்டும், அறியும் வகையில் எல்லோருக்கும் ஒரே தன்மை யான ஞானம் பொதுவிலிருந்தாலும், உலோகானுபவத்தில் மனிதருக்குத் தனித்தனி புத்தி நுட்பம் வேறு. இதை மானவதர்மமென்று பெரியோர் சொல்வர். பிறக்கும் பிள்ளை களெல்லாம் ஒரேமாதிரி தங்கள் பிதாவைப்போல் நடக்கு மென்று சொல்வதற்கில்லை. அவரவர் மனோ தர்மத்துக்குத் தக்கவாறு தான் நடப்பார்கள். பிள்ளைகள் நன்னெறியில் நடக்கும் வகை அடக்கி யாளவேண்டும். அவர்களுக்கு கல் வியால் சுயபுத்தியும், மனோதர்மமும் உண்டாய் விட்டால் சுதந்தர முண்டாய் விடும். அவரவர் மனோதர்மம்—சக்திக் குத் தக்கவாறு இஷ்டமான தொழிலில் பிரவேசிப்பார்கள் இதுவே சரியான வழி. இவ்வுலகில் எதைத் தொழில், வியாபார மென்றும், அல்லவென்றும் சொல்ல முடியும்? முதற் பிள்ளை மளிகை வியாபாரம், இரண்டாவது பிள்ளை ஜவுளி வியாபாரம், மூன்றுமவன் வக்கீல் தொழில், நாலா மவன் பயிர்த்தொழில், ஐந்தாமவன் வைத்தியம், இவை யெல்லாம் வியாபாரமன்றி வேறென்னவென்று சொல்லக் கூடும். இவ்வுலக விவகாரங்களெல்லாம் வியாபார மென்றே சொல்லவேண்டும்.

இந்தவகையில் இலங்கையில் ஒரு தனவந்தர்—பார்ஸி ஜாதியா ரொருவர் முதற்பிள்ளையை தன் வியாபாரத்திலும் இரண்டாவது பிள்ளையை வைத்தியப் படிப்புக்கும், மூன்று

வது பிள்ளையை இஞ்சினீர் படிப்புக்கும், நாலாமவனை பாரிஸ்டர் படிப்புக்கும் இங்கிலாந்துக்கு அனுப்பினார். இப்பொழுது அவரவர் தம் தொழிலைச் செய்து வருகின்றனர்.

வியாபாரம் என்றால் இன்னும் படித்த வகுப்பினரில் அநேகர் மிகக் குறைவாகவே நினைக்கின்றனர். தொழில் செய்யப் படித்த எவரேனும் துணிந்து விட்டால் அதைரியப் படுத்துகிறார்கள். சுதந்தர தாகம் உண்டாகி விட்டபடியால் சுயேச்சையான தொழில் செய்யவே ஆசையுண்டாகிறதால், இனி வியாபாரத்தைக் குறைவாக நினைக்க மாட்டார்கள்.

வியாபாரி என்று யாரை அழைக்க ஏற்படுகிறதோ, அவர்களைப் பற்றியே விரிவாய்ச் சொல்லப்படுகிறது. கைத்தொழில், வியாபாரம், என்னும் இவ்விரண்டையுமே இந்நூலில் எடுத்தாளப்படுகிறது.

வியாபாரிகளாக விரும்பும் சீமான்களின் மனோவிசாலத்தை ஒரு எல்லைக்குட்படுத்திச் சொல்ல முடியாது; ஆகையால் தேசயாத்திரை அவசியமென்று சொன்னோம். நம்மையாளும் அரசர் பெருமானும், தம் புதல்வர் பட்டத்துக்கு வருமுன், ஆளுகைக்குட்பட்ட நாடுகளையும் அல்லாதவைகளையும் நன்றாய்ப் பார்த்து தேசசஞ்சாரம் செய்து வரட்டுமென்று அனுப்புகிறார். இதனால் விசேஷ அனுபவமுண்டாகுமென்பதே முக்கிய தாத்பரியம்.

அவரவருக்கு இஷ்டமான தொழிலை—வியாபாரத்தைச் செய்யவேண்டும். அதற்கான வழியில் நன்றாய் வேலை

செய்யவேண்டும். செய்யக்கூடிய தொழிலுக்கு ஒரு எல்லை வைத்துக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்வதற்கு ஆசையே காரணமாதலால், அந்த ஆசையை தமக்குட்படுத்திக் கொள்ளவேண்டும். இல்லையெனில், அந்த ஆசையெனும் பெருங்கடல் நம்மை விழுங்கிவிடும். ஆகையால் அந்த ஆசையை நமக்குள் கட்டுப்படுத்தி வைக்கவேண்டும்.

வியாபாரம் செய்ய யாருக்குந் தான் ஆசையில்லை. எல்லோருக்கு முண்டாயினும் எப்படி ஆரம்பிக்கிறது?

வியாபாரத்தை எப்படி ஆரம்பம் செய்கிறது.

இந்த விஷயம் அநேகர் உள்ளத்தில் தெப்பம் போல் மிதந்து கொண்டிருக்கிறது. இதனை விவரித்து எழுதுவ தாயின் பிரத்தியேகமான தனி நூலாய் விடும். என்றாலும் கூடியமானவரை எழுதுவோம்.

எப்படி வியாபாரத்தை ஆரம்பம் செய்கிறது? எப்படி நடத்துகிறது? எப்படி விர்த்தி செய்கிறது?—என்பதாக விஷயம் பெருகத் தக்கது.

எந்த மனிதனும் அவசரப்பட்டு ஒரு வியாபாரத்தை ஆரம்பம் செய்யமாட்டான். ஏனென்றால் ஒரு சிறிதும் அனுபவமின்றி செய்யமுடியாது. எவ்வளவு தான் ஊக்கமும் உற்சாகமும் இருந்தாலும் அனுபவம் அவசியம். கூரான கத்தியா யிருந்தாலும் தேங்காய் எண்ணெய் போட்டு சாணையில் மெதுவாய்த் தீட்டி ஒழுங்கு செய்வது போல கூர்மையான புத்தி யுள்ளவனாயிருந்தாலும் அனுபவம் வேண்டும்.

அந்த அனுபவம் வேண்டுமாயின் மனதைக் கட்டுப் படுத்தி, பிறர் நோக்கத்தையும் குணத்தையும், லோகானுப வத்திற்கு—பழக்கத்திற்கு—எப்படிப் பொருந்தி யிருக்கிற தென்று புத்தியாலறிய வேண்டும். ஒரு ஆபீசில் குமாஸ்தா

வேலையாயிருந்து, வியாபாரத்தைக் கடிதத்திலும் கணக்குப் புஸ்தகத்திலும் பார்த்து விட்டு வியாபாரம் செய்ய முடியுமா? முடியாது—கஷ்டத்தை உண்டுபண்ணும். பிறர் செய்கிற வியாபாரத்தைப் பார்க்கும் போதும், நடத்தப் படும் வகையைக் கவனிக்கும் போதும் வெகு சுலபமாகவே தோன்றும்.

சிலர் சொற்ப தொகையை வியாபாரத்தில் போட்டு விட்டு, போதுமான அனுபவமில்லாததால், இன்னும் கொஞ்சம் பணமிருந்தால் நன்றாய் நடத்தலாம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் எதிர்பார்க்கும் ஒரு பங்குக்கு நான்கு பங்கு கிட்டினாலும், இன்னும் போதாதென்றே தோன்றும். சிலகாலம் சென்ற பின் திகைத்து நிற்கவேண்டியதாகிறது. கடைசியாக தொழிலை ஒழித்துவிட்டு, அந்த வகையில் கொஞ்சம் கடனும்பட்டு, கடன் பட்டதால், மனோ தைரியமும் பின்னும் குமாஸ்தா வேலைக்கே போக வேண்டியதிருக்கிறதே யென்ற வெட்கமும், குடும்பக்கவலையும், போதாக் குறைக்கு—என்னய்யா—என்னப்பா—வியாபாரம் செய்து விட்டாயா? லாபம் பிரண்டு போச்சோ, என்று சிலர் கேட்கவும், இப்படியெல்லாம் கலங்கிய நிலையில் வந்து நிற்கிறார்கள். இன்னும் சிலரோ, வெட்கத்தால்—இரங்கோன், சிங்கப்பூருக்குச் சென்று உத்தியோகத்திலமருகிறார்கள். இவையெல்லாம் இந்நூலாசிரியர் நேரில் பார்த்த விஷயங்களாகும். இப்பேர்ப்பட்டவர்கள் சொற்ப அனுபவத்தை மிகப் பெரிதாய் நினைத்து, தனக்கேற்ற வண்ணம் பேசிய நண்பர் சொல்லையுங் கேட்டு திண்டாட நேர்ந்ததாகும். ஆகையால் போதுமான அனுபவமின்றி ஒரு வியாபாரத்தை நடத்த முடியாது.

வியாபாரத்தில் ஒவ்வொரு வகையிலும் தேர்ச்சியான அனுப வம் உள்ளவர்கள்—முதல்—கையில் பணமில்லாமலே, தாங் கள் வாக்கு சாமார்த்தியத்தால் தொழிலை ஸ்தாபனம் செய்து விடுகிறார்கள். அது எவ்வளவோ விர்த்தியான நிலைமைக்கு வந்து விடுகிறது.

இதற்கு முக்கியமாய் தொழில் விசேஷமான பழக்க மும், துணிவும், விடாமுயற்சியும் இருக்க வேண்டும். நல்ல பழக்க முள்ளோருக்கு தைரியம் தானே உண்டாகும், தைரிய மில்லாத—சபல புத்தியுள்ள—எவரும் தொழில் செய்ய முடியாதென்பது நன்கு விளங்கும். தைரியம் எல் லோருக்கும் அதிசீக்கிரத்தில் உண்டாகாது. அனுபவமுள் ளோருக்குத் தான் தைரியம் பிறக்கிறது.

சிறு தொழிலாய்க் குறிப்பிட்டு, ஆரம்பம் செய்து விர்த்திசெய்ய வேண்டிய மார்க்கத்தை மற் றோரிடத்தில் விபரமாய்த் தெரி விக்கப்பட்டிருக்கிறது.

Advertising is selling through the medium of ideas. But ideas require the vitality of the human element to live on paper as by word of mouth.

அனுபவமென்றால் என்ன ?

அனுபவம் பழக்கம். அனுபவமே ஒரு சக்தி. தனக்கு வழி காட்டியாயுள்ள தீக்ஷண்ணிய புத்தி. மேடு பள்ளத்தைக் காட்டிக் கொடுக்கும் யுக்தி. ஒரு தொழிலை நடத்துகிறதற்குக் கொடுக்கிற ஸ்திரபுத்தி, வைராக்கியம், தைரியம் எல்லாம் அந்த அனுபவம் தான். தொழிலை ஆரம்பிக்கும்போதும் அந்த அனுபவம் முன் நிற்கும். நல்ல அனுபவமுள்ளவர்கள் அனாவசியமாய்ப் பிறரிடம் யோசனை கேட்கமாட்டார்கள்.

ஒரு தொழிற்சாலையில்,—வியாபாரத் துறையில்—உத்தியோகத்தைப் பெற்று, எஜமானனுக்குத் தன்னாலியன்ற உதவியைச் செய்து அவருக்கான லாப நஷ்டத்தையும், கஷ்ட சுகத்தையும் அறியவேண்டும். எஜமானன் நடந்து கொள்ளும் விதம், பேசுகிற மாதிரி இவைகளையும் கவனிக்கவேண்டும். சாதாரணமாய்க் கவனிப்பதோடு மாத்திரமன்றி, எஜமானன் தொழிலை உனக்குச் சொந்தமாகப் பாவித்து நடத்த வேண்டும். அப்படி நடத்தி அறிந்து கொள்வது தான் அனுபவம். அப்பொழுது அதிலுள்ள கஷ்டத்தை உணருகிறாய், லாபத்தைக் கவனிக்கிறாய். ஜாக்கிரதையாயிருப்பதில் மனம் எச்சரிக்கையாயிருக்கிறது. இவ்வித அனுபவம்—பழக்கம்—உனக்கு வேண்டியபோது எவ்வளவு அனுகூலமாயிருக்கும் சிந்தித்துப்பார்.

ஒரு தொழில் செய்து லாபத்தைச் சம்பாதிப்பதென்றால், லாட்டரி சீட்டில் வருவது போல் ஒரே தடவையில்

ஆயிரம் பதினாயிரமாகக் கொட்டிவிடாது. அப்படிக் கிடைத்து விடுமானால் ஏழை யென்ற பதமும் பிச்சைக்காரனென்ற சொல்லும் இல்லாமல், இப்பிரபஞ்சம் குபேரன் பட்டணம் போலாய்விடும். வியாபாரம் செய்து பெருத்த லாபத்தைச் சம்பாதித்து விடலாமென்று நினைப்பது கனவேயன்றி வேறல்ல. நடத்தினால் தான் அதன் அருமை தெரிய வரும். வியாபாரம் செய்யப் புகுவோர் தன்னடக்கம், பொறுமை, நிதானம், லாப நஷ்டத்தில் நிரந்தரமான—அதாவது சமநிலையான—எண்ணமிருக்கவேண்டும். லாபம் கிடைத்தால் சந்தோஷப்படுவதும் நஷ்டம் வந்தால் துக்கப்படுவதும் வியாபாரத்துக் கழகன்று.

எந்த வியாபாரமானாலும் சரி; நஷ்டமில்லாதபடி லாபம் கிடைக்காது. ஆகையால் தான் அனுபவம் அவசியமென்று வற்புறுத்திச் சொல்லப்படுகிறது.

போதுமான பணம் இல்லாமல் ஒரு வியாபாரத்தை ஆரம்பம் செய்வதைவிட செய்யாமலிருப்பதே உத்தமமாகும்.

தொழில் செய்ய விரும்பும் சிலர், தொழில் (இடம்) முழுதும் கிரயத்துக்கு வரக்கூடியதாயிருந்து கிடைக்கக் கூடியதாயின் மிகுந்த நலமாகும். விற்பனைக்கு வரும் வியாபாரம் எவ்வளவு சிறியதாயிருந்தாலும் குற்றமில்லை.

முதல் முதலாகத் தொழில் செய்வோர் புதிய இடம் தான் வேண்டும், என்ற புராணப் பேச்சை விட்டுவிடவேண்டும்

விசேஷமாக முதல் போட்டு நடத்தவேண்டிய வியாபாரமாயிருந்தால் அதிக ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும். வாயால் லாபத்தைக் கணக்கிட்டுப் பார்த்து விட்டு, அவனைப்போல் செய்துவிடலாம், இவனைப்போல் சம்பாதித்து விடலாம் என்று ஆகாயக்கோட்டை கட்டக்கூடாது. ஒரு தொழிலை ஆரம்பிக்கும் போது முதலில் கஷ்டமாகவே தான் இருக்கும். லாபம் படிப்படியாய் வரும் என்பது தொழிலறிந்தோர் அநுபவம்.

கூட்டுறவு வியாபாரம்.

இந்தக் கூட்டுறவு வியாபாரம் நம் தேசத்தாருக்குப் புதிதல்ல. ஆனல் அதனைக் கவனித்து விசாலப்படுத்தாத குறையே. கூட்டுறவு வியாபாரத்தை இந்தக் காலத்தில் கம்பனி என்று வழங்கி வருகிறது. இந்த (கம்பனி) கூட்டுறவு வியாபாரத்தை நடத்துவதில் விசேஷ சட்ட திட்டங்களைச் செய்திருக்கிறார்கள். ஒரு தொழிலை நடத்த பணம் அதிகமாக வேண்டியதிருந்தால், அநேகர் நபருக்கு இத்தனை பங்கு பணம் போடுவதெனத் தீர்மானித்து, பணத்தை பொதுவில் வசூலிப்பார்கள். ஆயிரரூபாயில் ஒரு தொழிலை நடத்துவதாய்த் தீர்மானிப்போம். இதற்கு நான்கு நபர்கள் பங்காளிகளாய்ச் சேர்ந்து, ஒவ்வொருவரும் ரூ. 250 கொடுப்பதென்பதாகும். திறமையாய் நடத்தக்கூடிய ஒரு பங்குக்காரரிடம் தொழிலை நடத்தும்படி விட்டு விடுகிறது. பிறகு ஆறுமாதத்துக் கொருமுறை அல்லது வருஷத்துக் கொருமுறை வரவு செலவு கணக்குகளைப் பார்த்து ஆதாயத்தைப் பங்கிட்டுக் கொள்வார்கள்.

சில கூட்டுறவு வியாபாரத்தில் பங்குக்காரர்கள், ஆயிரக் கணக்காயும் இருப்பார்கள். தற்காலம் இவ்விதம் ஆயிரக் கணக்கான கம்பெனிகள் நடந்து வருகின்றன. இந்தக் கூட்டுறவு வியாபாரம் இவ்வுலகம் எங்கணும் பரவியிருக்கக் காணலாம்.

ஒரு கம்பெனிக்கு ஒருவன் தலைவன்—அதாவது சொந்தக் காரனுகவு மிருக்கலாம். அது எப்படியென்றுல் பங்குக்

காரர்கள் கூடி நடத்தப்படும் ஒரு கூட்டுறவுக் கம்பெனி நஷ்டத்தில் நடந்து வந்தால், அதனை விற்றுவிடுவார்கள். அதை வாங்கி நிர்வகிக்கக்கூடிய ஒருவன் அக்கம்பெனியை விலைக்கு கிரயசாசனமாக வாங்கிக் கொண்டு நடத்தலாம்.

எந்த வேலையிலும் அவசரப்படாதே. உன் மனதுக்கேற்க இன்ன தொழில் உனக்கேற்றது; அதை நிர்வகிக்கக் கூடுமென்ற சக்தி உண்டாகுமாயின் அப்பொழுதே செய். நாலாவிதமாக யோசித்துக் கொள். உனக்கு வியாபாரத்தில் போதுமான அனுபவமில்லை யெனத் தோன்றுமானால், தொழில் நடத்தி நல்ல ஸ்திதியிலிருப்போர்களிடம் யோசித்துப் பார், அல்லது அனுபவமுள்ள ஒருவரைத் துணைக் கொள். அனுபவமுள்ளவர் அயோக்கியராயிருந்தால் உன் முதலுக்கே ஆபத்து வந்து விடும். ஆகையால் நீ எவரையும் முற்றிலும் நம்பி உன்னையும் உன் பொருளையும் ஒப்புக் கொடுத்து விடாதே.

ஒரு தொழிலை ஆரம்பித்தவுடன் விர்த்தி செய்வதற்கான மார்க்கத்தைத் தேடவேண்டும். உன்னுடைய யோசனைக்கு எப்பொழுதும் ஒரு எல்லையிருக்க வேண்டும். கணக்கு ஒழுங்காய் எழுதிவரவேண்டும். நடத்தும் முறை கிரமமாக இருக்கவேண்டும். அது தான் தொழிலுக்கு அஸ்திவாரம். விர்த்தியாகிற வியாபாரத்துக்கு கணக்கு ஒரு திறவு கோல் போலாகும். நடத்தும் வகையில் விசேஷ திறமை வேண்டும்.

நீ ஆரம்பித்த தொழிலை நடத்தும் போது உனக்குத் திருப்தியைத் தருவதாயிருந்தால் செவ்வையாய் விர்த்தி செய்வதில் பற்றுள்ளவனாயிரு. உன் தொழில் ஒழுங்

மாதிரியா யிருக்கட்டும். நாளுக்கொருவிதமாய் மாற்றிக் கொண்டிராதே. ஒரு தொழிலை நடத்துவதில் இடுக்கண்-இடைஞ்சல் உண்டாகும். அதைப் பொருட்படுத்தாதே லட்சியஞ் செய்யாதே. நம் இந்திய மக்கள் நெடுங்காலமாய் சேவகமென்னும் அடிமைத்தனத்தைக் கற்றுக் கொள்ளும்படிச் செய்து விட்டார்கள். அதற்கான படிப்பும், புத்தியும் யுக்தியுமே மனதில் தங்கி வருகிறது. எவராவது துணிந்து சுயேச்சையாய் சுதந்தரமாய்த் தொழில் செய்ய ஆரம்பித்தால் அநேகர் தடை செய்பக் கூடுமென மேற்கண்ட காரணத்தால் எதிர்பார்க்கக் கூடியதே.

சமீபத்தில் ஒருவாலிபன் தொழில் செய்ய விசேஷ அனுபவமிருந்தும், வியாபாரம் செய்யக் குடும்பத்தலைவர் சற்றும் அனுமதிதரவில்லை. அவன் தொழிலை ஆரம்பம் செய்யுமுன் நேர்ந்த துன்பங்கள் எண்ணுக்கடங்கா. ஆயினும் அவன் மிக்க பிடிவாதமாய் "வியாபாரம் செய்ய வேண்டாம் ஒரு வேலையைப்பார்" என்றுசொன்ன அந்தவாயாலே, வியாபாரம் செய் என்று சொல்லும்படி செய்ப வேண்டு மென்று சொன்னான். அவன் தன் குடும்பத் தலைவருக்கு நண்பராய் உள்ளவர்களைக் கொண்டு, விபாபாரத் தன்மையையெடுத்துச் சொல்லி அனுமதி பெற முயற்சி செய்தான். அதற்கு அத்தலைவரும் குடும்பத்தாரும், அங்கப்பன் அந்த வியாபாரம் செய்து நஷ்டமடைந்தான். அடுத்த வீட்டு அரசப்பன் ஜவுளிக்கடை வைத்து ஐயாயிரரூபாய் கடன் பட்டிருக்கிறான், என்று இந்த நஷ்டப்பாட்டைப்பாடி வந்தார்கள். முன் வைத்த காலைப் பின் வாங்குவதில்லை என்ற அவனுடைய பிடிவாதத்தால் அவர்கள் அனுமதி கொடுக்காமலிருக்க முடிய

வில்லை. இப்பொழுது அந்த வாலிபன் மதுரையில் வியாபாரம் செய்து வருகிறான். இப்பொழுது விர்த்தியாய்க்கொண்டு வருகிறது.

வியாபாரம் செய்வதில் வரும் இத்தகைய துன்பம் நேரக்கூடியதே. அதைச் சகித்து ஜயம்பெற்று நடத்த வேண்டும்.

அநேகர் தமக்கிஷ்டமான யோசனை சொல்லுவார்கள். நீ அவைகளைக் கேட்க வேண்டியதாகும். எவர் எதைச் சொன்ன போதிலும் உன் தீர்மானம் அபிப்பிராயம் பிரத் தியேகமாயிருக்க வேண்டும்; உனக்கும் கடவுள் நல்ல புத் தியைக் கொடுத்திருக்கிறார் என்பது நினைவில் இருக்கட்டும். பிறர் யோசனையை விடத் தங்கள் சொந்த அபிப்பிராயத்தை அனுசரித்து அநேக வியாபாரிகள் நல்ல லாபத்தை அடைந் திருக்கிறார்கள். எந்த விஷயமும் தனக்குள் இருப்பது தான் பரம இரகஸ்யம். ஒருவர் அறியச் சொல்வது ரகஸ் யம், இருவருக்கு அதிகப்பட்டால் அம்பலம்.

அயல் நாட்டார் எப்படித் தொழிலை ஆரம்பித்துநடத்து கிறார்கள் என்பதை ஊகித்து அறிய வேண்டும். அநேக பிரபல வியாபாரிகள் நாடுகளில் தாங்கள் தொழில் செய்து விர்த்தியானதை பொது நன்மையை உத்தேசித்துப் புஸ்தக ரூபமாய் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். இப்பேர்ப் பட்ட நூல்களை வாங்கிப் படித்துக் கருத்தை உணர்வது நல மாகும்.

வியாபார சம்பந்தமான நூல்கள் தமிழ் பாஷையில் இல்லாதது பெருங்குறையே. ஏன் இல்லையென்றால் நன்

றுய்க் கற்றறிந்தவர்கள் வியாபாரம் செய்வதில்லை. படித்தவர்கள் தொழில் செய்தால் தங்கள் அனுபவத்தைத் தேச நன்மையின் பொருட்டு வெளியிடலாம். படித்தவர்கள் அதிலும் இங்கிலீஷ் படித்தவர்கள் வியாபாரம் செய்தால் கௌரவக் குறைவென்று நினைத்து விடுகிறார்கள். இவ்வித அபிப்பிராயம் விசேஷமாயிருப்பது விசனிக்கத் தக்கதே என்றாலும் காலமாறுதலுக் கேற்றவிதமாகவும், தேச விடுதலையை உத்தேசித்தும் சிற்சிலர் தொழிலை ஆரம்பித்து அதற்கு ஒரு பெயரிட்டு அதனோடு கம்பெனி யென்று நடத்துகிறார்கள். இப்படிச் செய்வது உத்தமமாய்த் தோன்றுகிறது என்றாலும் பொது ஜனங்களை ஏமாற்றுகிறதற்கும் சிலர் சம்பெனி என்று வைத்துக் கொள்ளுகிறார்கள். இது அதிசீக்கிரம் அழிந்து போம். மோசம் எப்போதும் நாசத்துக்குக் காரணம். வாங்குவோரைத் திருப்தி செய்து சம்பாதிப்பதே நியாயமாகும். இந்த விஷயத்தை—வாங்கி விற்றல்—என்பதாக மற்றோரிடத்தில் விபரமாய்ச் சொல்லுவோம்.

எங்கள் வியாபாரத்துக்கு நோட்டீஸ் வேண்டாம், கியாட்லாக்—கிரய ஜாப்தா—வேண்டாம் என்று சொன்னவர்களெல்லாம், நோட்டீஸ், கிரய ஜாப்தா வெளியிட ஆரம்பித்து விட்டார்கள். இதனால் வியாபாரம் விர்த்தியாகும். அப்படிச் செய்கிறதால் அநேகருக்கு வேலை கிடைக்கிறது. பெரிய தொழிற்சாலைகள், மில்லுகள், ரெயில்வே கம்பெனிகள், இயந்திர வார்ப்படத் தொழில்கள் இவைகளை நடத்த லட்சக் கணக்கான மூலதனம் வேண்டியதாயிருக்கிறது. இதை ஒரு பெரும்பாரமென்று அலட்சியம் செய்ய நேர்ந்து

விட்டதால், அன்னிய தேசத்தார் தங்கள் பொருள்களுக்கும் இயந்திரங்களுக்கும் இந்தியாவை ஒரு சந்தையாக நினைத்திருக்கிறார்கள். அம்மட்டோடு நிற்கவில்லை. இங்கிலாந்திலும் மற்ற தேசங்களிலும் கூட்டுக் கம்பெனிகளை ஏற்படுத்திப் பணத்தைச் சேகரித்துக் கொண்டு இந்தியாவில் வந்து எவ்வளவு தொழில்களை நடத்துகிறார்கள். தென் இந்தியா ரெயில்வே, டிராம்வே முதலிய தொழில்களுக்கு எஜமானர்கள்—பங்குக்காரர்கள் நிர்வாகஸ்தர்கள்--இந்தியாவில் இல்லை, அவர்கள் இருப்பது ஒருதேசம். தொழில் செய்து சம்பாதிப்பது ஒரு தேசமாயிருக்கிறது. நமது தேசத்திலுள்ள செல்வமெல்லாம் பல விதமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது.

சிற்சில விடங்களில் சில கூட்டுறவுக் கம்பெனிகளை (லிமிடெட்) ஓரளவான எல்லைக்குட்படுத்தி நடத்துகிறார்கள், பம்பாய், கல்கத்தா முதலான விடங்களில் சில மில் தொழில்கள் நடைபெறுகின்றன. இப்படிச் செய்வதற்கும் கூட்டுறவுக் கம்பெனியே காரணம். கூட்டுறவுக் கம்பெனியை ஏற்படுத்த பொது ஜனங்களிடத்தில் ஒற்றுமை வேண்டும். ஒற்றுமை வேண்டியதற்கு தேசாபிமானம் வேண்டும். தேசாபிமானத்துக்குக் கருணை வேண்டும். மற்றவர்களிடம் இரக்கம் வேண்டும். பாரதமக்கள்—ஒரு தாய்க்குழந்தைகளென்ற—சகோதரத்துவம் அவசியம் தேவை.

முக்கியமாய் வியாபாரம் செய்ய இஷ்டப்படுகிறவர்கள் வியாபார ஸ்தலமாயுள்ள வெளியூர்களுக்குச் சென்று ஆங்காங்கு நடக்கும் விதத்தைத் தெரிந்து கொள்ளலாம், பெரிய வியாபாரிகள் எப்படித் தொழிலை நடத்துகிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். எனக்கு எல்லாம் தெரியும்

என்ற கர்வம் கொள்ள வேண்டாம். தெரிந்தும் தெரியாத வனைப்போலிருப்பதுதான் விசேஷ நன்மையையளிக்கும்.

செய்யப்போகிற தொழிலுக்கான புஸ்தகங்கள் (கேடலாக்) கிரய ஜாப்தாக்கள், பத்திரிகைகள் இவைகளை வாங்கிப் பார்க்க வேண்டும். நீ நடக்க ஆரம்பிக்கிறதற்கு முன் ஓட ஆரம்பித்து விடாதே. சிலவாலிபர்கள் வியாபாரம் செய்யும் போது பல தொழில்களையும் இழுத்துக் கொண்டு செய்கிறார்கள். ஒரு தொழிலிலேனும் அனுபவமாவது போதுமான ஆதாயமாவது இல்லாமற் போய்விடுகிறது. ஒருவருக்குத் தக்க வயதில் ஒரு விஷயத்தைப் பற்றி நீள நீளமாய் மணிக் கணக்காய் யோசனை செய்கிறார்கள். எண்ணங்களும் அதற்குத் தக்கபடி எல்லைபற்றிருக்கும். ஆனால் செய்வதோ சொற்பத்திலும் சொற்பமாயிருக்கும், தொழிலில் போதுமானபடித் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள மாட்டார்கள்.

வாய்ப்பேச்சிலேயே வியாபாரத்தை நடத்தி சந்தோஷப் பட்டு விடாதே. உன் கண்ணும் கருத்தும் தொழிலில் இருக்க வேண்டும். லாப நஷ்டத்தைப் பற்றி அடிக்கடிச் சிந்தனை செய்யாதே. வியாபாரம் விர்த்தியாகக்கூடியதா யிருந்தால் சட்டப்படி பங்குக்காரர்களைச் சேர்த்து, வியாபாரத்துக்கான தொகையை வசூல் செய்து நடத்த வேண்டும். வியாபாரம் விர்த்தியாகும்போது நமது தேசத்தில் அநேகர் பெருந்தொகை போடவேண்டியதா யிருக்கிறதென்று நழுவ விடுகிறார்கள். கூட்டுறவு வியாபாரத்துக்கான—அளவுள்ள—(லிமிடெட்) விதிகளைப் பற்றிப் பிரத்யேகமாய் வெளியிடுவாம்.

கூட்டுறவின் அவசியம் இப்பொழுது இந்தியாவுக்கு நேர்ந்திருக்கிறது. அநேக பிரபுக்கள், மிராசுதார்கள், ஜமீன் தார்கள், சுகவாசிகள் பணத்தை ஏராளமாய்க் குவித்துக் கொண்டு தம் நலத்தையே பெரிதுங் கருதுவதின்றி பொது நன்மையை ஒரு சிறிதும் நினைப்பதில்லை. இதர தேசங்களிலுள்ள கோடீஸ்வரர்கள் வம்ச பாரம்பரையாய்த் தொழில் செய்து வருகிறார்கள். தொழில் செய்ய ஏலாதவர்கள் கூட்டுறவுத் தொழிலுக்கு மிக்க உதவியாயிருக்கிறார்கள். இனியாவது நம் நாட்டில் பணம் படைத்த சீமான்கள் கூட்டுறவுத் தொழில்களுக்கு ஆதரவாயிருந்து வறுமையை ஒழித்துச் செழிக்கச் செய்வார்களாக.

கூட்டுறவுத் தொழில் ஒற்றுமையாலும் நம்பிக்கையாலும் நடக்கக்கூடியது. உள்ளீடான அதாவது குடும்பத்திலாவது உறவினராவிலாவது, சிநேகிதத்திலாவது மதத்திலாவது வித்தியாசம் அல்லது மனஸ்தாபம் இருந்தாலும் அவைகளை நினைக்காமல், பொதுக் காரியங்களில் ஒற்றுமையைக் காட்டவேண்டும்.

தொழிலும் ஒற்றுமையும்.

ஒரு குடும்பத்தில் ஒற்றுமை எப்படி அத்தியாவசியமோ அப்படியே ஒரு தொழிலிலும்—வியாபாரத்திலும் பரஸ்பம் ஒற்றுமை அவசியம். இந்த ஒற்றுமையால் தான் வியாபாரம் விர்த்தியாக வேண்டும். வியாபாரிகள் ஒருவரோடொருவர் ஒற்றுமைப்பட்டிருந்தால் ஒரு தேசத்திற்கும் க்ஷேமமுண்டாகும். தொழில் அபிவிர்த்தியில் முதிர்ச்சி பெற்ற ஆங்கிலேயரும், அமெரிக்கா தேசத்தாரும் விசேஷமாய் ஒற்றுமையுள்ளவர்கள், பெரிய வியாபாரிகள், விர்த்தியாக வேண்டிய சிறிய வியாபாரிகளுக்கு மிகுந்த உதவி செய்கிறார்கள். மற்றவர்களைப் பார்த்துப் பொறாமைப் படுவதில்லை. சிறிய வணிகர்கள் அனுபவமில்லாமல் ஒரு தொழிலை ஆரம்பம் செய்யமாட்டார்கள்.

நமது நாட்டில் ஒருவருக்கொருவர் வியாபாரத்தில் போட்டி அதிகம். இதனால் பொது ஜனங்களுக்குண்டாகும் கஷ்டத்தை கவனிக்கிறதில்லை. பிறரிடத்தில் கருணை வேண்டும். தர்மசிந்தனை அவசியமாகும். பரோபகாரமான குணம் இருக்கவேண்டும். ஒற்றுமைக் குறைவு பெரும்பாலும் நம் இந்து தேசத்திலுள்ளது போல் வேறெந்த தேசத்திலுமில்லை. ஏனென்றால் இதர நாடுகளில் சிற்சில விவகாரங்களில் ஒற்றுமையில்லாதிருக்கலாம். பெரும்படியான காரியங்களில் ஒற்றுமையாகத் தானிருப்பார்கள். தேசாபிமானம் சகல வித ஜாதி ஜனங்களிடமும் இருக்கும். சில பகுதியில் ஏற்பட்டிருக்கும் விரோதத்தைக் காட்டிக் கொள்

ளமாட்டார்கள். ஒரு குடும்பத்தில் எத்தனையோ ரகஸ்யங்களிருக்கலாம், சகோதரர்களுக்குள் சச்சரவுகள் இருந்து வரலாம். பிதாவுக்கும் பிள்ளைகளுக்கும் மனஸ்தாபம் இருக்கலாம். "மாற்றானுக்கு இடங்கொடேல்" என்பதை அனுசரித்து தங்கள் குடும்பத்தில் சில்லரை வேற்றுமைகளைப் பிறரறிய இடம் தருவதில்லை யென்றாலும், குடும்பத்தார் ஒற்றுமைப்பட்டிருக்க வேண்டியவைகளில் கட்டுப்பட்டிருப்பார்கள். அத்தகைமைபோல் பொது நலக்காரியங்களில் அனைவரும் ஒற்றுமைப்பட்டிருக்க வேண்டும்.

முக்கியமாய் அமெரிக்கா தேசத்தில் வியாபாரிகள் கட்டுப் பாடுள்ளவர்கள். ஒற்றுமையுள்ளவர்கள். தொழிலாளர்களின் வழி எப்படி யிருக்கிறதென்றால் ஏணிப்படியைப்போலிருக்கிறது. அதாவது முன்னேற்றத்துக்கானதா யிருக்கிறது. ஆகையால் கீழ்ப்படியைப் பார்த்துக்கொண் டிருக்க வேண்டியதில்லை. அப்படிச் சிலர்பார்ப்பதினால் தான் பொறாமை, கர்வம், துவேஷம் முதலியனஉண்டாகின்றன. அநேகர் ஒன்றாய்ச் சேர்ந்து பெருந் தொகை சேர்த்துக் கோடிக் கணக்கான திரவியத்தை மூலதனமாக வைத்து மகா சமர்த்தர்களான தொழிலாளர்களைத் தக்கவாறு அமைத்து செய்யப்படுகிற தொழிலில் ஏன் ஒற்றுமை ஏற்படாது. இதற்கும் ஒருவருக் கொருவர் நம்பகம் இருக்க வேண்டும். சந்தேகம் சில சமயங்களில் பெருந்தடையாயிருக்கிறது. அல்ப சந்தேகத்துக்கு நிவர்த்தியுண்டு. அபாரமானஐயத்தை நீக்குவது கடினமாகும். நம்பிக்கை தாராளமாய் ஒரு நாட்டில் இருந்து வருமாயின் ஒற்றுமை வேரூன்றி விடுமென்று சொல்லவும் வேண்டுமோ! ஒற்றுமையுள்ள விடத்தில் தைரியம் அதிகம்

உண்டாகக் காணலாம். இந்த ஒற்றுமைக்கு பெருந்தன்மையான குணமே சாதனமாகும்.

வியாபாரிகளுக்குள் ஒற்றுமை யிருக்கவேண்டும். சாக்கு வாங்குவதில் கட்டுப்பாடாயிருக்கலாம். விலை அநுவசியமாய் அதிகப்படாமலிருக்கும்படிக் கவனிக்கலாம். இன்னும் பல நன்மையுண்டாகும்.

வியாபாரத்தை எப்படி விர்த்தி செய்கிறது?

இம்மாதிரியான கேள்வி ஒவ்வொரு வியாபாரியின் உள்ளத்தில் ஓரோர் காலத்தில் உண்டாகிறது. இந்த விஷயத்தை ஒவ்வொரு வியாபாரியும் தெரிந்து கொள்ள ஆவலுள்ளவர்களா யிருக்கிறார்கள். விர்த்தி செய்ய வேண்டு மென்று நினைக்கவும் அளவற்ற விஷயங்கள் மனதில் பாவும், ஒன்றையேனும் நிதானமாய் சிந்திப்பதற்கு இடமில்லாமல் பிடுக்கான நிலைமையில் வைத்து விடுகிறது. தொழில் குறையும்போதுதான் விர்த்திக்கான வழியைத் தேட முயலுவது அநேகர் வழக்கம். தன் சரக்குகளை வாங்குவோர் அதிகப்படவேண்டும். எவ்வளவுக்கு வாங்கு வோர் அதிகப்படுகிறார்களோ அவ்வளவுக்கு விராபாரம் விர்த்தியே.

அநேக தொழில்கள் கவனக் குறைவாலேயே விர்த்திக் குறைவு அதாவது க்ஷீணதசையை அடைவது வழக்கமா யிருக்கிறது. ஒரு தொழிலுக்குரிய எஜமானன் தன் கவனிப்பை நிரந்தரமாய் வைத்திருக்க வேண்டும். ஏற்றத் தாழ்வு என்பது கஷ்டத்தைக் கொடுக்கும். எந்தத்தொழில் கவனிக்கப்படாமல் அலக்ஷியமாய் விடப்படுகிறதோ அது நாளடைவில் நஷ்டத்தைக் கொடுக்குமென்று சொல்லவும் வேண்டுமோ? வாடிக்கையாய் உன்னிடம் சரக்கு வாங்குகிற வர்கள் மாறுதல் அடையாமலிருக்கும்படி பார்க்க வேண்டும்,

நல்ல சரக்கும் நல்ல வார்த்தையும் நன்மையைக் கொடுக்கக் கூடியவையாகும். உன்னிடம் சரக்கு வாங்குவோர்களின் விருப்பத்தை அறிய வேண்டும். அவர்கள் தூரத்திலிருந்தாலும், அருகிலிருக்கிறதாகவே கருதி, நல்ல சரக்குகளாய் அனுப்பி, அவர்களுக்கு இதமான வழியிலே நடக்க வேண்டும். பழய வாடிக்கைக்காரர்களைக் கவனிக்காமல் புதிய வாடிக்கைக்காரர்களுக்கு எதிர்பார்த்தல் நலமாகமாட்டாது. எஜமானன் அல்லது பொறுப்பு வாய்ந்த காரியஸ்தனுகட்டும், தொழிலை ஈஸ்வரனைப்போல எல்லாவற்றையும் அறிந்தும் அறியாதவனைப் போலிருக்கவேண்டும். சமயம் வாய்க்கும் போது குற்றங் குறைகளை நிவர்த்தி செய்யவேண்டும். "கிராக்கி" "சகாயம்" என்றும் சில கம்பெனிகளுக்குப் பெயர் ஏற்பட்டுவிடும். சகாயமாய்க்கொடுக்கிறார்களென்க் கூறினுல் குற்றமில்லை. அந்த விடத்தில் விலை கிராக்கி என்று சொல்லி வருவார்களானுல் வியாபாரிகள் விற்கிற விலைகளையும் கவனித்துக்கொண்டு பொருள்களுக்கு ஒரே விலையை ஏற்படுத்த வேண்டும்.

சில சமயம் தொழில் ஒழுங்காய் நடைபெறுவதாகவே தோன்றும். என்றாலும் வழக்கம்போலுள்ள கவனிப்பும் பார்வையும் இருக்கவேண்டும். கவனிப்புக் குறைவால் தாழ்வடைந்துபோகிற தொழிலை சீர்திருத்துவதும் ஒன்று. ஒரு புதிய தொழிலை ஆரம்பம் செய்து பிரசித்தப்படுத்துவதும் ஒன்று. தொழிலபிவிருத்தியில் காலத்தையும் அனுசரித்து நடப்பதே சிலாக்கியம்.

சரக்குகளை அதிகப்படுத்துவதும், விலைகளைத் தணிப்பதும் தன் தொழிலையும் பொருள்களையும் பொது ஜனங்கள்

தெரிந்துகொள்ளும்படி பிரசித்தப்படுத்திக்கொண்டும் இருத்தலே ஒரு வியாபாரத்தை விர்த்தி செய்வதற்கேற்ற மார்க்கமாகும். இன்னும் அனுபவப்பட்டு வழி தெரிந்தவர்களின் அதிகாரத்தில் விட்டு தான் சாக்ஷியாயிருந்தும் பார்த்து வரலாம்.

ஒவ்வொரு தொழிலும் நாள்தோறும் புதிது புதிதாகத் தோற்றுந் தன்மையில் சீர்திருத்தி வரவேண்டும்.

இரவு பகல் இருபத்திநான்கு மணிநேரமும் தொழிலுக்கே தன்னை ஒப்புக்கொடுத்து அதே கவலையில் தன்னை ஆழ்த்திக்கொள்ளக் கூடாது.

ஒரு வியாபாரி தான் செய்யவேண்டிய வேலையையும் ஒரு திட்டத்துக்குட்படுத்தி செய்து வரவேண்டும். லௌகிகமான சுக துக்கம் எல்லோருக்கும் உளதாயின் வியாபாரத் தொழிலை ஒரு வரம்புக்குட்படுத்திக் கொள்ளவேண்டும்.

வியாபாரத்துக்குரிய பொருளையும் மற்ற தட்டு முட்டு சாமான்களையும் தினந்தோறும் அல்லது வாரம் ஒருமுறையேனும் சுத்தப்படுத்தி வைக்கவேண்டும்.

சில வியாபாரஸ்தலங்களில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கிற பொருள்—ஜவுளி — மளிகை—புஸ்தகம் எதுவாயினும் மாதக்கணக்காயும், இன்னும் சிலர் வருஷக்கணக்காயும் அசையாமல் வைத்துவிடுகிறார்கள். மற்றும் சிலரோ வியாபாரத்துக்காக வாங்கிவைத்த பொருளை மறந்தும் விடுகிறார்கள். ஆகையால் இவ்விதக் குற்றமின்றி நடக்கவேண்டும்.

சில வியாபாரிகள் வாரம் ஒரு முறை அல்லது மாதம் ஒரு முறை ஒரு பக்கத்திலுள்ள பொருளை மற்றொரு பக்கம்

மாற்றிவைத்தும் அழகு படுத்துகிறார்கள். இப்படிச் செய்வதால் அளவற்ற நன்மை யுண்டாகிறது.

புதிய சாமான்கள் சேர்க்கப்பட்டதும் வாடிக்கைக்காரர்களுக்கு அச்சிட்ட நோட்டீஸ், கடிதம் இவைகளைக்கொண்டு தெரிவிக்கலாம். இதனை வியாபாரத்துக்கேற்கத் தக்கவாறு கையாடவேண்டும்.

நோட்டீஸ்களும் கேட்லாக் — விலை ஜாப்தாக்களும், ஒரு தொழிலின் பிரதிநிதி யென்பதாகக் கருதவேண்டும். பொதுஜனங்கள் அந்த நோட்டீஸ் விலை ஜாப்தாக்களைக் கொண்டே மதிக்கிறார்கள். விளம்பரத்தைப் பார்த்தவுடன் படிக்கிறதற்கு உற்சாகம் கொடுக்கத்தக்கதாயும் எழுதப்படும் விஷயங்கள் ரசிகமாயும் சுருக்கமாயும் இருக்கவேண்டும்.

உன் தொழிலுக்கு லக்ஷ்யமுள்ள மனிதர்களை உத்தியோகத்தில் வைத்துக்கொள்வதால் அவர்களும் விர்த்தியாக வேண்டிய வகைக்கு அநுகூலமான யுக்திகளைச் சொல்லுவார்கள்.

உன் யோசனைக்கு எட்டுகிற யுக்தியை அப்போதே ஒரு கடிதத்தில் எழுதிவை. இப்படிப் பலதடவைகளில் எழுதி வைத்ததிலிருந்து மேலானதை அநுசரிக்கலாம்.

பொதுஜனங்கள் பொருள் வாங்க வந்தால் நீ அவர்களுக்கு உதவிசெய்யக் கூடியவன் என்பதாய் அவர்கள் தெரிந்து கொள்ளும்படி நடக்கவேண்டும்.

வஞ்சனையான வார்த்தைகள் உன்னிடத்திலிருக்கக் கூடாது. பிறர் உன்னை நம்பவேண்டுமாயின் உனது லாபம்

ஒரு திட்டத்துக்குள் இருக்கவேண்டும். கண்டிப்பான ஒரே விலையு மிருக்கவேண்டும்.

ஒரு பகற் பொழுதில் வியாபாரம் நடை பெறக்கூடிய காலம் பிரத்தியேக மாயிருக்கும். சிலவியாபாரம் காலையில் மாத்திரம் நடைபெறும். மாலையில் மாத்திரமே மற்றொரு வியாபாரம் நடக்கும். மத்தியகாலத்தில் நடக்கக்கூடிய தாகும் இன்னும் ஓர் தொழில், ஆகையால் எந்தநேரத்தி லும் உன் வியாபாரம் நடக்கும் என்று நினைப்பது தவறாகும்.

உன் வியாபாரத்தில் ஏற்றத்தாழ்வு உண்டாகும்போது உன்னைப்போல் தொழில் செய்யும் மற்றவர்களையும் கவனித் துப்பார். அப்பொழுது உண்மைவிளங்கும். பொதுஜன நோக்கத்தையும் தெரிந்து கொள்ளக்கூடும்.

வியாபாரம் நடக்கவில்லையே யென்று அனாவசியமாய் விலையைக் குறைக்க வேண்டியதில்லை. நீ விலையைக்குறைப் பதால் இதர வியாபாரிகளுக்குக் கெடுதியில்லாமலிருக்க வேண்டும். விலையை நிதானமாய், குறிப்பிட்ட கால அள வுக்குட்படுத்த வேண்டும்.

உன்னுடைய ஊக்கத்துக்குத்தடை—யாயிருப்பது என் னென்ன வென்பதைத் தெரிந்து கொள். இந்த விஷயத்தில் அமெரிக்காதேசத்து வியாபாரிகள் எச்சரிக்கையாயுள்ளவர் கள். ஆகையால் எப்பொழுதும் லாபத்தைப் பெறக்கூடிய வர் களாயிருக்கிறார்கள்.

ஒரே மனிதன் உத்தியோகத்தில் அமர்ந்து மேற்கண்ட விவகாரங்களில் அனுபவப்பட்டு வந்திருப்பானாயின் அப்பேர்ப் பட்டவனுடைய தொழில் மேன்மையாக நடைபெறும்.

இன்னும் பலவிஷயங்களைத் தெரிவிக்க வேண்டியதிருப்பதால் வியாபாரத்தை விர்த்தி செய்யவேண்டிய மார்க்கத்தை மாத்திரம் தெரிவித்துக்கொண்டிராமல், இன்னும் இதைப் பற்றிய விஷயங்கள் ஒவ்வொரு தலைப்பின்கீழ் தொடர்ந்து கொண்டே யிருக்கும்.

உத்தியோகமும் வியாபாரமும்.

ஒரு தொழிலை ஆரம்பிக்குமுன் இருந்த கஷ்டத்தையும் கவலையையும் விட, தொழிலை ஆரம்பித்த பிறகு வரும் கஷ்டமும் ஓயாத கவலையும் மனதைத் துடிக்கும்படிச் செய்து விடும். சரீரத்தில் அமைந்துள்ள இரண்டு கண்களும் புறப்பொருள்களை அமைந்தவாறு அதுவதுவாகப் பார்க்கவே யோக்கியமுள்ளதாகும். ஆனால் அகக்கண்ணாகிய மனமோ கண் நுழையக்கூடாத இடத்தையும் பார்த்து விசாரணை தீர்ப்பு முதலியவைகளைச் செய்து விடுகிறது. என்றாலும் கவலையும் கஷ்டமும் வந்த காலத்தில் திசை தப்பிய கப்பலைப் போல் மனம் தடுமாற்றத்தை யடையும்.

சிலர் ஒருவரிடத்தில் வேலைக்கிருந்து கொண்டிருக்கும் போதே ஒரு தொழிலை ஆரம்பித்து நடத்தவேண்டும் என்று அடிக்கடிச் சொல்லிவரக் கண்டிருக்கிறோம். அப்பொழுது தைரியமும் அதிகமாகவே யிருக்கும். சிநேகிதர்கள் உதவி செய்வார்கள் என்றும் நினைத்துக் கொள்வதுண்டு. இதற்குக் காரணம் தான் உத்தியோகத்திலிருக்கும் இடத்தின் மகத்துவமேயன்றி வேறில்லை. சொந்தத்தில் தொழில் நடத்துவதென்றால் காலிமனையில் கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பாகும். பலமான—அஸ்திவாரம்—ஆதரவு வேண்டும். முதலாவது போதுமான திரவியமாவது இருக்கவேண்டும். இரண்டாவது தங்கு தடையற்ற சாமர்த்தியம் வேண்டும்.

உத்தியோகப் புருஷ லட்சணம்.

மற்றொருவர் கால் தனக்கு சகாயமாயிருக்க, அந்த ஆதாரத்தைக் கொண்டு இல்லற வாழ்வாகிய தன் சரீரத்தை நடத்த யோக்கியமாயிருக்கிறது. உத்தியோகத்தை விட்டுவிட்டு தான் ஜீவனஞ்செய்ய முடியுமா வென்றும் ஒவ்வொரு உத்தியோகஸ்தனும் தனக்குத்தானே கேள்வி கேட்டுப் பார்க்கட்டும், வார்த்தையை உதட்டில் வைத்து கௌரவத்துக்காகச் சொல்லக்கூடாது. முடியும் என்ற எண்ணம் நூற்றில் ஒருவருக்குண்டாவதுகூட அபூர்வம். சில சமயங்களில் வாலிபர்கள் துணிந்துவிடலாம். அப்படித் துணிவு உண்டானாலும் ஆழ்ந்த யோசனையும் யுத்தவீரனுக்குள்ள தைரியமும் இருக்கவேண்டும். கோழைமனம்—அதாவது அல்ப விஷயத்துக்கும் அதைரியப்படுகிறவன் சுதந்தரமாய் ஒரு தொழிலைச் செய்ய முடியாது. ஒவ்வொரு தொழிலுக்கும் யோக்யதையும் கௌரவமும் இல்லாமற் போகாது. உடம்பில் பலம் உள்ள வரை வேலைசெய்ய முடியும் என்று வீரம் பேசுவோர் தம் சரீரபலத்தை நம்பியவர். தோட்டிவேலை முதல் தொண்டமான் வேலைவரை சமயோசிதமாய் செய்யத் தமக்குச் சக்தியுண்டு என்று சொல்வோர் புத்தியின் பலத்தை நம்பியவராகும். ஆகையால் இவ்விரண்டில் புத்தியின் பலமே மேலானதென்பது நன்கு விளங்கும்.

இதனால் புத்தியின் பலத்தை விர்த்திசெய்ய முயற்சி செய்யவேண்டும். அதற்கான நூல்களும், நிதர்சனமாகச் செய்யப்படும் தொழிலின் அனுபவம் இவ்விரண்டுமே தக்க

சாதனங்களாகும். மனோவல்லமையுள்ள தீரர்கள் பெரியோர்கள் தங்கள் அபிப்பிராயங்களை, லாபநஷ்டத்தை கஷ்டசுகத்தை பின்வரும் சந்ததியார் படித்து உத்தமமான வழிக்கு வரவேண்டுமென்று புத்தகவாயிலாய் வெளியிட்டிருக்கிறார்கள். எந்தத் தொழிலையும் படித்தறிவதோடு பட்டறிந்து மேன்மைப்படுவதே சிலாக்கியமாகும்.

தொழில் முறை.

முறை என்ற பதத்துக்கு, ஒழுங்கு அல்லது கிரமம் என்பது பொருளாகும். முறை தப்பிய தொழிலே பாரத நாட்டில் பரவியிருக்கின்றது. இதனைச் சீர்திருத்தவே சில சமயங்களில் பெரியோர் தேவை என்று சொல்லப்படுகிறது. ஒரு தொழில் அபிவிர்த்தியாகாமலும் சித்திபெறாமலும் இருப்பதற்கு ஒரு கிரமமான முறையை அனுசரிக்காமலிருப் பதே காரணமாகும். தான் தோன்றியாய்—நினைத்தபடி பயமற்ற பசுங்கன்றைப்போல், இஷ்டம்போல் பணத்தை இறைத்து, ஒரு பலனையும் அடையாமல் தவிக்கிறவர்கள் அதிகம். இந்த முறையைத் தான் நீதி யென்றும் சட்ட மென்றும் வகுக்கப்பட்டுப் பொது ஜன சகாயத்துக்கு அனுகூலப் படுத்தப் பட்டிருக்கிறது.

நியாயஸ்தலம்.

கோர்ட்டு எனப்படும் நியாயஸ்தலத்தில் எப்படி நியாயம் சொல்லுகிறார்கள் என்பதை விசாரிப்போம். அநேகமாக இருதரக் கட்சியாரையும் செவ்வனே விசாரணை செய்து சட்ட நூல்களைப் பார்த்து அதற்கு நிகரான விவகாரங்களை எங்ஙனம் விசாரித்து தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள் என்று படித்துப்பார்த்து, தன் புத்திக்கும் பொருத்தமா வென்று சிந்தித்து தீர்ப்பு சொல்லுகிறார்கள்.

அதைப்போல தொழில் முறையிலும் ஒரு வரம்பை யேற்படுத்தி, அதில் தனது சிந்தனையைச் செலுத்தி நடத்த

வேண்டும். மனதில் வல்லமை யில்லாவிடில், வாக்கு வல்லமை எங்ஙனமுண்டாகும்? ஆசைக்கு ஓர் அளவும் தொழிலுக்கு ஒரு வரம்பும் இருக்கவேண்டும். தொழில் செய்வோனுக்குத் தான் காலத்துக்கு விலை மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நிமிஷமும் சில சந்தர்ப்பங்களில் விலை மதிக்கக் கூடாததாயிருக்கும்.

வரம்புக்குட்பட்ட ஒரு முறை, உன் தொழிலின் அபிவிர்த்தியைக் காட்டிக்கொடுக்கும். முற்போக்கான விஷயங்கள் மனதில் தானே உதயமாகும். தொழிலின் பலன் ஒவ்வொரு நாளும் தெரியவரும். கஷ்டங்களை தனக்குள் அடக்கி நிவர்த்திக்கத்தக்க சாமர்த்திய முண்டாகும். ஸ்திர புத்தியுண்டாகும். பொதுவில் கவனிப்புண்டாகும். தொழில் ஒழுங்காய் நடைபெறும். வியாபார விர்த்திக்கான யுக்திகள் தோன்றும், லாபம் வருகிற மார்க்கத்தைக் கண்டு கொள்ளலாம். எங்கு நஷ்டமுண்டோ அங்கேலாபமுண்டு. தொழில் எவ்வளவு சிறிதாயிருந்தாலும், மிகப் பெரிதாயிருந்தாலும் ஒரு ஒழுங்கு—முறை—திட்டம் இருந்தேதீர வேண்டும்.

கிரமம் அல்லது ஒரு திட்டத்துக்குட்படாத தொழில் திசை தப்பிய கப்பல் பாறைகளில் மோதுண்டு அவதிப்படுதல் போலாகும்.

இக்காலத்தில் வியாபாரத்தை ஒரு எல்லைக்குட் படுத்தி ஒரு முறையைப் பின் பற்றி நடத்துகிறவர்கள் அமெரிக்கா தேசத்தார் என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். தொழில் விர்த்திக்கான பாடசாலைகளையும் அமைத்து விட்

டார்கள். அவர்கள் அனுசரித்து பலன் கண்ட முறைகளை தெய்வீகமான சாஸ்திர முறையாகவே கொண்டாடுகிறார்கள். மேடு பள்ளங்களில் வண்டியைவிடுவதுபோல், சிலர் இவ்வப்படி தொழிலை வரம்பின்றி நடத்தி பூர்வீகநிலைமையை விட்டுத்தாழ்ந்து விடுகிறார்கள். இதற்குக்காரணம் அளவில்லாத ஆசையேயாகும். இன்னும் சிலர் ஆசையின் பெருக்கால் அளவின்றி கடன்வாங்கி தொழிலை நடத்தி, இருந்த ஜலத்தையும் வந்த வெள்ளம் கொண்டு போனது என்பது போல கஷ்ட நிலைக்கு வந்து விடுகிறார்கள்.

ஒருகாலத்தில் சுமார் பதினாயிரம் வியாபாரிகள் தேசத்து நானா பக்கங்களிலிருந்தும், நியூயார்க் என்னும் பட்டணத்திலுள்ள மத்தேசன் புஷ்பவனத்தில் சபை கூடினார்கள். வியாபார விர்த்திக்கான வழிகளை ஒருவருக்கொருவர் தெரிந்துகொள்வதே சபையோரின் கருத்து. புஸ்தகம் அச்சிடுதல், கிரய ஜாப்தா தயார்செய்தல், கணக்கு வைத்தல், யந்திர உதவியால் கணக்குப் பார்த்தல் முதலானவைகளைப் பற்றி முதிர்ந்த அநுபவத்தை வெளியிட்டனர். (Daily Telegraph) டெய்லி டெலிகிராப் (தினத் தந்தி) என்ற பத்திரிகையில் வெகு விமரிசையாய் வெளியிடப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் கூடிய வர்த்தகர்களெல்லாம் நன்றாய்க் கற்றறிந்தவர்கள். "நேரத்தை மிச்சப்படுத்துகிறேன், அதுவே பணமாகிறது; நிர்வாகத்தில் தேர்ந்தவன், ஆகையால் பல தொழிலும் செய்யத் தக்கவன்"—என பல்வேறு விஷயங்களைப்பற்றி அப் பொதுக் கூட்டத்தில் பேசப்பட்டன.

வியாபாரத்தில் சூதான மார்க்கத்தை அனுசரிக்கக் கூடாது. அது முடிவில் கேட்டை விளைவிக்கும். தொழில்

அழிந்துபோகும். இதற்காகவே நியாயமான மார்க்கத்தில் ஒரு திட்டத்துக்குட்பட்ட தொழிலைச் செய்யவேண்டுமென்று சொல்லப்படுகிறது.

பொது ஜனங்களுக்கான சௌகரித்தைப் பெரிதும் நாடி--கவனித்து ஒரு வியாபாரத்தை நடத்துவதே மேலான தர்மமாகும். நல்ல சரக்கும் கண்டிப்பான ஒரே விலையும் வியாபாரத்துக்கு அஸ்திவாரமாகும்.

இந்த நாகரீக காலத்து வர்த்தகர்கள் தங்கள் தொழில்களை நேர்பார்வையில் விசேஷ கவனம் செலுத்தி நடத்துகிறார்கள். வேலைக்காரர்களின் தன்மை, தொழிலின் போக்கு இவைகளை அறிந்தும் அறியாதவர்கள்போல் நடத்துகிறார்கள்.

வியாபாரத்தில் வழவழவென்று பேசினதையே திருப்பித் திருப்பிப் பேசி காலத்தை வீணாக்கலாகாது. வீண் கூட்டம், காரியமில்லாத பேச்சு இவைகளை நீக்கவேண்டும். ஒரு திட்டமான வரம்புக்குட்பட்ட தொழில் நடத்தப்படுமானால் எஜமானர்களுக்கும், வேலைக்காரர்களுக்கும் சௌகரியமாயிருக்கும். தொழில் சரிவர நடக்கிறதா வென்று எந்த நேரத்திலும் கவனிக்கலாம்.

வியாபார மில்லாத காலத்தில் இருக்கிற பொருள்களை ஒவ்வொன்றாய் எடுத்து சுத்தி செய்து வைக்கவேண்டும். ஒவ்வொரு பொருளுக்கும் பிரத்தியேகமான கணக்கு வைத்துக்கொண்டு, கூடுதல், குறைதல் முதலான விவகாரங்களை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

தொழில் முறைக்கு பிரத்தியேகமான பத்திரிகை வெளியாகிறது. அதில் அனுபவத்தில் கண்ட சுலபமான வழிகளை அப்பத்திரிகையில் வெளியிட்டு வருகிறார்கள். பொருள்களை பார்க்கிறதற்கு ரம்மியமாய்—மனோகரமாய் பார்ப்பவர் மனதையும் கருத்தையும் பற்றியிழுக்கும் வண்ணம் அழகு படுத்தி அடுக்கவேண்டும்.

வேலையில்லாத நேரத்தில் விர்த்திக்கான வழியில் சிந்தையைச் செலுத்தி புது ஊக்கத்தைப் பெறவேண்டும். யோசனையை சிக்கலான வழியில் வைத்துக்கொள்ளலாகாது. அனுவசியமாக பிறரிடத்தில் தன் தொழிலைப்பற்றி ஆலோசிக்கக் கூடாது. ஒரு முறைக்குப் பன்முறை தானே அபிவிர்த்திக்கான வழியில் சிந்தனை செய்து ஒரு அபிப்பிராயத்துக்கு வரவேண்டும். இவ்விதமாகக் காலத்தை செலவிட வேண்டும். இன்னும் பத்திரிகைகளில் இதர வியாபாரிகள் எங்ஙனம் விளம்பரம் செய்கிறார்கள் என்று கவனிப்பதால் தனது தொழிலுக்கு ஏற்ற யோசனை யுண்டாகும்.

மனோ தைரியம்.

வர்த்தக யுக்தியில் 'துணிவு' அல்லது தைரியம் என்ற விஷயத்தைப்பற்றி ஒரு சிறிது சொல்லப்பட்டிருக்கிறது.

மனோதைரியமுள்ளவனுக்கு மனோபலம்—சக்தி—அதிகம். அதைத் தன்னுள் அடக்கி மௌனமாய், வியாபாரத்துக்குத் தக்கதாறு உபயோகிக்க வேண்டும். வாக்கை—அதிகப்பேச்சை அடக்கினாலன்றி மனோ வன்மை யுண்டாகாது. பேசவேண்டிய சந்தர்ப்பம் நேரிட்டகாலத்தில் சுருக்கமான வார்த்தைகளை உபயோகிக்க வேண்டும்.

போலித் தைரியமே விசேஷமாய் எல்லோருக்கும் உண்டாகும். இது அகங்காரத்தாலும், பொறுமையாலும் உண்டாகக் கூடியது. சிலர் கோபத்தால் தைரியத்தை அடைவதுண்டு. இவ்வாறு உண்டாகும் தைரியமெல்லாம் நீடித்திருக்க மாட்டாது. நன்மை யுண்டாவதும் அபூர்வம்.

உன்னத பதவியை முயற்சியால் அடைந்தோரெல்லாம் திடசித்தத்தாலான தீர்மானத்தைக் கைக்கொண்டவர்களாவர். உனக்கு ஒரு வீடும் சௌகரியமும் இவ்வுலகில் எப்படி உண்டாயிற்றோ அவ்விதமே ஜெயமும் பிரதாபமும் உனக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றன. முன்னேற்றத்துக்கான முயற்சியும், ஸ்திர புத்தியும் அத்தியாவசியம். உனக்கு எது நியாயமெனத் தோன்றுகிறதோ அதையே செய். உனது முடிவான தீர்மானத்தை மாற்றாதே. திடமான தீர்மானத்தால்தான் பெரியோர்கள் தங்கள் காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள். முடியாத காரியம் என்பதென்று

இல்லவே இல்லை. ஆனால் அவ்வுரிச் சொல் சக்தியில்லாதவர்களாலும், சோம்பேறிகளாலும் உபயோகப்படுத்தப்படுகிறது. தீராத ரோகம் வந்துற்றாலும் குறையாத மனோதிடம், துணிவு—இருக்குமாயின், தீராத நோயும் தீர்ந்தது என்று சொல்லவேண்டிவரும். மனோ தைரியமுள்ளவர்களிடத்தில் சாதனை சக்தி வளர்கிறது. அலெக்ஸாண்டர் இருபதாம் வயதில் சிம்மாசனத்திலமர்ந்து முப்பத்திமூன்று வயதுக்குள் அநேக தேசங்களை ஜெயித்தனர். கிளாட்ஸன் என்பவர் இருபதாம் வயதில் பார்லியமெண்டில் மெம்பரானார். இருப்பத்தி நாலில் கஜானாவுக்குப் பிரபுவானார். எலிசபெத் என்னும் ஒரு மாது பன்னிரண்டு வயதுக்குள் கிரீக், லாத்தின் ஆகிய இரண்டு பாஷையிலும் பாண்டித்தியமுள்ளவளாயினள். செல்ஸன் என்பவர் இருபது வயதுக்குள் சைனியத்தில் உயர்ந்த பதவியைப் பெற்றிருந்தார். தைரியத்தை இடைவிடாது மனதில் கொண்டு, முயற்சியில் மேன்மை படைத்தவர்களைப் பற்றி எழுதுவதாயின் பெரிய நூலாகிவிடும். பிரவர்த்திக்கும் உற்சாகத்துக்கும் மனோ பலம் இன்றியமையாதது. ஒன்றைக் கண்டு பயப்படாதிருந்தால் தைரியமுள்ளவனென்று சொல்லமுடியாது. கஷ்ட நஷ்டங்களை சகித்துக்கொண்டு வேலை செய்வதற்கு எது சகாயமாயிருக்கிறதோ அதுவே துணிவு—மனோதிடம்.

"The brave man is not he who feels no fear,
For that were stupid and irrational ;
But he whose noble soul its fear subdues,
And bravely dares do more is none".

Shakespeare.

மன வலிமை

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

—திருக்குறள்.

எந்தத் தொழிலைச் செய்தாலும், அல்லது எந்த உத்தியோகத்தைச் செய்தாலும் மனதில் உறுதி இருக்க வேண்டும். அப்படி உறுதி யில்லாத தேகம் உளுத்த மரத்துக்குச் சமானம். இந்த உறுதியினால் அபாரமான காரியங்களை பெரியோர்கள்—மகான்கள் செய்து முடிக்கிறார்கள். எவ்வித சங்கடங்கள், கஷ்டங்கள் நேர்ந்திடினும், மனம் கலங்காதிருக்க வேண்டும். கடைப் பிடித்த உறுதி சித்தியாகும் வரை கொண்டுசெலுத்த வேண்டும். ஒருவர் முன்னேற்றத்தை அடைவதற்குச் சாதனமாயுள்ளது மனோ சக்தி ஒன்று தான். அதைக்கொண்டுதான் உலக விவகாரங்களில் ஜெயத்தை அடைய வேண்டும். திடமாய்—வைராக்கியமாய்க் கொண்ட உறுதியைக் குறைப்பதற்கே விக்கினங்களுண்டாகும். கஷ்டத்தில் சலங்காதிருத்தல் சிலாக்கியமாகும்

மனோ சக்தி யில்லாத ஜீவ ஜெந்துக்களில்லை. என்றாலும் மனிதருடைய மனோசக்திக்கு வலிமை அதிகம். அதனை நேர்மைப் படுத்த வேண்டும்; கல்வியாலும் சிந்தனையாலும் பண்படும்; உனது சக்தியை நீ நம்பவேண்டும். உறுதி, பிடிவாதம், வைராக்கியம் இவை ஒரே மாதிரியான அர்த்தத்தைக் கொண்ட போதிலும் பதமானது சந்தர்ப்பத்துக்

குத் தக்கவாறு உபயோகிக்கப்படுகிறது. உறுதி யென்பது லௌகிகமான விவகாரங்களில் மிக்க அவசியமென்பது நன்கு விளங்கும். இந்த உறுதியின் தீர்மானம் பழக்கமாகி வழக்கத்திற்கு வந்து விடுகிறது.

வாலிபர்கள் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டுமாயின் அதற்கு உறுதியைக் கைக் கொள்ள வேண்டும். அப்பொழுது மனோ சக்தி அதிகாலையில் ஞாபகப்படுத்துகிறது. தினந்தோறும் காலையில் 7 அல்லது 8 மணி வரை நித்திரை செய்து வழக்கப்பட்டவர்களுக்கு அதிகாலையில் 5 மணிக்கு எழுந்திருக்கிறதென்றால் மிகக் கஷ்டமாகத்தானிருக்கும். மனதிற் கொண்ட உறுதிப் பிரகாரம் நடந்து கொள்வதாயின் சர்வ சித்தியும் உண்டாகும். உறுதிக்கு சக்தி அதிகம்.

இந்த உறுதி சாமான்யமாக எல்லோரிடத்திலு மிருக்கும். ஆனால் ஒன்றுக் கொன்று சம்மந்தமற்ற விரோத வழியில் வளர்ந்து வரக் கூடும். அதாவது கெட்ட வழியில் விர்த்தியாகலாம். ஆகையால் இந்த மனோ தைரியத்தால் முதிர்ச்சி பெற்ற உறுதி நல் வழியிலும் நியாயத்திலும், நிறுத்த வேண்டும். உண்மை பேசுவதில் உறுதி யிருக்கவேண்டும். ஆசையை அடக்கவும், போசனத்தில் உற்சாகமா யிருக்கவும், கருதிப் பாசாங்கு செய்யச் சற்றும் விரும்பாமல் உன்னால் செய்யக் கூடிய காரியத்தில்—தொழிலில்—உறுதியுள்ளவனா யிருக்கவேண்டும். பிறர் உதவியைக் கொண்டு வாழ்கிறதற்கு உறுதி கொள்ளக் கூடாது. தன் பலம் கொண்டு தன் காலால் நடக்க உறுதி வேண்டும். இந்த மனோதிடமான உறுதிதான் இகபரம் இரண்டுக்கும் சாதனமாயுள்

ளது. மன உறுதி யில்லாவிடில் துக்கத்துக்கும் கஷ்டத் துக்கும் மூலாதாரமான சோம்பல் உண்டாகும். இந்த சோம் பலுக்கு இடம் கொடுத்து விட்டால், துரதிர்ஷ்டம், கெட்ட காலம், தரித்திரம் இவைகளெல்லாம் ஒரு ஜீவனுக்கு யுத்த களமே என்று கருதவேண்டும். அந்த யுத்தகளத்தில் துன் பமும் துயரமுமே உருவானவீரர்களாய்த் தோன்றுவார்கள்.

ஆகையால் தன்னடக்கமும், நல் வழிக்கான உறுதியும் அவசியமாகும். இந்த உறுதி வியாபாரத்துக்கு மாத்திர மல்ல, லௌகிகமான சகல விவகாரங்களுக்கும் அத்தியாவசிய மாகும்.

தன்னடக்கம்.

"எல்லார்க்கு நன்ரும் பணிதலவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து

—திருக்குறள்.

ஒருவன் தனது நிலைமை, பலம் நோக்கம், முதலான விஷயங்களை நன்குணர வேண்டும். உனது மனோ நிலைமையின் தர்மத்தை அறிந்து நீ செய்யப்போகிற சர்வ காரியங்களும் உனக்குட்பட்ட தென்பது எப்பொழுதும் ஞாபகத்திலிருக்கட்டும். எந்தக் காரியத்தைச் செய்ய நினைக்கிருயோ அதைப்பற்றி முதலாவது நீயே யோசனை செய். மனதில் தீர்மானமில்லாதபடி வாக்குக்கு அதாவது பேசுகிறதற்கு இடம் கொடுக்கக்கூடாது. உனது மனோ பலத்துக்குத் தக்கபடி தான் யோசனை உண்டாகும். உனது அந்தஸ்துக்குத் தக்கபடிதான் மனோ தர்மமும இருக்கும். கண்ட பொருள்களை யெல்லாம் பேராசையால் இச்சித்து மனதைப் புண்படுத்திக் கொள்ளாதே. உனது மனோ திடத்தோடு தன்னடக்கமும் இருக்குமானல் ஒரு தொழிலில் பிரவேசிக்கலாம்.

தன்னடக்கம் என்ருல் மன அமைதி. தன்னை ஜெபித்தவனே தரணியை வென்றவனுவான். உன்னை நீ அடக்கியாளும் திறமையுண்டாயின், இந்த உலகத்தில் எதையும் கட்டி ஆளலாம். முதலாவது உன் மனதைக் குளிர்ந்த தன்மையில் வைத்துக்கொள். அகங்காரம், கோபம் இவையிரண்டும் ஒளவுக்குட்பட்டு கட்டுப்பட்டதாயிருக்க வேண்டும். தன்னடக்கம் அதாவது அமைதியுள்ள மனம் ஜீவ ரத்தினத்துக்குச் சமானமாகும். மனதை இஷ்டம்போல்

விடக்கூடாது; அதனை அடக்கி நடத்துதலே தன்னடக்கம் என்று சொல்லப்படுகிறது.

மிதமிஞ்சிய வேலை அகங்காரத்தால் கோபங்கொள்ளுதல், சத்தமிட்டுப் பேசுதல், ஆகாரக் குறைவு, மட்டுக்கு மிஞ்சிப் புசித்தல், ஒடுங்கிய விடங்களில் வாசஞ் செய்தல், மூர்க்கத்தன்மை ஆகிய இவைகள் சுகவாழ்வுக்கு ஜன்ம சத்துருக்களென வைத்திய முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பேராசையால் விளையும் தீமை—துன்பம் மேற்கண்ட எதனாலும் அவ்வளவு கெடுதியுண்டாவதில்லை. மேலும் (வாலிபர்களைவிட) வயது முதிர முதிர ஆசையும் அளவில்லாமல் பெருகிக் கொண்டேயிருக்கிறது. இன்னும் விருத்தர்களின் ஆசைக்கு எல்லையேயில்லை. இவைகளுக்கெல்லாம் ஒரே காரணம்தான் உண்டு. அதுதான் தன்னடக்கமில்லாமை.

சண்டை சச்சரவு நடக்கும்போது ஒருவன் மன அமைதியாகிய தன்னடக்கத்தைக் கைக்கொள்ளுவானாயின் சண்டை போடுகிறவன் தனக்குத்தானே சண்டை செய்துவனுவான். மன அமைதியின் வல்லமை எதிரியின் மன வெப்பத்தைத் தணித்துவிடும். சாக்ரட்டீஸ் என்ற கிரேக்க மேதாவி கோபம் வரும்போதெல்லாம் மெல்லிய குரலில் பேசித் தன் கோபத்தைத் தணிப்பது வழக்கம். உன்னை எவனாவது தூஷிப்பானாயின் நீ வாயைத் திறக்காதே—மௌனமாயிரு. கோபத்தால் கெட்டவர்கள் அதிகம். கோபத்தால் விறுப்பு வலிப்பு என்ற வியாதிகூட உண்டாகிறது.

இன்னொருவருடன் பேசும்போது நிதானமாய்ப் பேசு. வாதமிட நேர்ந்தாலும் அவசரப்படாமல் சாவகாசமாய்ப் பேசு. அடக்கமாயிருத்தல் என்னும் பாக்கியம் ஒருவனுக்கு இருந்து விடுமானால் எதிரி தன் வசப்படுகிறான் என்று சாஸ்திரத்திலும் சொல்லப்படுகிறது.

தன்னடக்கமில்லாத எவருக்கும் மற்றவர்களை அடக்கியாளும் திறமை யுண்டாகாது.

தன்னடக்கம் உயர்ந்த நிலைமைக்கும் வழியைக் காட்டும். இதைப்பற்றி விவேகானந்த ஸ்வாமிகள் தமது ஒவ்வொரு பிரசங்கத்திலும் சொல்லியிருக்கிறார். மூன்றுவிதமான மௌன நிலைக்குத் தனது பெரு விரலைப்பார்க்கிற தென்ற வழக்கத்தை அனுசரித்து வந்தார். இன்னும் அவர் தமக்கு நேரிட்ட ஆபத்துக்களையெல்லாம் பொறுமையைக் கொண்டே வென்றார்.

இந்த மானிட சரீரமோ ஒரு யந்திரம் போன்றது. அது செய்யக்கூடிய வேலையும் யந்திரத்தைப் போலவே யாகும். அமைதியுடன் வேலை செய்யும் யந்திரங்களைப் பொது ஜனங்கள் விரும்புவதுபோல, மன அமைதியுள்ளவர்கள் தான் தொழில்களுக்கு ஏற்றவர்களாவார்கள்.

தன்னடக்கமுள்ளவர்கள் மற்றவர்களுடைய குண பேதங்களை அறியக்கூடியவர்கள். ஒருவர் வாய் திறந்து சொற்பம் பேசினாலும் அவரது குறை குணத்தைத் தெரிந்து கொள்ளலாம். இப்படித் தெரிந்து கொள்கிறவர்களிடம் ஓர் அபூர்வமான சக்தி யிருக்கிறது. இன்னும்

அடக்கம் என்னும் வல்லமை அடைந்தவர்கள் ஒருவர் முகத்தைப் பார்த்ததும் நல்லவர் அல்லது துர்க்குணமுள்ளவர் என்றுந் தெரிந்து கொள்ளுகிறார்கள்.

துர்க்குணங்கள்—அதாவது பொறாமை, கர்வம், கள்ளங்கபடு, பொய் சூது. இத்தியாதி குணமுடையோருக்கு தன்னடக்கம் உண்டாவது அபூர்வம். களங்கமில்லாத மனமுடையோருக்குத் தான் தன்னடக்கமான பொறுமையுண்டாகும்.

> The time shall come when man to man shall be a friend and brother.
>
> —**Massey.**

புத்தியும் யுக்தியும்.

"சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்"

—திருக்குறள்.

தீவிரமான புத்தி நுட்பமுடையோருக்குத்தான் யுக்தி தோன்றும். சிலருக்கு நல்ல யுக்தி யுண்டாகும். ஆனால் திடமான புத்தி யிருக்காது. இம்மாதிரியான மனிதர்களைப் பார்த்துத்தன், 'வாய்வெட்டு' காரியத்திலாகாது என்று சொல்வது வழக்கம். மனோபலம் மிகக் குறைவு, எப்பொழுதும் சொல்வது எளிது. அதன்படி நடப்பது அரிது. இவ்வுலகம் எல்லோருக்கும் பொது என்ற எண்ணம் உண்டாகுமாயின், முன்னேற்றத்துக்கான வழி தோன்றும். மனதில் உன்னதமானதும் தனக்கு ஏற்றதுமான எண்ணம் உண்டாகவேண்டும். இழிவான நினைவு கூடாது. இதைக் கருதியே தான் பெரியோர் 'மனம்போல் வாழ்வு' என்று சொல்லி யிருக்கிறார்கள். 'கெடுவான் கேடு நினைப்பான்' 'நன்மை விதைத்தால் நன்மை விளையும் தீமை விதைத்தால் தீமை விளையும்,' என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் மனதை நல்வழியில் நிறுத்தி நல்விஷயங்களை நினைக்கவேண்டும்.

வாய்ப்பேச்சில் அதிக யுக்தியைக் காட்டுகிறவர்கள், செய்கையில் அவ்வளவு திறமையுடையவர்களாக மாட்டார்கள். மனோசக்தி மனோ அமைதியாலுண்டாகிறது. அந்த மனோ சக்தியிலிருந்து யுக்தி யுண்டாகிறது. இந்த யுக்தி நேரே செய்கைக் கேகவேண்டுமே யன்றி வாக்குக்குச்

சம்பந்தப்படுமாயின் யுக்தியின் வலிமை குறையும், புத்தி வேறு யுக்திவேறு. யுக்தி யுள்ளவர்களுக்குச் சோம்பல் உண்டாகாது. மூளையின் சக்தி ஒரு யந்திரத்தின் சக்கரத்தைப் போல சுற்றிக்கொண்டேயிருக்கும். ஒன்றைப் பார்த்தாலும் யுக்தி தோன்றும். நினைத்தாலும் புதிய யுக்தி தோன்றும். யுக்தி யுள்ளவர்கள் ஆலோசனை செய்வதற் கேற்றவர்கள். யுக்தி யுள்ளவர்களின் புத்தி கூர்மை யாகவே யிருக்கும்.

மேனாட்டிலும் அமெரிக்கா தேசத்திலும் யுக்தியுள்ள மேதாவிகள்தான் யந்திரங்களைக் கண்டு பிடிக்கின்றனர். புதிது புதிதாய் ஒன்றைச் செய்யவே யுக்தி தோன்றும். ஆனால் போட்டிக்கான போலித் தொழில் செய்யார்கள். நம் இந்து தேசத்தில் மாத்திரம் யுக்தி யுள்ளவர்கள் இல்லையா? எண்ணுக் கடங்காது. அளவற்ற புத்திமான்கள் இருக்கிறார்கள். இந்தியா தரித்திர நிலைமையில் இருப்பதால் நம்மவர்களுக்குள்ள திறமை தெரியாமலிருக்கிறது. பணம் படைத்த அநேக செல்வவான்கள் தங்கள் வயிற்றை நிறப்புவதோடு நின்று விடுகிறார்கள். பொறுமையால் தன் காரியக் குட்டிகளாகி விடுகிறார்கள். பரோபகாரமான குணம் பரவுமானால் இந்தியாவின் அபிவிர்த்தியைக் கண்டு நம்மைப் பின்பற்றுவாராவர். நாமெல்லோரும் ஆட்டுக்குட்டிகள் என்று நினைத்துக்கொண் டிருக்கிறோம். நாம் சிங்கக் குட்டிகள் என்பது நினைவுக்கு வருகிறதில்லை. வீரத்தன்மை யுள்ளவர்கள், சாமர்த்திய சாலிகள், கௌரவமான புருஷர்கள், ஞானதீரர்கள் என்பது நினைவிலிருக்குமாயின் நம்மைப்போல் பாக்கிய சாலிகளும் உண்டோ ?

வியாபாரமும் கடிதமும்

வியாபார முறைக்கு கடிதம் எவ்வளவோ நன்மை செய்யக் கூடியது. வியாபாரிகள் சாதாரண கடிதத்தில் இரண்டு அல்லது மூன்று வர்ணங்களில் தாங்கள் விற்பனைக்கு வைத்திருக்கும் ஒவ்வொரு பொருளின் பெயரையும் அச்சிடுகிறார்கள். இதைப்போல் ஐம்பது மடங்கு தொழில் செய்யும் வியாபாரஸ்தலத்தில் சுத்தமான கடிதத்தில் கருப்பு மையில் கம்பெனியின் பெயர், ஊர் பெயர் இவ்விரண்டை மாத்திரம் அச்சிட்டு, எவ்வகைக்கும் அதனையே உபயோகிக்கிறார்கள்.

ஒரு வியாபாரஸ்தலத்தின் கடிதம் தொழிலின் நிலைமையைக் காட்டக் கூடியதாகும். கடிதத்தைக் கண்டும் தொழில் முறைக்கு நல்ல (Letter Paper) கடிதமே சிலாக்கியமானது. கையெழுத்து ரமணீயமாய்—சுத்தமாய், அச்செழுத்தைப் போல் ஒன்றோடொன்று சேராமல், ரெயில் வண்டி கோத்தாற்போல் இருக்க வேண்டும். பார்த்தவுடன் படிக்கச் செய்யக் கூடிய வசீகர சக்தி கொண்டதா யிருக்க வேண்டும். வாசக நடை யெப்படியும் மனோ தர்மத்தைக் காட்டிக் கொடுக்கும். எழுதும் பதங்களில் தப்பிதம் இருக்கக் கூடாது. வாக்கியம் அழகாய் முடிவு பெற்றிருக்க வேண்டும். 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' என்ற தர்மத்தை அனுசரித்து எழுத வேண்டும். கடிதம் எழுது முன், விஷயங்களைப் பகுத்துக் கொண்டு தனித்தனி பாராவாக

எழுத வேண்டும். எழுதின விஷயத்தையே திருப்பித் திருப்பி வழ வழ வென்று எழுதக்கூடாது.

தாக்ஷிணியம், கண்டிப்பு, சலுகை, மிகுந்த மரியாதை முதலான தாரதம்மியங்கள் கடிதத்தில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களைக் கொண்டு தெரிந்துகொள்ளக் கூடியதாகும். இன்னும் பணம் வசூல் செய்ய வேண்டிய வகையில் படிப் படியாய்க் காலங்காட்டி எழுதவேண்டியது.

சிலர் ருசியற்றதாய் பல விஷயங்களை ஒன்றுகொன்று சம்பந்த மின்றி யெழுதி ஒருவித முடிவும் தெரிவதற்கில்லாத படி கடிதம் எழுதுவதுமுண்டு. கடிதமெழுதுவதாலான தாத்பர்யம் தெளிவா யிருக்க வேண்டும். சுவற்றின் மேல் பூனையிருக்கிற மாதிரியில் கடிதம் எழுதக்கூடாது. விவகாரம் ஸ்பஷ்டமாய் தெரியக் கூடியதாய் எழுதவேண்டும். காரியமற்ற கடிதம் ஒரு காரிய ஸ்தலத்தை விட்டுப்போவதால் ஒரு பலனுமுண்டாகாது.

விளையாட்டுக் கெழுதினேன் என்பதாக எவருக்கும் கடிதம் எழுதக் கூடாது. பல அர்த்தம் உண்டாகும் படியான வாக்கியத்தை யெழுதக் கூடாது. கால மாறுதலுக் கேற்றவாறு, நன்மை தீமையாகவும், தீமை நன்மையாகவும் மாறிவிடும்.

ஒரு கடிதத்தை இருமுறை படிக்கவேண்டும். நிதானமாய்க் கவனிக்க வேண்டும். மனதில் ஒன்றை நினைத்துக் கொண்டு, கடிதத்தை அவசரமாய்ப் பார்ப்பதால் விபரீதம் உண்டாய் விடும். 'வர வேண்டும்' என்று எழுத மனதில்

நினைத்து எழுதும்போது 'வரவேண்டாம்' என்று கைப் பிசகு ஏற்பட்டுவிடும். கடிதம் எழுதும்போது இன்னொருவரிடம் பேசிக்கொண்டிருக்கக் கூடாது. மற்றொருவர் பேசுவதையும் கவனிக்கக்கூடாது.

"தங்கள் அன்பான கடிதம் வரப்பெற்று விஷயங்களை முற்றிலும் படித்தறிந்தோம்" என்று பதிலெழுதுமுன் கேட்கப்பட்ட விஷயங்கள் கவனிக்கப்பட்டிருக்கிறதாவென்பதையும் அறியவேண்டும்.

கடிதம் எழுதும்போதே 'இக்கடிதத்தைத் தந்தியாகப்பாவித்து உடனே பதிலெழுதவேண்டும்' என்று அநேகர் எழுதுவதுண்டு. தான் அவ்விதம் வருகிற கடிதங்களுக்கு உடனே பதிலெழுதுவதுண்டா வென்பதைச் சிந்தித்துப் பார்க்கட்டும். மற்றோர் தனக்கு உடனே பதில் தரவில்லையென்று கோப தாபப்படுவதுண்டு. வந்த கடிதங்களுக்கு உண்டு அல்லது இல்லை, முடியும் அல்லது முடியாது என்று பதில் எழுதுவதுண்டாவென்று சிந்தித்துப் பார்க்கட்டும்.

"நான் அவர்களைப் போலல்ல, என்னையும் அவனைப் போல நினைக்கவேண்டாம், கடிதம் யார் எழுதினாலும் உடனே பதிலெழுதி விடுவேன். பண விஷயத்திலோ யான் வெகு கண்டிப்பு" என்று வாய் வீச்சு—தடபுடல் பேசுகிறவர்கள் வாக்குப்படி நடப்பது வெகு அபூர்வம்.

வியாபாரத்தில் கடிதங்களுக்கு மறு தபாலிலேயே பதில் எழுதியனுப்பவேண்டும். விபரமான பதில் உடனே அனுப்பமுடியாமற் போயினும், 'கடிதம் கிடைத்தது, விபரம்

இரண்டு நாட்களுக்குள் எழுதி அனுப்புகிறோம்' என்றாவது ஒரு கார்டாவது அனுப்பவேண்டும். சரக்குகள் வாங்கி அனுப்பும்படி எழுதினாலும், மறு தபாலில் 'ஆர்டர் கிடைத்தது,—இன்ன தேதியில் பார்சல் அனுப்புகிறோம்' என்று எழுதவேண்டும்.

கடிதம் கிடைத்தது பதில் எழுத நேரமில்லை என்று சொல்வோர் அதிகம். மறந்து விட்டேனென்று சொல்வது தான் உண்மையானது. எழுதுவதற்கு நினைவு—ஞாபகம் — அடிக்கடி உண்டானாலும், பிறகு எழுதிக் கொள்ளலாமென்ற சோம்பல் தள்ளிக்கொண்டு போகும். ஒருவரைவிட்டு அயலூர் போவார், போனவுடன்—ஊர் போய்ச் சேர்ந்தவுடன் கடிதமும் எழுதுகிறேன் என்று அநேகர் சொல்வது வழக்கம். ஆனால் அவ்விதம் நடப்பது அபூர்வம்.

ஒரு மனிதனுடைய குணத்தையும், வழக்கத்தையும் காட்டுதற்கு கடிதமும் ஒரு அத்தாட்சியாகும்.

தெரிந்தவர்களுக்குக் கடிதம் எழுதும்போது படாடோபமாய் அச்சிடப்பட்ட கடிதம் தேவையில்லை. தன்னைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டிய விடங்களுக்கு மாத்திரம் தனது தொழில் விபரம் காட்டக்கூடிய கடிதத்தை உபயோகிக்க வேண்டும்.

வர்த்தகர், மிராஸ்தார், உயர் பதவியிலுள்ள உத்தியோகஸ்தர், வக்கீல், உபாத்தியாயர் முதலானவர்கள் தங்கள் விலாசம் அச்சிட்டு கடிதம் எழுதுவது சிலாக்கியமானது.

கடிதமெழுதுவதில் அநேகர் தங்கள் விலாசத்தை யெழுத மறந்து விடுவதுண்டு. 'கீழ்க்கண்ட விலாசத்துக்கு' என்று கடித ஆரம்பத்தில் எழுதிவிட்டு, விலாசத்தை எழுதாமலிருக்கக் கண்டிருக்கிறோம். மற்றும் சிலர் ஊர் பேர் தேதி எழுதாமலும், இன்னும் சிலர் கையெழுத்துக் கூடப் போடாமல் கடிதம் எழுதுவதுண்டு. மேலும் ஒரு ஊரின் பெயர் தமிழில் ஒரு விதமாகவும், இங்கிலீஷில் ஒரு விதமாகவும் இருப்பது பிரபலம். தமிழ் நாட்டில் சில விடங்களுக்கு இங்கிலீஷ்காரர் பெயரை வைத்திருக்கிறார்கள். இங்கிலீஷில் 'மெக்டோனல்டு கௌல்ட்ரி' என்பது தமிழில் 'மகுடன் சாவடி' என மருவியிருக்கிறது. 'த்ரிச்சிநாப்போலி' என்பது திருச்சிறாப்பள்ளி என்று தமிழில் வழங்குகிறது. இவ்விதமாக அநேக மாறுதல்கள் இருக்கின்றன.

இன்னும் சில ஊர்களின் பெயர் மூன்று விதமாய் இருக்கிறது. 'ஆள்வார்குறிச்சி' எனபது ஒரு ஊரின் பெயர். ஆல்வார் குரிச்சி' என்று இங்கிலீஷில் முக்கியமாய் தபால் இலாகாவில் வழங்கப்படுகிறது. ரெயில்வேக் கம்பனியார் 'ஆல்வார் குரிச்சி' எனச் சொல்லுகிறார்கள். இவ்வித அலங்கோலம் அநேக ஊர்களுக்கு இருக்குமென நிச்சயமாய் நம்பலாம். இந்தக் காரணத்தைக் கொண்டும் பெயர் விலாசம் கடிதத்தில் அச்சிட்டுக் கொள்வது நலமாயிருக்கும். பெரிய பட்டணங்களில் இருப்போர் அச்சிட்ட கடிதம் வேண்டுவதில்லையென நினைப்போர், வீட்டு நம்பர் தெருப்பெயரோடு ஒவ்வொரு கடிதத்திலும் எழுத வேண்டும்.

தொழில் முறையிலேனும், விவகார முறையிலேனும் கடிதம் எழுதினால் அதற்கு நகல், பிரஸ் காப்பி எடுத்தும் வைத்துக் கொள்ளவேண்டும்.

The one prudence in life is—Concentration.

—*Emerson.*

மனத்தைப் பழக்கும் வழி

Cultivation of mind

மனதுக்கும் தேகத்துக்கும் விசேஷ சம்பந்த முண்டு. அதி பால்யத்தில் மனமானது விசேஷசக்தி கொண்டிருந்தும் அதற்கு ஆதாரமான சரீரம் தகுதி யுடையதாயில்லை. குழந்தைகளுக்கு இப்பிரபஞ்சமே ஒரு விநோதமாகத் தோன்றுகிறது. விசாரித்தறியலா மென்றாலோ வாக்கில்லை. மனம் என்ன நினைத்தாலும் கிணற்றுக்குள் மூழ்கி நினைப்ப வனை யொக்கும். அதாவது பிறருக்குச் சொல்லித் தெரி விக்க ஆற்றலில்லை.

சில குழந்தைகள் பேசத் தலைப்பட்டு பெற்றோரை அல் லது மற்றோரை 'அது என்ன?' 'அதனாலென்ன பிரயோ சனம்?' என்று கேட்குமானால் ஒரு சிலரோ விடையளிப்பார். மற்றும் அநேகர் அதட்டி அவைகளின் மனோ வேகத்தை அடக்கிவிடுவார். மனோதர்மம் பொதுவாக மூன்றுவிதமா யிருக்கிறது. மனம் பற்றுள்ளதாகவும், பற்றற்றதாகவும், இவ்விரண்டுமில்லாத நிரந்தரமாகவும் இருக்கிறது. எல்லா வற்றையும் அறிவதற்குப் போகிற மனதை சீர்படுத்துவ தற்கே கல்வி அவசியமென்று வற்புறுத்திச் சொல்லப்படு கிறது.

அறம் பொரு ளின்பம் வீடும் பயக்கும்
புறங் கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூங் கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.

எனவே ஓடியலையும் மனத்தை கல்வியால் பாதுபடுத்தினால் அதனாலுண்டாகும் நன்மை இன்னதென மேற்கவியில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் 'இளமையிற் கல்' என்றும் சொல்லப்படுகிறது. மனோவேகத்தை கல்வி யெனும் யந்திரத்தால் ஒழுங்குபடுத்தினால் பகுத்தறிவும் புத்தி தீக்ஷிணியமும் உண்டாகும்.

பல விஷயங்கள் விளங்குதற்கான பற்பல வார்த்தைகளை அறியும்பொருட்டே பலவித நூல்களைப் பள்ளிக் கூடங்களில் வைத்திருக்கிறார்கள். குழந்தைகளுக்கு விளையாட்டில் மிகப் பிரியம் இருப்பதினால் தற்காலம் சித்திர சகிதமான சொற்களால் பாடம் அமைக்கப்பட்டிருக்கிறது. சிலர் படிப்பதற்கு ஆவற்படுவதும், மற்றும் சிலர் விளையாடுவதற்கே ஆவற்படுவார்கள். படிக்காதவர்களையே மூடர்கள் என்றும் கண்ணிருந்தும் மக்கள் பலர் குருடரென்றும் சொல்லப்படுகிறது. விளையாட்டிலும் கல்வியைப் புதுப்பித்து அவர்கள் மனதைத் திருப்பி ஒழுங்குபடுத்துவது நலமென மூதறிஞர் கண்டுளார். சிறுவர்களைத் துன்புறுத்திப் படிக்கச் செய்வதைவிட உற்சாகத்தை ஊட்டி இதமாய்ப் படிக்கவைத்தலே சிறப்புடைத்தாகும்.

சிறுவயதிலேயே சிலர் வியாபாரத்தை நடத்துகின்றனர். அது அவ்வளவு மேன்மையுள்ளதாகாதென்பதே எமது கருத்து. இளம்பிராயத்தில் கல்வியைக் கற்கவேண்டியதை விட்டு விடக்கூடாது.

சில குழந்தைகள் வார்த்தையாலேயே திருப்தியடைவார்கள். கண்ணிற் கெதிர்ப்பட்டவைகளை யெல்லாம் வாங்

கிக்கொடுக்கும்படி கேட்பதுண்டு. 'அதற்கென்ன வாங்கித் தருகிறேன்' என்று சொல்லிவிட்டால் திருப்தியடைகிறார்கள். சில குழந்தைகள் பிடிவாதமாய், கேட்ட பொருள் கைக்கு எட்டும் வரைக்கும் அழுது தீர்க்கும். முடியாத காரியத்தையும் முடித்துக் கொடுக்கும்படி கேட்கும். யானையைக் கண்டு பயந்தகுழந்தை, அந்த யானையைத் தன் கையிலிருக்கும் கலய (மட்பாண்ட) த்தில் போட்டுக் கொடுக்கச் சொல்வதை யொக்கும். குழந்தைகளுடைய மனமானது பகுத்தறிவதற்கும் நிதானிப்பதற்கும் யோக்கியமற்ற தென்பது நன்கு புலப்படும். பரிசுத்தமான மனம் பல வகைப்பட்ட பொருளைப் பார்ப்பதினுல் திரிபு அடையும். அவ்வித மாறுதலடையும்போதே கல்வியொன்றுல்தான் மனம் ஒரு வழிப்பட்டு வரும்.

சிறுவர்கள் எவ்வளவுக்கு வாக்கையடக்கி மனதை நிதானப்படுத்தி—பொறுமையைக் கைக்கொள்ளுகிறார்களோ அவ்வளவுக்கு சித்த விருத்தி புத்தியின் கூர்மையாலும், பகுத்தறிவாலும் அபார சக்தியை அடையும்.

சிலர் தொழிலில் அமைந்துவிட்டால், அல்லது ஒரு உத்தியோகத்தில் அமர்ந்துவிட்டால், அல்லது சொந்தமாய் வியாபாரம் செய்ய ஆரம்பித்துவிட்டால் எந்த நூலையும் தொடுவதே கிடையாது. சகல கலாவல்லி யென்னும் சரஸ்வதி இன்னும் படித்துக் கொண்டிருக்கிறதாகவே சாஸ்திரம் சொல்லுகிறது. எவ்வளவுதான் கற்று விட்டதாகக் கர்வங் கொண்டாலும் 'கற்றது கைமண்ணளவு கல்லாதுலகளவு' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. களிம்பேறிய செம்பைத் தேய்க்கத் தேய்க்க எப்படிப் பிரகாசப் படுகிறதோ அதைப்

போல பல நூல்களைப் படிக்கப் படிக்க மனோவல்லமை யுண்டாகும்.

பல நூல்களைப்படிப்பதினால் நன்மை தீமை இன்னதென்றறியக் கூடும். நன்மைக்கு வித்தாயுள்ளது நல்லொழுக்கமென்பது நன்கு விளங்கும். பல பொருள்களை அதுவது வாய்ப் பார்த்துக்கொண்டிருப்பதை விட மனதை உள்முகப் படுத்தி சிந்திப்பது நல்லது. எந்தப் பொருளைக் கண்ணால் பார்த்தாலும் அதைப்பற்றிய தீர்மானத்தை புத்தியே உறுதிப்படுத்த வேண்டும்; ஒரு விஷயத்தைப்பற்றி யோசிப்பது, சிந்திப்பது என்றால் சாமான்ய காரியமல்ல. கற்ற கல்விக்கேற்றவாறே யோசனையும் உண்டாகும்.

'சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்'

கல்வியும் மனப்பழக்க மென்பதால் பயன் தரும் வழியில் அமையுமானால் மனம் சிந்திப்பதில் தேர்ச்சி பெற்று நிற்கும். யோசனை முதிர முதிர நின்மல மனமானது இகபர சாதன வழியில் கொண்டுவிடும். அப்பொழுது பெரிய ஞானவானாகிவிடுகிறான். ஆகவே சிந்தனை அவசிய மென்பதாகும். மனதை சிந்தையால் தேக்கிவிட்டால், உள்ளீடாய் வேலை செய்யும். ஏன் யோசனை செய்யவேண்டுமென்று கேட்கலாம். இந்த யோசனைதான் ஞாபக சக்தியை விர்த்தி செய்யக்கூடியது. சிலர் எவ்வளவுதான் படித்தாலும் நினைவில் நிற்பதில்லை. மனப்பாடம் பண்ணி சில காலமிருந்தும் மறந்துபோய்விடுகிறது. இவைகளுக்கெல்லாம் காரணமென்னவென்றால் தனித்து ஓரிடத்தி

லிருந்து படித்ததை நினைத்துப் பார்ப்பதில்லை. எதைப்படித்தாலும் உடனே சிந்தித்துப்பார்க்க வழக்கப்படுகிறதில்லை. தனிமையிலிருந்து மனதை ஒரு வழிப்படுத்தி குறித்த—வேண்டிய விஷயத்தைப் பற்றி யோசனை செய்ய வேண்டும்.

மாணவர்களாயிருந்தால் பகற்பொழுதில் கேட்ட அல்லது படித்த பாடங்களை இரவு நித்திரைக்குப் போகுமுன் 'என்ன படித்தோம்' என்று மனதையே மௌனமாய்க் கேள்விகேட்டு சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்பொழுது கனவில் கண்ட ஆச்சரியம் ஞாபகமாய் வருவது போல படித்ததெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாய் நினைவில் தோன்றும். மலையாள வாசிகள் பேசும்போது 'மனதிலாய்த்தோ' என்று சொல்வது வழக்கம். மனதிற் பட்டதா—மனதில் பதிந்ததா என்ற அர்த்தம். "நான் சொன்னதைக் கேட்டாயா, அங்கே போய்ச் சொல்ல ஞாபகமிருக்குமா? என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கலாம். சாஸ்திர விசாரணையிலும் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் எப்படி அவசியமோ அப்படியே கல்வியிலும் வேண்டும்.

சிந்திக்கும் மனோ தர்மமானது சர்வமத சம்மதமான ஞான மார்க்கத்தில் நிலைபெறச் செய்வதால் வியாபாரம் அல்லது தொழில் வகையில் ஆலோசனை செய்வதாயின் எத்துணை நலத்தை பளிக்கும். சிந்திக்கும் திறமையுள்ளார் எதை நினைத்தாலும் சித்திக்கும். எந்தக் காரியத்திலும் அபஜெய மென்பதே கிடையாது. புத்திக்கும் ஞானத்துக்கும் உள்ள வித்தியாசத்தை கௌபர் என்பவர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

"Knowledge and wisdom far from being one
Have oftimes no connection knowledge dwells
In heads replete with thoughts of other men;
Wisdom, in minds attentive to their own,
Knowledge, a rude, unprofitable mass,
The mere materials with which wisdom builds,
Till smoothed and squared and fitted to its place,
Does but encumber whom it seems to enrich,
Knowledge is proud that he has learned so much;
Wisdom is humble that he knows no more."

பல நூல் ஆராய்ச்சி மனதை நன்றாகப் பண்படுத்தும் தொழில் முறையில், மனதைக் கட்டுப்படுத்தினால் அது அதிசீக்கிரம் அபிவிர்த்திக்கான மார்க்கத்தைக் காட்டிக் கொடுக்கும். எந்தத் தொழிலைச் செய்தாலும் 'சிரத்தை' என்பது அவசியமாகிறது. சிரத்தையென்றால் 'செய்ய வேண்டும்' என்ற அழுத்தமான எண்ணம். ஒரு தொழிலை ஆரம்பிக்குப்போதும், கவனித்து சீர்திருத்தும்போதும், குட்டி வேதாந்தம் பேசுதலும் கடவுளை நம்பி யிருக்கிறேன் என்ற சோம்பற் சொற்களை விட்டுவிட வேண்டும். தொழில் நன்றாய் நடக்கும்போது கடவுள் கிருபையால் நடைபெறுகிறதென்று சொல்லுகிற வழக்கத்தைச் சாணோம். கஷ்ட காலத்தில் மனம் நிலை பிரிந்து கலங்கியபோது கடவுளை நினைப்பதுதான் வழக்கத்திலிருக்கிறது. மனம் சூதுவாதற்று சுத்தியாயிருக்கும்போது, தொடுத்த காரியத்தில் ஜெயம் உண்டாகும்போது கடவுள் துணையாயிருக்கிறார் என்பதை நினைத்துப் பார்ப்பதில்லை. மனதை நல்வழியில்

பலவகையிலும் உபயோகித்துக்கொள்வதற்கே கல்வி அவசியமாகிறது; அக்கல்வியோ பல நூல்களைப் படிப்பதைப் பொறுத்திருக்கிறது. கலாசாலைக் கல்வி யெல்லாம் தொழில் முறைக்கான வழியில் இருக்க வேண்டும் என்று முன் ஒரு இடத்தில் விவரித்து எழுதியிருக்கிறோம். பல துறை நூல்களைப் படித்து சிந்தித்துக்கொண்டு வந்தால் ஞாபக சக்தி அதியாச்சரியமாய் விர்த்தியாகும். பலதேச சரித்திரங்கள் நுட்பத்தொழில் நூல் இவைகளைப் படிப்பதால் புத்தி தீக்ஷணியமும் ஞாபகவிர்த்தியு முண்டாகும் என்று ஒரு பெரியவர் எழுதியிருக்கிறார். அவரவர் மனம் சக்திக்குத் தக்கவாறு முதிர்ந்த காலத்தில் ஒரு வழிப்பட்டு நிற்கும். ஆனால் சொற்பக் கல்வியைக் கற்றுக்கொண்டிருக்கும் போதே 'நான் இன்ன வேலைக்குப் போகிறேன், இன்ன தொழிலைச் செய்யப்போகிறேன்' என்று ஆகாசக்கோட்டை கட்டக்கூடாது. போதுமான கலாஞானம் அவசியமானது. அது ஒன்றே சகல தொழில்களுக்கும் ஆதாரம்.

பொதுவாய் ஆரோக்கிய நிலைமைக்குத் தக்கவாறுதான் மனோதிடம் அமைகிறது. என்றாலும் மனம் அனுபவத்துக்கு ஏற்ற விதமாக மனோ வலிமை உண்டாகும். மனம் ஒரு விஷயத்திலும் கட்டுப்படாமல் சந்தேகத்தை யடையுமானால் சபல புத்தி என்றும், ஸ்திரபுத்தியில்லை யென்றும் சொல்லப்படும். ஒரு வழிப்பட்ட நூல்களைத் தொடர்ந்து படித்து வந்தால், தனக்கு எட்டியவரை புத்தி ஆராய்ந்து கொண்டே போகும். பல முக்கிய பாடல்களையும், இலக்கணத்தையும், கற்றவர்களைப் பண்டிதன் அல்லது வித்துவான் என்று அழைக்கிறார்கள். ஒருவன் பல தேச சரித்திரங்களை

யே படித்துக் கொண்டிருக்கிறான்; தேச சரித்திரத்தில் வல்லவனென்கிறார்கள். இப்படியே அநேகர் ஒவ்வோர் துறையில் மனதைக் கட்டுப்படுத்தி விடுகிறார்கள்.

சிறுவர்களை இளமையில் அவர்களுடைய துடுக்கடக்கி அவர்கள் மனதை நூல் வழிச்செலுத்தி விடுவதினால் அனுபவத்துக்கு பிற்காலத்துக்கு மிக்க அனுகூலமாயிருக்கும்.

சித்திரப்படங்களைப் பார்ப்பதினாலும் உற்சாகமுண்டாகும். மனம் விசாலமாயிருந்தால்தான் யோசனை செய்வதற்கும் தைரியம் உண்டாவதற்கும் நலமாயிருக்கும். பெரிய பட்டணங்களைப் பார்ப்பதினாலும், பல வர்த்தக ஸ்தலங்களைக் கவனிப்பதினாலும், மனதுக்கு அபூர்வ சக்தியும் புதிய ஊக்கமும் உண்டாகும்.

பணம் இருந்தால் மனம் சரியான அபிவிர்த்தியிலிருக்கும். கெட்டிக்காரனுக்கு பணம் ஆதாரமாயிருப்பதால் பல யுக்திகளை அதுவே காட்டிக்கொடுக்கும். உண்ணும் உணவுக்கேற்றவாறு மனம் அமைகின்றது. ஆகையால் அன்னமயம் மனோ நிலைமைக்குக் காரணமாயிருக்கிறது. ஒரு வேலையுமின்றி 'பெருந்திண்டி' புசிப்பதிலேயே வயிற்றை நிறப்புவதிலேயே கருத்தைச் செலுத்துகிறவனுக்கு மனம் மந்தமாகவே யிருக்கும்.

'ஒரு கூறு உடலாகும் ஒரு கூறு மலமாகும் ஒரு கூறு
மனமாகும் உண்டற்ற அன்னம்'

ஒருவன் தன் மனோவன்மை குறையாமலிருக்க வேண்டுமோயின் ஜீரண சக்திக்கேற்ற விதம் சத்தான ஆகாரமாய்ப்

புசித்து வர வேண்டும். நல்ல காற்றுள்ள மைதானத்தில் உலாவ வேண்டும்.

ஒருவன் இவ்வுலகுக்கு உபகாரமா யிருக்க வேண்டும். நடைப் பிணமாக எவருக்கும் பயனின்றி, பூபாரமாயிருக்கலாகாது.

மனதுக்கும் தேகத்துக்கும் சம்பந்தமுண்டு. ஒருவனுக்கு ஆகாரம் குறையுமானாலும், ஒரு வேளை புசியாமல் பசியோடிருந்தாலும் மனோ சக்தி குறையும். உதராக்னி அதிகப்படும். அப்பொழுது அநேகருக்கு அற்பக் குற்றத்திற்கும் விசேஷமான கோபமுண்டாகும். சிலர் எவ்வளவு பசித்தாலும் பொறுமையுடன் சகித்துக்கொண்டிருப்பார்கள். அன்ன மயத்தின் தேஜஸ் ஜொலிக்க வேண்டுமாயின் மனதை மாசற்ற நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்.

'அகத்தினழகு முகத்தில் தெரியும்' ஒருவனுடைய மனோதர்மம், அதாவது நற்குணமோ தீய குணமோ முகத்தைப் பார்த்த அளவில் கண்டு கொள்ளலாம்.

'அடுத்தது காட்டும் பளிங்கு நெஞ்சங்
கடுத்தது காட்டும் மனம்'

எனவே மனோ நந் நிலைக்கு ஆகாரம் காரணமாயும், தேகாரோக்கியத்துக்கு மனம் காரணமாயிருக்கிறது புலப்படும். மனோ சுகமே தேக சுகமென்பதாகும். ஒருவர் ஒரு நாவலை மனத்தால் படிக்கும்போது சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு முகம் மாறுதலடைந்து கொண்டிருக்கக் காணலாம். படித்துக்கொண்டிருக்கும்போதே திடீரென கல

கலவென்று சிரித்து விடுவதுமுண்டு. இதனுல் நாமறிந்து கொள்ளவேண்டிய தென்ன? மனம் செய்கைபால் பின்னப் படுகிற தென்பதாகும். இதனுல் அம் மனத்தை அபிவிர்த்திக்கான நல்வழியில் செலுத்தினுல் மிகுந்த நன்மை யுண்டாகுமென்று சொல்லவேண்டியதில்லை. ஒருவர் முகம் பார்ப்பதற்கு யோக்கியமற்ற அவலக்ஷணமா யிருந்தாலும் அவரது நற்குண விசேஷத்தால் அவர் முகம் தேஜஸோடு கூடியதாகவே விளங்கும். சரீர அமைப்பு கடவுள் சம்மத மானது. ஒருவனுக்கு அழகான சரீர மிருக்குமாயின் அதைப்போல் தானும் ஆக நினைத்தால் முடியாத காரியம். ஆனுல் அவனைவிட மேலான குணமுடையவனுகலாம். கெட்டிக்காரனுய்—சமர்த்தனு யிருக்கலாம்.

பழக்கங்களுக்கும் வழக்கங்களுக்கும் மனம்தான் காரணம். நல்லவனுவதும் கெட்டவனுவதும் அந்த மனத்தாலேயேதான். நல்லது கெட்டது எனப்பகுத்து நலத்தை நாடுதற்கு பகுத்தறிவை கடவுள், மனிதர்களுக்குக் கொடுத்திருக்கிறுர். அவரவர் தம் மதாசாரப்படி தெய்வத்தை வணங்கி மனதைச் சுத்திசெய்து கொள்ளவேண்டும்.

எப்பொழுதும் உற்சாகமாயிரு

மனிதர்களுக்கு சுபாவத்தில் கஷ்டமும் சுகமும் கலந்தேவரும். நீ எவ்வளவு பணக்காரனு யிருந்தாலும் சரி, ஏழையாயிருந்தாலும் சரி, அனுபவிக்கவேண்டியது வந்தே தீரும். ஆகையால் சுக துக்கத்துக்கு நடுவு நிலைமையை வகிக்கவேண்டும். மனே அமைதிக்கான திருப்தி என்பதே தகுந்த சாதனமாகும்.

நீ செய்கின்ற தொழிலில் எவ்வளவுதான் நஷ்டம் வந்தாலும் அல்லது லாபம் வந்தாலும், நீ எடுத்த காரியத்தில் அபஜெயமுண்டானுலும் ஜெயமுண்டானுலும், குறிப்பிட்ட விஷயத்தில் 4 ரூபாய் நஷ்டமானுலும் லாபமானுலும் அதனுலுண்டாகும் சுக துக்கத்தை விரும்பவேண்டாம்; ஆனல் உன் மனம் மாத்திரம் நம்பிக்கையுள்ளதாயும், திருப்தி யுள்ளதாயும் இருக்க பழக்கிக் கொள். உற்சாகம் மேலிட்டதாயிருக்கட்டும். பிறர்க்கு உபகாரியாகவேயிரு. இவ்வுலக விவகாரங்களெல்லாம் உனது திடமான புத்திக்கு உட்பட்ட தென்பதை மறந்து விடாதே. அதிக சந்தோஷத்துக்கும், மிதந்த நஷ்டத்துக்கும், எல்லையில்லாக் கவலைக்கும், அளவற்ற ஆசைக்கும், தடுமாற்றமுள்ள பயத்துக்கும் மனதைப் பரிகொடுத்து அழிந்தவர்கள் கணக்கற்ற பேராவர். இவ்வுலகத்திய செல்வம் ஒரு நதியின் பிரவாகம்போலும். ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம். அந்த ஆற்றுக்கு ஒரு பாலம் எப்படி பற்றற்றிருக்கிறதோ அப்படியே இவ்

வுலக சுகதுக்கத்துக்கும், லாப நஷ்டத்துக்கும் நீ ஒரு சாக்ஷி. உனது முன்னிலையில் விவகாரங்கள் நடைபெறுகின்றன.

நீ பாடுபட்டவரைக்கும், பலன் உண்டோ இல்லையோ, நல்லதிர்ஷ்ட முண்டாயிற்றோ இல்லையோ, உன் மனம் மாறுதலடையவேண்டாம், திருப்தியாகவே யிரு.

இவ் வுலகில் லாப நஷ்டத்தை யடைந்து பெரியோ ரென்றும் சிறியோ ரென்றும் பெயருண்டாகவில்லையென்ருலும், பெருந்தன்மை, சிறந்த நற்குணம், மனோ அமைதி, பொறுமை, சுத்தமான வாழ்க்கை, உற்சாகம் முதலியவைகளுள்ளோர் தான் பெரிய மனிதர்களெனக் கருதப்படுகிறார்கள்.

> "He who has truth in his heart need never fear the want of persuasion on his tongue."
>
> —*Ruskin.*—

நிர்வாகம்

Management

நிர்வாகம் என்றால் ஆட்சி எனப்பொருள்படும். ஒரு தொழிலை சீர்பெற ஒழுங்காய், ஏற்றத்தாழ்வின்றி, குற்றங் குறை வில்லாது சமரசமாக நடத்தும் அதிகாரியே நிர்வாகம் செய்ய ஏற்றவராகும். நிர்வாகி அதிகாரி, மானேஜர் என்பதெல்லாம் ஒரே பொருளைக் குறிக்கும். தொழிலாளர்கள் நிறைந்த தொழிற்சாலையை நிர்வகிப்பது கஷ்டமாகவே யிருக்கும். மேலும் தற்காலத்தில் அதி ஜாக்கிரதையான நிர்வாகமே வேண்டும். தொழிலாளர்கள் எல்லாம் நன்றாய் விழித்துக் கொண்டார்கள். சமத்துவம் என்ற ஞானசூரியன் ஒவ்வொருவரிடத்திலும் பிரகாசிக்கின்றான். எந்தக் காரியமும் ஆரம்பத்தில் கஷ்டத்தைத் தருவதுபோல், சமத்துவத்தில் ஒற்றுமையின்மை கவலை தரக்கூடியதாகும். அப்பேர்ப்பட்ட காலத்தில் நிர்வாகம் செய்வதென்றால் கஷ்டமாகவே யிருக்கும். சில அதிகாரிகள் வேலைக்காரர்களிடத்தில் வெடு வெடு, சிடு சிடு வென்று பேசிப் பழக்கமாகிறார்கள். நிர்வாகம் செய்யக்கூடியவர் நுட்ப அறிவும் ஆழ்ந்த கருத்தும் நிதான புத்தியுமுள்ளவரா யிருத்தல் வேண்டும். வியாபாரம்—ஒரு தொழில் ஒரு கடியாரத்தைப் போலவே அமைப்பு. கடியாரம் செய்கிறவன், ஒழுங்கு படுத்துவோர் முதலாயினோர் எப்படி கடியார உருப்புகளையும் அதன் தார தம்மியங்களையும் நன்றாய்த் தெரிந்து வைத்திருக்கிறார்களோ, அப்படிப்போல ஒவ்

வொரு வேலைக்காரனின் தாரதம்மியத்தையும் குண குணங்களையும், எவ்வகையில் தம் தொழிலில் ஈடுபட்டிருக்கிறான் என்பதையும் அறிந்திருக்க வேண்டும். இது அனுபவத்தில் கண்டுகொள்ள வேண்டிய விஷயங்கள்.

முன்கோபம், அசட்டுத்தன்மை, சோம்பல் அதிக வேலை செய்வது போன்ற தடபுடல் பாவனை, பொறாமை, மரியாதையின்மை, எஜமானர்களுக்கு புத்தியில்லை என்று நினைத்தல் தனக்கு நிகரில்லை என்ற கர்வம், தான் ஒருவனில்லா விட்டால் தொழிலே—ஒரு ஆபீஸே—நடைபெறாதென்ற எண்ணம், தொழிற்பாரம் தன் தலையில் தான் இருக்கிறதாக நினைத்து நடத்தல், எஜமானன் எப்பொழுதும் தன்னை நல்லவனென்று நினைக்கவேண்டி பொருத்தமற்ற—அவசியமில்லாத அதிகாரம் செய்தல், எப்பொழுதும் எஜமானன் தயவையே எதிர்பார்த்து காக்காய் பிடித்தல், எஜமானர்களிடம் அனுவசியமானதும் அற்ப சொற்ப குற்றங்களை மிகப் பெரிதாக்கிச் சொல்லுதல் எஜமானர்கள் அனுமதியின்றி அவர் தம் வீட்டுக்குப் போய் ஏவல் செய்தல் எஜமானவர்களை கிள்ளுக்கீரையாய் நினைத்து அலக்ஷியம் செய்தல் வேலையில் விருப்பில்லாமல் காலங்கழித்தல், எதிர்த்துப் பேசல், நட்புப் பிரித்தல், அடுத்துக் கெடுத்தல் ஆராயாமற் செய்தல், அந்தரங்கத்தை வெளியிடல் கோள் சொல்லுதல், தற்புகழ்ச்சி தன்னிலும் தாழ்ந்தோரை இகழ்தல், உள்ளொன்று உன்னிப் புறம்பொன்று பேசுதல், சொல்லுக்கு சொல் சிரித்தல் முகமன் பேசல், வாதுக் கிழுத்தல், வஞ்சனை செய்தல், அவதூறு பேசல் இன்னும் இது போன்ற குணங்களெல்லாம் சிலரிடம் இருக்கக் காணலாம், இன்னும்

சிலருடைய வஞ்சகமான துர்க்குணங்களை எளிதில் கண்டு கொள்ள முடியாது. பழக்கத்தில் தெரிந்து கொள்ள வேண்டியது. அதிகாரிக்கு அதிக பேச்சு கூடாது. சுருக்கமாக விடை தரல் வேண்டும். அதிகாரி அன்பும் ஆதரவுமுள்ளவரா யிருந்தால், ஒருவன் தன்னுலியன்ற மட்டும் கைப்பற்றப் பார்ப்பான்.

தொழில் மிகப் பெரிதாயிருந்தால் அதைத் தக்கவாறு பிரித்து பொருப்புள்ளவர்களிடம் ஒப்பித்துக் கவனிக்க வேண்டும். தொழில் நடக்கிற இடங்களைச் சுற்றிப் பார்க்க வேண்டும். கவனிப்பதில் கர்வங்கூடாது. கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். பேசுவதில் ஒரு திட்டமும் கவனிப்பதில் உற்சாகமுமிருக்க வேண்டும். தொழில் நடத்துவதில் பல கஷ்டங்கள் நேர்வது சகஜம். அதனை சற்றும் வெளியிடக் கூடாது. பிறர் அறிய நடந்து கொள்ளவுங் கூடாது. இதுவே நிர்வாகத்தின் ரகஸ்யம். தொழில் சிலகாலம் ஏற்றத் தாழ்வாகவும் நடக்கக் கூடும். விர்த்தியாகுங் காலத்தும் தாழ்வுற்ற காலத்தும் அமைதியுடனிருத்தலே மேன்மையாகும். விர்த்தியுள்ளபோது, யாவரும் சொல்லாமலே தெரிந்துகொள்ளக் கூடியவர்களா யிருப்பார்கள். ஆகையால் தாழ்வுண்டாகுமானுல் மன அமைதியோடிருக்க வேண்டும். ஆப்த நண்பர்களாயினும் சொல்லாதிருக்க. ஆனுல் தாழ்வை நிவர்த்திக்க தக்க மார்க்கத்தைக் கண்டு பிடிப்பதில் ஊக்க முடையவரா யிருக்கவேண்டும். நிர்வாகி எப்பொழுதும் பொறுமையுள்ளவரா யிருக்கவேண்டும். தமது தொழிற் சாலைக்கு ஒரு சர்வ சாக்ஷியைப் போலிருக்கவேண்டும், தொழிற் சாலையில் வேலை செய்

வோர்களைப் பகுத்து அவர்களுக்குள்ளே பொருப்பாளியாக ஒருவரை நியமித்து விடவேண்டும். கால மாறுதலைக் கவனித்துக் கொள்ளவேண்டும். நிர்வாகம் மிகப் பொருப்பு வாய்ந்தது. அதைப் பகிர்ந்து கொடுத்தே காரிய சித்திபை எதிர் பார்க்கவேண்டும். வேலைக்காரர்களை நம்பித் தானிருக்க வேண்டும். ஒருவனை அயோக்கியன், திருடன் என்று தெரிந்திருந்தும், அவனுடைய குற்றங்கள் வெளியானாலும் அவனை நீக்காமல் சிலர் நிர்வாகம் செய்கிறார்கள். இதன் மர்மத்தை வெளிப்படையாய் எழுதுவது தகுதியன்று.

வேலைக்காரர்கள் அதிகமாயுள்ள தொழிற்சாலை அல்லது வியாபார ஸ்தலத்தில், பலவகைப்பட்ட குணமுள்ளவர்கள் இருப்பார்களாகையால் ஒருவன் நல்லவன் போல கோள் சொல்வான். அதைக் கேட்டுக் கொண்டு, 'சரி போ' என்று சொல்லி அனுப்பி விட்டு, கோள் வார்த்தைகளை நம்பி எவ்விதத் தீர்மானமும் செய்யாமல் நிதானமாயிருந்து சமயம் வாய்க்கும்போது கவனித்துக் கொள்ள வேண்டும். அநேகமாய் எஜமானுடைய நோக்கங் கண்டு நடந்து கொள்ளக்கூடிய வேலைக் காரர்கள் அமைந்து விடுகிறார்கள். வேலைக்காரர்கள் விஷயமாய் ஓயாது கவனித்துக் கொண்டிருக்க முடியாது. ஒழிந்த நேரங்களிலும், சந்தர்ப்பம் நேரிடும் போதும் நடத்தும் தொழில் அபிவிர்த்தி செய்வதற்கான வழிகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். தொழில் நடக்கும் முறையில் அது எத்தகைப நிலையில் இருக்கிறதென்பதை நிர்வாகி எப்பொழுதும் கண்டு கொள்ளக்கூடும். வேலைக்காரர்களிடத்தில் வேலைவாங்குவதும், வியாபாரத்தை முன்னேற்றமடையச் செய்வதும் அனுபவத்தைப் பொருத்திருக்கிறது.

நிர்வாகி வேலைக்காரர்களுடன் அளவுக்கு மிஞ்சி, பேசக் கூடாது. வரம்புக்குட்பட்ட கண்டிப்பிருக்க வேண்டும். சுருக்கமானசொற்களும் வெல்லத்தக்கதாயுமிருக்கவேண்டும்.

ஒரு நிர்வாகி தான் எவ்வளவுக்கெவ்வளவு நல்லொழுக்கத்தோடும், நியாயவரம்புக்குட்பட்டும் நடந்து கொள்கிறாரோ அவ்வளவுக்கவ்வளவு தொழில் மேன்மையாய் நடைபெறும். வாக்கையடக்கி காரியத்தில் கருத்தைச் செலுத்த வேண்டும். வேலைக்காரர்கள் தன் வாக்குக்குக் கட்டுப்பட்டு நடக்கக்கூடிய விதமாக நடந்துக்கொள்ள வேண்டும். வேலைக்காரர்களின் கஷ்டத்தை உணர்ந்து சமயோசிதமான உதவி செய்யவேண்டும். வேலைக்காரன் தொழிலாளன் என்ற பெயரைக்கொண்டு தாழ்ந்தவர்களென நினைக்கக்கூடாது. இல்லற வாழ்க்கையில் எல்லோரும் சமமேயாகும்.

சேவகம்
அல்லது
தொழிலாளர் கடமை.

தொழிலாளர் யார்? தொழிலாளர் என்பது ஒரு ஜாதியா? அன்று. அப்போதைக்கப்போது ஊழியம் பெறுகிறவர் மாத்திரம் தொழிலாளரா? வாரச் சம்பளம், மாதச் சம்பளம் வாங்குவோர் தொழிலாளர்களா? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியமாகும். இப்பிரயஞ்சத்தில் பிறந்துள்ள அனைவரும் வேலைக்காரர்கள் தான். ஆனால் இங்கு நாம் விவரித்து எழுதப்போவது, தொழில் முறையில் வியாபாரிகளுக்கு உபகாரியாயிருப்பவர்களை மாத்திரமே. கடவுளின் சிருஷ்டியிலேயே மனிதர்கள் சமத்துவத்தைப் பெறவில்லை. எப்படியெனில் சிலர் புத்திமான்களா யிருக்கிறார்கள், அநேகர் பணம் படைத்த பிரபுக்களாயிருக்கிறார்கள். ஒரு பகுதி பணக்காரனுமில்லாமலும் ஏழையாயிராமலும் வாழ்கிறார்கள். அரை வயிற்றுக்குப் புசித்துக்கொண்டு சிலர் மனம் நொந்த நிலைமையில் இருக்கிறார்கள். இன்னும் சிலரோ தரித்திரம் தாண்டவமாட பிக்ஷை யெடுத்துக் கஷ்டப்படுகிறார்கள். சிருஷ்டியிலே இத்தனை பேதமிருக்கிறது. இதைப்பற்றி விசாரிக்கப் புகுந்தால், பூர்வ ஜென்மத்தில் செய்த பாப புண்ணியத்துக்கு ஏற்றவாறு பிறத்தலும் அனுபவித்தலும் என்று ஏற்படுகிறது. மேலும் ஒவ்வொரு மனிதனுடைய மனோதர்மமும் வெவ்வேறாகவே யிருக்கிறது.

சேவகம் என்பதை உத்தியோகம் என்று கௌரவமாகவும் அழைக்கப்படுவது வழக்கத்திலிருந்து வருகிறது. இந்த உத்தியோகம் அவரவர் வாழ்வின் உயர்வுக்கேயாகும். அவரவருக்கு அமைந்துள்ள புத்திசாலித் தனத்துக்குத் தக்கபடியே உத்தியோகமும் அமைகிறது. இட்ட வேலையைச் சரிவர திருப்தியாய்ச் செய்வதே கடமை. தொழிலாளர்களிடம் நவசக்தி உதயமாயிருக்கிறதென்றும் மின்சார சக்தியைப்போல் எங்கும் பரவுகிறதென்றும் அதனால் இவ்வுலகத்துக்கே பெரிய லாபம் ஏற்படுகிறதென்றும் எங்கும் பிரபலமாயிருக்கிறது. பெரிய யந்திர சாலையில் உத்தியோகத்தில் அமர்ந்துள்ளோர்களையும், இதர உத்தியோகசாலையில் நடுத்தரமான வாழ்க்கைக்கு சற்று குறைவாயிருக்கிறவர்களையும் தொழிலாளர் என்று சொல்லப்படுகிறார்கள். இப்பொழுது இவர்களிடத்தில் ஒற்றுமை என்பது உதயமாயிருக்கிறது. அதின் வேகமே எங்கும் வீசுகிறது. இதை நல்வழியில் உபயோகித்தால் நன்மையுண்டாகும் என்று சொல்ல வேண்டியதில்லை.

எஜமானர்கள் தங்களுக்கு உதவி செய்யும் பொருட்டே வேலைக்காரர்களை ஏற்படுத்துகிறார்கள் என்பது தெரிந்த விஷயம். ஆகையால் வேலைக்காரர்கள் தங்கள் எஜமானர்களுக்கு நன்மை செய்யவே கட்டுப்பட்டிருக்கிறார்கள். தங்கள் உரிமைகளை வரம்போடு காப்பாற்றிக்கொள்ளவேண்டும். ஒற்றுமையை பக்கபலமாகக்கொண்டு கட்டுப்பாடான 'வேலை நிறுத்தம்' என்னும் தொத்து நோய் உலகத்தைச் சுற்றிவருகிறது. இதனால் ஒற்றுமைக்குள்ள கௌரவமும் மேன்மையும் குறைந்துவிடும். எஜமானர் எவ்வளவு தான் அநீதியாய்ப்பட்

தாலும் நற்புத்தி புகட்டி நல்வழிக்கான வேலையைச்செய்வதே சாலச்சிறப்புடையதாகும். வேலை நிறுத்தம் செய்தபோது எஜமானர்களின் மனம் புண்பட்டு, கடைசியாக இருவரும் முரட்டு வழியில் திரும்பிவிட நேரிடுகிறது. சில எஜமானர் கள் வேலைக்காரர்களின் நன்மையைக் கவனிக்கிறதில்லையென் பது வாஸ்தவமே யானாலும், அவர்களை விரோதித்துக்கொள் ளாமல் அன்போடு கவனித்துப்படி செய்யவேண்டும்.

ருஷியா தேசக் கொள்கை உலகெலாம் பரவுவதாயின் இந்தியச் சொத்துக்கள் இந்தியர்களுக்கென்றும், இந்துக்கள் அவைகளின் வரும்படியை சர்பந்துக்களாய்ப் பிரித்துக்கொள் ளவேண்டிய காலம் வந்தாலும் புத்திசாலிகள் மேலானவர்கள் என்று ஒப்புக்கொள்ள நேரிடும்.

தொழில் நடைபெறும் இடங்களில் அதாவது அவரவர் க்கு இட்டவேலையைச் செய்யும்போது ஒவ்வொருவரும் வரம் புக்குட்பட்டே வேலை செய்வார்கள். ஆகையால் அப்பொ ழுதாவது எஜமானன் வேலைக்காரன் என்ற ஏற்றத்தாழ்வை உணரலாமன்றோ? பிறப்பிலே எல்லோரும் ஒன்றெனக் கரு தப்பட்டாலும், கருமத்தினால் பிரிவு உண்டாவதை அறிய லாம். எஜமானர்களின் நோக்க மறிந்து நடந்துகொள்வதே நலமாகும். வேலைக்காரர்களின் நோக்க மறிந்து எஜமானர் கள் நடப்பது கஷ்டமான காரியம்.

ஒரு வேலையைச் செய்ய ஒருவருக்கு இஷ்டமில்லையா யின் தன் மட்டில் பிரிந்து வேறு உத்தியோகம் தேடிக்கொள் வதுதான் முறையானது. அல்லாமல் மற்ற வேலைக்காரர் களையும் போதனையால் தன் வழிப்படுத்தி கஷ்டத்திற்குள்

ளாக்கக் கூடாது. ஒருவனுக்குப் போதுமான சம்பளம் எஜமானன் கவலித்துக் கொடுக்கவில்லையென்று மற்ற சகவேலைக்காரர்களும் சேர்ந்து போரிடுவது நியாயமான வழியாகாது. ஒருவன் தனக்குள்ள சுதந்தரத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். அடிமைப்பட்டவகையில் அபிவிர்த்தியாவது கலமன்று. அடுத்த உயர்ந்த பதவிக்கு தான் அருகனென்ற முயற்சியுடையவனா யிருக்கவேண்டும்.

ஒருவரிடத்தில் வேலை செய்தாலும் சுதந்தரத்தை விட்டு விடக்கூடாது. தன்னால் எவ்வளவு தூரம் முயற்சி செய்து மேல் பதவியை அடைய முடியுமோ அவ்வளவு தூரம் பிரயாசைப் படவேண்டும். ஒழிந்த நேரங்களில் நூல் ஆராய்ச்சி செய்யவேண்டும். எதைச் செய்த போதிலும் மதாசாரப்படி தெய்வ சிந்தனை செய்து கொள்ள வேண்டும்.

ஒரு குருவைத் தேடிச் செல்லும் சிஷ்யன், சில காலம் சென்ற பிறகு குருவாய் விடுவதுபோல், உத்தியோகத்திலமர்ந்து, பல வகையிலும் பழகி அனுபவம் பெற்று, தானே சொந்தமாய் ஒரு தொழிலை நிர்வாகம் செய்யத் தக்க யோக்கியதை உடையவராக வேண்டும்.

மனதைக் கவலைக் குட்படுத்தக் கூடாது. கவலை புண்டாகக் காரணமாகும் இடங்களுக்கு அடிக்கடி போகக் கூடாது. கூடியவரை திருப்தியாயும் சந்தோஷமாயும் அந்தஸ்துக்குத் தக்கபடி நடந்துகொள்ளவேண்டும்.

எத்தகைய உத்தியோகத்தி லிருந்தாலும் தினந்தோறும் காலையில் ஸ்நானம் செய்து சரீர சுத்தி செய்ய வேண்

டும். கடவுளைத் துதி செய்து மனோசக்தியையும் பெற வேண்டும்.

தொழிற் சாலையிலும் வியாபாரத்திலும் மேல் அதிகாரிகள் பலவிதமாயிருப்பார்கள். அவரவருக்கு ஏற்றபடி நடந்து தனது உத்தியோகத் திறமையைக் காட்ட வேண்டும். பொறுமையைப் பெரிதும் வகிக்க வேண்டும். வாக்கை மௌனப் படுத்தி நிதானமாய்ப் பேச வேண்டும்.

சில வேலைக்காரர்கள் எஜமானர்களைப் பின் பற்றி பல்லைக் காட்டி 'காக்காய் பிடிப்பார்கள்.' அப்பேர்ப்பட்டவர்களைப் பின்பற்றக்கூடாது. காக்காய் பிடிக்கிறவர்கள் பலஹீன முள்ளவர்கள், தைர்யமில்லாதவர்கள். காக்காய் பிடிக்கிறவர்கள் கோள் சொல்லியும் எஜமானனுக்கு நல்லவனாய், இருக்கப் பார்ப்பார்கள். அவர்கள் வலையில் சிக்காமல் நடந்து கொள்ள வேண்டும். அடுத்தவர் எவ்வளவு இனிமை காட்டிப் பேசினாலும் தன் புத்தி கொண்டு நிதானமாய் நடக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் யாதாமொரு கைத்தொழிலைத் தெரிந்துவைத் திருக்கவேண்டும். உத்தியோகம் செய்து கொண்டிருந்தாலும் ஓழிந்த நேரத்திலாவது இஷ்டமான கைத்தொழிலைக் கற்றுக்கொள்ளவேண்டும். காலச் சக்கரம் உருண்டுகொண்டே யிருக்கிறபடியால், ஒருவன் எப்பொழுதும் பௌவன புருஷனாய் இருக்கமுடியும் என்று நினைக்க முடியாது. வரவுக்குட்பட்ட செலவு செய்து கூடியவரை திருப்தியாய் சுத்தமான வாழ்க்கையி லிருக்கவேண்டும்.

"The dead weight of bad habits keeps many men from winning the race for business."—*Chamberlain.*

வியாபார தந்திரம்.

மூன்றும் பாகம்.

An Idea is like an acorn; to day it has no value—tomorrow it grows an oak.

The Steam from an ordinary tea—kettle created the locomotive. The flying of an every day kite discovered the lightning rod.

And so the greatest oaks of commerce spring from the smallest kennels of thought.

ஒரு நல்ல யோசனை

ஆலம் வித்துக்குச் சமானம். இன்று அதற்கு மதிப்பில்லை. நாளைக்குச் செடியாய் முளைக்கிறது. எனவே, ஆழ்ந்த யோசனையின் தீர்மானம், சிறு வித்திலிருந்து விர்த்தியாகும் பெரிய விருக்ஷம் போல, பெரியதொழிலுக்கு ஆதாரமாகிறது. தீய வழிக்கான சிந்தனை—வித்து—தீமையையே செய்யும். நன்மையையே நினை. நலத்துக்கே சிந்தனை செய். 'நல்லோருக்குப் பெய்யு மழை எல்லோருக்கும்.'

கஞ்சத்தன முள்ளவன் பணத்தைச் சேர்த்து வைத்துக் கொண்டிருப்பது போல சிந்தித்த எண்ணங்களைச் சேகரித்து வை. எத்தகைய தொழிலுக்கும் ஒரு முறையாய் அனுசரிக்கும் போது அதன் பலனை நீ அறிந்து கொள்வாய்.

முயற்சியும் தொழிலும்.

(திருக்குறள் வாக்கியம்)

1. விதிப்படி நடக்கும் என்றெண்ணி யாதொரு காரியத்திலும் முயற்சி செய்யாமலிருத்தலே வறுமையை அடைதற்கு முக்கிய காரணமாம்.

2. சாத்தியப்படாத பொருளையடைய முயல்கின்றவன் மேன்மையுடையவனாயினும் பேயர்களில் முந்தினவனாகக் காணப்படுவான்.

3. யாதொரு காரியத்திலிடத்தும் சோம்பலின்றி தக்க முயற்சி செய்பவனை வறுமை நெருங்குதற்கு அஞ்சும்; ஆதலால் சோம்பலுக்கு இடங்கொடாது முயற்சி செய்ய வேண்டும்.

4. மேலாகிய விரதங்களை இடையூறின்றி நடத்த முயல்கின்றவன் சிறியவனாக விருக்கினும் தவசி யெனப் பெயர் பெறுவான்.

5. பயிர் என்பது பயிற்சி, முயற்சி யெனவுங் கொள்ளப்படும். ஆதலால் பயிர் செய்வதில் இயற்றப்படும் முயற்சியே செல்வப் பேறுக்கு முதற் குறியாம்.

6. உழவு முதலியவைகளில் வருத்தமுற்று இட்ட பயிர், பலனைக் கொடுக்குங் காலத்தில் சோம்பலால் தக்கபடி நடத்த அறியாதவன் தரித்திரத்தை அடைவான்.

7. எல்லாக் காரியங்களுக்கும் அவைகளாலடையும் பயனுக்கும் தெய்வகாரணத்தைப் பார்க்கிலும் புருஷகார

ணமே மேலானதாகும். எப்படியெனில் ஒற்றைச் சக்கரத்தால் (தேர்) இரதம் நடவாத்தன்மைபோல் புருஷ காரணமில்லாமல் தெய்வ சங்கற்பத்தினுல் ஒன்றும் முடியாது.

8. எள்ளும் அதற்குள் எண்ணெய்யும் பகவானுல் உண்டாக்கப் பட்டிருந்தாலும் புருஷ காரணம் என்கிற முயற்சியினுலல்லாமல் எண்ணெய் வெளிப்படுவதில்லையே; ஆதலால் முயற்சியின்றி ஒன்றும் நிறைவேருது. அதேதில்லாமல் சோம்பலுற்றவன் பயன்படான்.

9. முயற்சி யில்லாவிடில் கல்வியில்லை, கல்வி யில்லாவிடில் நற் புத்தியுமில்லை, பராக்கிரமமுமில்லை. இவைகளில்லாவிடில் பொருளுமில்லை, பெருமையு மில்லை. சில வேளை பொருள் மாத்திரம் இருந்தாலும் பயன்படாது. ஆதலால் முயற்சி இல்லாவிடின் ஒன்றுமில்லை என்பதற்கு அனுமானிக்க வேண்டுவதில்லை.

10. முயற்சியுள்ள சிங்கத்தையே மகா லக்ஷ்மி அடைகிருள். தெய்வத்தினுல் பாக்கியம் கொடுபட வேண்டுமென்று ஆலஸியமாகிய சோம்பலும் அவிவேகமாகிய தெரியாமையுள்ள புருடர்கள் நினைக்கிருர்கள். ஆகையால் வைத்தியனிடத்தில் நம்பிக்கையை விட்டு சொந்தச் சக்தியினுலே முயற்சி செய்தும் ஒரு வேளை காரியம் சாதிக்கப் படாமற் போனுல் குற்ற மென்ன வென்று ஒரு வித்துவான் உரைத்திருக்கிருர். அதை யோசித்தால் எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

11. தெய்வத்தால் யாவும் நடக்குமென்று முயற்சியைக் கை விட்டவன் கெட்டுப் போவான். புருஷ காரண

யில்லாமல் தெய்வம் சித்திக்கிறதில்லை யென்பதை யறிந்தவனே புத்திமான்.

12. கஷ்ட தசையிலிருக்கும் ஒருவன் அக்கஷ்டத்தைப் பாராட்டாமல் பிரயோசனத்தைக் கொடுக்குந் தொழில் இன்னதென்றும், அதனிடத்து மனதைச் செலுத்தி முயற்சி செய்தால் பிரயோசனத்தை யடையலாகுமென்றும், புத்திக் கூர்மையால் பகுத்தறிந்து நடப்பானாகில், அவனுக்குச் செல்வமும் பெருமையும் ஏன் உண்டாகாமற்போகும்? உண்டாவது சித்தமே.

13. செய்யத்தக்க காரியமின்னதென்றும் அதனிடத்து புத்தியைச் செலுத்த முயற்சி செய்தால் பலனுண்டாகு மென்று தெரிந்திருந்தும், சோம்பலால் அதைக் குறித்து முயற்சி செய்யாமல் தரித்திரத்தால் வருந்துவோன் கல்வியிற் சிறந்தவனாக விருந்தாலும், அவனை அப்பிரயோசகனென்று உலகம் பழிக்கும். இவ்விதப்பழிப்புக்கு ஆளாவதைவிட இறத்தல் நலமாக விருக்கும் என பெரியோர் கூறுகின்றனர்.

14. பிறருக்கு உபகாரம் செய்வதினிடத்து புத்தியைச் சோரவிடாமல் இருப்பவன் பல நன்மைக்கும் ஆதாரமாகிய முயற்சியினிடத்து சிந்தை யுடையவனாக விருப்பான்.

15. முயற்சி செய்வதில் சிரத்தை யில்லாதவன் பரோபகாரஞ் செய்ய வேண்டுமென்கிற எண்ணத்தை மாத்திரம் கொண்டிருந்தால் அவ்வெண்ணம் முடிவு பெறாது.

16. எளிதில் பெறத்தக்க பல நன்மைகள் தனக்கு எதிராக இருந்தும், முயற்சியின்மையால் சோம்பலுற்று அவைகளைப் பெருமல் விட்டுவிடுகிறவன் யாதொரு பயனை யும் அடையமாட்டான். அஃதெவ்வாறெனின் எல்லா உயிர்களையும் வதைப்பதற்குக் காரணமாகிய கூர்மையுடைய வாளாயுதம் பேடி கையில் விளங்கிக்கொண்டிருந்தால், அத ஞல் யாது பயன்?

17. உபகாரிகளாக விருக்கின்ற நல்லோர்கள் தங்களு டைய சௌக்கியத்தை விரும்பாமலே ஒரு காரியத்தில் பிரவேசித்து அது முடிவு பெறும்படிக்குத் தக்க முயற்சி யைச் செய்து அதனுலாகிய திரவிய சம்பாதனையைத் தன் சுற்றத்தார் நட்பினர் முதலாகியவர்களுக்குண்டாகிய துன் பங்களை மாற்ற உபயோகப்படுத்தி அவர்களுக்கு சௌக் கியத்தை உண்டாக்குவார்கள் என்று முன்னேர்கள் சொல்லி யிருக்கிருர்கள். அஃதெவ்வாறெனின் மாளிகை முதலாகிய வீடுகளினுலே தூண்களுக்கு யாதொரு நன்மையும் இல்லா திருந்தாலும், அத்தூண்கள் தங்கள் வருத்தத்தை நினை யாமலே அம்மாளிகையைத் தாங்கிக் காப்பாற்றுவது போல வாம். ஆதலால் இவர்களைத் தாங்குவாரென்று நாயனுரும் சொல்லியிருக்கிருர்.

18. முயற்சியினிடத்து மனத்தளர்ச்சி இல்லாத வனுக்குச் செல்வம் வளர்ந்தேறு மென்றும், அம்முயற்சி யில் மன ஊக்கம் இல்லாதவனிடத்தில் வறுமை நிரந்தரம் குடி கொண்டிருக்கு மென்றும் சொல்லப்படும். இந்த நீதியை அறிந்து நடக்கின்றவனுக்கு எல்லா நன்மையும் எளிதில் வந்து கைகூடும்.

19. மூதேவி சோம்பலை யுடையவனிடத்து வாசஞ்செய்து கொண்டிருப்பாளென்றும், சோம்பலை யகற்றி நன் முயற்சி செய்பவனிடத்து சீதேவி நர்த்தனம் செய்து கொண்டிருப்பாளென்றும் முன்னோர்கள் சொல்லியுள்ள நீதி வாக்கியம் இப்போது அனுபவத்துக்கும் பொருத்தமாயிருப்பதால் யாவரும் முயற்சி செய்வதில் சிரத்தை யுடையவர்களாக இருக்கவேண்டும்.

20. ஒரு தொழிலினிடத்து முயற்சி செய்தும் ஊழினாலாகிலும் தெரியாத மற்ற காரணத்தினாலாகிலும் பலன் கிடையாமற்போனால் குற்றமொன்றுமில்லை. இதற்காக உலகம் பழியாது. ஆனால் வழியில்லையென்று முயற்சியைக் கைவிட்டுச் சோம்பலுற்றவனை உலகம் பழிக்கும்.

21. ஊழினால் ஒன்றும் அடைவதற்கு இல்லாதிருந்தாலும் மன உறுதியுடையவன் தனது நன்முயற்சியால் அவ்வூழையுங்கடந்து நடப்பானென்று அறிவுடையோர் சொல்லியிருப்பதற்கு நிதர்சன மென்னவெனில், பதினாறு வயதிற்கு அதிகமில்லாத மார்க்கண்டேயன் தன்னுடைய மன ஊக்கத்தின் முயற்சியால் என்றும் பதினாறு வயதுடையனாக இருந்தானென்கிற பிரமாணம் இருக்கவில்லையா?

22. ஒரு காரியத்தை முயன்று நடத்திவரும்போது அதற்குப் பலவிகாதங்கள் மேன்மேலும் வருமாயினும், அவைகளுக்கு இடங்கொடாமலும், மனம் கலங்காமலும், தான் தொடங்கிய காரியத்திற்குப் பங்கம் வராமல் நிறைவேற்றுகிறவனுக்குச் சமானம் ஒருவனும் ஆகமாட்டான்.

23. கரை புரண்ட வெள்ளம்போல் பல துன்பம் வந்தாலும் அதை உள்ளத்தில் உன்னிப்பார்த்து மனமகிழ்ச்சி

கொண்டிருப்பவனுக்கு அத்துன்பம் ஊழினாலே வந்ததானாலும் உடனே கெடுமென்று முன்னோர் சொல்லியிருக்கிறார்கள்.

24. உளையிலழுந்திய வண்டியை கடா தன் வருத்தத்தைப் பாராட்டாமல் மார் ஊன்றிக்கொண்டு இழுப்பது போல தன்முயற்சியில் புத்தியுடையவன் தான் நடத்துங் காரியத்திற்கு இடையூறு வருமாகில் தன்னுடல் வருத்தத்தைப் பாராமல் கூடிய முயற்சி செய்து நிறைவேற்றுவான். இவ்வகையோருக்குப் பல துன்பமுண்டாயிருந்தாலும் அவை உடனே அவர்களை விட்டு நீங்கிப்போய்விடும்.

25 ஆதலால், உயிருக்குத் துணைக்காரணமாக விருக்கும் முயற்சியினிடத்தில் மனத்தளர்ச்சி செய்யாமல் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்.

சிலம்பொலி

தமிழ் நாட்டின் சிறப்பு.

நமது இந்தியா தேசம் ஒரு கண்டம் போன்றது. கண்டம்போன்ற இத்தேசம் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அப்பகுதிகளுள் ஒன்றாயிருப்பது நமது தமிழ் நாடு. இத்தமிழ் நாட்டின் எல்லையை "வடவேங்கடந்தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்" என்று தொல்காப்பியப் பாயிரம் வகுத்துக் கூறியிருக்கிறது. இவ்வெல்லைக்கு உட்பட்ட மக்கள் நாகரிகத்தில் பெரிதுஞ் சிறந்து விளங்கினார்கள். இவர் தம் நாகரிகத்தை அறிவிக்குங் கருவிகள் பண்டைத் தமிழ் நூல்களே யாகும்.

இப்பொழுது தமிழ் மக்கள் உலகத்தின் பல பாகங்களிலும் பரவியிருக்கிறார்கள். சில விடங்களில் குடிபுகுந்த தமிழ்மக்கள் தங்கள் பழமையை மறந்து புதுமையை மணந்து வாழ்கிறார்கள். உலகத்திலுள்ள நாகரிக சாதியார்களுள் தமிழ் மக்கள் தலையாயவர் என்று கூறுவது மிகையாகாது. நேற்றுத் தோன்றிய சாதியார்கள் தங்கள் முயற்சியால் எவ்வளவோ அருங்காரியங்கள் செய்கிறார்கள். பழம் பட்டத்தவராகிய தமிழ் மக்கள் தங்கள் நிலை, தங்கள் முன்னோர் நிலை முதலியவற்றைக் கவனியாது வாழ்ந்து வருவதால் அவர்கள் எல்லா வழியிலுஞ் சிறுமையுற்று வருகிறார்கள். ஆதலால் பண்டைத் தமிழ் நாட்டில் வாழுந் தமிழ் மக்களும், வேறு நாடுகளில் குடிபுகுந்து வாழும்

தமிழ் மக்களும் தங்கள் நிலைமை வளப்படுத்த முயல்வார்களாக.

முதலாவது தமிழ் மக்கள் தங்கள் பழமையைப் பாராட்டப் பயிற்சி செய்ய வேண்டும். நில நூல், தாவர நூல், உயிர் நூல் முதலிய நூல்களை ஆராய்ச்சி செய்த கூர்ந்த மதியினராகிய ஹெக்கல் முதலிய அறிஞர், மக்கள் முதல் முதல் தோன்றிய நிலத்தைக் குறிப்பிட்டிருப்பதை ஆராயும் பொழுது அது தமிழ் நாடாகவே முடிக்கிறதென்று சரித்திரக் காரர் கூறுகின்றனர். இவ்வுண்மை விரிக்கிற் பெருகும். தமிழ் நாட்டிற் றோன்றிய முதன் மக்கள் பேசிய மொழியே தமிழ் மொழியெனப்படுவது. எம்மொழியின் கூட்டுறவுமின்றித் தமிழ் மொழி இயங்கும் ஆற்றல் பெற்றிருப்பதொன்றே அதன் தனிமையை வலியுறுத்தும். தமிழ்மக்களின் தொன்மையும் அவர்கள் மொழியின் தொன்மையும் சரித்திர காலத்தைக் கடந்து ஒளிர்வனவாம். பஃறுளியாற்றின் நிலைமைப் புறநானூறு முதலிய நூல்கள் கூறுகின்றன. அதன் வழியைச்சிலப்பதிகார முதலிய நூல்கள் கூறுகின்றன. பஃறுளியும், குமரியும், அவைகள் ஓடிய நாடும் கடலால் விழுங்கப்பட்டன. அந்நாட்டில் வாழ்ந்த மக்களிடைப் பூத்த நாகரிகமும் அறிவுமே இப்பொழுது உலகத்தில் பரந்தும் விரிந்தும் மருவியும் நிலவுகின்றன. சரித்திர காலத்துக்கு எத்துணையோ நூற்றாண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய தமிழ் மக்கள் பேசிய மொழி இன்னும் இறந்துபடாது நிலவி வருவதை நுண்ணறிவால் ஆராய்வோர்க்கு அம்மொழியின் தொன்மையும், வளமும்,

அதனாலுந் தமிழ் அழியவில்லை. எத்தனையோ புதுமக்கள்
தமிழ் நாட்டில் குடி புகுந்தார்கள். அதனாலுந்தமிழ்
அழியவில்லை. தமிழைத் தொலைக்கவுஞ் சிலர் முயன்ற
னர், அவர் முயற்சியினாலுந் தமிழ் அழியவில்லை. தமிழ்
மொழிக்குப் பின்னர் எத்தனையோ மொழிகள் தோன்றி
இறந்தன. ஆனால் தமிழ் மொழியோ சாவா மூவா மருந்
தாக உலகில் நிலவுகிறது. இம்மொழியிற்றானே— எத்தனை
யோ மொழிகள் கலந்தன; கலக்கின்றன. அவைகளின்
கலப்பால் தமிழ் அழிந்ததோ? இல்லை, இல்லை. தமிழின்
தொன்மை என்னே! என்னே!!

தமிழ் நாட்டில் வாழ்ந்த மக்களிற் சிலர் ஆரியர் குடி
புகுந்த காலத்தில் ஆரிய மதத்தைத் தழுவினர்; மகமதியர்
குடி புகுந்த காலத்தில் மகமதிய மதத்தைத் தழுவினர்;
மேல் நாட்டார் குடி புகுந்த காலந்தொட்டுக் கிறிஸ்துவ
மதத்தையுந்தழுவி வருகின்றனர். இவரோடு கலவாத
மக்கள் இன்னுந் தனித்தமிழ் மக்களாக வாழ்ந்து வருகிறார்
கள். தமிழ்மக்கள் எம்மதத்தைத் தழுவினும் அவர்கள்
தங்களைத்தமிழ் மக்கள் என்பதை மறத்தலாகாது. அவர்
கள் தங்கள் முன்னோரிடத்தும், மொழியினிடத்தும்,
நாட்டினிடத்தும் என்றும் பற்றுடையராய் வாழ்தல் வேண்
டும்.

தமிழ் மக்களுக்குள் சாதிவேற்றுமை பண்டைக்காலத்
திலில்லை. அவர்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்
என்ற நிலப்பாகுபாடு செய்துகொண்டு அந்நிலப்பெய
ரையே தங்களுக்குரிய வகுப்புப் பெயராகக்கொண்டு வாழ்

ந்து வந்தார்கள். தொழின் முறைப்பற்றி வந்த பெயர்கள் பிற்றை ஞான்று பிறப்புப் பெயர்களாக மாற்றப்பட்டன. இன்னுந் தென்னந்தனித்தமில் மக்களிடைச் சாதி வேற்றுமை பாராட்டப்படுவதில்லை. இஃதொன்றே பண்டைத்தமிழ் மக்கள் பிறப்பால் சாதி வேற்றுமை கொண்டொழுகவில்லை என்ற உண்மைக்குச் சான்று கூறும்.

பண்டைக் காலத்து வாழ்ந்த தமிழ் மக்கள் சமய ஞானத்தில் சிறந்து விளங்கினார்கள். பண்டைத்தமிழ் மக்களை நாத்திகர்கள் என்று கூறுவது நூலாராய்ச்சியில்லாதார் கூற்றாகமுடியும். தொல் காப்பிய மென்னும் சீரிய தமிழ் நூலில் "கந்தழி" என்றபொருளைப் பற்றிய வழக்கைக் காணலாம். 'கந்தழி' என்பது கட்டு அற்றது என்னும் பொருளை யுடையது. பின் வந்தார் அதைத் தத்துவங்கடந்த தனிப் பரம்பொருள் என்று கூறலானார். கட்டற்றது என்பதும், தத்துவங் கடந்த தனிப் பரம்பொருள் என்பதும் ஒன்றே. கட்டு அல்லது தத்துவம்—இவைகடந்து பொலியும் ஒன்றையே கடவுள் என்று கூறுவது, கட்டற்ற இடமே அன்புமயம். இவ்வன்பையே தமிழ் மக்கள் கந்தழி என்றும் கடவுள் என்றும் போற்றி வந்தார்கள். இதனால் தமிழ் மக்கள் அன்பு அல்லது கடவுள் என்ற ஒரு கட்டு இல்லா ஒன்றை வணங்கிவந்தனர் என்று தெரியவருகிறது. ஆதலால் அன்பாகிய கடவுளைத் தொழுந் தமிழ்மக்கள் சமயத்தை அன்பு சமயம் என்று கூறலாம். அன்பாகிய கடவுளைத் தமிழ்மக்கள் ஒழுக்கம் என்னும் மலரால் வழிபட்டு வந்தார்கள். "ஒழுக்கம் விழுப்பந்தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்

படும்'' என்னுந் திருவள்ளுவர்மொழி ஈண்டுக் கவனிக்கற்பாலது. ஒழுக்கமாவது கொலைகளவுகள் காமம் பொய் ஆகிய மறச்செயல்களை விடுத்து அறச் செயல்களைக் கடைப்பிடித்து நிற்பது.

தமிழ் மக்கள் அரசியல் எவராலும் போற்றுந் தகையது. செல்வர் ஏழை என்ற வேற்றுமை விளைவியாத சீரிய அரசியல் தமிழ் மக்கள் அரசியல். பண்டைக்கால அரசியல் கிராமத்தினின்றும் அரும்புவது. கிராமங்களில மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய துறைகள் எல்லாம் ஒழுங்குபெறப் பொலிந்திருந்தன. கிராமம் கிராமத்திலுள்ள அனைவருக்கும் பொது. ஒவ்வொரு தொழிற் கூட்டத்தார் உழைப்புக்களெல்லாஞ் சேர்ந்தே கிராம வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருந்தன. கிராம பஞ்சாயத்துக் கிராம நீதியை வளர்த்து வந்தது. கிராமத்தில் வாழ்ந்த மக்கள் தங்களுக்கு வேண்டுவன வற்றைத் தங்கள் கிராமத்திலேயே பெற்று வந்தார்கள். கிராமத்துத் தலைவர்கள் விரும்பியவாறே மன்னன் ஆட்சி செய்வன். மற்றத் தொழிலாளர்கள் போலவே மன்னனும் ஒரு தொழிலாளியாகவே கருதப்பட்டு வந்தான். துஷ்ட மிருகங்கள் கள்ளர்கள், மாற்றார் முதலியோரால் கிராமவாசிகளுக்குத் தீங்கு நேராதவாறு காத்துக் கொள்ளுந் தொழில் மன்னன் செய்து வந்தான். அத் தொழிலுக்குக் கூலியாகக் கிராமத்து ஜனங்கள் சிறு பகுதி கட்டுவார்கள். கிராமத்து மக்கள் பண்டைக் காலத்தில் தங்கள் கிராம விளைவைத் தாங்களே பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். கிராமத்தின் பொருள்கள் அவர்களுக்கே உரியனவாக விருந்தன. கடவுள் படைப்புக்கு உட்பட்ட

பொருள்கள் ஒரு கூட்டத்தவர்க்கு உரியனவாகவும் வேறு கூட்டத்தவர்க்கு உரியனவாகாமலும் அக்காலத்தில் பயன் பட்டு வரவில்லை. சுருங்கக் கூறின் ஏழை செல்வர் என்ற வேற்றுமை விளைவியாத அரசியலைத் தமிழ் மக்கள் அவலம் பித்து வந்தார்கள் என்று கூறலாம்.

தமிழ் மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய கல்வித் துறைகளை வளம்படுத்தி யிருந்தார்கள். தமிழில் மருத்துவ நூல், கோள் நூல், நீதிநூல், கடவுள் நூல் இலக்கண நூல், இலக்கிய நூல் முதலிய நூல்களிருக்கின்றன. இந்நூல்கள் சரித்திர காலத்துக்கு முன்னமே யாக்கப்பட்டவை. தமிழ் மக்களின் "தன்னாட்சி" வீழ்ந்து பட்டமையானும், பல நாட்டார் தமிழ் நாட்டில் புகுந்தமையானும் தமிழ் மொழிப் புலமையுடையார் தொகை அருகிற்று. இவ்விடையூறுகள் நிகழா திருக்குமாயின், தமிழ் மொழி உலகம் போற்றும் ஒரு மொழியாக மாண்புற்றிருக்கும். இக்கால அறிஞர்கள் நவமாகக் காணுஞ் சில பொருள்கள் பண்டைத் தமிழ் நூல்களில் இருக்கின்றன. இக்கால உலகத்திருத்தத்துக்கு வேண்டப்படும் பல செம்பொருள்கள் தமிழ் நூல்களில் மிளிர்ந்து கிடக்கின்றன. இதனால் பண்டைத் தமிழ்ப் புலவர்கள் அறிவு உழைப்பின் வெற்றியை என்னென்று பாராட்டுவது! பண்டைத் தமிழ் நூல்களை முறையாக ஆராய்வோர்பால் அன்பு, அமைதி, பொறுமை, இன்னா செய்யாமை, இயற்கையின்பம் முதலிய நறுங்குணங்கள் பொலியக் காணலாம். இடைக் காலத்துத் தமிழ் நூல்களும், தற்காலத்துத் தமிழ் நூல்களும் தமிழ்நாட்டின் சிறப்பைக் குலைக்க வந்த கோடரிக் காம்புகளாம்.

பண்டைத் தமிழ் மக்கள் பெரிதும் கிழங்கு வகைகளையும் பழ வகைகளையும், தேனையும், நெல் கம்பு கேழ்வரகு, வரகு முதலிய தானிய வகைகளையும் உண்டு காலங்கழித்து வந்தார்கள். மலையும் ஆற்றோரமும் காடும் கடலோரமும் அவர்களுக்கு உறைவிடங்களாக விருந்தன. அன்னார் பெரிதும் இயற்கையோடு கலந்த வாழ்க்கையை மேற்கொண்டொழுகி வந்தனர். பண்டைக் காலத்தில் தமிழ் மக்களிற் பெண் மக்கள் அடிமைகளாகப் பாவிக்கப் படவில்லை. அவர்களும் ஆண்மக்களைப் போல எல்லா உரிமைகளையும் பெற்று வந்தார்கள்.

சுருங்கச் சொல்லின் தமிழ் நாடு பழைய காலத்தில் நாகரிகம் நிரம்பப் பெற்ற நாடாயிருந்தது என்று சொல்லலாம். அத்தகைய நாடு இந்நாளில் எந்நிலையிலிருக்கிறது என்று கூர்த்த மதியோடு ஆராயும் ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ் மகளும் உலகத்தில் வாழவும் எண்ணங் கொள்வீரோ? தமிழ் நாட்டின் வளம் எங்கே? தமிழ் நாட்டின் வனப்பு எங்கே? தமிழ் நாட்டின் நாகரிகம் எங்கே? தமிழ் நாட்டின் மக்கள் எங்கே? தமிழ் நாட்டின் அன்பெங்கே? தமிழ் நாடெங்கே? தமிழர்களே! யோசியுங்கள். அநாகரிக மிலேச்சர்களெல்லாம் நாகரிக மனிதர்களாகி விட்டார்களே! சரித்திர காலத்துக்கு முன்னமே நாகரிக மனிதராக வாழ்ந்த நீங்கள் இப்பொழுது தேவர்களாக வல்லவோ வாழ்தல் வேண்டும். நீங்கள் செல்வங்களை யிழந்து வறியவர்களாய் வாடுகிறீர்களே. உங்களைப்போல் வறியவராய் வாழ்கின்றவர்கள் உலகத்திலுண்டோ? தமிழர்களே! எழுங்கள்!

தமிழ் நாட்டைப் பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டுமாயின், தமிழ் மக்கள் பலதிற உழைப்புக்களில் தலைப்பட வேண்டும். முதலாவது தமிழ் மக்கள் தங்கள் மொழியினிடத்துப் பற்றுக் கொள்ள வேண்டும். மேலே கூறியபடி தமிழ் மக்கள் எம்மதத்தை அனுஷ்டிக்கினும், அவர்கள் மொழிப்பற்றை விடுதலாகாது. நாட்டைப் பண்படுத்துங் கருவிகள் பல. அவைகளுள் சிறந்தது மொழி ஆதலால் நாட்டவர்க்கு மொழிப்பற்று இன்றியமையாதது.

தமிழ் நாட்டில் திலகர் பெருமான், காந்தியடிகள் போன்ற தேசபக்தர்க ளில்லாமைக்குக் காரணம் மொழிப் பற்றின்மையே யாகும்.

வங்காளிகள் வங்காள மொழியில் அளவிறந்த காதல் கொண்டிருக்கின்றார்கள். மஹாராஷ்டிரர் தம் மொழியில் பற்றுக்கொண்டே தேச சேவை செய்கின்றனர். அமிர்தஸரஸ் காங்கிரஸ் வரவேற்பு உபந்நியாசமும், நாகபுரி காங்கிரஸ் வரவேற்பு உபந்யாசமும் எம்மொழியில் நடைபெற்றன? ஹிந்தி ஹிந்துஸ்தானி பாஷைகளில் நடைபெற்றன. தமிழ் நாட்டில் காங்கிரஸ் கூடின் தமிழில் வரவேற்பு உபந்நியாசம் நடைபெறுமோ? மொழியினிடத்துப் பற்றில்லார் தேச சேவை இடம்பத்தைக் கருதியதாக முடியும். இப்பொழுது சில தலைவர்கள் முதலில் கட்டுரைகளை ஆங்கிலத்தி லெழுதிப் பின்னைத் தமிழில் மொழி பெயர்க்கும் வழக்கத்தை அனுஷ்டித்து வருகிறார்கள். அதுவுங் கூடாது. தமிழிலேயே முதலில் கட்டுரைகளை எழுதப் பழகவேண்டும் கருத்துஞ் சொல்லும் செயலும் தமிழ்

மயமாக விருத்தல் வேண்டும். பிறகருத்தும், பிறசொல்லும், பிறசெயலும் தேசப்பற்றை வளர்க்கமாட்டா. ஆதலால் முதலில் தமிழ் மொழியை வளர்க்கத் தேசபக்தர்கள் முயலல் வேண்டும்.

காங்கிரஸ் அமைப்பு இப்பொழுது புதுக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ், அமைப்பு நமது தேசத்தைப் பாஷைக்கேற்றவாறு பிரித்திருக்கிறது. இதன் நோக்கம் யாது? அவ்வந்நாடு அவ்வந்நாட்டின் வழக்க வொழுக்கங்களை அவ்வந்நாட்டிற் கேற்றவாறு அனுஷ்டிக்க வேண்டுமென்பதே யாகும். ஆதலால் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கூட்டத்தார் தமிழ் நாட்டவர் முன்னைய நிலையை ஆராய்ந்து அதற்கேற்ற முறைகளை அனுஷ்டிப்பாராக. தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கூட்டத்தார் நிகழ்ச்சி முறைகளைத் தமிழிலேயே நடாத்த வேண்டும். மாறாக நடப்பாராயின், நாட்டார் அவரைத் தமிழ் வழியில் நடாத்த முயலல் வேண்டும்.

All works of quality must bear a price, proportion to the skill, time, and risk attending their invention and manufacture. Those things called dear, are when justly estimated, the cheapest; they are attended with much less profit to the artist than those which every body calls cheap. Beautiful forms and composition for cheapness and not for excellence or workmanship is the most frequent and certain cause of the rapid decline and entire destruction of arts and manufactures.

—*John Ruskin.*

தொழிலும் குட்டி வேதாந்தமும்.

'செய்வன திருந்தச் செய்' என்பது முதுமொழி. ஆற்றில் ஒரு காலும் சேற்றில் ஒருகாலுமாய் வைத்துக்கொண்டு குடும்ப விவகாரங்களிலும், வியாபாரத்திலும் குறுக்கிட்டுக்கொண்டு, 'அதிலென்ன இருக்கிறது' 'இதிலென்ன இருக்கிறது' 'எல்லாம் அவனைத் தவிர வேறுண்டோ' வென்று பேசிக்கொண்டு, தாயுமானவர், பட்டினத்தார், நால்வர், முதலானவர்கள் பாடிய பாடல்களில் பொருத்தமான சில கண்ணிகளை மனப்பாடம் செய்து பாட்டடைத்த குடுக்கைபோல் ஒப்பித்து ஞானம் பேசுவார்கள். ஒரு தொழில் செய்ய ஆரம்பித்தால் செவ்வனே செய்து முடிக்கவே வழி தேடவேண்டும். தத்துவ விசாரமும் சோதனையும் வியாபாரஞ் செய்யுமிடத்தில் வேண்டுவதில்லை. அப்படிப் பேசுவதால் சோம்பலும் தூசட்டையும் அதிகப்படுமேயன்றி வேறு பிரயோசனமிராது; நல்ல மரங்களில் புல்லுருவி முளைத்தது போல் ஊக்கமுள்ளவர்களின் புத்தியைக் கலைப்பதற்கு சிலர் தோன்றி விடுவார்கள். 'ஒன்றே செய்க. ஒன்றும் நன்றே செய்க' ஒன்றைச் செய்யும்போது, மற்றொன்றைச் செய்யாதே. ஒருவன் கடைக்குச்சென்று ஒரு தொன்னையில் நெய் வாங்கி வரும்போது, நெய்க்கு தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமாவென்ற விசாரம் உண்டாய் விட்டது. நெய் வாங்கப்போனவன் கடையில் வாங்கி வீட்டில் சேர்ப்பதை விட்டு, சம்பந்தமற்ற விவகாரத்தை சிருஷ்டி செய்துகொள்வதில் யாது பயனுண்டாகும்.

'Work while you work
Play while you play
That is the way
To be cheerful and gay'

படிக்கும்போது படிப்பதும் விளையாடும்போது விளையாடுவதும், எவ்வளவு நன்மையுண்டாக்கும் என்பதை இதனை வாசிப்போரே சிந்தித்துப் பார்க்கட்டும். இதை உத்தேசித்தே சிறுவர்களுக்கு மேற்கண்டவாறு ஒரு பெரியவர் போதித்திருக்கிறார். வியாபாரம் செய்ய வந்து விட்டால் அவ்விஷயத்தில் மனதைக் கவனமாய்ச் செலுத்த வேண்டும். பிறர் பொருளாயினும் தம் பொருள்போல் போற்ற வேண்டும். சாதாரணமாய் 'குட்டி வேதாந்தம் குடியைக் கெடுக்கும்' என்று சொல்வது வழக்கம். தத்துவ விசாரம், பக்தி, அன்பு முதலியவை மனதிலிருக்க வேண்டும். ஒரு தொழிலைப்பற்றி அபிவிருத்திக்கான வழியில் உற்சாகமாய்ப் பேசிக் கொண்டிருக்கும் போது, 'இதிலே யெல்லாம் என்ன இருக்கிறது? போகும்போது ஒன்றும் கூடவரப் போவதில்லை. செல்வமோ கை மாறிக்கொண்டேயிருக்கும். நிலையற்ற வாழ்வு என்பதற்கு அதுவே போதுமான அத்தாட்சி' என்று மடைதிறந்த வெள்ளம்போலும், பட்டினத்தடிகள் சித்தரைப்போலும் இஷ்டம்போல் பேசி முடித்திடுவர். தொழிலுக்கும் பாரமார்த்திக விவகாரத்துக்கும் சம்பந்தமேயில்லை. ஏனென்றால் ஒவ்வொரு விவகாரத்துக்கும் ஒரு வரம்பு—அளவு—உண்டு. வரம்பு கடந்து விட்டால் முறை தவறியவன் என்றாகும். வரம்பு இல்லாமல் பேசத்தலைப்பட்டால் முடிவு ஏற்படாது. தொழிலைச்

செய்யும்போது கண்ணுங் கருத்துமாய்க் கவனிக்க வேண்டும். 'நான் இஷ்டப்படி பேசினால் தடுப்பாரில்லை' என்று சிலர் கர்வத்தோடும் பேசுவார்கள். வாலிபத்தில் பணத் திமிர் பிடித்து சிலர் தம் வாயில் வந்ததெல்லாம் தேவவாக்கியமெனக் கேட்போர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென தர்க்கம் செய்வார்கள். பல வழியிலும் அநுபவப்பட்டோர் தங்கிலை யாருத மௌனத்தைக் கடைப்பிடிப்பர்.

"வில்லது வளைந்ததென்றும் வேழ
 மதுறங் கிற்றென்றும்
வல்லியம் பதுங்கிற்றென்றும் வளர்
 கிடா பிந்திற்றென்றும்
புல்லர் தம் சொல்லைப் பொறுத்தனர் பெரி
 யோ ரென்றும்
நல்ல தென்றிருக்க வேண்டாம்
 நஞ்செனக் கருதலாமே"

என்றாலும் சில சந்தர்ப்பங்களில் ஒத்து ஊதி 'சரி' போட்டுவிட வேண்டியதாகும். எந்தெந்த வேலைகளை எவ்வெப்போது செய்யவேண்டுமோ அவ்வப்போது அந்தந்தக் காரியங்களைச் செய்யவேண்டும். தொழில் முதலிய விவகாரங்களில் அதைரியம் உண்டாகி ஊக்கங் குறையும்படி முறை தவறி குட்டி வேதாந்தம் எவரும் பேசினால் அதை பொருட்படுத்தா திருப்பது சிலாக்கியம். விவகாரத்துக்கு இடங்கொடாமல் கூடியவரை விஷயத்தைச் சுருக்கிவிடவேண்டும். அல்லது பேசுவோர் வழிப்பட்டு பேச்சை முடிவுக்குக் கொண்டுவந்து விட வேண்டும். தர்க்கம் செய்ய ஆரம்பித்தால் குதர்க்கமாகி வம்புகள் சேர்ந்துவிடும். எவ்விதத்தும் அவர்களுடன் சேர்ந்து பேசி சமயோசிதமாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

தொழில் துறை

சுதேசியம்

இந்தியா தேசம் கற்பகம் போன்றது. தேனும் பாலும் சொரியும் நாடு இஃது ஒன்றே. சகலவிதமான விளை பொருள்களும் உற்பத்தியாகும் நாடு நம் நாடு ஒன்றேதான். இவ் விளை பொருள்கள் இந்தியாவைவிட்டு வெளி தேசங்களுக்குப் போகின்றன. நெல், கோதுமை, எண்ணெய் வித்துகள், காபி, தேயிலை, பருத்தி, சணல்நார், எட்டிக் கொட்டை, மற்றும் பலபல சாமான்கள் போகின்றன. ஒரு ராத்தல் எடையுள்ள பருத்தி நம் தேசத்தை விட்டுப் போய் சீமையிலிருந்து துணியாக வந்தால் அந்த ஒரு ராத்தலுக்கு 1½ ரூ. கொடுக்கின்றோம். இத்தப்பருத்தி சாமான்களில்மட்டும் இந்தியா சென்றவருடம் அடைந்த நஷ்டம் சுமார் 41 கோடி ரூபாயாம்; சென்ற நூறு வருடத்தில் அடைந்த நஷ்டம் சுமார் 782 கோடி ரூபாயாம். எண்ணெய் வித்துக்கள் ரூ. 15 கோடிக்குப் போகின்றன. 6½-லட்சம் ரூபாய் விலை மதிப்புள்ள நார் சென்ற வருடத்தில் போய் மீண்டும் பிரஷ் ஆக வந்ததற்கு 21 லக்ஷம் கொடுத்தோம். 1½ லட்சம் எட்டிக் கொட்டை போய் மீண்டும் நக்ஸ் வாமிகா மருந்தாக வந்ததற்கு 7 லட்சம் கொடுத்தோம். இப்படி நம் நாட்டுத் திரவியம் வியாபாரத் துறையிலே கோடிக் கணக்காகப் போவதை நிறுத்த வேண்டுமானால் அன்னிய நாட்டுச் சாமான்களை விலக்கவேண்டும். துணி, நூல் முதலியவைகளில் அதிகமான நஷ்டத்தை இந்தியா அடைகிறதென்பதைக் கொண்டுதான் மகாத்மா காந்தி,

பூர்வத்தில் நம் கிராமங்களில் கைராட்டினங் கொண்டு நூல் நூற்று வந்ததைப்போல இப்பொழுது ஒவ்வொரு வரும் நூல் நூற்றல் வேண்டுமென்று கூறுகிறார். கைராட்டினத்தில் நூல் நூற்றுத் துல்லியமான டாக்கா மஸ்லின் துணிகள் செய்யப்பட்டு வந்தன. கை ராட்டினத்தால் பூர்வத்தில் 500-ம் நெ நூல் நூற்கப்பட்டு வந்தது. இப்பொழுது எல்லா நெ. நூல்களும் சீமையிலிருந்தும் ஜப்பானிலிருந்தும் வருகின்றன. இந்தத் தேசங்கள் நம் ரத்தத்தை வியாபார மூலமாக உறிஞ்சுகின்றன. மகாத்மா காந்தியின் உத்தரவால் இந்தியாவில் அநேகர் கை ராட்டினத்தைக் கொண்டு நூல் நூற்று வருவதினால் சீமையில் அநேகத்தொழிற் சாலைகள் நின்று விட்டன, ஆயிரக் கணக்கான தொழிலாளிகள் வேலையின்றியிருக்கின்றனர். சென்னைக்கு கவர்னராக ஒரு காலத்தில் இருந்த லார்ட் ஆம்ப்தில் தங்கள் ஊரில் உள்ள வியாபாரிகளுக்குப் பின் வருமாறு எச்சரிக்கை செய்கிறார்:—காந்தி ஏற்படுத்தும் கைராட்டின இயக்கம் நம்மை ஏழைகளாக்கும்; காந்தியின் கை ராட்டின உணர்ச்சி இந்தியாவெங்கும் பரவுமானால் இங்கிலாந்து அதோ கதியாகும், என்று கூறுகிறார். ஆகவே, நாம் இஃதொன்றை மட்டும் அனுஷ்டித்தால் நம் நாட்டுத் திரவியம் பிற நாடுகளுக்குப் போகாது? நாட்டுத் திரவியம் வெளி நாடுகளுக்குப் போவதினால்தான் நம்மை விட்டு நீங்காத பஞ்சங்கள் உண்டாகின்றன. பிரிட்டிஷ் அரசாட்சி தோன்றின நாள் முதற்கொண்டு இந்தியாவில் சுமார் 62 பஞ்சங்கள் உண்டாயின. நம் நாட்டிலுள்ள 31 கோடி ஜனங்களுள் சுமார் 17 கோடி ஜனங்கள் அன்னமில்லாமல் வெறுங் கஞ்சித் தண்ணீரைக் குடித்துக் காலந் தள்ளுகிறார்கள்; மற்றும் 8 கோடி ஜனங்

கள் ஒரே ஒருவேளை அன்னம் புசிக்கின்றார்கள். இரண்டு வேளை சரியாக அன்னம் புசித்து மானஜீவனஞ் செய்பவர்கள் சுமார் நாலரை கோடியே. பிற நாட்டார்கள் அன்ன மின்றியும் ஆடையின்றியும் காட்டில் வசித்துத் தயங்கி யிருக்கையில் நம் தேசம் அவர்களுக்கு அன்னத்தையும் ஆடையையும் கொடுத்து ஆதரித்தது. கற்பகம் போன்றும் காமதேனு போன்றும் இருந்த தேசத்தில் இப்பொழுது பஞ்சமும், வியாதியும் குடிகொண்டு விட்டன. மணி இந்தியா இப்பொழுது பிணி இந்தியா வாயிற்று. இந்தியர்களின் வருட வரும்படி 40 ரூபாய்தான். அமெரிக்கா தேசத்தில் ஒவ்வொருவனுடைய வருட வரும்படி 1200-ரூ. இங்கிலாந்தில் ஒருவருடைய வருட வரும்படி 900 ரூ. ஜப்பானில் ஒருவரின் வருட வரும்படி 450-ரூ. இந்தியா எவ்வளவு ஏழ்மையா யிருக்கின்றதென்று பாருங்கள். நம் நாட்டுத் திரவியம் வெளி நாட்டுக்குப் போவதில் பிரயோசனமென்ன? நம் நாட்டுச் சாமான்களை நாம் வாங்கினால் நம் கைத்தொழிலாளர்கள் பிழைக்கவும் நாட்டுத் திரவியம் நாட்டிலே யிருக்கவும் கூடும். கந்தனிடத்திலே இருந்தால் ஒருகால் முருகனுக்கும் முருகனிடத்துப் பணம் ராமசாமிக்கும் ஒரு கால் உதவும். இப்பொழுது கந்தன் பணம், முருகன் பணம், இராமசாமி பணம் எல்லோருடைய பணமும் ஜோன்ஸ் துரைக்கும் போகிறது. ஜோன்ஸ் துரை, நம் நாட்டினரா, நம் நிறத்தினரா, நம் மதத்தினரா, ஒன்றுமில்லை. ஆகவே வெளி நாட்டுச் சாமான்களில், துணி, சோப்பு, வாசனைத் திரவியங்கள், சர்க்கரை, பீங்கான் முதலிய சாமான்களை வாங்கினால் இந்தியா 71 கோடி நஷ்ட மடைகின்றது. 71 கோடி பணத்தால் எண்ணிறந்த குடும்பங்கள் வாழலாம். நாட்டுடனும் வாழ்க் கேடொன்றுமில்லை. இதைத் தான் காங்கிரஸ் மகாசபை தீர்மானித்தது; மகாத்மா காந்தியும் கூறுகிறார்.

—கிருஷ்ணஸ்வாமி சர்மா.

தொழில் விர்த்தி.

இந்தியாவின்மீது மகம்மதியர் படையெடுத்து வந்ததற்கு முன்னரும், மகம்மதியர் ஆட்சிக் காலத்திலும் இந்தியா தனக்கு வேண்டிய சாமான்களுக்கு அந்நிய தேசங்களை யெதிர் பார்த்திருக்கவில்லை; உடைப்பொருள்களும். பிறபொருள்களும் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. ஆங்கிலேயர் வியாபாரிகளாக இந்தியாவில் வந்தகால முதற்கொண்டு இந்தியத் தொழில்களைத் தலையெடுக்க வொட்டாது செய்து வந்தனர்; தங்கள் ஜாதியாரின் தொழிலும் வியாபாரமும் விர்த்தி யாதல் வேண்டுமென்னும் நோக்கத்துடனேயே அவர்களால் இந்திய அரசாட்சி நடத்தப்பட்டு வந்தது; தற்காலத்திலும் அந்த நோக்கத்துடனேதான் இந்திய அரசாட்சி நடத்தப்பட்டு வருகின்றது. ஆகையினாற்றான், இந்தியா பிரிட்டிஷ் அரசாட்சியின் கீழ் வந்து 150-வருட காலமாகியும் இந்தியர் தங்களுடைய மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு வேண்டியிருக்கும் உடைக்கும் அந்நியதேசங்களை யெதிர் பார்க்க வேண்டியவராகிவிட்டனர். பூமண்டல யுத்த காலத்தில் இந்தியாவிற்கு நேர்ந்த கஷ்டங்களையும் உடைப்பொருள்களும், வாழ்க்கைக்கு வேண்டிய பிறபொருள்களும் இந்தியாவிலுற்பத்திசெய்யப் படாமையால் நேர்ந்த கஷ்டங்களையும் அறிந்த எந்த இந்தியனும் சுதேசிய விரதத்தை மேற் கொள்ளப் பின்வாங்க மாட்டான்; அந்நிய நாட்டுச் சாமான்களை வாங்கி உபயோகிக்க முற்படமாட்டான். அந்நிய தேசங்களிலிருந்து இந்தியாவிற்குப் பருத்

இச் சாமான்கள் வருவது நின்றுவிடின், ஐரோப்பிய யுத்த காலத்தைப் போன்ற காலங்கள் நேரிடின், இந்தியர் நிர்வாணிகளாக விருத்தல் சம்பவிக்குமன்றோ! அவ்வாறான நிலைமையைப் பரிகரிப்பதற்கு இந்தியர் என்ன செய்ய முயற்சி செய்கின்றார்கள்? ஒன்றையுங்காணோம். இந்தியர் மேல்நாட்டு நாகரிகத்தில் மயங்கியவராய்த் தேசாபிமானம், பாஷாபிமானம், மதாபிமானம், ஜாதியபிமானமென்பவற்றை முற்றும் இழந்துவிட்டனர். வீர—தீர—தியாகிகளாயிருந்த இந்தியர் மண்—பெண்—முதலியவற்றிற்கு அடிமையாய், சுயநலப் பிரியர்களாய் விட்டனர். தாமும்—தம்மனைவி மக்களும் சுகமே வாழ்ந்துவந்தாற் போதுமென்னும் துர்ப்புத்தியுடையவராய் விட்டனர்; கோழைமனத்தினராய் விட்டனர். ஞானிகள் வாழ்ந்த இந்தியாவில் நடைப்பிணங்கள் வாழ்ந்து வருகின்றன. ஞானமணம் கமழ்ந்த இந்தியாவில் பிணமணங் கமழ்கின்றது. இவற்றையெல்லாங் கண்டே உலகத்திலுள்ள தேசத்தாரெல்லாம் இந்தியரை யெள்ளி நகையாடுகின்றனர். இன்னம் இந்தியர்க்குப் புத்தி வரவில்லை. ஐரோப்பா யுத்த நெருக்கடியினால் இந்தியாவிற்கு நேர்ந்த கஷ்டங்களைக் கண்டும் இந்தியர் விழிப்படையாமலிருக்கின்றனர். நாம் உலகத்தாரால் மதிக்கத்தக்க யோக்யதையுடையவர்களாதல் வேண்டுமென்னும் தாகம் இந்தியர்க்குச் சிறிதுமில்லாமலே யிருக்கின்றது. முயற்சி திருவினையாக்கும்; முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பவற்றைக் கடைப்பிடித்து, அந்நிய தேசத்தினர் முன்னேற்றமடையச்செய்யும் முயற்சிகளைப் பின்பற்றி இந்தியர் நடக்க முற்படுவார்களாயின், இந்தியா சமீபகாலத்திலேயே மேல்

நிலைமையைப் பெறுவதாம். உலகத்திலுள்ள தேசங்களெல்லாம் மேல்நிலைமையை படைத்திருப்பது தொழில் விர்த்தியினாலும் என்பதனை இந்தியர் தீர்க்கமாக வுணர்ந்து, இந்தியத் தொழில்களை விர்த்திசெய்துக் கொண்டுவர முற்படுதல் வேண்டும்; இந்தியரின் நிர்வாணமான நிலைமையைக் கண்டேனும் இந்தியர் மகாத்மா காந்தி உபதேசப்படி. நூல் நூற்கும் ராட்டினத் தொழிலையும், கைத்தறித் தொழிலையும் இந்தியா முற்றும் பரப்பிவிடும் முயற்சியை மேற்கொள்வார்களாயின், இந்தியாவின் தரித்திரம் இந்தியாவில் தரித்திராதாம். இந்தியாவின் குக்கிராமந்தோறும் கைராட்டினம் புகுந்து விடுமாயின், பிரிட்டிஷாரின் பருத்திச் சாமான் வியாபாரம் இந்தியாவில் புகாமல் படுத்துவிடுமென்றும், அதனால் இங்கிலாந்தில் கோடிக் கணக்கான பேர் வேலை யற்றுப்போவார்களென்றும் ராஜதந்திரிகள் எச்சரிக்கை செய்து வருகின்றார்கள். ஆங்கிலேயர் தாம் பிழைக்கும் வழியையே பார்ப்பார்கள். இதனைக்கண்டேனும் இந்தியர் புத்திபோடு நடக்க வேண்டாமா? ராட்டினத் தொழில் இந்தியா முற்றும் பரவி விடுங்காலத்தில், இந்தியர்க்குத் துணிக் கஷ்டம் ஒழிவதோடு இந்தியக் கூலிகள் அந்நிய தேசங்களுக்குச் சென்று மானமழியாமலு மிருத்தல் கூடும்.

When one task is finished, jump into another. Don't hesitate. Don't wait. Keep going. Keep going. Doing something is always better than doing nothing.

For activity breeds ambition, energy, progress, power. And hesitation breeds illness, laziness.

Save the half hours that are wasted in waiting. Take time once for all—the best hour of the twenty four—to plan a head. Then keep to schedule. That is the secret of system. Keep going.

ஏழை பணக்காரனாகும் வழி

ஒரு ஏழை புத்திசாலியாயும் யூகமுள்ளவனாயுமிருந்தால் பல நூல்களைப்படித்து புதிய நூல்களாய் சொந்தமாய்ப் பிரசுரஞ் செய்யட்டும், அல்லது வைத்திய முறையில், பல விர்த்திக்கான 'மாத்திரை தயார் செய்யட்டும்'' என்று இங்கிலாந்தில் ஒரு பிரபல விளம்பர யுக்தி சொல்லும் நிபுணர் இருபதாம் நூற்றாண்டு என்ற நூலில் மேற் கண்டவாறு சொல்லியிருக்கிறார்.

" If you want to be rich
make a book or a pill "

பணம் படைத்த செல்வவான்களுக்குத் தொழில் முறையில் யுக்தி சொல்ல எவரும் தேவையிராது. அந்தப் பணமே பல வழிக்கும் நூதன மார்க்கத்தைக் காட்டிக்கொடுக்கும். தன்னடக்கமுள்ள ஏழைகள் முன்னேற்ற மடைவதற்கே தக்க சாதனம் தேவை. அதற்கான வழியில் அயல் நாட்டார் புதிது புதிதான முறைகளைக் கண்டு பிடித்து, ஏழைச் சிறுவர்களை ஊக்கமுடன் இஷ்டமான தொழிலைக் கற்றுக்கொள்ளும்படிச் செய்கிறார்கள். பிரதி மனிதனும் ஒவ்வொரு தொழிலில் கூர்மையாய் புத்தியைச் செலுத்தி அதிலுள்ள லாப நஷ்டத்தையும் கஷ்ட சுகத்தையும் நிரந்தரமாய்க் கருதி தங்கள் எண்ணம் பூர்த்தியாகும் வரை பாடுபடுகிறார்கள். சாதாரணமாய் பற் பொடி தயார்செய்கிற சில கம்பெனியார் செய்கிற விளம்பரங்களை

யும் அபிவிர்த்திக்கான மார்க்கங்களையும் அனுசரிப்பதைக் காணில், எவ்வளவோ மேன்மையா யிருக்கிறது. ஒரு தம்படிக் கணக்கில் விற்பனையாகும் மூக்குத் தூளினால் எத்தனையோ பேர்பணக்காரராயிருக்கிறார்கள். வெற்றிலை பாக்குக் கடையால், தற்காலம் அநேகர் நல்ல ஸ்திதியில் வாழ்ந்து வருகிறார்கள். மாதம் பதினைந்து ரூபாய் சம்பளத்துக்கு அவதிப்பட்டும், குடும்ப செலவுக்குத் திண்டாடிய ஒருவர் அவ் வேலையை விட்டு, மனோ உறுதியோடும், அனுதினமும் கடவுளைத் துதித்துக்கொண்டும், வெற்றிலை பாக்குக் கடை வைத்து நடத்தி வருகிறார். மாதம் 1-க்கு சரா சரி ரூ 75 சம்பாதிக்கிறார். அடிமைத் தொழிலை விட்டு சுதந்தரமான தொழிலில் ஈடுபடுவதென்றால் ஒரு பெரிய பள்ளத்தைத் தாண்டுவது போலிருக்கிறது. வெற்றிலை பாக்குக்கடை வைக்கிற இடத்துக்குத் தக்கபடியும் தனது நிலைமைக்கு ஏற்றவாறும் முதலிட்டு நடத்தலாம்.

ஒரு இருபது ரூபாய் சம்பளத்துக்கு, நாடக சாலையில் வேஷம் போடுவதுபோல் உடைகளை அணிந்து சுமைதாங்கியைப்போல் போய் படும் கஷ்டம் எவ்வளவு. இதனால் வேலைக்குப்போகிறவர்கள் எல்லாரும் இராஜினுமா செய்து விடவேண்டு மென்பதல்ல. எல்லோரும் பல்லக் கேறுவதென்றால் அதனைச் சுமப்பதற்கு ஆள் வேண்டுமே என்ற சந்தேகம் உண்டாகும். மேலாம் பதவியை அடைய யோக்கியதை யிருந்தும் ஒரு குளத்திலுள்ள தவளைபோல, இருப்பிடமே கைலாசம் என்பதாய் எண்ணிப் பலவித இடுக்கண்களுக் காளாவாருக்கே இது கூறப்படுகிறது. அபிவிர்த்திக்கான தைரியம் கடுகளவு கூட இராதென்று

நினைக்க வேண்டியதாகிறது. இந்த வேலையை விட்டுவிட்டால் நமது கதி என்ன ஆகுமோ? நமது குடும்பம் எவ்விதம் தவிக்குமோ என்ற பயம் உண்டாய்விடுகிறது. அன்னிய நாடுகளில் கட்டாயக் கல்வியையும், இராணுவப் பயிற்சியையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்; இதனால் திடகாத்திரம் வீரத்தன்மை, அஞ்சாநெஞ்சு, தைரியம், ஊக்கம், அரசனின் ஆதரவு முதலியன உண்டாய்விடுகின்றன. நமக்கு அத்தகைய பாக்கியம் இல்லாதிருந்தாலும் கடவுளிடத்தில் அகலாத பக்தியிருப்பதால், அந்த தைரியத்தைக் கொண்டேனும் விர்த்தியாகலாம். ஜெயிலில் அடைபட்டு வேலைசெய்யும் கைதிகளைப்போல, இந்த உத்தியோகம் செய்து பிழைக்கவே கர்மம் விதித்திருக்கிறதென்று நினைக்கக்கூடாது. தன் தகுதிக்கும் புத்திக்கும் ஏற்ற அடுத்த மேலாம் பதவியை எதிர்பார்க்கவேண்டும். அதற்கான முயற்சி செய்ய வேண்டும். திறமையில் உயர் பதவிக்கும் அதிகச் சம்பளம் பெறுவதற்கும் யோக்கியதை உண்டு என்பது விளங்கவேண்டும். கெட்டிக்காரன் என்பது எஜமானர்களுக்குத் தெரிந்திருந்தும் எவ்வித நன்மையும் ஏற்படாவிடில் தன்னை விரும்பக்கூடிய வேற்றிடத்துக்கு முறைப்படிப் போக வேண்டியதே. பல எஜமானர்களிடம் வேலைக்கிருப்பது அவ்வளவு நலமல்ல. தொழில் தெரிந்திருந்தால் சிறிதாய் ஆரம்பித்து நடத்தலாம். ஒருவன் தன் புத்திக் கேற்ப தக்க பதவி கிடைக்காவிடுமாயின் அதில் தான் நீடித்திருப்பதற்கான சாதனங்களை அனுசரித்துக் கொண்டிருக்க வேண்டும். சுயேச்சையாய் தொழில் அல்லது வியாபாரம் செய்யப் பிரியப்படுவோர் தக்க வயது வரும் வரை, தனக்கிஷ்டமான வியாபாரிகளிடத்தில் உத்தியோ

கத்துக்கு இருப்பதே சிலாக்கியமானது. ஆனால் சில சில்லரைத் தொழில் செய்வதற்கு ஆழ்ந்த யோசனையும் சாமர்த்தியமும் தான் தேவையாயிருக்கும். அனுபவத்தை முன்னால் சம்பாதித்துக் கொள்ளவேண்டு மென்பது அவசியமில்லை. ஒரு வியாபாரத்தைச் சிறிதாய் ஆரம்பம் செய்துவிட்டால் தொழிலே வழிகாட்டும். குன்றாத ஊக்கமும் தைரியமும் தான் தேவை. நமக்குத் தெரிந்தவர்களெல்லாம் அவரவர் மனம்போல் ஏற்றத் தாழ்வாய்ப் பேசுவார்கள். ஒரு வியாபாரத்தை ஆரம்பித்த பிறகு கேட்பார் பேச்சுகளைக் கவனிக்கக் கூடாது. தன் புத்தியைக் கொண்டு மேடு பள்ளத்தை அறிந்து நடந்து கொள்ள வேண்டும்.

கலங்காத நெஞ்சுடைய—தைரியமுள்ளவர் தான் ஒரு வியாபாரத்தை ஆரம்பம் செய்து நடத்த முடியும் என்று மீண்டும் வற்புறுத்திக் கூறுகின்றோம். ஏனெனில் சிலர் ஒரு தொழிலை ஆரம்பித்துச் சொற்பகாலம் நடந்து கொண்டிருக்கும் போதே அருவருப்புக் கொண்டு சேவகத்துக்கே சிலர் திரும்பிவிடுகிறார்கள். தொழிலை நடத்துவதில் மிகுந்த பொறுமை வேண்டும்.

முதலாவது—பிரதி மனிதருக்கும் அதிகாலையில் தந்த சுத்திக்குப் பற்பொடி தேவை. தற்காலம் பெரும்பான்மையோர் பற்பொடியையே விரும்புகின்றனர். ஜப்பானிலிருந்து டப்பி 1-க்கு ஒரு அணா வீதம் விற்பனையாக்கக் கூடிய விதமாய் பற்பொடி ஏராளமாய் செலவழிந்திருக்கிறது. ஒரு அணா பெறக்கூடிய பற்பொடிக்கான விளம்பரங்களைக் கண்ணுறும்போது வெகு விமரிசையாயிருக்கிறது.

இந்த விளம்பரம் பார்ப்போர் கண்ணையும் கருத்தையும் பற்றி யிழுத்து தன்னை மறவாதிருக்கும்படிச் செய்கிறது.

பற்பொடியை ஏராளமாய் தயார் செய்து ஒவ்வொரு ஷாப்புகளிலும் விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய விதமாய் தொழிலை நடத்த வேண்டும். ஒரு மனிதன் பற்பொடித் தொழிலை சரிவர நடத்துவானாயின், அதுவே அளவற்ற சம்பாத்தியத்தைக் கொடுக்கும். அவ்வியாபாரம் எவ்வகையில் விர்த்தியாகும் என்பதைக் கவனிக்க வேண்டும். அதற்கான பற்பல விளம்பரங்களைத் தயார் செய்யவேண்டும். விளம்பரமெல்லாம் தொழிலுக்கு அஸ்திவாரமென்பதை நன்குணரவேண்டும்.

(சுவற்றில் ஒட்ட)

பிரசித்தி

பெற்ற

பரிமளானந்த

பற்பொடி

விலை அணா 4.

எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

சுவற்றில் ஒட்டக்கூடியதாய், சிறிது பெரிதாக பல விதம் தயார் செய்து பட்டணங்களில் ஒட்டவேண்டும். நல்ல கடிதத்தில் சித்திர சகிதம் நோட்டீஸ் அச்சிட்டு வீட்டுக்கு வீடு கொடுக்க வேண்டும். ஒவ்வொரு ஷாப்பிலும் முன்னணியில் கட்டித் தொங்கவிடக்கூடிய பலகை, தகடு அல்லது அழகாய் அச்சிட்ட அட்டை கொடுக்க வேண்டும். செய்யும் ஒவ்வொரு வேலையும் பொது ஜனங்கள் விரும்பக் கூடியதாகவே இருக்கவேண்டும். (மாதிரி)

விற்பனைக்குத் தயார்

பிரசித்திபெற்ற

பரிமளானந்த

பற்பொடி

விலை அணா 4.

பொது ஜனங்களின் கருத்தைக் கவரும்படி அடிக்கடி விளம்பரம் செய்ய வேண்டும். ஒருவருஷம் இடைவிடாது ஒரு முறையாய் விளம்பரம் செய்தால் மூன்று வருஷம் தொழில் தொடர்ச்சியாய் நடை பெறும். ஷாப்புகளில் ரொக்கத்துக்காவது அல்லது வேறு தக்க ஏற்பாட்டின்படி சரக்கை விற்பனைக்கு வேண்டியவாறு கொடுத்துவிட்டு பகிரங்கமான விளம்பரம் செய்யவேண்டும். கூடுமானல்

மாதிரிக்கென காலணு பொட்டலமாகவாவது, அல்லது இனுமாகவாவது வழங்கவேண்டும். பற்பொடியை உபயோகிப்பதுபோன்ற சித்திரங்களை கார்டுகளில் ஒருவருணத்திலாவது பல வர்ணத்திலாவது அச்சிட்டு மாணவர்களிடம் கொடுக்கவேண்டும். பற்பொடி என்ற பேச்சு நடந்தாலும் பற்பொடி வேண்டுமென்று கேட்டாலும், பிரசித்தியாய் விளம்பரம் செய்யப்பட்ட பரிமளானந்த பற்பொடியே ஞாபகத்துக்கு வரவேண்டும். தொழிலை நடத்தும் போது தனக்குத்தானே விர்த்திக்கான நூதன யுக்தி யுண்டாகும். வரவு செலவுக்கேற்றபடிச் செய்து கொள்ளவேண்டும்.

விளம்பரம் எழுதுவதற்கும் யோசனை சொல்லுவதற்கும் பிரத்தியேகமாய் சிலர் அதற்கென்றே பிறந்திருக்கிறார்கள். (விளம்பர யுக்தி சொல்வோர் ஏன் ஒரு தொழிலை நடத்தி விர்த்தியாகக்கூடாது என்று நினைக்கக்கூடும். அப்படி யுக்தி சொல்வதும் ஒரு தொழிலென எண்ணவேண்டும்)

1. பிரதிமாதமும் புது மாதிரியான விளம்பர நோட்டீஸ் அல்லது சிறு நூல் தயார் செய்து வியாபாரிகளுக்கெல்லாம் அனுப்பவேண்டும்.

2. பொது ஜனங்களின் விலாசங்களைச் சேகரித்து அவர்களுக்கு நேரில் சில மனோகரமான வாசகங்களடங்கிய நோட்டீஸ் அனுப்பவேண்டும்.

3. ஒவ்வொரு ஊரிலும் ஏஜண்டு நியமித்து அவர்கள் விலாசத்துடன் நோட்டீஸ்கள் சப்ளை செய்யவேண்டும்.

4. சிறு வியாபாரிகள் பத்திரிகையில் விளம்பரம் செய்து பிரசித்திசெய்வது இக்காலத்தில் முடியாத காரியம்.

அவசியம் ஏற்படும்போது தினப்பதிப்பு பத்திரிகைகளில் விளம்பரம் செய்வது தான் மேலானது என்பது நினைவிலிருக்கட்டும்.

5. பற்பொடி டப்பிக்கு பலவர்ணத்தில் லேபில் அழகாய் அச்சிட்டு ஒட்டவேண்டும். ஒரு டசன் வீதம் பாக் செய்யவேண்டும். பத்திரிகைகளுக்கெல்லாம் மாதிரிக்கு ஒரு டப்பி அனுப்பினால், பத்திரிகையில் அபிப்பிராயத்தை வெளியிடுவார்கள்.

இவ்விதமே ஒவ்வொரு தொழிலையும் விர்த்தி செய்ய வேண்டும். பற்பொடியைப்பற்றி விரிவாய் ஏன் எழுதப் பட்டதென்றால் இந்தியா பற்பொடி கூடத் தயார் செய்து கொள்ள முடியாத அவ்வளவு தரித்திர நிலைமை அடைந்திருக்கிறது. ஏனென்றால் வெளி நாடுகளிலிருந்து வரும் பற்பொடிக்கு அளவேயில்லை. பற்பொடிக்குக்கூட அயல் நாட்டை எதிர்பார்க்கும் நிலைமையில் இருந்து வருகிறதென்பதை நினைக்க வெட்கமாயும் விசனமாயுமிருக்கிறது.

மேற்சொன்ன முறைப்படியே கூந்தல் தைலம், சோப், பிஸ்கோத், எழுதும் மை (Ink) புஸ்தகம், மருந்து முதலியவைகளையும் விர்த்தி செய்யலாம்.

INTEREST in business is nursing each customer with care, getting him to come back to your shop for future purchases, because you take an interest in him—because you are a decent chap and know your business.

—Karl Grzybcwski.

கைத்தொழில் முறைகள்.

TOOTH POWDER.

முறை 1. பற்பொடி

1.	கருவேலம் பட்டை தூள் (Babul Bark Powder)	1 பவுண்டு
2.	இராம்பு தூள்	5 தோலா
3.	வால்மிளகு தூள்	2½ தோலா

இவைகளை நன்றாய்க் கலந்து கொள்ளவும்.

முறை 2. பற்பொடி

1.	சீமைச் சுண்ணாம்பு (Precipitated Chalk)	5 பவுண்டு
2.	கற்பூரம்	2½ பலம்
3.	கார்மின் (Carmine)	1½ டிராம்
4.	ரோஸ் தைலம் (Oil of Rose)	1 டிராம்

ஒன்றாய்க் கலந்து கொள்க.

முறை 3. பற்பொடி

1.	பாக்கரிப்பொடி அடுப்புக்கரி	1 பவுண்டு
2.	சீமைச் சுண்ணாம்பு	2 பவுண்டு
3.	கற்பூரம்	1 பலம்

முறை 4. பற்பொடி

1.	சீமைச் சுண்ணாம்பு (Precipitated Chalk)	2 பவுண்டு
2.	லவங்கப்பட்டை தூள்	½ பவுண்டு
3.	எலுமிச்சை தைலம் (லெமன் ஆயில்)	1 டிராம்

முறை 5. பற்பொடி

1. சீமைச் சுண்ணும்பு 3 பவுன்
2. ஒரு புட்டி அமிர்தரஸ் (½) அவுன்சு

HAIR OIL

1. கூந்தல் தைலம்.

1. தேங்காய் எண்ணெய் 2 பவுண்டு
2. பர்குமெண்டு ஆயில் (Bergument Oil) 1 அவுன்ஸ
3. சிட்ர நல்லா (பில்லு) தைலம் 1 அவுன்ஸ
4. அல்கனட் ரூட் ½ அவுன்ஸ

செய் முறை

தேங்காய் எண்ணெயை ஒரு பாத்திரத்தில் விட்டு அடுப்பிலேற்றி சிறிது சூடானதும் அல்கனட் ரூட் (சமூலம்) அப்படியே போட்டு சிவந்த நிறமான பிறகு கீழே எடுத்துவைத்து மற்றிரு தைலங்களையும் கலந்து வடிகட்டி புட்டிகளில் அடைத்து விடவும். இந்த தைலம் சுகந்த மணமுள்ளதாயிருக்கும். வியாபாரத்துக்கும் தோதானது.

MEDICINE

சர்வரோக நிவாரணி

அநேக வியாதிகளுக்கு ஒரே மருந்து.

1. கற்பூரம். 1 தோலா
2. ஓம உப்பு. 1 தோலா

3. பெப்பர்மின்ட் உப்பு
(கிரிஸ்டல்—மென்தால்) 1 தோலா

இந்த மூன்று உப்புகளையும் ஒரு புட்டியிலிட்டு செட்டியாய் கார்க்கைக் கொண்டு மூடி விடவும். சற்றுநேரத்திற் கெல்லாம் திராவகம் போல் ஜலரூபமாய் விடும். இதைக் கீழ்க் கண்ட வியாதிகளுக்கெல்லாம் உபயோகிக்கலாம். பயமில்லை; பத்தியமில்லை. துளிக்கணக்கில் உபயோகிக்க வேண்டும்.

தலைவலி, பல் வலி, மூட்டுகளில் வலி, முதுகு பிடரி வலி, நெஞ்சு வலி, முதலிய வாயு ரோகங்களுக்கு மேலே தடவுவதால் குணமாய்விடும்.

வயிற்று வலி, அஜீரணம் இவைகளுக்கு 2 அல்லது மூன்று துளி சர்க்கரையும் கலந்து சாப்பிடுவதினால் உடனே குணமாகும்.

பிளேக், காலரா கேசுகளிலும் மேற் கண்டபடியே கொடுக்க குண முண்டாகும்.

ஜல தோஷம், தொண்டையில் சல சலப்பு, குளிர் இருமல், நெஞ்சு தடுமல் இவைகள் குணமாகும்.

தேள், பாம்பு முதலியவைகளின் விஷக் கடிக்கு மேலே தடவுவதால் விஷம் நீங்கும்.

இம்மருந்தை குழந்தைகளுக்குக் கொடுப்பதாயின் தேனில் ஒரு துளி கலந்து கொடுக்கவும்.

ஸ்திரீகளுக்கு மாதவிடாய் சம்பந்தமான வியாதிகளுக்கும் தேனில் கலந்து கொடுத்தால் உடனே குணமாகும்.

மேற் கண்ட உப்பு திராவகத்தை சமயோசிதமாக யுக்திக்குத் தக்கபடி உபயோகிக்கலாம்.

மேலே பத்திய மில்லை யென்று சொன்ன போதிலும் சரீர ஸ்திதிக்குத் தக்கபடி லகுவான ஆகாரம் தான் சிலாக்கியமானது. ஆகையால் பத்தியத்துக்கான ஆகாரத்தைப் பற்றி அவரவர்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

INK FOR RUBBER STAMP.

ரப்பர் ஸ்டாம்பு இங்கி

3 டிராம் வயலட் அல்லது வேறு வேண்டிய (சாயம்) கலர் பவுடர், 15 அவுன்சு கிளிஸரைன், 14 அவுன்சு அல்கஹால். இவைகளை ஒன்றாய்க் கலந்து கொள்க.

SOAPS.

சோப் செய்யும் முறைகள்

1. சீமை சோப்

15 தோலா சுத்த ஜலத்தில் 5 தோலா காஸ்டிக்சோடா (Castic Soda) வைக் கலந்து, அடுப்பிலேற்றி சிறு தீவிட்டெரித்து, இளஞ் சூடு உண்டாகும் போது 12 தோலா தேங்காயெண்ணெய் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சேர்க்கவும். பசை போலக் கெட்டியாகும் போது கலர், சென்டு (வாசனைச் சரக்கு) சேர்த்து இறக்கி தட்டையாய்ச் செய்துகொள்ளவும்.

2. வாசனை சோப்.

தேங்கா யெண்ணெய், காஸ்டிக் சோடா இவ்விரண்டையும் சமனிடையாக எடுத்து இருப்புச் சட்டியிலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயிட்டு எரித்து கெட்டியாய் பதப்படும் போது இஷ்டம் போல் கலர், சுகந்தம் சேர்த்து இண்டி இறக்கி வார்ப்படத்திலாவது அல்லது வேறு விதமாகவாவது சோப் (கேக்) கட்டிகளாகச் செய்து கொள்ளவும்.

குறிப்பு:—வியாபார சம்பந்தமாய் விபரம் வேண்டுவோரும், தொழில் அபிவிர்த்தி செய்ய யோசனை வேண்டுவோரும் இந்நூலாசிரியரிடம் நேரிலும் தபால்மூலமாயும் தெரிந்து கொள்ளலாம்.


கைத் தொழில் அனுபவமுள்ளோர்களுக்கு

ஓர் அறிவிப்பு.

நம் இந்தியாவில் தொழில் அறிந்த அநேகர், அதை மற்றோருக்குத் தெரிவிக்கிறதில்லை. பரம ரகஸ்யமாய் மூடி வைத்து விடுகிறார்கள். சிலர் தம் மக்களுக்கும் தெரிவிப்பதில்லை. ஆகையால் மற்றெவரும் அறிந்து கொள்வதற்கு மார்க்கமில்லாமற் போய்விடுகிறது. இதனால் இந்தியாவின் கைத்தொழில் க்ஷீணித்து விடுகிறது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஒரே நூலில் அநேகர் தம் தம் அனுபவங்களை வியாசரூபமாய் வெளியிட்டிருப்பதை ஆங்கில மறிந்தோர் பார்த்திருக்கலாம். ஒரு மனிதன் பலவகைப்பட்ட கைத் தொழிலை அனுபவமாய் அறிந்து பொது ஜனங்களுக்குப் புகட்டுவதென்றால் முடியாத காரியம். ஆகை

யால் தொழிலாளர்கள் தங்கள் அனுபவத்தையும், வாழ்க்கையில் கண்ட ரகஸ்யங்களையும் புத்தகரூபமாய் வெளியிடுவதால் உண்டாகும் நன்மையை ஓரளவிட்டுச் சொல்ல முடியாது. சொந்தமாய் பிரசுரிக்க முடியாவிடினும் நமது வியாபார தந்திரம் நாலாம் பாகத்துக்கு தொழில் முறைக்கான மார்க்கங்களையும் அனுபவங்களையும் எழுதியனுப்புவார்கள் என்று நம்புகிறோம்.


கைங்கர்யம்.
ஐக்கியம்.
சமூகஊழியம்.
தேசசேவை
ஒற்றுமை.
B S



புதிய ஊக்கம்.

(1) ஜப்பான் அமைச்சர். (5) சிவாஜி.
(2) கொலம்பஸ். (6) முத்துஸாமி அய்யர்.
(3) ஜேம்ஸ் வாட். (7) "ஹிந்து" பத்திரிகை.
(4) நெப்போலியன். (8) ப்ரூஸ் தளபதி.

புதிய ஊக்கம்

நீ உலகத்திலே பிறந்து விட்டாய். மறுபடியும் திரும்பிப் போவது உன் ஸக்தியிலில்லை. அது உன் இஷ்டப்படி நடக்கிற காரியமுமல்ல. மானுஷ்ய சரீரத்திலே இப்போது உன் ஆத்மா நிற்கிறது. எப்படியோ வளர்த்து உன்னை வாலிபம் செய்து விட்டார்கள். நீயும் ஒரு உருவாகி விட்டாய். ஸம்பாத்திய பக்குவதிசைக்கும் நெருங்கிவிட்டாய். சோதனை காலத்துவக்கம் இதோ தொடங்கிக் கொண்டது. இனி உனக்கு நீயே உழைத்துப் பிழைத்து உயிர்வாழ வேண்டும். நாலுபேருக்கு நடுவில் நீயும் ஒரு மனிதனாக வேண்டியிருக்கிறது. உன் ஜீவயாத்திரையில் முதல் அத்தியாயம் முடிந்து விட்டது.

* * *

இதுவரையில் கழிந்த காலம் உன்னைத் "தயார்" செய்வதற்காகச் செலவழிந்தது. உன்னைத் தயார் செய்தது உன் தாயார்; அல்லது உன் தாயின் மற்றொரு பாதியான உன் தந்தை. அல்லது அவர்களுக்கு வேண்டிய உறவின் முறையார்—நண்பர், சுற்றம் துணைவர்கள். பாடசாலையினின்று திரும்பியதும் வீடு உன் வரவுக்கு எதிர் பார்த்து நின்றது. உணவும் உன் பிரியத்திற் கேற்பச் சித்தமா யிருந்தது. கவலையற்று உண்டு சென்றாய், அந்தக்காலம் இப்போது மலையேறிவிட்டது. நீ வெளியிற் செல்லுதற்கு முன் வீட்டிற்கு வேண்டிய யாவும் சித்தம் செய்து விட்டுப் பிறகே நீ புறப்படவேண்டியிருக்கிறது. நீ சித்தம் செய்யத் தவறினால் அன்னப்பிடி வெல்லப்பிடி!

நீ யாவும் "தயார்" செய்துவிட்டு வெளிப்பட்டால் தான் மீண்டும் இல்லிற்குள் புகுகையில் அனைத்தும் 'தயார்' ஆக இருக்கும். அத்தகைய மாறுதல் நிகழ்ச்சி—நூதன வேறுபாடு—உன்வாழ்வில் இப்பொழுது பிராப்தமாயுள்ளது. உன் ஸம்பாத்யத்தை ஒரு குடும்பம் எதிர்பார்த்து நிற்கிறது. இன்னும் அது பெருகி விரியும். அதற்கெல்லாம் நீ "சமாதானம்" செய்யவேண்டிய நிலைக்கு உன்னைப் பிரகிருதி அழைத்துக் கொண்டு வந்து விட்டது. இதுவே உன் வாழ்வில் இரண்டாம் அத்தியாயத்தின் ஆரம்பம்.

* * *

இங்குதான் நீ புதியஜீவன் பெறவேண்டும். நவஸக்தி உன்னில் உதயமாக வேண்டும். உன் ஜீவிய இன்பம் திருப்தியுள்ளதாக அமைக்கப்படல் வேண்டும். ஆரம்பத்திலேயே பலமான அஸ்திவாரம் போடு. "புதிய ஊக்கம்" கொள், பின்னொரு காலத்தில் ஹாயியாக இளைப்பாறுதற்கான மார்க்கம் கண்டு நல்ல இடத்தில் விதையை விதை. உயர்ந்த லக்ஷியங்களையே உன் நெஞ்சில் நிறைவித்துக்கொள். புதிய ஊக்கம் பெறு. எப்பொழுதும் ஊக்கமுள்ளவனாயிரு. ஒரு வேந்தனாக இருக்க வேண்டுமென்று சிந்தனை கொள்ளாவிடினும் அதற்கு அடுத்தபடியில் உன்னை ஏன் வைத்துக் கொள்ளக் கூடாது? கிடைத்தற்கரிய மானிட சரீரத்தை நீ பெற்று விட்டதற்குப் பிறகு — உன்னால் எந்தக் காரியம்தான் ஆகாது? எது தான் நடவாது? முயற்சி யுள்ளவனுக்கு எது தான் ஸித்திக்காது? புதிய ஊக்கம் உள்ளத்திலே நிறைந்து ததும்பப் பெற்றவனுக்கு புது நிலைகள், பதவிகள் உண்டாவதும் ஒரு புதுமையா?

ஒரு பெரிய ராஜ்பத்தின் பிரதம மந்திரியாக நீ ஏன் வரக்கூடாது? புதிய ஊக்கம் கொண்டால் அந்தப் பதவியும் உன்னை ஸமீபிக்கும். ஜப்பான் நாட்டின் தலைமை அமைச்சர் லண்டன்மா நகர வீதிகளில் ஒரு பரதேசியாய் அலைந்த காலமும் ஒன்றுண்டு. அமெரிக்காவைக் கண்டு பிடித்த கொலம்பஸ் ஒரு எளிய குடும்பத்தில் தோன்றியவர். தற்போது உலகமெங்கணும் பரவி நிற்கும் சகாயமான தபாற் கூலியுள்ள அமைப்புத் திட்டத்தை ஆதியில் நிர்மாணித்த மகா புருஷனும் ஒரு ஏழையே. அவருக்கு "ரோலாந்து ஹில்" என்று பெயர். 1795-ம் வருஷம் பிறந்தவர். அவர் குடும்பத்திற்கு ஒரு காலணாகூடக் கிடைப்பது அருமையாயிருந்தது. நீராவியின் ஸக்தியை முதலிற் கண்டு பிடித்த ஜேம்ஸ்வாட் என்பவரும் ஸ்காத்லாந்தில் ஒரு அற்ப வியாபாரியின் குமாரர்தான். அவர் 1736-ம் வருஷத்தில் பிறந்தவராவார். நீராவியானது பழமையான இவ்வுலகத்தை இப்பொழுது புதிய உலகமாக மாற்றி யிருக்கின்றதன்றோ? அது மனிதனுக்கு எந்தக் காரியந்தான் செய்யவில்லை?

* * *

"ஜார்ஜ் ஸ்டீவின்ஸன்" என்பவரைப் பற்றி உனக்குத் தெரியுமா? அவர்தான் ஆதியில் இருப்புப் பாதை (Railway) யைத் தன் யுக்தியில் கண்டு பிடித்தவர். அவர் பணக்காரரா? ஒரு ஜமீன்தாரா? ஒரு லார்ட் பிரபுவா? ஐயோ! இல்லை இல்லை. நிலக்கரி வியாபாரியான ஒரெளிய மனிதனுடைய மகன்! வருந்தினாலல்லது—புதிய ஊக்கம் கொண்டாலன்று— எவ் விஷயத்திலும் வெற்றி பெற முடியாது. முயற்சி திருவினையாக்கும்" இவ்விந்திய நாட்டை ஆங்கிலேயர்கட்கு வசப்படுத்தி

கொடுத்த லார்ட் கிளைவ் என்பவனும் ஒரு ஏழையே. சாமான்யனாக ராணுவத்தில் ஆதியில் சேர்ந்தவன். மூன்றாவது நெப்போலியனும் ஒரு ஏழையே. ஒரு சிறு போர் வீரனே. தன் முயற்சியால், புது ஊக்கத்தால் பிரான்சு தேசத்திற்கு ஒரு சக்ரவர்த்தி யாயினான். ஐரோப்பிய பூமியே அவனுக்குக் கிடுகிடுவென்று நடுங்கியது. புதிய ஊக்கமும் உள்ளவனின் அகராதியிலே கஷ்டம்—அசாத்தியம்—முடியாது—என்ற பதங்களே இல்லை. அதிர்ஷ்டம் இருக்கவேண்டு மென்பாரேயா? அதிர்ஷ்டம் என்பது சோம்பேரியின் வார்த்தை. மோசடி!

* * *

அந்திய நாட்டு உதாரணங்கள் எதற்காக? நமது பக்கத்திலேயே பார்ப்போம். மஹாராஷ்டிரத்தை நிர் மாணித்த மகா புருஷனான சிவாஜி எத்தகையவர்? திடீ ரென்று அவர் உயர்ந்து விட்டார்! லாட்டரிச் சீட்டு அவரு க்கு விழுந்ததா? அவருக்கு "மலை எலி" என்று கேவல மான ஒரு பெயர்கூட இருந்தது அவர் எப்படி வீர புருஷரானார்? புதிய ஊக்கத்தினால்தான். தொடக்கத் தின் ஆரம்பத்திலேயே அவர் உயர்ந்த லக்ஷியங்களைக் கொண் டார். தன்னால் சாதிக்க முடியாத பெரிய காரியங்களிலே தமது மனத்தை நாட்டினார். தமக்குள் புதிய ஊக்கத்தைக் கிளப்பிக் கொண்டு தமது லக்ஷியங்களை நிறைவேற்றத் தீர் மானித்து விட்டார். அப்படியே நிறைவேறி விட்டது.

* * *

உன் ஜீவியத்தின் முதல் படியிலேயே ஒப்பற்ற நோக் கங்களைக்கொள். பெரிய ஸ்தானத்திற்கு வரக்கூடிய புதிய

கடவுளை நம்பிக் காரியம் நடத்து. உன் காரியம் ஆகும் வரையில் உழைத்துக் கொண்டிரு. வெற்றி உனக்கு உறுதி—நிச்சயம்.

* * *

ஹைகோர்ட் ஜட்ஜியான ஸர் முத்துஸாமி ஐயரவர்களும் ஒருபரம ஏழையே. புதிய ஊக்கமே அவரை உன்னதத்தி விருத்தியது. ஜகத் பிரஸித்தியான "ஹிந்து" பத்திரிகை ஆதியிலே தபாற் செலவுக்கின்றி ஒரு 12-அணா கடன் வாங்கியிருக்கிறது. இப்போது அதன் பிரபலம்—வியாபகம் எப்படி? புதிய ஊக்கமே அதை உயர்வித்தது. "காங்கிரஸ்" மகா சபையின் ஆரம்பம் எப்படி? அவ்விதமாக ஒரு சபை கூட்டுவிக்க வேண்டுமென்று பம்பாயில் சிலரே சேர்ந்து ஒரு சிறு சபை கூட்டினர். அந்த ஒரு சிறுவிதைதான் இப்போது மிகவும் வியாப்தமான ராஜ்ய சபையாகப் பரிணமித்தது. இவ்வளர்ச்சிக்கும் காரணம் புதிய ஊக்கமன்றோ?

* * *

பிரபஞ்ச வாழ்வில் சோதனைகள் அநந்தம்—எல்லையற்றன. ஒவ்வொரு சோதனையும் உன்னைப் பாதாளத்தில் அமிழ்த்திக் கொல்வதாக இருக்கும். ஆழ்ந்த பள்ளத்தாக்கினிலே உன்னைத் தள்ளிவிடும். மீண்டும் எழுந்திருக்க முடியாத குழிகளிலே உன்னை வீழ்த்திவிடும். நீ கரையேற முடியாமலே போய்விடும், ஆயினும் நீ சித்தம் சலித்துவிட்டுவிடாதே. அடிக்க அடிக்கப் பந்து விசைகொண்டு எழுவது போல, தவறிப்போன ஒவ்வொரு தடவையிலும் உடனே புதிய ஊக்கத்தைக் கிளப்பிக்கொள், மறுபடியும் உன் வேலை

யைத் தொடங்கு கடவுளே மனமிரங்கி உனக்கு அருள் செய்வார், வழி விடுவார்.

*   *   *

புதிய ஊக்கம் திடீரென்று பிறக்கும்—உதிக்கும். உடனே அதை நீ கைப்பற்றிக்கொள், ஏதோ ஒரு காரிய த்தில் நீ யோசனையாக இருக்கும்போது—திடீரென்று வே றொரு நூதன யோசனை உனக்குத் தென்பட்டு, என்றும் காணாத ஒரு புதிய ஊக்கத்தை உன்னிலே தோற்றுவிக்கும். உடனே நீ புதிய மனிதனாகி விடுவாய். அந்த நிமிஷ முதல் நீ புதிய உருவமே. புதிய ஊக்கத்தின் ஜோதியே யாவாய் அன்று தொட்டு உன் வாழ்வுக்கு ஒரு நற்காலமே.

*   *   *

ஐந்நூறு ஐந்நூற்றெழுபது வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தின் வேந்தனொருவன் ஸ்காத்திலாந்து நாட்டை எதிர்த்தான். ஸ்காத்திலாந்தின் சேனாதிபதியான ப்ரூஸ்தளபதி ஆறு யுத்தங்களிலும் தோல்வியுற்று ஜீவனத்திற்கே வழியின்றி ஒரு குடிசையில் அவன் இருந்தான். அவன் எதிரில் ஒரு சிலந்திப் பூச்சி தன் வலை நெய்யும்படி நூலின் ஒரு முனையை ஒரு உத்திரத்திற் கட்டி, மற்றொரு உத்திர த்தைத் தாவிப் பிடித்து மறு முனையைத் தொடுக்க ஆறு தடவைகளில் முயன்றும் வீணாபது. இது ப்ரூஸ்தளபதிக் குத் தான் ஆறு தடவைகளில் தோல்வி யடைந்ததை நினைப் பூட்டிற்று. செய்த முயற்சியைச் சிலந்திப்பூச்சி மனம் சலித்து விட்டு விடவில்லை. ஏழாவது முறை அதிவேகத் துடன் முயன்று நினைத்தபடி உத்திரத்திற் சேர்ந்து தன்

மற்றொரு முனையைக் கட்டிற்று. இதைப் பார்க்கவே ப்ரூஸ் தளபதிக்குத் தீரம் பிறந்தது. புது ஊக்கம் உண்டாயிற்று. உடனே, எழுந்து மீண்டும் படைகூட்டி "பன்னொக்பர்ன்" என்ற இடத்தில் தன் எதிரியை முறியடித்து வெற்றி சிறந்து இறுதியில் ஸ்காத்லாந்து தேசத்திற்குச் சுவாதீனம் உண்டாக்கினான். இது ஒரு சிலந்திப் பூச்சி கற்பித்த புது ஊக்கம்—பாடம்.

ஆகவே, குமாரா, பாரத புத்திரா! உன் நெஞ்சிலே புது ஊக்கம் கொள், சலியாது முயற்சி செய், நீ சிந்தித்தது உன் நாளில் ஓர் காலத்தில் சித்தித்து விடுமென்று நம்பு. தீரம் வகி. ஊக்கமுள்ளவனாயிரு, நீ ஒரு பெரிய ஜனத்தலைவராகக் கூடாதா? ஒரு பிரபல கிரந்த கர்த்தாவாக விளங்க முடியாதா? கீர்த்தி சிறந்த உத்தியோக புருஷனாகக்கூடாதா? பிரஸித்த பத்திராதிபராக நீ ஏன் தயாராக முடியாது? பிரஸித்த வியாபாரியாகிப் புகழ் ஓங்கக் கூடாதா? டாடா கம்பெனியைப்போல் நீயும் ஒன்று நடத்த ஏன் கூடாது? அரசனுக்கு அடுத்த ஸ்தானத்திற்கும் வரலாம். பெரிய ராஜ தந்திரியாகலாம். ஒரு தேசாதிபதியாகலாம். சிறந்த யுத்தவீரனாக ஜ்வலிக்கலாம். உன் நெஞ்சிலே புதிய ஊக்கம் பிரவேசித்து விடுமாகில் எது தான் உனக்குக் கஷ்டமானது? எது தான் உனக்கு சித்திக்காதது? உன்னில் தெய்வகதியாய்த் தோன்றிய புதிய ஊக்கம் உனக்குப் புதிய உயிரைக் கொடுக்கும். நவசக்தியை உண்டு பண்ணும், உலகத்தையே உனக்கு வசப்படுத்திவிடும். புதிய ஊக்கமே மனோ ஸக்தி—மெஸ்மரிசம்.

உலகத்திலே பல சிறந்த காரியங்கள் செய்து தமது பெயர் என்றும் விளங்குமாறு புகழ் பெற்றவர்கள் அனைவரும், இளமையிலேயே தமக்குத்தாமே புதிய ஊக்கத்துடன் விஷயங்களை ஆலோசிக்கப் பழகியவர்களே யன்றி—அதனால் தான் பெரும் பயன்பெற்றவர்களேயன்றி வேறல்லர்.

நீ இப்பொழுது தான் ஸம்பாத்திய உலகத்தில் பிரவேசித்திருக்கிறாய். உன்னை ஒரு குடும்பம் நம்பி எதிர்பார்க்கிறது. நீ பிறந்த நாடும் உன்னை நம்பி எதிர்பார்க்கிறது. உன் முயற்சிகள் எவ்விதம் இருக்கிறதென்று கடவுளும் கடைக்கண்ணோக்கிப் புன்னகையுடன் உன்னைக் கவனித்து வருகிறார். யுவகுமாரா! இனிமேல் தான் உனக்குக் கஷ்டங்கள்—சோதனைகள்—வாழ்வின் ஸஞ்சலங்கள்—விபத்துகள்! இவற்றிலெல்லாம் தேறித் திடம் பெறு. தவறி விழுகிற ஒவ்வொரு தடவையிலும் சிலந்திப் பூச்சியைப் போல் புதிய ஊக்கம் கொள். என் வீரக்குழந்தாய்! நீ வீணுக்குப் பிறக்கவில்லை, விருதாவில் சாவாதே. உன் ஜீவியத்தை வியர்த்தமாக்காதே. உன்னால் ஒரு பெருங் காரியம் ஆகவேண்டியிருக்கிறது. அதற்காகவே கடவுள் உன்னை இங்கு அனுப்பியிருக்கிறார். அதை நீ உணர்ந்து கொள். நெஞ்சிலே வாங்கிக் கொள். உயர்ந்த லக்ஷியங்களிலேயே உன் சிரத்தையைச் செலுத்து. அது நிறைவேறுவதும் நிறைவேறாததும் கடவுள் இஷ்டப்படி நடக்கட்டும். அதை அவருக்கு ஒப்புவித்து விடு. நீ புதிய ஊக்கத்துடன் இருந்து சலியாமல் காரியம் மட்டும் நடத்து. உன் குடும்பமும் உயர்நிலையுறும். ஏராளமான ஐசுவரியங்கட்கும் நீ அதிபதியாவாய். கீர்த்தி

வந்தனைப் தேசோபகாரியாய் ஜ்வலிப்பாய். இப்படிக் காரியம் நடத்துகிற மார்க்கத்தில் நீ இறங்கி விட்டபிறகு எல்லாம் உனக்கு ஸர்வசித்திதான். அன்று தொட்டு ஒரு புதிய மனிதனே. உன் கைதான் எல்லோருக்கும் மேலாக இருக்கும். எவரும் உன் வார்த்தையை மதிப்பார்கள். எந்த கஷ்டமும் உன்னைக் கலங்க வைக்காது. எவ்வளவு கடன் இருப்பினும் நீ சோர்ந்து விடமாட்டாய். புதிய ஊக்கத்தின் வழியிலேயே செலவிட்ட பணத்தை ஒரு கடன் என்று சொல்வதே தப்பு. அதுதான் நீ போட்ட ஆரம்பமுதல்—மூலதிரவியம். உன் புதிய ஊக்கம் அந்தக்கடனை யெல்லாம் தீர்த்துவிடும். உன்னை சுதந்தரமுள்ள மனிதனாக்கிவிடும். நீ பிறந்தது பிறந்துவிட்டாய். மானிட ஜன்மம் பெற்று விட்டாய்; நீ மறுபடியும் கடவுளிடத்துக்குப் போகு முன்னதாக உன்னால் செய்யவேண்டிய காரியங்கள் யாவற்றையும் புதிய ஊக்கம் கொண்டு செய்—இவ்வுலகத்திய வேலைகள் உனக்கு முடிந்த பின்பு—அவற்றை ஒரு ஒழுங்கான முடிவுக்குக் கொண்டுவந்த பின்பு—நீ மனோசாந்தி பெற்று கடவுளிடம் செல்லலாம். அவரும் உன்னைப் பிரியத்தோடும் அப்போது வரவேற்பார். இவ்வுலகமும்—பாரத நாடும் உன்னை மறவாமல் உன் பாவிய புகழ் துதித்து வணங்கிக் கொண்டாடும். அந்தக் காலம் வரும் வரையில் நீ புதிய ஊக்கத்துடன் உழைத்துக்கொண்டிரு. மனிதன் வேலை செய்யப் பிறந்தான். உன் வேலையையும் நீ செய்துவிடு. அதுவே உய்யும் வழி. 'ஊக்கமது கைவிடேல்' Try Try Try Again, உன் புதிய ஊக்கம் ஓங்குக. வளர்க. விசாலிப்பதாக.

வெற்றி மேல் வெற்றி.

எடுத்த காரியம் யாவற்றிலும் வெற்றி. எண்ணிய சிந்தனைகள் அனைத்தும் வெற்றி. செய்யும் முயற்சிகள் எதிலும் வெற்றி. நினைக்கும் நிமிஷத்தில் தானே யோசனை உபகரணங்கள் பொருத்தமாய்க் கூடிவந்து அப்பொழுதே வெற்றி. தொட்ட தனைத்தும் வெற்றி. பட்ட மரமும் தன் கை பட்டதும் துளிர்க்கும்படி வெற்றி. நித்த நித்தமே தோல்விகண்ட போதிலும் முயன்று முயன்று அதிலும் வெற்றி. நண்பர் கூட்டத்திடை வெற்றி. நேசமொழிகளில் வெற்றி. உறவினருள் வெற்றி. இல்லற ஆவல்களில் வெற்றி. தன்கற்பில் வெற்றி. தன் கிருகிணியின் பாதி விர்த்தியத்துள் வெற்றி. வாழ்க்கையில் வெற்றி. ஏகபத்தினி விரதத்துள் வெற்றி. புத்திரலாபப் பேறுகளுள் வெற்றி. ஆரோக்ய பாக்யத்தில் வெற்றி. பகைஞர் சிரந்தாழ வெற்றி. எதிர்படுவன யாவும் வெற்றி. என்றுமே வெற்றி. நித்தமும் வெற்றித் திருநாள். வீரநாள், தீரநாள் ஆகிநின்வாணாள் விளங்கி யொளிர்வதாக. வெற்றி மேல் வெற்றி நினக்கு சித்திப்பதாக.

வெற்றிச் சிந்தனை கொண்டார்க்கு முடிவில் வெற்றியை யுற்றிடும். தோல்வியிலிருந்து தான் வெற்றித் துவக்கம். விழுந்து விழுந்து தான் குழந்தை எழுந்து நிற்கக் கற்றுக்கொள்ளும். உட்கார்ந்து தான் படுக்கவேண்டும். பொறுமையின்மேல் எதுவும் ஆகவேண்டும். சலிபாமுயற்சி நாட

வேண்டும். தன் சக்தியை நம்பவேண்டும். நம்பித்துணிய வேண்டும். எதிலும் தானே தலையிடவேண்டும். தலைமை வகிக்கவேண்டும். இரவுபகல் உழைக்கவேண்டும். உய்யும் வழிவகைகளை எப்போது உன்னுதல்வேண்டும். உற்றுணர்தல் வேண்டும். வெற்றியையே நீ பெறுவாய்—ஏன் பெறலாகாது? வெற்றியே நின் பங்கு.

எதிலும் முதலில் நீ துணிந்து விடு. மற்றவர்கள் உனக்கு ஆதைரியத்தையே கொடுப்பார்கள். அதுவே அவர்கள் செய்யும் உதவி. எதையும் உன் கைப்படச் செய்து பார். செய்து பார்த்துப் பிறகு நீ தெளிந்து கொள். பிறருடைய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு உன் முயற்சியை நிறுத்தாதே. உன்னையே உனக்கு மந்திரியாகக் கொள். உன்னைத் தேடி வருவோர்க்கெல்லாம் வெற்றி வாசகங்களையே எப்போதும் கூறு. உன்னை அவர்கள் கண்டதும் ஒரு துள்ளு துள்ளி உற்சாகத்தில் மூழ்கும்படிச் செய்து விடு. அவர்களைப் புது மனிதனாகத் தயார் செய். அந்த முயற்சியினூடே உன்னையும் புதுப்பித்துக் கொள்ளலாம். நீயும் புது மனிதனாக உயரலாம்.

எந்த இடத்தில் எந்த சந்துவழி கிடைக்குமோ வென்று வெற்றிக்கண்களுடனேயே உற்றுப் பார்த்துக் கொண்டிரு; கொஞ்சம் வழி அகப்பட்டதும் அதில் நீ புகுந்துகொள். பிறகு வளையைப் பெரிதாக்கிக் கோட்டைக்குள் நுழைந்து அந்த ஊரையே உன் கை வசப்படுத்திக் கொள்ளவும் வசதி கிடைத்துப்போம். இன்னொருவரின் கீழ் வேலைக்கு அமர்ந்திருப்பினும் உன் வெற்றிச் சிந்தனையின் வீரம்,

உனக்குமேலிருப்பவர்களைக்கூட உனக்குக் கைப் பொம்மைகளாகச் செய்து வைத்து விடும்.

எப்போதும் கம்பீர புருஷனை யிரு. சொன்ன சொல்லில், நில்—நட. உன் பார்வை வெற்றியுடன் செல்லட்டும். அந்தப் பார்வையில் பிறரை யடக்கி யாளப்பழகிக் கொள். உனக்கு யோசனை சொல்லப் பிறர்வாராமல், நீ மற்றவருக்கு யோசனை கூறத்தக்கபடி இரு. உன்கையாளிடம் ஒரு புத்திமதி பெறும்படி நீ வைத்துக் கொள்ளாதே. அவன் சொன்னது தக்க யோசனையாயிருப்பினும் அதை அவன் எதிரில் காண்பித்துக் கொள்ளாதே. சரி சரி உன் வேலையைப்பார் என்று அவனை அனுப்பிவிடு. பிறகு நீ அந்தரங்கத்தில் அதைப்பற்றிச் சிந்தித்துக் கொள். ஒரு குழந்தையின் வார்த்தையையும் உற்றுக்கவனி. அங்கும் ஒரு சரக்கு அகப்படும். உன்வாழ்வின் வெற்றிக்கு அக்குழந்தையும் ஒரு யோசனை சொல்லக்கூடும். குழந்தை கிருஷ்ணமூர்த்தியின் வடிவமென்பதை மறவாதே. கிருஷ்ணப் பிரபாவத்தின்—அந்த அவதாரத்தின் போதனை யாது? எடுத்த காரியம் யாவற்றினும் வெற்றி என்பதே.

கிருஷ்ணவதாரம் என்ன கற்பிக்கிறது? வெற்றி பெறும் வழியைக் கற்பிக்கிறது. பகவத்கீதை போதிப்பதென்ன? உன் வாழ்வில் நீ துணிந்து நில்—வீரமுள்ளவனாயிரு—வெற்றி உனக்கு நிச்சயம் என்கிறது. சோர்ந்துவிட்ட அர்ச்சுனனையும் கீதை தட்டி எழுப்பிற்றன்றோ? அர்ச்சுன உருவம் என்ன கற்பிக்கிறது. வெற்றியைக் கற்பிக்கிறது. பீம, நகுல சகாதேவர்கள் என்ன தெரிவிக்கிறார்கள்? வெற்றியையே தெரிவிக்கிறார்கள். தமது வாழ்க்

கைத் துணைவியான பாஞ்சாலியைத் துரியோதனன் மானபங்கப் படுத்த முயல, உலகத்தையே ஒரு விநாடியில் ஹதம் செய்துவிடத்தக்க தம்பிமார் தமது அருகே யிருந்தும், தமது வாயின் ஒரு வார்த்தை அந்த நிமிஷமே நிறைவேறி விடுமெனத் தெரிந்திருந்தும் மௌனமுற்றிருந்த தர்ம புத்திரரிடமிருந்து அறிந்து கொள்ளும் பாடம் என்ன? தர்மத்தின் வெற்றியே. கடவுளில் வைத்துள்ள நம்பிக்கையின் வெற்றியே. கர்ணன் எத்தகையோன்? கொடையில் வெற்றிகொண்டவன். அரிச்சந்திரன் எப்படி? சத்தியத்தில் வெற்றி கொண்டவன். சத்தியகீர்த்தி எப்படி? இராஜ வெற்றி கொண்டவன். சந்திரமதி, தமயந்தி, ஜானகி, மண்டோதரி, இவர்கள் எப்படி? கற்பில் வெற்றி கொண்டவர்கள். பரதன் எப்படி? சகோதர வாசஞ்சையில் வெற்றி கொண்டவன், தசரதர் எப்படி? புத்திர சோகத்தில் வெற்றி கொண்டவர், அநுமார் எப்படி? ராமத்தியானத்தில் வெற்றி ருசித்தவர். கோபிகைகள் எப்படி? காதலில் வெற்றி கண்டவர்கள். நளன், நல்லதங்காளின் கணவன் இவர்கள் எப்படி? புக்ககம் புகாதுமான லக்ஷ்யத்தில் வெற்றி சிறந்தவர்கள். ஜடாயு எப்படி? நட்பில் வெற்றி பெற்றவர். இராவணேஸ்வரன் எப்படி? மார்பில் காயமேற்று மடிந்ததினால் வெற்றிக் கையினன். அதிதி உபசாரத்தில் வெற்றிகொண்ட ஒருவரைச் சொல். சிறுத்தொண்டர்.

புராணங்களைப் பார், இதிகாசங்களைச் சோதி. வேதங்களை ஆராய்ந்திடு எங்கும் வெற்றி வீரர்களின் முழக்கமே காண்பாய். இராமாநுஜர், சங்கரர்; புத்தர், கிறிஸ்து, மகம்மது நபி—இவர்கள் எல்லாம் யார்? வெற்றியின் கண்மணி

கள். வெற்றிச் சிந்தனையார்க்கே ஆசார்ய ஸ்தானம் கிடைக்கிறது. அவர்கள் தான் ஜகத்குருவாக விளங்குவார்கள்—விளங்குகிறார்கள். அனுமக் கொடி, கருடக் கொடி, நாகக் கொடி, மீனக்கொடி—இவைகளெல்லாம் வெற்றியின் கொடிகளாம். பிரிட்டிஷ் கொடி யூநியன்ஜாக் என்ன சொல்லுகிறது? பிரிட்டிஷ் ஸாம்பிராஜயத்தின் வெற்றியைக் கர்வத்துடன் குறிப்பிடுகிறது. மங்கள வாத்தியங்கள் ஜயபேரிகை எதைக் குறிப்பிடுகின்றது? வெற்றியையே குறிப்பிடுகின்றது. அஞ்சினவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய். அவனுக்குத்தான் தோல்வி. துணிந்தவனுக்கோ எங்கு நோக்கினும் வெற்றியே. வெற்றிச் சிந்தனையாளனுக்குக் காண்பனயாவும் வெற்றியே. எதிர்ப்படுவன வெல்லாம் வெற்றியின் முழக்கமே. வெற்றிச் சிந்தனை யாளர்க்கு எங்கணும் வெற்றியே.

நீ இப்போது தாழ்ந்த பதவியில் இருக்கிறாய். மேல் எழ எத்தனையோ அவா. அதற்கும் நீ பாத்திரனே. ஆசை யிருக்கிறது தாசில் பண்ண. அதிர்ஷ்டம் இருக்கிறது கழுதை மேய்க்க. அப்படி இருந்தாலும் உன் உள்ளத்தில் வெற்றி எண்ணம் உதித்திடுமாயின் பிறகு உனக்கு க்ஷேம காலமே. மேன்மேலும் பதவி உயர்வு காண்பாய், ஓங்கி நின்று உலகம் தாங்குவாய். வணங்காமுடி மன்னனாகவே துரியோதனன் ஆவியை நீத்தான். அதுவும் ஒரு வெற்றியே உன் குடும்பத்தையே வெற்றி கொள்ளும் குடும்பமாக்கிவிடு.

ஒரு விவாகம் பிரயத்தனத்தில் தலைபிட்டுக் கொள்கிறாய் எத்தனை இடர்கள் உறினும் வெற்றியுடனே அதை

முடித்துவிடு. ஒரு வீடு கட்டத்தொடங்குகிறாய், அல்லது தனக்கு ஒரு வீடுகட்ட ஒருவன் உன்னைத் துணை கொள்கிறான். வெற்றியுடன் அப்படியே கட்டி முடித்துக் கிரகப் பிரவேசமும் செய்—செய்யவை.

ஒரு விருந்து:—பல பேர்கள் கூடி விட்டார்களெனத் தயங்காதே. எப்படிச் செய்தால் நன்றாய் இருக்குமோ அப்படியே ஸம்பிரமமாக நிறைவேற்றி வைத்து வெற்றி கொள், வெற்றியின் இலையான வெற்றிலையைக் கடைசியில் போட்டுக்கொள்.

ஒரு காரியத்துக்குப் போதல்:—எந்தக் காரியத்திற்குச் சென்றனையோ அதை வெற்றியுடன் முடித்துக் கொண்டு வா.

ஒரு கலகம்:—உன்னை ஒரு கலகத்தின் இடையே மத்தியஸ்தம் கோரினால் எவ்விதத்தும் ஸமரஸப்படுத்தி வைத்து வெற்றி கொள்.

ஒரு வியாபாரம்.—ஒரு தொழிலைத் தொட்டால் கடைசி வரைக்கும் அதை நிலைக்க வைத்து, உனக்கு நஷ்டத்தைக் கொடுத்த அந்த வியாபாரமே உன் செல்வத்திற்கெல்லாம் காரணமாகும்படி சரியான முயற்சி நாடி வெற்றியில் ஓங்கிவிடு.

ஒரு மத்தியஸ்தம்—பஞ்சாயத்து, மத்தியஸ்தத்தில் நடுநிலைமையிலேயே நின்று ஏழைகளுக்கு நியாயம் வழங்க எவ்விதத்தும் பாடுபட்டு வெற்றிகொள்.

கடன்.—உன் வகையில் ஒரு கடன் ஏற்பட்டாலும், பெரியோர்கள் கடன் வைத்துச் சென்றிருந்தாலும் தீரத் துடனேயேயில். என் நீண்டவாணுளில் இந்தக் கடன் என க்கு எந்த மூலை என்று துணிந்துகொள். கடனை—இதோ உன்னைத் தீர்த்து விடுகிறேனென்று எதிர்த்துக் கொள். உன் கடனை வெளிக்கு வராதபடியே வைத்து அக்கடனை யடைத்துத் தொலைத்து வெற்றி சிறந்திடு.

குழந்தைகள்.—உன் குழந்தைகளை வெற்றிக் கனிக ளாக்கு. அவர்களை எவ்வெவ் வழியில் முன்னுக்குக் கொண்டுவர ஆதியில் நினைத்தனையோ அந்த எண்ணத் தைக் கடைசி வரையும் நிறைவேற்றிவிடு. சோர்ந்து விடாதே. அந்த வெற்றி உனது அந்திய காலத்தில் அதிக நிம்மதியைத்—திருப்தியைக்—கொடுக்கும்.

உன் சத்துருக்கள்.—அவர்களை முழுதுக்கும் அலக்ஷியம் செய். வாயைத் திறவாதே. உன் மவுனத்தாலேயே அவர் களை யடக்கிவிடு. கேவலமான பார்வையில் அவர்களை நோக்கு. ஒரு சிறு துரும்புபோல மதி வலிய அவர்கள் வரினும் லக்ஷியம் செய்யாதே. அவர்களைக் காலின் கீழ் மிதித்து அடக்கியாண்டு வெற்றிச் சிங்கம் எனப்பெயர் வாங்கு.

தீவினை ஆழ்வோர்—உனக்குப் பிறர் இழைக்கும் கெடு திக்கு நல்லதே செய்து அவர்களை நாண வைத்து; அன்னோ ரையும் நல்வழிப்படுத்தி அவ்வகையில் நீ வெற்றி கொள். தீமைக்குத் தீமை செய்வது மிருககுணம், நன்மைக்கு நன்மை செய்வது மனித குணம் தீமைக்கு நன்மை செய்வது தேவகுணம். தெய்வீகச் சாயலான வெற்றியிலேயே நின் சித்தம் திரும்பட்டும்.

வியாதி.—தைரியத்தை விடாதே. குணப் படாதென்று நினையாதே. கடைசி வரையில் பிழைப்பிக்க முடியுமென்றே நீ எதிர்பார். வைத்திய உதவிகள் ஆனவரையில் செய். உனக்கு வெற்றி வழங்கும்படிக் கடவுளை வேண்டி எவ்விதத்திலும் வெற்றி பெற்றுக்கொள்.

ஒரு பிரயாணம்.—ஒரு பிரயாணம் துணிந்தால் புறப்படுகிற தினத்தைத் தூரத்தூரத் தள்ளி வைக்கவேண்டி வரும். தடைகள் அநேகம் குறுக்கிடும். நினைத்தபோதே செய்யக்கூடிய வெற்றியில் நீ பழகிவிட்டால் இந்தத் தடைகள் யாவும் பஞ்சாய்ப் பறந்துவிடும். உன் பிரயாணமும் வெற்றியுடன் உன்னைத் திரும்பவும் வீடுகொண்டு வந்து சேர்க்கும்.

நட்பு.— ஒருவரிடம் மனம் வைத்து நெஞ்சம் கலந்து பழகிய பிறகு எத்தனை மனஸ்தாபங்கள் வரினும், எவ்வளவு கஷ்டநஷ்டம் உறினும் பிரிவினைக்கு ஆளாகாது பின்னும் அந்த நட்பை இழுத்து இழுத்துப் பிடித்து அதில் வெற்றி கொள். நட்பையும் அறிமுகத்தையும் பகுத்தறிந்து வெற்றி கொள்.

கோடை, தயை:—கொடையிலும் தயையிலும் நிர்ப்பாக்கியமுள்ளவனுயிரு. அதில் நீ வெற்றிமேற் கொண்டால் கடவுளும் உனக்கு மேன்மேலும் அருளுவார். உன் சித்தமும் புனிதமுற்றுத் தூய்மைமிகும்.

கோபம்.—கோபத்தின்மீதே வெற்றிகொள். அக்கோபம் உன்மீது வெற்றி கொள்ள விடாதே. வெளிக்குக் கோபாக்னி ஜ்வலிக்கட்டும். உள்ளுக்கோ அக்கோபத்துடன்

எவ்வித பற்றுதலுமற்றவனுப் குளிர்ந்த மனதோடு இரு இதுவேவெற்றி.

அன்பு—அன்பில் வெற்றிபெறு. அன்புமயமாக நில்; அன்புருவாக ஆகிவிடும். அன்பே சிவம் சிவமே அன்பு. அன்பே பிரதானம் அதுவே வெகுமானம். உன் ஜீவிதகாலம் அன்பின் வழியில் செல்லட்டும். அதுவே உன் வாணுளில் நீ பெறவேண்டிய வெற்றி.

காதல்.—தெய்வீகக் காதலிலே வெற்றிபெறு. எவ் விதத்தும் முனைந்து நில். நீ கோரிய பெண்மணியையே உன் வாணுள் யாத்திரைக்கு கண்மணி' யாக்கி, காதலில் வெற்றிகொண்டு களித்திடு.

பேச்சில் வெற்றி:—எப்பொழுதும் உன் வார்த்தைக்கும் பேச்சுகட்கும்—அதைப்பிறர் மறுக்காத நிலையில் வெற்றி பெறப்பார். உன்வாக்கில் வெற்றித் தேவி தாண்டவமாடட் டும். உன்பேச்சுக்குப் பதில் பேச்சு இல்லாமல் அப்படியே நடந்து விடும்படி வெற்றி பெறநில்.

உன் கைப்பட்டது வெற்றி:—நீ தொட்ட தனைத்தும் வெற்றியில் விளங்கும்படி வெற்றி வேலனைச் சிந்தனை செய். வெற்றியிலேயே நீ பழகு. ஒருநாட் பொழுதும் வெற்றி யிலே பொருந்தி ஒளிரும்படிச் செய்து விடு. வெற்றித்துவ ஜம் தாங்கு. உன் உள்ளத்திலே சதாகாலமும் வெற்றிச்சிந் தனைகளே மேலாடிப்பரவி நிற்கட்டும். வர்த்தகத்தில்வெற்றி வியாபாரத்தில் வெற்றி, உன் காரியங்களெல்லாம் வெற்றி ததும்பி நிற்கட்டும்.

பக்திமுக்தி,—பக்தியில் வெற்றிகொள். முக்தியில் வெற்றி கொள். வணக்கத்தில் வெற்றிகொள். தெய்வ நம்பிக்கையில் வெற்றிகொள்.

இவ்விதமே நெடுக நின்ஜீவிய முழுதுக்கும் வெற்றியின் உருவமாக நீ விளங்கிடு. ஒரு உயில் பத்திரம் எழுதப்புகும் போது ஆயிரம் தடைகள் நேரிடும். அவற்றைத் திரணமாக மதித்து உன் பிரியத்தின்படி எழுதி முடிக்க வெற்றிச்சித் தம் வலி.

ஐரோப்பிய யுத்தம் ஆரம்பத்தில் எப்படித் தோன் றிற்று? ஜெர்மனிக்கே ஜெயம் எனத்தோன்றிற்று. ருஷிய ஜப்பானிய யுத்தத்தின் ஆரம்பத்தோற்றம் எப்படி? ஜப்பான் ஜெயிக்குமா வென்று ஐயப்பட நேர்ந்தது. தேசபக்தியும் ஆரம்பத்தில் தோல்வி பெறும் போல் காணப்பட்டது. இவை களெல்லாம் முடிவில் வெற்றியையே கொண்டன. சித்தஞ் சலித்து விட்டுவிடாது விசித்திரமே வெற்றிக்கு இடமாயிற்று. தோல்வியின்றி வெற்றியில்லை. நெல்லுக்கு உமியுண்டு. நீர்க்கு நுறையுண்டு புல்லிதழ் பூவிற்கு முண்டு அதுபோல் வெற்றி சிந்தனையிலே தோல்வியும் உண்டு; எனினும் சித்தத்தைச் சோரவிடலாகாது; தீரம் வகிக்கவேண்டும்; வீரவுள்ளம் வேண்டும். ஆணித்தரமான உறுதிவேண்டும். ஒரே தீர்மான நிச்சயம் வேண்டும். ஓயாத முயற்சிவேண்டும். முடிவில் உனக்கு வெற்றி சித்தித்துவிடும். வெற்றித்தேவி உன் வச மாகி விடுவாள். உன் வாணுள் வெற்றியுடன் ஓங்குக, சிறந் திடுக, ஒளி வீசிடுக வெற்றிக்கு மங்களம் உண்டாவதாக, வெற்றியில் சித்திபெற்றார் கூறும்பாடல் எது? "சிந்தித்த தெல்லாம் அறிந்து உதவவந்த கருணைமழையே பராபரமே" என்பதாம்.
